வெளியீடு: 10-12-2003

Issued : 10-12-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 7, 2003—தொகுதி 40

**Monday the 7th April 2003 – Volume 40**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

1145/2004

7-4-2003

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு .. .. .. .. | 1-2 |
| **2. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. .. | 2-35 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்மீது உரிமைப் பிரச்சினை .. | 36 |
| (ஆ) புதிய தலைமைச் செயலக வளாகம் மற்றும் இராணி மேரி கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுதல் | 37-38 |
| (இ) உலக சுகாதார தினம் .. .. .. .. | 38 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| திருத்துறைப்பூண்டி, அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் ஆலயத் திருக்குளங்கள்-தூர் வாருதல் .. .. | 39-41 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) பொதுக் கணக்குக் குழு .. .. .. .. | 41 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு .. .. .. | 42 |

D
V21131 P02
P02. 40.v7

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185893
சென்னை 600 008
நூலகம்

பக்கங்கள்


6. **மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி 42-260

(அ) கோரிக்கை எண் 34-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

(ஆ) கோரிக்கை எண் 20-நெடுஞ்சாலைகள் துறை

(இ) கோரிக்கை எண் 23-உள் துறை-சிறைச்சாலைகள்

(ஈ) கோரிக்கை எண் 36-மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

(உ) கோரிக்கை எண் 38-பொதுப் பணித் துறை

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 42,52,68, 81,91,107-108, 109-110,111, 112, 113, 115, 117-118. 120-122,128. 129,134, 138-139, 148-149, 151,178,181-182, 183-231

திரு. ஆர். சக்ரபாணி 108-109, 111, 112, 113-116, 118-122

*திரு. கு. அன்பழகன் 125-127, 129-132

*திரு. சு. சிவராஜ் 133-135, 137-142

திரு ஐ. கணேசன் 142-154

*திரு. பெ. பழனியப்பன் 154-163




பக்கங்கள்


6. **மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(உ) கோரிக்கை எண் 38-பொதுப் பணித் துறை

திரு. கே.சி. கருணாகரன் 163-172

திரு. வை. சிவபுண்ணியம் 172-182

7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 261

5. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. **மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப் பட்டோர்.

7. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

8. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



10. **சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

11. **ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

12. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. **மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

14. **வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள்.

15. **கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.** .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

21. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகுதிரு.எம்.ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. *Chief Minister* | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br><br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br><br>Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:**<br><br>Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br><br>Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br><br>Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health and Education** .. **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru A. Papasundaram:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

8. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Anwer Rhazza:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

9. **Minister for Agriculture** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

10. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

11. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.



12. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

13. **Minister for Electricity and Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Electricity, Non-conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes.

15. **Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** .. **The Hon. Thiru P. Mohan:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

16. **Minister for Local Administration** .. **The Hon Thiru M.C. Sampath:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

17. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodaran:**

Animal Husbandry.

18. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru R. Vadivel:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ.,எம்.பி.ஏ., சிறப்பு | - பேரவைத் தலைவரின் நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ச. கனகவல்லி, டி.சி.பி. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | - துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிசந்திரராஜ், பி.ஏ., | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |

**19. Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

**20. Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

**21. Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

**22. Minister for Information and Publicity** .. **The Hon. Thiru K.K. Balasubramanian:**

Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

**23. Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

**24. Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

**25. Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள்*

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

* 28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. .. தலைமை நிருபர்

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. .. சார்புச் செயலாளர்

திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. .. சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச்செயலர் (பொறுப்பு)

திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. - சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. - சார்புச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம். - தலைமை நிருபர் (விடுப்பு)

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. .. தலைமை நிருபர் (பொறுப்பு)



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அண்ணாதுரை, திரு. செ. .. ஜெயங்கொண்டம்
3. அண்ணாமலை, திரு. கு. .. தென்காசி
4. அண்ணாவி, திரு. ப. .. தொட்டியம்
5. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
6. அய்யாறு வாண்டையார், திரு. கே. .. திருவையாறு
7. அரசன், திரு. ப. .. அறந்தாங்கி
8. அருணாசலம், திரு. அ. .. வரகூர் (செ.வ.)
9. அருள், திரு. பி.எஸ். .. புவனகிரி
10. அழகம்மாள், திருமதி வி. .. தலைவாசல் (செ.வ.)
11. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. - திருச்செந்தூர்
12. அன்பழகன், திரு. ஆ.கு.சி. .. பெரணமல்லூர்
13. அன்பழகன், திரு. கு. .. நிலக்கோட்டை (செ.வ.)
14. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
15. அன்பழகன், திரு. ஜெ. .. தியாகராய நகர்
16. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
17. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
18. அன்வர் ராஜா, திரு. அ. .. இராமநாதபுரம்
19. ஆண்டிவேல், திரு. ப. .. வேடசந்தூர்
20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)

68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்

69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்

70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்

71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்

72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்

73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி

74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)

75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்

76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்

77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்

79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி

80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்

81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை

82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி

83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை

84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)

85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை

86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்

87. சரவணன், திரு. துரை கி. - சிதம்பரம்



88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)

89. சாமி, திரு. ஆர். - மேலூர்

90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்

91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்

92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)

93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை

94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்

95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்

96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி

97. சிவபெருமான், திரு. அ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)

98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்

99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)

100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்

101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி

102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்

103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்

104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்

105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)

106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்

107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்

108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்

109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே. ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி



44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. செ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2.
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்

110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு



133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

| | |
|---|---|
| 154. பாண்டுரங்கன், திரு. கே. | - அணைக்கட்டு |
| 155. பாப்பாசுந்தரம், திரு. அ. | - குளித்தலை |
| 156. பாரமலை, திரு. க. | - மானாமதுரை (செ.வ.) |
| 157. பாரிமோகன், திரு. கி. | - தருமபுரி |
| 158. பாலகிருஷ்ணன், திரு. சோ. | - கடலாடி |
| 159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். | - தொண்டாமுத்தூர் |
| 160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. | - ஸ்ரீரங்கம் |
| 161. பாலபாரதி, செல்வி க. | - திண்டுக்கல் |
| 162. பாலன், திரு. எஸ்.எம். | - லால்குடி |
| 163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். | - சேரன்மகாதேவி |
| 164. பிச்சாண்டி, திரு. கு. | - திருவண்ணாமலை |
| 165. புகழேந்தி, திரு. இ. | - கடலூர் |
| 166. பூபதி மாரியப்பன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. | - அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 168. பெருமாள், திரு. என்.கே. | - விளாத்திகுளம் |
| 169. பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 170. பொன்னம்பலம், திரு. ப. | - சமயநல்லூர் (செ.வ.) |
| 171. பொன்னையன், திரு. சி. | - திருச்செங்கோடு |
| 172. போளூர் வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 173. மகாலிங்கம், திரு. எஸ். | - அவினாசி (செ.வ.) |
| 174. மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 175. மகேஸ்வரி, திருமதி எஸ். | - கோயம்புத்தூர் மேற்கு |



| | |
|---|---|
| 176. மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 177. மணி, திரு. டி. | - விளவங்கோடு |
| 178. மணி, திரு. ஜி.கே. | - பெண்ணாகரம் |
| 179. மலையப்பசாமி, திரு. அ.இரா. | - கபிலர்மலை |
| 180. மல்லிகா சின்னசாமி, திருமதி | - முசிறி |
| 181. மாணிக்கராஜ், திரு. எஸ். | - நாங்குநேரி |
| 182. மில்லர், திரு. அ. | - கூடலூர் |
| 183. முரளிதரன், திரு. கே.வி. | - தளி |
| 184. முருகவேல் ராஜன், திரு. க. | - வந்தவாசி (செ.வ.) |
| 185. முருகேசன், திரு. ஆ.கு. | - ஆத்தூர் |
| 186. முனுசாமி, திரு. கா.பு. | - காவேரிப்பட்டினம் |
| 187. மைதீன்கான், திரு. டி.பி.எம். | - பாளையங்கோட்டை |
| 188. மோகன், திரு. ப. | - சின்னசேலம் |
| 189. யசோதா, திருமதி டி. | - ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 190. ரங்கநாதன், திரு. ப. | - புரசைவாக்கம் |
| 191. ரங்கராஜன், திரு. என்.ஆர். | - பட்டுக்கோட்டை |
| 192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். | - கோபிசெட்டிப் பாளையம் |
| 193. ராதாகிருஷ்ணன், திரு. எம். | - திருமயம் |
| 194. ராதாரவி, திரு. | - சைதாப்பேட்டை |
| 195. ராமசாமி, திரு. பி. சி. | - மொடக்குறிச்சி |
| 196. ராமராஜ், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 197. ராம்குமார், திரு. எம். | - பாபநாசம் |
| 198. ராஜகோபால், திரு. ஆ. | - சிவகாசி |

199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
200. ராஜா, திரு. எச். - காரைக்குடி
201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
214. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-1



220. வேதாத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
222. வேலு, திரு. ஏ.வ. - தண்டராம்பட்டு
223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி
228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 24, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 ஏப்ரல் 7, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."

ஊற்று நீர், மழை நீர் ஆகிய இருவகை நீர் வளமும் மலை வளமும் அதிலிருந்து அருவியாகக் கொட்டி ஆறாகப் பெருகிவரும் ஆற்று நீர் வளமும் வலிமை மிக்க கோட்டையும் ஒரு நாட்டின் உறுப்புகள் ஆகும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கே.ஜி. பழனிசாமி கவுண்டர் அவர்கள் 8-2-2003 அன்று மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஜி. பழனிசாமி கவுண்டர் அவர்கள் 1953-ல் நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்று 1957 வரையிலும் மற்றும் 1957 முதல் 1962 வரையிலும் காங்கேயம் தொகுதியிலிருந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரின் மறைவினால் அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 7

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் வினா எண் 181, திரு. டி. மணி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**181—**

### கோயில் பராமரிப்பு

***6410—திரு. டி. மணி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, சாமுண்டீஸ்வரி திருக்கோயில் பராமரிப்பின்றி பழுதுபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனைப் பராமரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

(இ) இக்கோயிலில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை, சாமுண்டீஸ்வரி அம்மன் திருக்கோயிலில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால், தற்போது உபயதாரர்களை அணுகி, அவர்கள் மூலம்



2003 ஏப்ரல் 7]

பணியை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், நிதிநிலை சரியாக இல்லாததால், அந்த ஊரைச் சார்ந்தவர்களிடம் ஏதாவது நிதியைத் திரட்டச் செய்வதன் மூலமாகப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்கின்ற வகையில் பதில் கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்தக் கோயிலைப் பார்த்தவர்கள். எனவே, அந்த வட்டாரத்தினுடைய சூழ்நிலையை வைத்துக்கொண்டு பார்த்தால், வேறுவிதமாகப் பணத்தை வசூல் செய்வதற்கும் வாய்ப்பு இல்லாத ஒரு பகுதி. இருக்கின்ற சூழ்நிலையில், அதில் இன்னொருவிதமான கருத்து உலவி வருகிறது. நான் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இந்தக் கோயில்களையெல்லாம் கவனிக்கவில்லையென்ற தவறான கருத்தும் உலவுகின்ற ஒரு சூழ்நிலை அங்கே உண்டு. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, வேறு ஏதாவது ஒரு கோயிலிலிருந்து நிதியைப் பெற்று, அந்த சாமுண்டீஸ்வரி கோயிலைப் பழுதுபார்த்து, ஒழுங்குபடுத்திட நடவடிக்கை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்தில் நிதி இல்லாத காரணத்தினால், அந்த ஆலயத்திற்காக நிதி கொடுப்பவர்களைத் தேடிக் கண்டறிந்து, அதன் மூலமும்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருப்பணிகள் செய்யாத ஆலயங்களுக்கு உடனடியாகத் திருப்பணிகள் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கின்ற காரணத்தினாலே, பக்கத்து ஆலயங்களில் எங்காவது நிதி இருக்குமேயானால் அதையும் கண்டறிந்து—அதற்கு மேல் அரசினுடைய நிதியில் செய்ய வாய்ப்பு இருக்குமேயானால், செய்வதற்கும் புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று அங்கே பணியாளர்கள் சம்பந்தப்பட்ட வரையில், இருந்த பணியாளர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இடங்கள் காலியாக உள்ளன. அந்தக் காலியிடங்களை நிரப்புவதற்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு, விதிமுறைகளுக்கு உட்பட்டு தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவரவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாமுண்டீஸ்வரி கோயில், ஜலகண்டேஸ்வர் கோயில் இல்லை.

வினா எண் 182. திருமதி கு. கலாவதி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**182—**

## தொழிற்பயிற்சி நிலையம்

***9162அ—திருமதி கு. கலாவதி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி கு. கலாவதி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பதைப்போல, 'மலைவாழ் மக்களின் மான் கூட்டத்து மகளிரும் இம்மாமன்றத்திற்கு உரியவரே' என எடுத்துரைத்த என் தாயை வணங்குகிறேன். புலியை முறத்தாலே விரட்டியடித்த மலை மகளான



எங்களுக்குப் புள்ளி மானாய் இருந்து புலிப் பாலைப் புகட்டிவிடும் என் தாயே, உங்களின் பாதம் போற்றி வணங்குகிறேன்.

கொல்லிமலைப் பகுதியில் சுமார் 50,000-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். கொல்லிமலையில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், 3 உயர்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. அங்கு படிக்கின்ற மாணவ, மாணவிகள் ஐ.டி.ஐ. படிக்கச் செல்ல வேண்டும் என்றால், 150 கிலோ மீட்டர் செல்ல வேண்டி உள்ளது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்து, அங்கு படிக்கின்ற மலைவாழ் மக்களுக்குத் தனியாக அடுத்த ஆண்டாவது ஐ.டி.ஐ. அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் இல்லை என்பது உண்மைதான். ஆனால், நாமக்கல் மாவட்டத்தில் 12 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் 984 இருக்கைகள் உள்ளன. இதிலேகூட, ஒதுக்கப்பட்ட இருக்கைகள் அளவுக்கு மாணவர்களின் சேர்க்கை குறைவாக இருக்கிறது. அந்த மாவட்டம் முழுவதும் இருக்கின்ற அந்தக் கணக்கை வைத்துப் பார்க்கிறபோது, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு என்று தனியாக புதிதாக ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளியைத் துவக்கும் திட்டம் அரசிடம் இல்லை. மேலும், தனியாக ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தைத் துவக்க வேண்டுமென்றால், அதற்குக் கிட்டத்தட்ட 135 இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் செலவிடப்பட வேண்டிய நிலை இருக்கிறது. கட்டடம் கட்டுவதற்கு 75 இலட்சம் ரூபாய், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு 40 இலட்சம் ரூபாய், பணியாளர்கள் சம்பளம் போன்றவற்றிற்காக 20 இலட்சம் ரூபாய் என்று இப்படிச் செலவிடப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இவற்றை, எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, அரசின் சார்பில் தொழிற்பயிற்சி நிலையம் துவங்குகின்ற சூழ்நிலை இப்போது எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்தில் நிதி நிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம்.

[2003 ஏப்ரல் 7

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் 984 இடங்கள் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்டு, அதிலே பல இடங்கள் காலியாக இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்தத் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் எல்லாம், அந்த இடங்களில் எல்லாம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட இடங்கள்-அதாவது நான் சொன்னது; அந்த மாவட்டத்தில் ஜீவா தொழிற்பயிற்சி நிலையம், முத்துக்காப்பட்டி; வெங்கடேஸ்வரா தொழிற்பயிற்சி மையம், எருமைப்பட்டி; பி.ஜி.பி. தொழிற்பயிற்சி மையம், வேட்டாம்பாடி; கொங்கு தொழிற்பயிற்சி மையம்,, கீராம்பூர்; ஈஸ்வரர் தொழிற்பயிற்சி மையம், இலச்சிபாளையம்; அங்கப்பர் தொழிற்பயிற்சி மையம் சௌதாபுரம்; ராஜம்மாள் ரெங்கசாமி தொழிற்பயிற்சி மையம், தொக்கவாடி; திருச்செங்கோடு; கந்தசாமி கந்தன் தொழிற்பயிற்சி மையம், நாமக்கல்; பத்மாவதி தொழிற்பயிற்சி மையம், இராசிபுரம்; சி. இராகவேந்திரா தொழிற்பயிற்சி மையம், இராசிபுரம்; ஆண்டவர் தொழிற்பயிற்சி மையம், நாமக்கல், அதாவது மோகனூர்; இராமகிருஷ்ணா தொழிற்பயிற்சி மையம், குருசாமிபாளையம் ஆகிய 12 இடங்களில் தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிற்பயிற்சி மையங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இடங்கள்--மொத்த இருக்கைகளின் எண்ணிக்கை--984. அதிலேகூட மாணவர்களுடைய வருகை குறைவாக இருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 183, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**183—**

## உழவர்களுக்குப் பயிற்சி

***19907 —திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 7]

நவீன தொழில்நுட்ப நடைமுறைகளைப் பின்பற்றுவதில் உழவர் சங்கங்கள் தீவிரமாகப் பங்கேற்பதை ஊக்குவிக்கும் விதமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உழவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

உழவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

*முற்பகல் 10-10*

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையிலே, 'நடத்தப்படும்' என்று கூறினார்கள். நம்முடைய மாநிலத்திலே மொத்தம் 29 மாவட்டங்கள் உள்ளன. ஏற்கெனவே 12 மாவட்டங்களில் நடத்துவதாகக் கேள்விப்பட்டேன். விடுபட்டுப்போன மாவட்டங்களிலும் உழவர் பயிற்சி ஆரம்பிக்கும் திட்டம் நம்முடைய அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், விவசாயத் துறையின் மூலமாகக் கிராமங்களில் ஊரக வேளாண்மைப் பணி அனுபவப் பயிற்சி நடத்துகிறார்கள். அதேபோல, வேளாண்மை சார்ந்த தொழிற்சாலை கூட்டுப் பயிற்சியும் நடத்துகிறார்கள். மாணவர்களுக்கும் இளங்கலை வேளாண்மைப் பயிற்சியும் தாப்படுகிறது. அதேபோல், பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிலையங்களின் புதிய கண்டுபிடிப்புகள் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் மூலம் உழவர்களுக்கு விரைவில் சென்றடைய நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா, எடுக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத்தில் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, விதைச் சான்றளிப்புத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக விவசாயிகளுக்குப் பல்வேறுபட்ட தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2002-2003-ல் மட்டும், 2,56,498 விவசாயிகளுக்கு ரூபாய் 3,86,50,200 செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான பயிற்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 7

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற முகமாக, கோவை மாவட்டம், கொடிசியா வளாகத்திலே நடைபெற்ற வேளாண்மைப் பொருட்காட்சியைப் போல, வேளாண்மைத் துறை சம்பந்தமாகப் புதிய விதைகள், புதிய பயிர் வகைகள் கண்டுபிடிப்பு, நவீன ஒட்டு ரகங்கள், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகின்ற ஜட்ரோபா பாரடைஸ் போன்ற வகைகள் மற்றும் நவீன வேப்ப மரம் போன்ற பல்வேறு விதமான நவீன கண்டுபிடிப்புகளையெல்லாம் ஒவ்வொரு ஒன்றியத்தின் வாயிலாக அல்லது ஒரு தொகுதிக்கு ஒரு வேளாண்மைப் பொருட்காட்சியாக நடத்துகின்றபோது அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அதை அறிவதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே, ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் இதுபோல விவசாயிகள் பயிற்சி பெறுகின்ற முகமாக வேளாண்மைப் பொருட்காட்சி நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயுள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒவ்வொரு தாலுகாவிலும் இதுபோன்ற கண்காட்சிகள்--தற்போது புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற தொழில்நுட்பங்கள் அடங்கிய கண்காட்சிகள்—நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 184, திரு. செ. தாமோதரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**184—**

**சாதிச் சான்று**

**•4236—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 7]

*(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்து, லிங்கமாவூர் கிராமத்தின் மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்று வழங்காமல் உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட லிங்கமாவூர் கிராமத்தில் மலைவாழ் மக்கள் யாரும் சாதிச் சான்று கோரி விண்ணப்பிக்கவில்லை.

(ஆ) மேற்படி கிராமத்தில் மலைசாதியினர் சாதிச் சான்று கோரி விண்ணப்பிக்கும் நிலையில், உரிய விசாரணைக்குப் பின்னர், சாதிச் சான்றுகள் வழங்கப்படும்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட லிங்கமாவூர் கிராமம், மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள பகுதியாகும். அங்கு நிறைய மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நான் இந்தக் கேள்வி கேட்டபோது, அங்கே சான்றுகள் வழங்கப்படாத நிலை இருந்தது. இருந்தாலும்கூட, தற்போது நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைந்து நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக அறிகிறேன். அதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று, பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு பகுதிகளிலே ஒரு சில மலைவாழ் மக்கள் தனியார் தோட்டங்களில் வசித்து வருகிறார்கள். அவர்களுக்கும் விரைந்து சாதிச் சான்றிதழ் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின்படி, சாதிச் சான்றிதழ் கேட்டு விண்ணப்பம் செய்த ஒரு வார காலத்திற்குள் உரிய சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். விசாரணை தேவைப்படும்

இனங்களில், 15 நாட்களுக்குள் உரிய விசாரணை நடைமுறைகள் முடிக்கப்பட்டு, மெய்த்தன்மை நிரூபிக்கப்படும் இனங்களில் உடனே சாதிச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டுமென்று, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுடைய பெயராலே, மேம்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இந்தச் சமுதாயத்தினுடைய S.T. Certificate-ஐ வாங்குகிறார்கள்; பெரும் பகுதி வாங்கப்பட்டிருக்கிறது. அதனைத் தடுப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் அல்லாதவர்கள், எஸ்.டி.—பழங்குடியினர் சான்று பெறப்பட்டவர்கள்; அதுவும் குறிப்பாக, மத்திய அரசு அலுவலகங்களில் பணி செய்வதற்காக, இப்படித் தவறாகச் சான்றிதழ் வழங்கப்பட்டு, பணியில் சேர்ந்துள்ளது குறித்து நடவடிக்கை எடுக்க ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், ஆய்வு முடிந்தபின், உரிய சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்றிதழ் வழங்குவதிலே, ஒரு வார காலத்திற்குள்ளாக, மனுக்கள் பெறப்பட்டு, பரிசீலித்து, மாவட்ட ஆட்சியர் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் அப்படியில்லாமல் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த மலைவாழ் மக்களுக்கு, ஒரு



மாவட்டத்திலே, தாலுகாவுக்குத் தாலுகாவே வித்தியாசப்படுகிற நிலைமைகளும், இப்படிச் சாதிச் சான்றிதழ் வாங்குவதிலே குறைபாடுகளும் தொடர்ந்து நீடிக்கின்றன. இது அரசின் மீதுள்ள குறையாக இல்லை; நடைமுறை ரீதியாக இருக்கிற பிரச்சினை. இது காலம், காலமாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்குவதற்குரிய முயற்சி எடுத்து மாநில அளவிலேயே இதற்கு ஒரு சிறப்புக் கவனத்தைச் செலுத்தி, இந்த மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்றிதழ்களை வழங்குவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? அதுபோலவே, ஒவ்வொரு பெயரும், மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுகிறது. குரும்பர்ஸ் என்றும், குரும்பன் என்றும், உள்ள ஒரே சாதியைச் சேர்ந்தவர்களை, 'ஸ்' என்றும், 'ர்' என்றும் போடுகிற காரணத்தினாலேயே, 'ர்' என்று போட்டவருக்கு இல்லையென்று மறுக்கப்படுகிறது. ஆனால், ஒரே ஊரிலேயே இருவரும் இருக்கிறார்கள்; உறவினர்கள். அப்படியெல்லாம் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பரிசீலித்து, அந்த மலைவாழ் மக்களுக்கு இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளைப் போக்குவதற்குரிய முயற்சியை எடுப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஓர் இனத்தவரையும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது என்பது மைய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட பொருளாகும். மாநில அரசு, மைய அரசுக்குத் தனது பரிந்துரையை மட்டுமே அனுப்ப இயலும். குறிப்பாக, ஆதிதிராவிடர்பட்டியலில் சேர்க்க 27 உட்பிரிவுகள் கொண்ட குறவர் இனம்; அதேபோல பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க குரும்பா மற்றும் குரும்பர், நரிக்குறவர், லம்பாடி, மலையாளி, ஈரோடு மாவட்டம்; காணிக்காரன், திருநெல்வேலி மாவட்டம்; இப்படி பிற இனங்களான குறவர் இனம், குரும்பா மற்றும் குரும்பர், நரிக்குறவர், லம்பாடி, மலையாளி, மற்றும் திருநெல்வேலி காணிக்காரன் ஆகியோர் தொடர்பாக, இவ்வின மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு மற்றும் நாகரிகம், சமூகப் பொருளாதார நிலைமை மற்றும் தனித்தன்மையான குண நலன்கள் பற்றிய அறிவியல்பூர்வமான ஆய்வு நடத்தி, அறிக்கை அனுப்புமாறு மைய அரசு கேட்டுக்கொண்டதன்பேரில், உதகையிலுள்ள பழங்குடியின ஆராய்ச்சி மையத்தின் துணை இயக்குநராக உள்ள மானுடவியல் மற்றும் சமூகவியல் வல்லுநர் திரு. ஜெக்கா பார்த்தசாரதி

[2003 ஏப்ரல் 7

அவர்கள், உரிய ஆய்வை மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு இத்துறையின் சார்பில் 17-9-2001 ஆம் நாளிட்ட அரசு ஆணை நிலை எண் 59-ன்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடுமலை தொகுதிக்குட்பட்ட ஜல்லிபட்டி பேரூராட்சி, லிங்கமாவூர் பகுதியானது மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. அதோடு மட்டுமல்ல, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கோடந்தூர், தளிஞ்சி, புளிப்பட்டி, மாவடுக்கு போன்ற 18 செட்டில்மென்ட் பகுதிகள்; அங்கேயும் மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் நிறையத் தேவைப்படுகின்றன. அவர்களுடைய அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன. அவர்களுக்கு அந்த அடிப்படைத் தேவைகளும்--அதேபோல, அந்தப் பகுதியிலே வாழும் மக்களில் இன்னும் சில பேருக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்கப்பெறாமலும் உள்ளன. அவர்களுக்கு--சாதிச் சான்றிதழ்களும் கிடைக்கக்கூடிய வகையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்ய வேண்டும். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தச் சான்றிதழ் கிடைக்கவும், அந்தப் பகுதியினுடைய வளர்ச்சிக்காகவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அன்போடு அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையின்படி, எந்த இடத்தில், எங்கு விண்ணப்பம் நிலுவையில் இருக்கிறது? அதுபோல, எங்கு அடிப்படை வசதிகள் தேவை என்பதைத் தனிக் கேள்வியாகப் போட்டால், தக்க விடை கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி இரா. சரோஜா.



2003 ஏப்ரல் 7]

**திருமதி இரா. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள்மீது பாசமும், பற்றும் கொண்டிருக்கிற நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்களுக்காக அரும்பாடுபட்டு, அங்கே எங்களுடைய பகுதியிலே இருக்கின்ற மலைவாழ் மக்களுக்கு உடனடியாக மின்சாரத்தை வழங்கச் சொல்லி, மின்சாரத்தை ஒரு மாத காலத்திற்குள், பொங்கலுக்குள் பரிசாக வழங்க வேண்டுமென்று சொல்லிய காரணத்தால், உடனே மின்சாரத்தை வழங்கியிருக்கிறார்கள். அதனால், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், எங்களுடைய மலைவாழ் மக்கள் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் பெறுவதிலே பல்வேறு இன்னல்கள் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற மலைவாழ் மக்கள் பல பகுதிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தந்தப் பகுதிகளிலே சாதிச் சான்றிதழ்கள் வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பகுதியிலே, இன்றைக்கு ஒரு மலைப் பகுதியிலே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திருமதி இரா. சரோஜா:** மலைவாழ் மக்கள் பணியிலே இருக்கும்போது, இங்கே சென்னையிலே இருக்கிறார்கள் என்றால், சென்னையிலே அந்த மலைவாழ் மக்கள், மலையாளி என்கிற சாதிச் சான்றிதழ் பெறமுடியாது என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கு வாழ்ந்தாலும், எங்கு பணி செய்தாலும், --அவர்களுடைய உரிய மாவட்டத்திலே பிறந்து-- எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், என்ன தொழில் செய்கிறார்கள், அவர்களுடைய பண்பாடு, நாகரிகம் அனைத்தும் அறிந்து, அந்த ஆவணங்களின் அடிப்படையில்தான் சாதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 185, திரு. ஏ. பூவராகமூர்த்தி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

185—

**மாணவியர் விடுதி**

***32861–திரு. ஏ. பூவராகமூர்த்தி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதி, பொலம்பாக்கம் மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கு மாணவியர் விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதிதாக மாணவ, மாணவியர் விடுதிகள் திறக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஏ. பூவராகமூர்த்தி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் ஏற்கெனவே அச்சிறுப்பாக்கம் தொகுதியில் சூணாம்பேடு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.35 இலட்சம் செலவில் மகளிர் விடுதி கட்டிக் கொடுத்துள்ளார்கள். அதேபோன்று, தொழுப்பேடு மேல்நிலைப் பள்ளிக்கு 35 இலட்சம் ரூபாய் செலவில் மகளிர் விடுதி கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்காக இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னுடைய தொகுதிக்குட்பட்ட பொலம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஏறக்குறைய 2500 மாணவ, மாணவியர்கள் தற்போது படித்து வருகிறார்கள். நீண்ட தொலைவிலிருந்து அங்கு வந்து படிக்கின்ற ஒரு நிலையினால், மாணவிகள் அங்குத் தங்கிப் படித்தால், இன்னும் அவர்களுக்கு நல்ல வசதிகளும் இருக்கும்; அவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுப்பதற்கும், தேர்ச்சி பெறுவதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே, இந்த நிதியாண்டில் இல்லையென்றாலும்கூட, வருகின்ற நிதியாண்டில் இந்த பொலம்பாக்கம் மேல்நிலைப் பள்ளிக்கு மாணவியர் விடுதியை நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசு கட்டிக் கொடுக்குமா என்பதைத்



தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, உறுப்பினரின் கருத்தை, நிதிநிலை சீரான பின்பு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 186, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

186—

**பேருந்து வசதி**

***2146—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலூர் அம்மாபாளையம் மலைப் பகுதிக்குப் பள்ளி மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் சென்று வரும் வகையில் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலூரிலிருந்து தும்பல் பள்ளிக்கு மாணவ, மாணவிகள் சென்று வரும் வகையில் 4-6-2002 முதல் காலையிலும், மாலையிலும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேள்வி கேட்கிறபோது, அந்தப் பள்ளி மாணவர்கள் வசதிக்காக அங்கே பேருந்து இயக்கப்படவில்லை. கேள்வி கேட்டதற்குப் பின்னாலே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு அந்தப் பள்ளி மாணவர்களின் பயனுக்காக சேலூர், அம்மாபாளையத்திலிருந்து தும்பலிலே படிக்கின்ற மாணவர்களுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக அந்தப் பகுதிவாழ் மக்கள் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், I.T.D.P. --Integrated Tribal Development Programme--என்னும் மலைவாழ் மக்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலமாக, அங்கே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து, தற்போது திருவண்ணாமலை செல்வதற்கு வசதியாக ரூ.100 இலட்சம் மதிப்பீட்டிலே 10 கிலோ மீட்டர் சாலை அமைக்கப்பட்டு நல்ல முறையிலே இருந்து வருகிறது. ஆகவே, சேலம் பகுதி, வாழப்பாடி, ஆத்தூர், தும்பல் பகுதிகளிலே இருக்கின்ற பக்தகோடிகள் திருவண்ணாமலைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய மாவட்டத்தை ஒட்டியுள்ள அரூர் பகுதிக்கு வந்து செல்ல வேண்டும். ஆனால், சேலம் மாவட்ட மக்கள், புதிதாக சாலை அமைக்கப்பட்டுள்ள தும்பல் வழியிலே சென்றால் கிட்டத்தட்ட 30 கிலோ மீட்டர் குறையும். இதனால் வீண் செலவுகள் மீதம் ஆகும். போக்குவாத்து நெரிசல் குறையும்; எரிபொருள் செலவைச் சிக்கனப்படுத்த முடியும். எனவே, சேலம் மாவட்டத்து மக்களுக்காகவும், அங்கே என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சேலூர், அம்மாபாளையம், தும்பல் பகுதி மக்களின் சார்பாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பேருந்து வழித்தடத்தை சேலூர், நதிப்பள்ளி, தாணிப்பாடி வழியாக விட முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம், போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதி நிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது பேருந்துப் போக்குவரத்திலே சிறு மாறுதல்கள் செய்வதற்குக்கூட அரசினுடைய அனுமதி வேண்டுமென்று



மாவட்டங்களிலே இருக்கின்ற போக்குவாத்துக் கழகங்கள் சொல்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்; ஒரு கிராமத்திற்கு ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்தை, அடுத்த கிராமம் வரை நம்முடைய விதிகளுக்கு உட்பட்டு நீட்டித்துத் தர வேண்டுமென்று சொன்னால், அதற்குக்கூட இங்கு வந்து அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டுமென்று சொல்கிறார்கள். இல்லையென்றால், சிறு மாற்றங்கள் செய்து அந்த ஊரிலிருந்து மாற்று வழியாகச் செல்வதற்குக்கூட அரசின் அனுமதி வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படி ஒரு நிலை இருக்கிறதா? அல்லது அப்படி சிறு மாற்றங்களைச் செய்துகொள்வதற்கு மாவட்ட அளவிலே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஓடிக் கொண்டிருக்கிற வழித்தடங்களில் இயக்கப்படுகின்ற பேருந்துகளைச் சிறிதளவு நீட்டிப்பதோ அல்லது சென்று வருகின்ற தூரத்தைக் குறைப்பதோ அல்லது நேரம் மாற்றுவதோ போன்ற நடவடிக்கைகளை, இதற்கு முன்பு அந்தந்தப் போக்குவரத்துக் கழகங்களுடைய இயக்குநர்கள்தான் செய்து வந்தார்கள். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதிலே சில பிரச்சினைகளும், நடைமுறையிலே சிக்கல்களும் ஏற்பட்டதன் காரணமாக, அதை முறைப்படுத்த வேண்டுமென்பதற்காக நிர்வாகச் சீரமைப்பு நடவடிக்கையாக--இப்பொழுது அந்த மாற்றங்களைச் செய்யக்கூடாது என்று சொல்லவில்லை--அந்த மாற்றங்கள் முறையாக இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, இப்பொழுது போக்குவரத்துத் துறையினுடைய அரசுச் செயலாளருடைய அனுமதியைப் பெற்று, மாற்ற வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, அந்தந்தப் பகுதியின் தேவைக்கேற்ப ஏதாவது மாறுபாடு செய்ய வேண்டுமென்று சொன்னால், அதிலே போக்குவரத்துத் துறையின் செயலாளருடைய ஒப்புதலைப் பெற்று, மாற்றுவதிலே எந்தத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 187, திரு. கு. ஜெயக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

187— [2003 ஏப்ரல் 7

**புதிய சொகுசுப் பேருந்து**

***14353 திரு. கு. ஜெயக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லிலிருந்து சென்னைக்குப் புதிய சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நாமக்கல்—சென்னை வழித்தடத்தில் புதிய சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற வினாக்கள்தான் அவையிலே உறுப்பினர்களைச் சற்று அதிகமாகப் பேச வைக்கின்றன என்று நான் கருதுகின்றேன். நான் கேட்ட வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்கள், 'விடப்படும்' என்று சொல்லியிருந்தால், ஒரே வார்த்தையில் நான் 'நன்றி' என்று சொல்லிவிட்டு, அமர்ந்திருப்பேன். நாமக்கல் பகுதிக்கு சென்னையிலிருந்து குளிர்சாதன வசதியோடு அரசு பஸ்கள் செல்வது இல்லை. ஆனால், தனியார் பேருந்துகள் இப்பொழுது அந்த வழித்தடத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கின்ற சிரமம் என்னவென்றால், அந்தத் தனியார் பேருந்துகளில் மிக அதிகமான பணத்தைப் பெற்றுக்கொண்டு—ஒரு சீட்டுக்கு 225 ரூபாய் அளவிலே பெற்று—இப்போது நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், குளிர்சாதன வசதி இல்லாமல் அந்தத் தடத்திலே சென்று கொண்டிருக்கிற அரசு பஸ்களில் 111 ரூபாய்தான் வசூலிக்கப்படுகிறது. நீங்கள் குளிர்சாதன வசதியுடன் அந்தத் தடத்திலே பேருந்துகளை இயக்கினால் அதிகபட்சமாக 150 ரூபாய் அல்லது 190 ரூபாய் வரை பெறுவீர்கள். இதனால், அந்தப் பகுதிகளுக்குச் செல்லுகின்ற மக்கள் சற்றுக் குறைவான கட்டணத்திலே சென்று சேருவதற்கும் வசதியாக



2003 ஏப்ரல் 7]

இருக்கும். நான் மற்றொன்றையும் சொல்லிக்கொள்ள விருப்பப்படுகிறேன். அதைத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் கலாவதி அவர்கள் மூலமாகவோ அல்லது வேறு உறுப்பினர் மூலமாகவோ கேட்டிருந்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'சரி' என்று சொல்லி இருக்கலாம்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** நான் இந்தப் பக்கத்தில் இருந்து கேட்பதால்தான், இல்லையென்று சொல்லுகின்ற எண்ணம் என்று கூட எனக்குத் தோன்றுகிறது. தயவுசெய்து அந்த பஸ்ஸை விடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்தப் பக்கத்தில் இருந்தாலும், 'இல்லை' என்பதுதான் பதில். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார் அல்லது தவறான தகவலைத் தருகிறார் என்றுதான் நான் கருதுகிறேன். நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். எங்களுடைய ஆளுங்கட்சித் தரப்பிலே கேட்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட நாங்கள் பெரும்பாலான நேரங்களிலே, 'negative answer'-ஐத்தான், 'இல்லை' என்ற பதிலைத்தான் பல முறை சொல்லியிருக்கிறோம். இருந்தாலும்கூட, இதிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையிலே, இன்ன சட்டமன்ற உறுப்பினர் என்ற விருப்பு, வெறுப்புக்கு அப்பாற்பட்டு, எல்லாத் தொகுதிகளையும் தன்னுடைய சொந்தத் தொகுதியாகப் பாவிக்கிறார்கள். அப்படிச் செயலாற்றி வருகிறவர்கள்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இருக்கின்ற 234 தொகுதிகளையும் தன்னுடைய தொகுதியாக நினைத்து, இன்றைக்குப் பல்வேறு பணிகளைத், திட்டமிட்டுச் செயலாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

[2003 ஏப்ரல் 7

எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில், பாகுபாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெயக்குமார் கேட்டதற்கு நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இல்லையென்றுதான் சொல்லி இருக்கிறேனே தவிர, சாதாரணப் பேருந்துகள், 4 பேருந்துகள் 8 நடைகள் ஏற்கெனவே இயக்கபபடுகின்றன. அந்த 8 நடைகள் இயக்கப்பட்ட போதிலும்கூட, அந்த 8 நடைகளிலுமே பயணிகளுடைய விகிதாச்சாரம் இப்போது குறைவாக இருக்கிறது. சொல்லப் போனால், நாமக்கல்லிலிருந்து சென்னைக்கு வருகின்ற அந்த 4 பேருந்துகளிலும் 71 விழுக்காடுதான் பயணிகள் சராசரியாகப் பயணம் செய்கிறார்கள். 100 விழுக்காடு பயணிகள் பஸ்ஸில் பயணம் செய்தால் கூடுதல் பேருந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகளிலேயே போதுமான அளவிற்குப் பயணிகள் இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, புதியதாக ஒரு பேருந்து விடுவதற்கு வாய்ப்பில்லை என்றுதான் நான் சொன்னேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொகுசுப் பேருந்தாக இயக்கினால் இன்னும் ஒருவேளை கூடுதலாகப் பயணிகள் வருவார்கள் என்ற கருத்தில் அவர்கள் சொல்லியிருப்பதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அவர்கள் சொன்னதுபோல அவர்களுடைய நன்றியைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *188*, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**188—**

### தொழிற்பேட்டை

***7255—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



2003 ஏப்ரல் 7]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புவியிலே இருக்கும் தமிழர்கள் எல்லாம் போற்றுகின்ற தமிழ்த் தாயே! புரட்சி என்ற சொல்லுக்குப் புத்துணர்ச்சி தந்த புதிய விடியலே! கண்ணியம் காக்கின்ற காலத்தின் வித்தகமே! தங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் அம்மா! மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியானது மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருந்து வருகிறது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மிகுதியாக வசித்து வருகின்றனர். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இஸ்லாமியப் பெருமக்கள், சீர்மரபினர் வாழ்கின்ற பகுதியாக அது இருந்து வருகிறது. இந்த நிலையிலே, கடந்த கால தி.மு.க. ஆட்சியிலே எல்லா தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கும் மூடுவிழா செய்துவிட்டனர். வறட்சியின் காரணமாக, விவசாயப் பெருங்குடி மக்கள் வேலையிழந்து வருகின்றனர்..............

*முற்பகல் 10-35*

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்திலே உறுப்பினர் குற்றச்சாட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது ஒன்றும் குற்றச்சாட்டு அல்ல; உட்காருங்கள்.

**செல்வி சி. கனகதாரா:** குடிசைத் தொழில் செய்துவந்த பீடித் தொழிலாளர்களும் நலிவுற்று வாழ்ந்து வருகின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

[2003 ஏப்ரல் 7

**செல்வி சி. கனகதாரா:** வேலையில்லாப் பட்டதாரிகளும், படித்த இளைஞர்களும் வேலையின்றித் தவித்து வருகின்றனர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழைப்பவர் உயர்ந்தால்தான் உலகம் ஏற்றம் பெறும் என்ற உரிமைக் குரலை உறுதியாக எழுப்பியவர் பாவேந்தர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.

**செல்வி சி. கனகதாரா:** புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலம் தொழில் முன்னேற்றத்தைக் காட்டி வரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியிலே இதனை மறுபரிசீலனை செய்து, பேரணாம்பட்டு தொகுதியில் ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதியில் போதுமான தொழில் முனைவோர் முன்வராத காரணத்தால், தற்சமயம் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் சிட்கோவிடம் இல்லை. மேலும், பேரணாம்பட்டு தொகுதியில் போதுமான தொழில் முனைவோர் வந்தால், தொழிற்பேட்டை ஆரம்பிக்கத் தகுந்த இடம் கிடைக்கப்பெற்றால், சிட்கோ தொழிற்பேட்டையை வருங்காலத்தில் அமைக்க சிட்கோ நிறுவனத்தால் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு ஒரு பணிவான வேண்டுகோள். கேள்வி நேரத்தில் எந்தவிதமான குற்றச்சாட்டும் ஒரு உறுப்பினர் மீது கூறக்கூடாது.

வினா எண் 189, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**189—**

### துணை மின் நிலையம்

***22851—திருமதி செ. சுந்தராம்பாள்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 7]

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் 33 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. மின் நிலையமாக அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தொழில்நுட்ப ரீதியாக கொளத்தூர் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்தை 110 கி.வோ. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒட்டுமொத்த விவசாயிகளின் நலனுக்காக 350 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்த, தமிழகத்தின் நிரந்தர முதல்வர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 33 கேவி. துணை மின் நிலையத்தை 110 கேவி. துணை மின் நிலையமாக அமைக்கத் தேவையில்லை என்று கூறியுள்ளார்கள். கொளத்தூர் ஒன்றியம் முழுவதும் விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைந்த பகுதி. அங்கே அவர்களின் மின் மோட்டார்களுக்கு மின்சாரம் மிகக் குறைவாகக் கிடைக்கின்ற காரணத்தால், மின் மோட்டார்கள் அடிக்கடி ரிப்பேர் ஆகி, அவர்களுக்குப் பெருத்த செலவு ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, 33 கேவி. துணை மின் நிலையத்தை 110 கேவி. மின் நிலையமாக மாற்றுவதற்கு முயற்சி எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் 33 கே.வி. துணை மின் நிலையம் 2x5 எம்.வி.ஏ. திறன் மின் மாற்றி மூலம் தற்போது இயக்கத்தில் இருந்து வருகிறது. இதன் உச்சக்கட்ட மின் பளு இதுவரை 9.4 எம்.வி.ஏ.வை எட்டியுள்ளது. வரும் ஆண்டிற்கான கூடுதல் மின் பளுவினைக் கணக்கில் கொண்டு, ஏற்கெனவே உள்ள 2x5 எம்.வி.ஏ. திறன் மின் மாற்றிகளுக்குப் பதிலாக 2x8 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றிகளாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு 10-வது பெருந்திட்டம் பகுதி 1-ல் 2002-2003 ஆம் ஆண்டில் பணி முடிக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், பணி முடிக்கப்படவில்லை. இருப்பினும், இந்த நடப்பாண்டில், 2003-2004-ல், இதற்கான நிதி ஒதுக்கீடு செய்ய

[2003 ஏப்ரல் 7

நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த ஆண்டிலேயே பணி முடிக்க ஏற்பாடுகள் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் ஒன்றியம், முழுக்க, முழுக்க விவசாயிகளைக் கொண்ட பகுதி. எவ்விதத் தொழில் வசதிகளும் இல்லாத பகுதி. இங்கே அந்த பூகோளச் சூழ்நிலைகூட--இடையிடையே மலைப் பகுதியிலிருந்து, அங்கே கண்ணாமூச்சி என்ற பகுதி, ஒரு பகுதியாகவும், தார்க்காடு, தண்டாவூர், ஒரு பகுதியாகவும், காவேரிபுரம் ஒரு பகுதியாகவும்--பல கூறுகளாக மாறுபட்டிருக்கிறது. அதற்கு மையப் பகுதி கொளத்தூராக இருந்தாலும்கூட, அந்த கொளத்தூரிலேயிருந்து மின் இணைப்புச் செல்கின்றபோது, அங்கே மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது; மின் வெட்டு ஏற்படுகிறது. விவசாயிகளும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அதையெல்லாம் மையமாக வைத்து நம்முடைய அமைச்சர் அவர்கள் மின் மாற்றி அமைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, விவசாயிகளுடைய நலனைக் கருத்திலே கொண்டு--தார்க்காடு பகுதியிலே ஒரு துணை மின் நிலையம், காவேரிபுரம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம், கண்ணாமூச்சி பகுதியிலே ஒரு துணை மின் நிலையம் என இப்படித்--துணை மின் நிலையங்களைக் கூடுதலாக அமைக்கின்றபோதுதான் அந்த விவசாயப் பெருமக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படும். அதைக் கருத்திலே கொண்டு, இந்த 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை 110-ஆக உயர்த்துவதோடு, அந்தப் பகுதிகளுக்குத் துணை மின் நிலையங்கள் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற 33 கே.வி. துணை மின் நிலையம் 2x5 என்பதற்குப் பதிலாகத்தான், அதாவது 33 கே.வி. 2x8 ஆக மாற்றியமைப்பதற்குத்தான் திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், விவசாயிகளின் நலனைக் கருத்தில்



2003 ஏப்ரல் 7]

கொண்டும், அந்தப் பகுதியில் இன்னும் துணை மின் நிலையம் தேவை என்பதைத் தொழில்நுட்ப ரீதியாக அறிந்து, ஆய்வு செய்து, தேவை ஏற்படின் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி செ. சுந்தராம்பாள்.

**திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக மாற்றும்போது அரசுக்கு ஏற்படும் செலவு என்பது எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 190, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**190—**

**பணி நியமனம்**

***8831—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்குப் பணி நியமனம் செய்யும்போது, முழுவதும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் தகுதி வாய்ந்த பட்டதாரிப் பணியாளர்களைக் கொண்டு பணி நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 ஏப்ரல் 7

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழாது.

**திரு. மே. ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்குப் புதிதாகப் பணி நியமனம் செய்யும்போது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பணியாற்றும் உறுப்பினர்கள், அதன் கிளை வங்கிகளைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்கின்றபோது, அப்பணிகளில் 15 சதவிகிதத்திற்கு அவர்களை எடுத்துக்கொண்டு, மீதமுள்ள பணிக்கு நேரடித் தேர்வு மூலம் எடுத்துக்கொள்ளலாம் என உத்தரவு போடப்பட்டிருந்தது. அது தற்போது கடைப்பிடிக்கப்படாமல் நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால், சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியில் 622 பேர் பணியாற்றக்கூடிய நிலையில், 450 பேர் மட்டுமே பணியாற்றுகிறார்கள். இதனால் வங்கி நலிவடைந்துள்ளது. எனவே, அரசு மீண்டும் புதிதாகப் பணி நியமனம் செய்யும்போது, ஏற்கெனவே வழங்கிய அரசு உத்தரவின் அடிப்படையில், தகுதி வாய்ந்த பட்டதாரிப் பணியாளர்களைப் பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 216-ன்கீழ் கூட்டுறவு வங்கியிலுள்ள பணியிடங்களில் 85 சதவிகிதம், வேலைவாய்ப்பகங்களிலிருந்து பெறப்படும் பட்டியலிலிருந்து பதிவு மூப்பின் அடிப்படையில் நிறைவு செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 15 சதவிகிதக் காலியிடங்களை சம்பந்தப்பட்ட சங்கம் மற்றும் இணைக்கப்பட்ட சங்கங்களிலிருந்து தகுதி வாய்ந்த பணியாளர்களின் பணி மூப்பு அடிப்படையில் நிறைவு செய்ய வேண்டும். மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பலதரப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களும், மத்தியக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் என்பவை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடன் இணைக்கப்பட்ட சங்கங்களாகும். எனவே, அரசின் அறிவுரையின்படி 15 சதவிகித



2003 ஏப்ரல் 7]

ஒதுக்கீட்டில் வரும் பணியிடங்களை நிரப்பும்போது, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியோடு இணைக்கப்பட்ட அனைத்து வகை கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படும்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. டிகிரி படித்த, கூட்டுறவு பட்டயப் பயிற்சி மற்றும் நகை மதிப்பீட்டாளர் பட்டயப் பயிற்சி முடித்தவர்கள், கமிஷன் அடிப்படையிலே தற்போது வங்கியில் பணியாற்றி வருகிறார்கள். தற்போது எழுத்தர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் பணிக்குப் புதிதாக நியமிக்கும்போது, ஏற்கெனவே பணியாற்றி வருபவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வயது வரம்பைத் தளர்த்தி, பணி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா; இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க விளக்கம் அளிக்க வேண்டுமெனத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளைத் தளர்த்துவதற்கு இடம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, ஒரு சிறப்புத் துணை விதி, அரசின் ஒப்புதலுக்கு--பதிவாளர் மூலமாக அரசுக்குக்— கருத்துரு வரப்பெற்றுள்ளது. அந்த மாதிரி சிறப்புத் துணை விதிகள் அரசின் சட்டத் துறையோடு கலந்தாலோசித்து, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே Common cadre என்ற principle அமல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகிறவர்களுக்குக் கொடுக்கக்கூடிய விகிதாச்சாரப்படி மத்தியக் கூட்டுறவு வங்கியிலே பணியாற்றுகிறவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லையென்ற ஒரு ஆதங்கம் அந்தக் கூட்டுறவு மத்திய வங்கிகளிலே வேலை செய்கிறவர்களுக்கிடையிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்தக் குறைபாட்டைத் தீர்ப்பதற்கு அரசு தகுந்த

நடவடிக்கை எடுத்து, மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலேயும் Common cadre என்ற principle-இலே பதவி உயர்வு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதன் அடிப்படையிலேதான் சில துணை விதிகள் அரசினுடைய ஒப்புதலுக்கு வரப்பெற்றிருக்கின்றன. மேலும், பல்வேறு சட்டங்களினுடைய அடிப்படையிலேயும் உயர் நீதிமன்றம் அளித்திருக்கிற தீர்ப்பின்படியும் சில கருத்துருக்கள் வரப்பெற்று, பரிசீலனையில் இருக்கின்றன என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியக்கூடிய செயலாளர்களை எல்லாம் மற்றத் தொடக்க வேளாண்மை வங்கிகளுக்கு மாற்றுவதற்காக, ஏற்கெனவே அரசாணைகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டு, அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்திலே அவர்கள் தடையாணையைப் பெற்றார்கள். அதன் காரணமாக, வேறு வங்கிகளுக்கு அவர்களை மாற்ற முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. இப்போது, அந்த உயர் நீதிமன்றத்தினுடைய தடையாணை விலக்கப்பட்டுவிட்டதா? இப்போது தொடக்க வேளாண்மை வங்கிகளுடைய செயலாளர்களை மற்ற பகுதிகளுக்கு மாற்றினால்தான் ஓரளவு முறைகேடுகளைத் தடுக்க முடியும் என்ற காரணத்தினாலே, அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியபடி, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், அந்தச் செயலாளர்களையெல்லாம் மாறுதல் செய்திட வேண்டுமென்று விரும்பியது. ஆனால், நீதிமன்றத்திலே அவர்கள் தடையாணை பெற்றிருக்கின்ற காரணத்தினால் அதற்குத் தக்கதொரு நடவடிக்கையை எடுத்ததற்குப் பின்னால், அது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலிருக்கும் காலிப் பணியிடங்கள் எத்தனை என்பதையும், கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு அந்தக் கூட்டுறவு வங்கிகளிலேயே தற்காலிகமாக வேலை பார்த்திருக்கின்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும், காலியாக உள்ள இந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் மொத்தம் 88,716 பணியாளர்கள் இன்றையதினம் கூட்டுறவுத் துறையின் மூலமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே, உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் இன்றைக்கு எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிலே பல்வேறு நிலைப்பாடுகளின் அடிப்படையில், தகுதியில்லாதவர்கள் 2,851 பேராகவும், வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் அல்லாது நேரடியாகவே வேலையைப் பெற்றவர்கள் 65 பேராகவும் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் நடைமுறைப்படுத்துகின்ற வகையிலேதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், இன்றையதினம் பணி வரன்முறைகளை எல்லாம் சீர்செய்கிற வகையிலே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 191, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**191—**

**பாதாளச் சாக்கடை**

**•10252—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலை நகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வர அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) பாதாளச் சாக்கடைத் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) இத்திட்டம் நிறைவேற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) அண்ணாமலை நகர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடர்பாகக் கோரிக்கை ஏதும் வரப்பெறாததால் நடவடிக்கை ஏதுமில்லை.

*முற்பகல் 10-50*

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள அண்ணாமலை நகர் பேரூராட்சியானது மிக முக்கியமான பேரூராட்சியாகும். அங்கே 15 ஆயிரத்திற்கும் மேல், ஜனத் தொகை உள்ளது. அதற்கு மேலாக, மிகப் பெரிய பல்கலைக்கழகமான அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடைபெற்று வருகிறது. அந்தப் பல்கலைக்கழகத்தில், 10 ஆயிரத்திற்கும் மேல் மாணவர்கள் படிக்கிறார்கள். தொலைதூரக் கல்வி மூலமாக 30 ஆயிரத்திற்கும் மேல் மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி அந்தப் பகுதிக்கு வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேலாக, இராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி என்ற மருத்துவக் கல்லூரியும் ஆயிரம் படுக்கைகள் கொண்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் மூலம் கழிவு நீரை வெளியேற்றிட, இந்தக் கேள்வியின் மூலமாக, இதனையே கோரிக்கையாக வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்திட ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலை நகர், சிறப்பு நிலைப் பேரூராட்சியாகும். மொத்த மக்கள் தொகை 10,304 ஆகும். மேலும், பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த சுமார் 20 கோடி ரூபாய் என்று





மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான நிதி வசதி தற்சமயம் பேரூராட்சியிலே இல்லை. கழிவு நீரைச் சேகரித்து, சுத்திகரிப்புச் செய்ய தேவையான இட வசதியும் இல்லை என்பதால், இப்பேரூராட்சியில் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசம் ஏதுமில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய நிர்வாகம், இதற்காக ஒரு நிரந்தரத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு உதவி செய்வதற்காகத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியினுடைய, மாவட்டத்தினுடைய அமைச்சர். அவர் பல்வேறு காலகட்டங்களிலே, அந்தப் பேரூராட்சியிலே பல நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த முக்கியத்துவத்தைக் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினுடைய நிர்வாகத்தோடு பேசி, நிதி வசதி போதிய அளவு இல்லை என்றாலும், அரசும், நிர்வாகமும் சேர்ந்து, பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் நிதி ஒதுக்கீடு செய்ய இயலாத நிலை. தற்போது நகர்ப்புறப் பேரூராட்சிகளில், பயனாளிகள் பங்குத் தொகை முழுமையாக வரவேற்கப்பட வேண்டும். அப்படி வரவேற்கப்பட்டால், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், பயனாளிகளுடைய முழுப் பங்களிப்புத் தொகையின் வாயிலாக இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்துப் பரிசீலனையில் உள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 192, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**192—**

**கழிவு மூலம் மின்சாரம்**

**•20312—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 7

(அ) சேலம் மாநகராட்சி கழிவு (குப்பைகள்) மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் அன்றாடம் சேகரமாகும் குப்பையைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றினை இயக்குநர், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், சென்னை, அவர்களின் அறிவுரையின்பேரில், இம்மாநகராட்சியில் செயல்படுத்தலாம் என மாமன்றத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டு, இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியினுடைய அனைத்துப் பகுதிகளிலிருந்தும், நகரின் மையப் பகுதியான கிச்சிப்பாளையம் பகுதியிலே, 18 ஏக்கர் நிலப் பரப்பில், தினசரி 200 டன்களுக்கு மேலாக, குப்பைகளையும், கழிவுகளையும் கொண்டுவந்து கொட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது நகரின் மையப் பகுதியாக இருந்து கொண்டிருக்கிறது. அங்கே குப்பைகள் எல்லாம் மலைபோல் தேங்கிக் கிடக்கின்றன. இதனால், நிலத்தடி நீரில் மாசு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பகுதி நகரின் மையப் பகுதியாக இருப்பதால், அங்கே துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கிறது. மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இந்த ஆண்டே இந்தத் திட்டத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வருமா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன். அப்படி இல்லையென்றால், தேங்கிக் கிடக்கின்ற குப்பைகளையாவது, இனி வருங்காலத்தில், நகரின் வெளிப் பகுதிக்குக் கொண்டு சென்று, அங்கே கொட்டுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்குமா என்பதைத் தங்களின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியில் தினந்தோறும் பெறப்படும் திடக்கழிவுகள் 300 மெட்ரிக் டன்களாகும். ஐந்து மெகாவாட் மின்சாரம் தயாரிக்க, தோராயமாக 25 கோடி ரூபாய் செலவிடப்பட வேண்டும்



2003 ஏப்ரல் 7]

என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், சேலம் மாநகராட்சியிலுள்ள குப்பைகளைத் தொலைதூரத்தில் அப்புறப்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதைக் கருத்தில் கொண்டு, அதற்குண்டான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 5 மெகா வாட் மின்சாரம் கிடைக்கும் என்று கூறி இருக்கின்றார்கள். அந்த 5 மெகா வாட் மின்சாரத் திட்டத்தை - இன்றையதினம் சேலம் மாநகராட்சி ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் அளவிலே செலவு செய்து கொண்டிருக்கிறது. அந்த மாநகராட்சி நிர்வாகம் எடுத்துக்கொள்கின்ற வகையிலே வழிவகை செய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இதுவரையில் குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் ஒரு கருத்துரு எந்த மாநகராட்சியிலும் இல்லை. ஆனால், லக்னோ மாநகராட்சி தற்சமயம் அதைச் செயல்படுத்தி வருகின்றது. அந்த அடிப்படையிலே சேலம் மாநகராட்சியில், திடக்கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை மத்திய மரபுசாரா எரிசக்தி நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி B.O.O.T. அதாவது Build, Operate, Obtain and Transfer திட்டத்தின்படி, உருவாக்கி இயக்குதல், ஒப்படைத்தல் என்ற முறையில் செயல்படுத்த சேலம் மாநகராட்சி மன்றத்தின் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்குத் தினமும் குறைந்தபட்சம் 300 மெட்ரிக் டன் திடக்கழிவு வேண்டும். இத்திட்டத்திற்குத் தேவையான நிலம் 30 வருட காலத்திற்குக் குத்தகைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். திடக்கழிவு இனாமாக வழங்கப்பட வேண்டும். திடக்கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்க மாநகராட்சிக்கு 15 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யவேண்டும். மரபுசாரா எரிசக்தி வழிகாட்டுதலின்படி குறைந்த குத்தகையில்--Nominal Lease Amount அடிப்படையில்--மாநகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும். லக்னோ மாநகராட்சியில் சதுர மீட்டருக்கு வருடத்திற்கு ஒரு ரூபாய் வீதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, லக்னோ மாநகராட்சியில்

செயல்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி சேலம் மாநகராட்சியிலும் செயல்படுத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியில் குறைந்தது 300 மெட்ரிக் டன், அதிகபட்சம் 400 மெட்ரிக் டன் வரை கழிவுகள் கிடைக்கின்றன. அங்கே குறிப்பாக, இடம் இல்லாமல், நகராட்சிப் பகுதிகளிலே தூய்மைப்படுத்தி, மீண்டும் குப்பைகளைப் போடுகின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. 15 ஏக்கர் நிலம் கண்டிப்பாக மாநகராட்சியை ஒட்டிய பகுதியிலே இன்றைக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது. கண்டிப்பாக அதை மாநகராட்சி நிர்வாகம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். சேலம் மாநகராட்சியின் சார்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, இன்றைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.29 இலட்சம் மின்சாரக் கட்டணமாக மாநகராட்சி கட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அந்தத் திட்டத்தை மாநகராட்சி ஏற்று நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கார்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளுடைய தீர்மானத்தின் அடிப்படையில் அத்தியாவசிய தேவைகளை, மிக முக்கியமாகக் குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கேள்வியை தமிழக அரசு— மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு—ஆய்விற்கு எடுத்துக்கொள்ளும்; பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 193, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**193—**

### கால்நடை மருத்துவமனை

***23383—திருமதி வி. அழகம்மாள்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி, மணிவிழுந்தான் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டிலே செயல்படுத்தப்படுமா?*

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி, மணிவிழுந்தான் ஊராட்சியில் இப்போது சுமார் 10,500 கால்நடைகள் உள்ளதால், ஒரு புதிய கால்நடை மருந்தகம் அங்கே தொடங்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு விரைவில் எடுத்துச் சென்று, மணிவிழுந்தான் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை அன்போடு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி வி. அழகம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் ஒன்றியம், மணிவிழுந்தான் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்றுப் பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலேயே கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக மணிவிழுந்தான் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்கத் தயார் நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*(குறுக்கீடுகள்)*

[2003 ஏப்ரல் 7

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்

### (அ) மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்மீது உரிமைப் பிரச்சினை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன். என்னவென்று சொல்லுங்கள். திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆம் தேதி இந்த மாமன்றத்தில் நடைபெற்ற கல்வி மானியம் குறித்த விவாதத்தில் உரையாற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், உறுப்பினர் வள்ளல் பெருமான் உரையாற்றுகிறபோது குறுக்கிட்டு, ஜி.ஓ. நம்பர் 56, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே போடப்பட்டது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன், அதுகுறித்து...

**திரு. துரைமுருகன்:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) அப்படி உண்மைக்கு மாறான ஒரு தகவலை, வேண்டுமென்றே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து ஓர் உரிமைப் பிரச்சினையை நான் தந்திருக்கிறேன். அந்த உரிமைப் பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. பிறகு எடுத்துக்கொள்ளலாம். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. ஆ ய் வி ல். (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** எ ப் போ து? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** ஜி.ஓ. 56 பற்றி நான் சொல்லவில்லை. அதற்கு நான் பிறகு விளக்கம் சொல்கிறேன்.



2003 ஏப்ரல் 7]

### (ஆ) புதிய தலைமைச் செயலக வளாகம் மற்றும் இராணி மேரி கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை உங்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலே அவையிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளலாம். என்ன என்று கேட்டு என்னுடைய அறைக்கு வாருங்கள். அதுபற்றிப் பேசி எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இராணி மேரி கல்லூரி இருக்கின்ற இடத்தில் தமிழக அரசினுடைய தலைமைச் செயலகம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நீதிமன்றத்திலே இருக்கிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்தை எப்போது எடுக்க வேண்டுமோ, அப்போது எடுத்துக்கொள்ளலாம். பிரச்சினை நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே, அந்தப் பிள்ளைகளை, வேலை செய்கிறவர்களை வெளியேற்றக் கூடாது, இடிக்கக் கூடாது என்றுதான் தடை உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, அங்கே கட்டடம் கட்டுவதை, தலைமைச் செயலகத்தை மாற்றுவதை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, ஒத்திவைப்புத் தீர்மானத்தை எப்போது எடுத்துக்கொள்ளலாமோ, அப்போது எடுத்துக்கொள்ளலாம், அதற்குப் பிறகு.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Please. தலைமைச் செயலகத்தை இங்கிருந்து மாற்றுவதைக் குறித்தே நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறோம், மக்களிடையே ஏற்பட்டிருக்கிற பிரச்சினையின் அடிப்படையில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புப் பிரச்சினையைத்தான் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** இதற்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. ஆகையினால், உடனடியாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அறைக்கு வாருங்கள், எப்போது எடுத்துக்கொள்ளலாம் என்று பேசுவோம்.

**திரு. துரைமுருகன்:** அறையிலே வந்துதான் சார் கொடுத்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறையிலே வந்து சொல்லுங்கள். அறையிலேதான் அதற்குப் பதில் கிடைக்கும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைவிட இந்தப் பேரவை பெரிய அறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அறையிலே கொடுத்ததற்கு அறையிலேதான் விளக்கம் அளிக்க வேண்டும். (குறுக்கீடு) துரைமுருகன், அதை ஆய்வு செய்துதான் எடுத்துக்கொள்ள முடியும், உட்காருங்கள் (குறுக்கீடு) அதை ஆய்வு செய்துதான் எடுத்துக்கொள்ள முடியும், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஆய்வு செய்துதான் எடுத்துக்கொள்ள வேண்டும். எப்போது எடுத்துக்கொள்ள முடியுமோ, எடுத்துக்கொள்ளலாம். அதுபற்றி என்னுடைய அறையிலே வந்து பேசுங்கள். எஸ்.ஆர்.பி., வேறு என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடு) அதுதான் சரி. (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த ... (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு. மணி, என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இராணி மேரி கல்லூரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் சொல்லிவிட்டேன். திரு. ஜி.கே. மணி.

### (இ) உலக சுகாதார தினம்

**திரு. ஜி.கே. மணி:** மர்ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உலக சுகாதார தினம். அனைவருடைய ஆரோக்கிய வாழ்விலே அரசு அக்கறை கொள்ள வேண்டும். ஆகவே, ஆரோக்கிய வாழ்வே அற்புதமான வாழ்வு என்று சொல்லக்கூடிய வகையிலே, இன்று உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, தமிழக அரசு ஏதாவது முக்கிய அறிவிப்பை வெளியிட இருக்கிறதா? (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்று.



## 4. கவன ஈர்ப்பு

### திருத்துறைப்பூண்டி, அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் ஆலயத் திருக்குளங்கள்-தூர் வாருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரம், அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான திருக்குளங்களைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்:

#### அறிக்கை

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பிறவி மருந்தீஸ்வரர் (பவஔஷதீஸ்வரர்) திருக்கோயில், சட்டப் பிரிவு 46(ii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில், சட்டப் பிரிவு 45(i)-ன்கீழ் நியமிக்கப்பட்ட 2-ம் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் 1412 ஆம் பசலி உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.11,00,820 ஆகும். இத்திருக்கோயிலுக்கு நிலங்கள் நஞ்சை, ஏக்கர் 350.73; புஞ்சை, ஏக்கர் 114.59; கட்டடங்கள் 22, மனைகள் 535 சொந்தமாக உள்ளன. இத்திருக்கோயிலுக்கு வெளியே திருத்துறைப்பூண்டி நகரில் திருக்கோயிலுக்குச் சொந்தமான 6 குளங்கள் உள்ளன. இந்த 6 குளங்களும் பொது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திருக்குளங்கள் 6-ஐயும் தூர் வாரி ஆழப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

| வ. எண் | திருக்குளம் பெயர் | சர்வே எண் | விஸ்தீர்ணம் ஏக்கர்/ சென்ட் |
|---|---|---|---|
| 1. | பெரிய குளம் (சன்னதி குளம்) | 184/4 | 4.44 |
| 2. | தோட்டத்துக் குளம் | 180/11 | 0.44 |
| 3. | ரொக்கக் குத்தகைக் குளம் (புதுக் குளம்) | 263/6 | 0.74 |
| 4. | தேவடியான் குட்டை | 183/7 | 0.22 |
| 5. | அய்யனார் குட்டை | 159/10 | 0.10 |
| 6. | இராமர் மடத்துக் குளம் | 183/2 | 1.70 |

மேற்படி திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், இத்திருக்குளங்களில் தூர் வாரும் பணியினை, திருக்கோயில் நிதியில் செய்ய இயலாத நிலை இருந்து வருகிறது. மேற்படி திருக்குளங்கள் பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படுவதாக உள்ளதால், முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து தூர் வாரி மராமத்து செய்திடவும், பொது நன்மையைக் கருதி சிறப்பு இனமாகப் பாவித்து, உள்ளாட்சி அமைப்புகள் மூலமாகவோ, ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவோ, கிராமத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகவோ தூர் வாரிக் கொடுக்க மாவட்ட ஆட்சியரைக் கேட்டுக்கொண்டதற்கு, மேற்படி திட்டங்களில் நிதி வசதிக்கேற்ப நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி திருக்கோயில் திருக்குளம் தூர் வாருவது சம்பந்தமாக 21-11-2002 அன்று உறுதிமொழிக் குழு பார்வையிட்டுச் சென்றுள்ளது. அதன் பிறகு, 4-12-2002 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியரால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எனினும், தன்னார்வத்



தொண்டு நிறுவனங்கள் மேற்படி பணியினை மேற்கொள்ள முன்வரவில்லை.

தற்பொழுது சன்னதி குளம் என்ற பெரிய குளம் இலாகாப் பொறியாளரைக் கொண்டு அளவீடுகள் செய்து, உத்தேச மதிப்பீடு ரூ.18.89 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் திருக்குளங்களை "சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா", 2002-2003, சிறப்புப் பணித் திட்டத்தின்கீழ் தூர் வார நடவடிக்கை எடுக்க திருவாரூர் மாவட்ட ஆட்சியர் 16-2-2003 அன்று அறிக்கை மூலமும், நேரிலும் தஞ்சாவூர் இணை ஆணையரால் கேட்டுக்கொள்ளப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் தாமதமாக வந்தீர்கள். இன்னும் அறிக்கையைப் படிக்கவில்லை என்று கருதுகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வந்த டிரெயின் காலதாமதமாக வந்தது. காலத்தோடு வர முடியவில்லை. 12½ மணி நேரமாக வந்து கொண்டிருந்தோம். என் சார்பாக தோழர் சிவபுண்ணியம் கேள்வி கேட்பார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேட்கக் கூடாது. கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தவர்தான் விளக்கம் கேட்கலாம்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 142 முதல் 145 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-05

[2003 ஏப்ரல் 7

**(ஆ) பொது நிறுவனங்கள் குழு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2003 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது முதல் தொண்ணூற்று எட்டாவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 20—நெடுஞ்சாலைகள் துறை**

**(இ) கோரிக்கை எண் 23—உள் துறை-சிறைச்சாலைகள்**

**(ஈ) கோரிக்கை எண் 36—மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**

**(உ) கோரிக்கை எண் 38—பொதுப் பணித் துறை**

**(அ) கோரிக்கை எண் 34—பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34-பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கை எண் 34-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.22,35,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.



2003 ஏப்ரல் 7]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 129, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 860, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1909, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2087, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2495, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2542, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2856, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3441, திருமதி. காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3576, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3887, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4076, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8623, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 215, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 521, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1764, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6937, திரு. கே. மகேந்திரன்.

***திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 398, திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,35,85,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3856, திரு. ஏ.எஸ். கண்ணன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நங்காஞ்சி ஆறு நீர்த் தேக்கத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்தவித நிதியாதாரங்களைத் திரட்டாமலும், நிதி வர வேண்டிய வழிவகைகளை ஆராயாமலும், அவர்கள் விளம்பரத்திற்காகப் பல்வேறு திட்டங்களை அறிவிப்புச் செய்தார்கள் என்பதுதான் உண்மை. அதுபோலவே, நங்காஞ்சி ஆறு திட்டமும் அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தில் திருத்திய மதிப்பீடாக ரூ. 37.36 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த அணைக்கட்டினை வந்து பார்வையிட்டதாகச் சொன்னார்கள். நானும் அந்த அணையைப் பார்த்து ஆய்வு செய்தேன் என்பதை அவர் சொல்லத் தவறிவிட்டார் என்பதைச் சுட்டிக்காட்டி 2003-2004 ஆம் நிதியாண்டில் ரூ. 348.35 இலட்சம் அந்த அணையைக் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் பணி முடிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை ஓராண்டுக்கு முன்பு வந்து அங்குப் பார்த்தார். பார்வையிட்ட பின்பு, விவசாயிகளிடத்திலும், பத்திரிகையாளர்களிடத்திலும்

சொன்னார்கள்; 'நான் சென்னைக்குச் சென்றவுடன் அதிகாரிகளுடன் கலந்து, ஓராண்டுக்குள் அந்தப் பணியை நிறைவு செய்வதற்கு நிதி ஒதுக்கி அந்தப் பணியைச் செய்வதாகச் சொன்னார்கள். இன்றைக்கு 3,48,35,000 ரூபாய் நிதியொதுக்கீடு செய்துள்ளார்; இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் முழுவதுமாக, இன்னும் கூடுதலாக ரூ. 3,4 கோடி தேவைப்படுகின்றது. அந்தப் பணம் முழுவதையும் ஒதுக்கி, இந்த ஆண்டிற்குள் அந்தப் பணியை நிறைவு செய்ய அரசு முன்வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நல்லதங்காள் திட்டம். ஒட்டன்சத்திரத்தில் தொப்பமபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கொத்தயம் என்ற இடத்திலே கட்ட வேண்டுமென்று அங்கே விவசாயிகளும், பொது மக்களும், முன்னாள் முதலமைச்சர், எங்களுடைய தலைவர் கலைஞரிடத்திலே கோரிக்கை வைத்தார்கள். அதைக்கேட்டு நமது முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன் வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு, அங்கே கட்டப்படும் என்று சட்டமன்றத்திலே அறிவித்தார்கள். அதுகூட இன்றைக்கு அரசு உறுதிமொழிக் குழுவிலே இடம் பெற்றிருக்கிறது. எனவே, அந்த அணையையும் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நதிகளைப் பொறுத்த அளவிலே, எல்லா நதிகளும் மிகவும் வறண்டு கிடக்கின்றன. இதனால், விவசாயிகளும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள்.

'காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—யென
மேவியயாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு'

என்று இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மகாகவி பாரதி செம்மாந்து பாடினான். ஆனால், இன்றைய சூழ்நிலையில் அது தலைகீழாக மாறிவிட்டது. பல ஆயிரமாண்டு காலமாகத் தமிழகத்தின் திருமேனியைச் செழிக்க வைத்த பல ஆறுகள் வறண்டு



விட்டன. பாலாறு பாழாறு ஆகிவிட்டது; வைகை வற்றிவிட்டது; அகண்ட காவிரி வறண்ட காவிரியாக இன்றைக்கு இருக்கிறது. இதை உணர்ந்த இன்றைய மத்திய அரசு, நதிகளை இணைக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதற்கு முதல் வித்திட்டவர் எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்திற்கு, வங்கத்தில்...

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தலைவர் அதற்கு முதன் முதலாகக் குரல் கொடுத்ததாகச் சொன்னார்கள். அது தவறு. இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1984-லேயே (மேசையைத் தட்டும் ஒலி) பாராளுமன்றத்திலேயே, தேசிய நதிகளையும், தீபகற்ப நதிகளையும் இணைக்க வேண்டிய அவசியத்தினைப் பற்றி அங்கு உரையாற்றியிருக்கிறார்கள் என்பதனை இங்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே,

"வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்"

என்று முண்டாசுக் கவி பாரதி பாடியதற்கேற்ப, கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தைப் பற்றி 1970-71-லே தமிழக முதல்வராக இருந்த தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், அன்றைய கேரள முதலமைச்சர் திரு. அச்சுத மேனன், அன்றைய கர்நாடக முதல்வர் திரு. வீரேந்திர பாட்டீல், அன்றைய மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு. கே.எல். ராவ் முன்னிலையில் பேசப்பட்டு,

தொடர்ந்து விவாதம் செய்யப்பட்டு வருகின்றது. தலைவர் கலைஞர் அவர்கள், அண்ணா முதல்வராக இருந்தபோது, பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த காரணத்தினாலும், பொன்னி நதி பாயும் தஞ்சை வள நாட்டில் காவிரிப் பிரச்சினை தோன்றிய காலத்தில் பிறந்த காரணத்தாலும், தலைவர் கலைஞர் அவர்களுக்கு காவிரி நதி நீர்ப் பிரச்சினை மீதுள்ள அக்கறையாலும், நாட்டில் நதி நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைய வேண்டும் என்ற ஆர்வத்தின் மிகுதியாலும் கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தில் தனிப்பட்ட அக்கறை உண்டு. தலைவர் கலைஞர் அவர்கள்கூட சமீபத்திலே பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போதுகூட, எதிர்காலச் சந்ததியினருக்கு இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, இன்றைக்கு இந்த அரசு, கிருஷ்ணா நதி நீரைப் பொறுத்த அளவிலே, சென்னைக்கு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தை மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆரம்பித்தாலும், அந்தப் பணியை நிறைவு செய்வதற்கு அதிக நிதியை ஒதுக்கி, சென்னை மக்களுக்கு அந்த நீரைப் பெற்றுத் தந்த பெருமை தலைவர் கலைஞரையே சாரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அவருடைய தலைவர் கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குப் பெற்றுத் தந்ததாகக் குறிப்பிட்டார். அப்படியானால், எங்கே அந்த நீர்?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கிருஷ்ணா நதிக் கால்வாயிலே வந்துகொண்டிருக்கிறதே, அதுதான் கிருஷ்ணா நதித் தண்ணீர். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்....



***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களை நான் கேட்கிறேன். கால்வாய் வறண்டு கிடக்கிறதே, அந்தத் தண்ணீர் வரவில்லையே? மீண்டும் கேட்கிறேன், அந்தத் தண்ணீர் எங்கே?

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியா! அப்படியானால், நீங்கள் எந்த முயற்சியும் எடுக்கவேயில்லையா? சரி, என்னையாவது அனுப்புங்கள், உங்கள் சார்பாக கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: துரைமுருகன், ஏதாவது கட்சியிலே சேருவதாக உத்தேசமா? (பலத்த சிரிப்பு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. துரைமுருகன்:** காரணம், கட்சியிலே சேருவதற்காக அல்ல; ஆனால், இந்த ஆட்சியால் முடியாததை முடித்துக் காட்டுவதற்காக.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சக்ரபாணி அவர்கள், ஏதோ கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்திற்கு அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அவருடைய தலைவர்தான் அதிக நிதி ஒதுக்கினார் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அதுவும் தவறான தகவல் என்பதனை நான் இங்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991-96 காலகட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த சமயத்திலே, அந்தக் கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்திற்குத் தமிழகம், ஆந்திர அரசுக்கு அளிக்க வேண்டிய பங்குத் தொகை ரூபாய் 521 கோடியில், 321 கோடி ரூபாய் 1991-96 காலகட்டத்தில்தான் கொடுக்கப்பட்டது என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, நம்முடைய பகுதிகளில் கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்திற்கான கால்வாய் வெட்டுவதற்கும், மற்றும் பல பணிகளைச் செய்வதற்கும், மாண்புமிகு அம்மா அவர்கள் 1991-96 காலகட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த சமயத்திலேதான், அந்தத் திட்டம் 1983-ல் தொடங்கி, 2002 வரை நடைபெற்ற காலகட்டத்தில், 1991-96 காலகட்டத்தில்தான், 189 கோடி ரூபாய் என்ற நிலையில், 117 கோடி ரூபாயை, மாண்புமிகு அம்மா அவர்கள் அதிகபட்சமான நிதியை ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதனை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு காலத்தில் கிருஷ்ணா நீர் சென்னைக்கு வாவில்லை என்று கூறினார்கள். ஆனால், உங்களுடைய கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 63-ல், கண்டலேறு அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் அளவு, தமிழ்நாட்டு எல்லையில் சேர்ந்த நீரின் அளவு எல்லாம் இங்கே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

அதேபோல, 2002-2003 ஆம் ஆண்டு உங்கள் கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 117-ல் 'அரசுக் கட்டடங்கள் பராமரிப்பு' என்ற தலைப்பில், ஹட்கோ நிதியுதவியுடன் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசுக் கட்டடங்களில் சிறப்புப் பராமரிப்பு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று உள்ளது. ஆனால், ஹட்கோ நிதி உதவி பெற்று சிறப்புப் பராமரிப்புப் பணிகள் செய்யப்பட்டனவா என்பதை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே காணவில்லை. மாண்புமிகு அமைச்சர் அதற்குப் பதிலுரையிலே விளக்கம் தெரிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில், தமிழகத்தின் சமூகப் பொருளாதாரத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடித்தளங்களை உருவாக்கிடும் முயற்சிகளில், சாலை வசதிகளை உருவாக்கி, மேம்படுத்தி, தொடர்ந்து பராமரிப்பதில் தனிக் கவனம் செலுத்துவதும் ஒன்றாகுமெனக் கருதி, 1-8-1996 அன்று தலைமைச் செயலகத்தில் அதற்கெனத் தனியான ஒரு துறை எங்களுடைய



தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதோடு, 1998 மார்ச் 26 ஆம் நாள் தமிழக வரலாற்றில் முதன்முறையாக நெடுஞ்சாலைத் துறைக்கென தனி அமைச்சகம் உருவாக்கியவர் எங்கள் தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமங்களை, முக்கிய சாலைகளுடன் இணைக்கும் திட்டத்தை 1976-க்கு முன் திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதேபோல், 1996 முதல் 2001 வரை நடைபெற்ற கழக ஆட்சியில் கட்டப்பட்ட பாலங்கள் 601, மதிப்பு சுமார் ரூபாய் 1184 கோடியே, 99 இலட்சம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், நாடு சுதந்திரம் அடைந்த பிறகு தமிழகத்தில் 1996 வரை கட்டப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை 195, மதிப்பு ரூ.170 கோடி என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இன்றைக்குச் சாலைகளைப் பொறுத்த வரையிலே, தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள் என்று பிரிக்கப்பட்டிருந்தாலும், தேசிய நெடுஞ்சாலைக்கு இன்றைக்கு மத்திய அரசு ஓரளவு நிதி கொடுக்கிறது. இன்றைக்கு அங்கே பணியைச் செய்ய முடிகிறது. ஆனால், மாவட்ட, மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகளைப் பொறுத்த அளவிலே, இன்றைக்கு சுமார் 55,488 கிலோ மீட்டர் தமிழகத்திலே இருந்தாலும், கடந்த இரண்டு ஆண்டு காலமாக நிதி ஒதுக்காததால், எங்குப் பார்த்தாலும் சாலைகள், குண்டும், குழியுமாக உள்ளன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்திலே சாலைகள் அனைத்தும் மிகவும் மோசமாக உள்ளன. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 மணித்துளிகளில் முடித்து விடுங்கள்.

**திரு. ஆர். சக்ரபாணி:** இன்னும் 3, 4, மானியக் கோரிக்கைகளில் பேச வேண்டியுள்ளது. மொத்தம் 5 மானியக் கோரிக்கைகள் இன்று இருக்கின்றன, பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பாயின்டை மட்டும் தான் சொல்ல வேண்டும். சிறப்புச் சொற்பொழிவு ஆற்றக் கூடாது.

**திரு. ஆர். சக்ரபாணி:** சரி, சரி. என்னுடைய திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, ஒட்டன்சத்திரம் தொகுதியிலே மாநில நெடுஞ்சாலையான மேட்டூர், பலக்கனூத்து, ஒட்டன்சத்திரம் வழியாகச் செல்லுகின்ற சாலை, அமைச்சருடைய தொகுதிக்குச் செல்லுகின்ற ஒட்டன்சத்திரம்-பாச்சலூர் சாலை, அதேபோல, வடமதுரை-ஒட்டன்சத்திரம் சாலை, இன்றைக்கு O.D.R.--இதர மாவட்டச் சாலைகள்--எல்லாம் குண்டும், குழியுமாக இருக்கின்றன. அங்கு இருக்கின்ற கோட்டப் பொறியாளரிடத்திலே நான் சென்று கேட்டேன்; இரண்டு ஆண்டுகள் ஆகின்றனவே, . நீங்கள் ரோடு Strengthen பண்ண வேண்டாம், widen பண்ண வேண்டாம், அகலப்படுத்தி, விரிவுபடுத்தித் தரவேண்டாம், patch-ஆவது போடுங்கள் என்று கோட்டப் பொறியாளரிடத்தில் கேட்டதற்கு, அவர் சொன்னார், இரண்டு ஆண்டுகளாக, தாருக்காகவோ, ஜல்லிக்காகவோ, ஒரு சல்லிக்காசுகூடநிதி . . .

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ சாலைகள் பழுதுபட்டு இருக்கின்ற நிலைக்கு நம்முடைய அரசுதான் காரணம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே உரையாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். 1996 முதல் 2001 வரைக்கும் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போடப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 27,000 கிலோ மீட்டர்தான். மாநில நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற மாநிலச் சாலைகள், மாவட்டப் பெரிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள் மற்றும் கிராமச் சாலைகள், கரும்புச் சாலைகளின் எண்ணிக்கை, கிட்டத்தட்ட 54 ஆயிரம் கிலோ மீட்டர் என்ற அளவிற்கு இருக்கின்றது. அவை காலமுறையில் புதுப்பிக்கப்படுவதற்கு, ஆண்டிற்குக் குறைந்த அளவு 10,000 கிலோ மீட்டர் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991-1996 காலகட்டத்தில், இருக்கின்ற அத்தனை சாலைகளையும்,--கிட்டத்தட்ட 50,000 கிலோ மீட்டர் சாலைகளையும் புதுப்பிக்கச் சொல்லி, எடுத்துப் புதுப்பிக்கப்பட்டன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், அதற்குப் பின்னால் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், காலமுறையில் புதுப்பிக்கப்பட வேண்டிய சாலைகளைப் புதுப்பிக்காத காரணத்தினால்தான் இன்றையதினம் சாலைகள் மிகவும் படுமோசமாக இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ளக்



கடமைப்பட்டிருக்கின்றேன். தற்போது இருக்கின்ற கடுமையான நிதி நெருக்கடியிலும், மாண்புமிகு அம்மா அவர்கள் சாலைகளின் மேம்பாட்டிற்கு வேண்டியும், பழுதுகள் நீக்கப்படுவதற்கும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு இருக்கின்றார்கள். பொறுத்திருந்து பாருங்கள். பணிகள் அனைத்தும் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆர். சக்ரபாணி:** கடந்த ஆட்சியிலே சாலைகளைப் பராமரிக்க 10,000 சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களை எல்லாம் இந்த அரசு வேலையை விட்டு நீக்கியதால் 11 பேர் தற்கொலை செய்து கொண்டனர். அவர்களையெல்லாம் வேலைக்கு அமர்த்துவதற்கு இந்த அரசு மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களை பணி வரன்முறை செய்யாமல், அவர்கள் நியமனம் செய்திருந்தார்கள். அரசின் சார்பாக 1997-1998 ஆம் ஆண்டில் சாலைப் பராமரிப்பிற்கு 182.46 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில், சாலைப் பணியாளர்களின் ஊதியமாக ரூபாய் 26.45 கோடியும், சாலை பழுதுபார்க்கும் பணிக்காக ரூ.31.48 கோடியும், காலமுறைப் பராமரிப்புக்காக ரூபாய் 124.53 கோடியும் அடங்கியுள்ளன. ஆனால்,சாலைப் பணியாளர்களின் ஊதியம் படிப்படியாக உயர்ந்ததால், 2001-2002 ஆம் ஆண்டில் சாலைப் பணியாளர்களின் ஊதியத்திற்காக ரூபாய் 87.17 கோடியும், சாலை பழுதுபார்க்கும் பணிகளுக்காக ரூபாய் 21.76 கோடியும், காலமுறைப் பராமரிப்புக்காக ரூபாய் 93.89 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. சாலைப் பணியாளர்களால், தார்ச் சாலைகளின் புருவங்களில் மண் அணைத்தல், சாலையோர முட்செடிகளை அகற்றுதல், தார்ச் சாலையின் மேற்பரப்பில் ஏற்படும் நொடிகளைச் சரிசெய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. சாலைப் பணியாளர்களின் ஊதியங்கள் உயர்ந்ததால், சாலைகளைப் பழுதுபார்க்கும் பணிக்கும், காலமுறைப் பராமரித்தலுக்கும் நிதி ஒதுக்கீடு குறைந்தது. ஆனால், சாலைப் பணியாளர்களின் வேலை செய்யும் திறனோ 10 சதவிகிதத்திற்கும்

குறைவாகவே காணப்பட்டது. இதனால் சாலைப் பராமரிப்பு பெரிதும் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதனைக் கருத்தில் கொண்டுதான், நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 55,488 கிலோ மீட்டர் நீளச் சாலைகளைப் பழுதுபார்ப்பதற்கு கிலோமீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 20 ஆயிரம் வீதம், மொத்தம் ரூ.110.98 கோடி தேவைப்படுகிறது. இந்தப் பணியை ஒப்பந்ததாரரிடம் கொடுத்து செய்யச் சொல்கிறபோது, பணி சரிவர, ஒழுங்காக, நல்ல முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எந்த நோக்கத்திற்காக, பராமரிப்புக்காக நிதி ஒதுக்கப்படுகிறதோ, அந்தப் பணி சாலைப் பணியாளர்கள் மூலம் நடைபெறவில்லை. 100 சதவிகிதப் பணிக்கு 10 சதவிகிதப் பணிதான் நடைபெற்றது. இதனைக் கருத்தில் கொண்டுதான் சாலைப் பணியாளர்களை—தற்காலிகமாக தி.மு.க. அரசு நியமித்த சாலைப் பணியாளர்களை—நாம் எடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர்.சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டம் பற்றி--பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவை இன்றைக்கு நிறைவேற்றுகின்ற வகையிலே--எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு பிரதம அமைச்சரிடம் பல முறை நேரிலும், கடிதத்திலும், தொலைபேசியிலும் சொல்லி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது. மாநில அரசும் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் தென் பகுதியில் இருக்கின்ற பின்தங்கிய மாவட்டங்கள் பொருளாதார ரீதியிலே வளர்ச்சி அடையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர் நலனைப் பொறுத்த அளவிலே, இந்த அரசு பொறுப்பேற்று, 6 ஆணைகளை வெளியிட்டதன் காரணமாக, அவர்கள் பல்வேறு போராட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். 10 ஆம் தேதிகூட ஒரு பெரிய போராட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். எனவே...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு ஒரு விளக்கம் தருவது அவசியம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர், ஏதோ அவருடைய தலைவர் சொல்லித்தான் மத்திய அரசு இப்போது சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற எடுத்துக்கொண்டிருப்பதாக



இங்கே குறிப்பிட்டார். தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். 1998-ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பி.ஜே.பி. தலைமையிலான மத்திய கூட்டணி ஆட்சியில் இடம் பெற்றபோது, அப்போது தேசிய நிர்வாக செயல் திட்டம்—National Agenda for Governance—என்ற ஒரு document-ஐ வகுத்தபோது அந்தத் திட்டத்திலேயே அப்போது பிரதமருடன் வாதாடி, கோரிக்கை வைத்து, சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று, அந்த National Agenda for Governance-லேயே நான்தான் சேர்க்க வைத்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சேது சமுத்திரத் திட்டம் வரவேண்டும் என்பதில் நமக்கு யாருக்கும் மாறுபட்ட கருத்துக் கிடையாது. தங்களுக்கே தெரியும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே இந்த சேது சமுத்திரத் திட்டத்திற்காக அன்றையதினம் ஒரு பெரிய எழுச்சி நாளையே கொண்டாடினார்கள், அதற்கு முன்னால் நடந்த எல்லா மாநாடுகளிலும், திருச்சி மாநாட்டிலிருந்து பல மாநாடுகளில் சேது சமுத்திரத் திட்டம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. துரைமுருகன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் மறுக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தக் கோரிக்கையை முதல் முதலாக எழுப்பினார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், மத்திய அரசின் செயல் திட்டத்தில் சேர்க்க வைத்தது நான்தான் என்பதைக் குறிப்பிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீண்ட காலமாகப் பேசப்பட்டது என்பது வேறு. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து அது பேசப்பட்டிருக்கிறது. இராமசாமி முதலியார் அறிக்கை எல்லாம் போடப்பட்டிருக்கிறது. அது வேறு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வது; அதைச் செயல் திட்டத்தில் சேர்த்தது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதைத்தான் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். திரு. சக்ரபாணி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) துரைமுருகன், விடுங்கள். (குறுக்கீடு) வருகின்ற நல்ல காரியத்தைக் கெடுத்து விடாதீர்கள். சக்ரபாணி, பேசுங்கள். (குறுக்கீடு) சக்ரபாணி பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்

(குறுக்கீடு) தெரியும், அதெல்லாம். நீங்கள் அப்பொழுது தி.மு.க.விலேயே இல்லை. பொன்முடி, உட்காருங்கள். (குறுக்கீடு) சக்ரபாணி, பேசுங்கள்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு)

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சக்ரபாணி, பேசுங்கள். இல்லாவிட்டால் அன்பழகன், பேசுங்கள். அன்பழகன், எழுந்திருங்கள். (குறுக்கீடு) துரைமுருகன், தாங்கள் ஒரு கருத்தைச் சொன்னீர்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். ஒவ்வொருவரும் எழுந்து பேசவேண்டுமென்று நினைத்தால் எப்படி முடியும்? இல்லாவிட்டால் நீங்கள் பொன்முடியை உங்கள் இடத்திற்கு அனுப்புங்கள். (குறுக்கீடு) பொன்முடியை உங்கள் இடத்திற்கு அனுப்புங்கள். (குறுக்கீடு) இது முறையல்ல.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துகளை முதலமைச்சர் சொன்னார். அதற்குப் பதில் நான் சொன்னேன். அவர் ஒரு கருத்தைச் சொல்கிறார். அது வேறு. நான் மறுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுக்கு ஒரு கருத்தைச் சொல்வது என்று ஆரம்பித்தால் அவையை எப்படி நடத்துவது?

**திரு. துரைமுருகன்:** தலைவருக்கு நான் தெரிவிப்பது, ஒரு மாண்புமிகு உறுப்பினரைப் பார்த்து, அவருடைய character-ஐ assassinate செய்வதைப் போல, கொச்சைப்படுத்துவதைப் போல, அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் என்னை, என் character-ஐ assassinate செய்கிறார்.

**திரு. துரைமுருகன்:** தங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். நாங்கள் சொல்கிறோம். பொன்முடி அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே படிக்கின்ற காலத்திலிருந்து, நான் மாணவர் அணிச் செயலாளராக இருந்த காலத்திலிருந்து, எனக்கே ஓட்டுப் போடுவதற்காக அங்கிருந்து சென்னைக்கு வந்தார். ஆகையினாலே, படிக்கின்ற காலம் தொட்டே அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில்



தன்னை இணைத்துக் கொண்டவர் என்பது தங்களுக்குத் தெரியாமல் இருந்திருந்தால், அதைத் தெரிவிப்பது என்னுடைய கடமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி. அன்பழகன் . . . (குறுக்கீடு) நேரம் முடிந்தது. அன்பழகன், பேசுங்கள்

***திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யுகத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கிறார்கள், கிரேதா யுகம், திரேதா யுகம், துவகாபுரி யுகம், கலியுகம் என்று சொல்லுவார்கள். ஆனால், 1½ கோடி அண்ணா தி.மு.க. தொண்டர்களுக்கும், 6 கோடி தமிழர்களுக்கும், ஏன் இந்த இந்தியத் துணைக் கண்டத்திற்குமே இன்றைக்கு ஒரு யுகமாகத் தெரிகின்றவர்கள் எங்களுடைய தங்கத் தலைவி தன்னிகரில்லா தலைவி, தானைத் தலைவி, சேனைத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். அதைப்போல, வேதத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கின்றார்கள். ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்று சொல்வார்கள். அதைப்போல, ஒன்றரை கோடி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும், 6 கோடி அருந்தமிழ் நாட்டினைச் சேர்ந்த தமிழர்களுக்கும், ஏன் இந்த இந்தியத் துணைக் கண்டத்திற்குமே ஐந்தாவது வேதமாக எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். அம்மா அவர்கள் கல்வி, கேள்வி, ஞானம், தெளிவு, ஆற்றல், துணிவு, கருணை, இரக்கம், ஈகை என்று சொல்லக்கூடிய அத்தனை வகையான நற்குணங்களையும் ஒருங்கே பெற்றவர்கள். அப்படிப்பட்ட தலைவர் தோன்றுகின்ற காலத்திலே நான் மனிதனாகப் பிறந்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். 'அரிது, அரிது, மானிடராய்ப் பிறத்தலரிது' என்று சொன்னார்கள். அப்படி மானிடராய்ப் பிறத்தலில் எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி யுகத்திலே மனிதனாகப் பிறந்ததையே மாபெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

காக்கைகளும் தன் குஞ்சுகளைப் பொன் குஞ்சுகளாகத்தான் கருதும்; அதைப்போல, எங்களை வாழவைத்த, இந்த வையகத்தைக் காக்கின்ற எங்களுடைய பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி, ஏழைத் தொண்டனையும் வாழ வைத்த தெய்வம், வையகம் காக்கும் தெய்வம், எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாபெரும் மன்றத்திலே பேச வைத்திருக்கிறார்கள். அதுவும், ஆயிரம் கோடி ரூபாய் மானியம் கோரும் பொதுப் பணித் துறையிலே பேச வைத்த

அன்னைக்கு என் ஆயிரம் கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வாம்பெல்லாம் முத்தம் தத்தும்
மடையெல்லாம் பனிலம் - நீர்க்
குாம்பெல்லாம் செம்பொன் மேதிக்
குழியெல்லாம் கழுநீர்க் கொள்ளை - சாலிப்
பறப்பெல்லாம் அன்னம் - பாங்கர்
கரம்பெல்லாம் செந்தேன் சந்தக்கா
வெல்லாம் களிவண்டு ஈட்டம்"

என்று சொல்லக்கூடிய அந்த இயற்கைத் தமிழகம் மாறாமல் இருக்க, இந்த வறட்சியிலும், புரட்சி செய்து, நீர் நிலைகளைப் பெருக்கி, நீர் ஆதாரங்களைப் பெருக்கி, இன்றைக்கு மாபெரும் திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

நண்பகல் 12-00

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் ஓடும் ஆறுகளுக்கெல்லாம் ஊறு விளைவித்துச் சேறு சேர்த்தார்கள். அவர்கள் வயிற்றுக்குச் சோறு சேர்த்தார்கள். ஆனால் இன்று எங்களுடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த இரண்டு ஆண்டு காலமாக, ஆறுகளில் சேறகற்றித் தூர் எடுத்து வருகிறார்கள், தமிழர்களுடைய வயிற்றுக்குச் சோறு உண்டாக்குவதற்காக. இப்படிப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, மழை நீர் சேகரிப்பு என்ற ஒரு விஞ்ஞானத் திட்டத்தைத் தீட்டி இன்றைக்கு மாபெரும் அளவிலே மழை நீர் சேகரிப்புக்கு வழிவகை செய்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்; பாலாறு, தாமிர பரணியாறு, வைகை வடிநிலப் பகுதியிலே 620 மானாவாரி சிறு பாசனங்களுக்கு ஏரிகள் புனரமைக்கும் திட்டம்; மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, வடபெண்ணை, பாலாறு, காவிரி, வைகை, குண்டாறு போன்ற தென்மாநிலங்களில், தென் மாவட்டங்களில் ஓடுகின்ற அந்தப் பொய்யா நதிகளையெல்லாம் இணைக்கக்கூடிய மாபெரும் திட்டம், இப்படி நபார்டு வங்கிக் கடன் உதவி பெறும் திட்டங்கள் மூலமாக சிறு பாசன ஏரிகளைச் சீரமைக்கும் திட்டம்; கடலரிப்புப் பாதுகாப்புத் திட்டம்; பழங்குடியினர் மற்றும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்; கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களைத்



தூர் எடுத்துப் புனரமைக்கும் திட்டம், காவிரி டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டம்; இவ்வாறு திட்டங்கள் பல தீட்டி, அரசின் நிதியை ஒதுக்கியிருப்பதை நாட்டு மக்கள் போற்றுவார்கள். 'போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும்' என்ற அடிப்படையிலே இன்றைக்கு, பெரியாற்றைப் பலப்படுத்தி, வலுப்படுத்தி, 152 அடி உயரத்திற்குப் பெருக்கும் திட்டத்தைத் தொடர்ந்து செய்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

நங்கஞ்சியாறு நீர்த்தேக்கம், இருக்கன்குடி நீர்த்தேக்கம், சண்முகா நதி நீர்த்தேக்கம், 58 கிராமக் கால்வாய்த் திட்டம், செண்பகத் தோப்பு நீர்த்தேக்கம், பந்தலப்பள்ளி மலட்டாறு நீர்த்தேக்கம், தென் பொதிகை உச்சியிலே தோன்றுகின்ற தாமிரபரணியில் சேரும் கடனா நதியினுடைய விரிவாக்கம், நல்லதங்காள் ஓடையில் புதிய நீர்த்தேக்கம், மலட்டாறு அணைத் திட்டம், ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம், பத்தலப்பள்ளி - மலட்டாறு நீர்த்தேக்கம், குப்பநத்தம் நீர்த்தேக்கம், வள்ளி மதுரை நீர்த்தேக்கம், உப்போடை நீர்த்தேக்கம், நாயோடை நீர்த்தேக்கம், ஆனை விழுந்தான் ஓடை நீர்த்தேக்கம், சாஸ்தா கோவில் நீர்த்தேக்கம், வெள்ளக்கால் நானாற்று நீர்த்தேக்கம், இப்படி நீர்த் தேக்கங்களை எல்லாம் தோற்றுவித்திருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதியிலே (குறுக்கீடு) சிறுமலை நீர்த்தேக்கம், மிகப் பெரிய நீர்த்தேக்கத்தை...

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடக் கூடாது என்றிருந்தேன். காரணம், அன்பழகனுடைய பேச்சை ரசிக்கிறவர்களில் நானும் ஒருவன். ஆனால், சரியான சாரீரம் இருந்து, சாகித்யம் சரியில்லாததைப் போல் அவர் ஒரு தவறான செய்தியைச் சொன்னார். நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இப்போது அவர் சொன்னாரே, அந்த அணைக்கட்டுகள், அவை எல்லாம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆட்சியிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு மாறுபட்ட கருத்தில்லை. ஆனால் அவர், அவர்களுடைய ஆட்சியில்தான் தோற்றுவித்தது என்கிறார். தோற்றுவித்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. நடைபெற்றுக் கொண்டிருந்தது; நீங்கள் ஆட்சிக்கு வந்து, நீங்கள் நடத்துகிறீர்கள். ஆகையினால் தோற்றுவித்தவர்கள் என்ற அந்த ராயல்டியை நாங்கள் விட முடியாது அல்லவா? அதனால்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் சொல்லிக் கொண்டு வருகின்ற அந்த அணைக்கட்டுகளை அவர்கள் தொடங்கினாலும், சரிவர நிதி ஒதுக்காத காரணத்தினால் தற்போது எடுக்கப்பட்டு, அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் முடிவடையும் என்பதைச் சொல்லிக்கொள்ள வருகிறார் என்பதனைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்லியிருக்கிற எந்த அணைக்கட்டு ஆனாலும், இராஜாத்தோப்பு அணைக்கட்டு ஆனாலும், மோர்தானா அணைக்கட்டு ஆனாலும், வெள்ளைக்கல் அணைக்கட்டு ஆனாலும், பத்தலப்பள்ளி அணைக்கட்டு ஆனாலும், அங்கே இருக்கிற சாஸ்தா கோவில் அணைக்கட்டு ஆனாலும், நம்பியாறு அணைக்கட்டு ஆனாலும், கொடுமுடி ஆனாலும், வடக்குப் பச்சையாறு ஆனாலும், கடனா நதி விரிவாக்கம் ஆனாலும், இராமா நதித் திட்டம் ஆனாலும், அதற்குக் கீழே வருகின்ற நங்கஞ்சியாறு திட்டமானாலும், இருக்கன்குடி திட்டமானாலும், சோத்துப்பாறை திட்டமானாலும், சண்முகா நதி ஆனாலும், பணங்கள் ஒதுக்கப்பட்டு, இன்றைக்கு முடிகிற தறுவாயிலே இருக்கின்றன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே இருக்கிற--சோத்துப்பாறை திட்டத்தை முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலேயே, 1982-83-லேயே துவக்கினார்கள். ஆனால் 5 ஆண்டு காலம் அவர்களுடைய ஆட்சியிலே கிடந்தது. பிறகு நாங்கள்தான் அன்றைக்கு முடித்து வைத்திருக்கிறோம். அதை மனசாட்சியைத் தொட்டுச் சொல்லச் சொல்லுங்கள். சோத்துப்பாறை திட்டத்தை முடித்து வைத்தது திராவிட முன்னேற்றக் கழகம் அல்லவா? (குறுக்கீடு) சண்முகா நதித் திட்டத்திற்கு 7 கோடி ரூபாயை நாங்கள் ஒதுக்கிவிட்டு வந்தோம். அந்தத் திட்டம் எங்கே? கால்வாயை தாடிக்கொம்பு வரையிலே கொண்டு போக வேண்டும் என்றார்கள். அதிலேதான் தகராறு. அன்றைக்கிருந்த ஆட்சியில், முடித்து வைத்தார்களா? முடித்தது நாங்களல்லவா? நான் கேட்கிறேன், கொடுமுடியாறு திட்டத்தில் என்ன செய்திருக்கிறீர்கள்? கொடுமுடியாறுக்கு land acquisition இல்லாமல், கால்வாயை வெட்டிவிட்டு, உங்களுடைய ஆட்சியிலேயே அதன்மீது விசாரணை



போடப்பட்டு, 40 இஞ்சினியர்கள் இன்றைக்கு கோர்ட்டுக்கு ஏறிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். நான் மறுக்கவில்லை. இன்றைக்கு நான்...

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, இல்லை, உலக மகாக்கவி. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். அன்பழகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** வடக்குப் பச்சையாறு, அதை நாங்கள் முடித்து வைக்கவில்லையா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் ஏதோ அவர்கள், மாநில நிதியிலிருந்து முடித்ததாகத் திரும்பத் திரும்ப ஒரு தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சோத்துப்பாறை அணைக்கட்டுத் திட்டம் உட்பட, அவர் தற்போது சொன்ன திட்டங்கள் அனைத்துக்கும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு உலக வங்கி நிதியைப் பெற்று கஜானாவில் வைத்துப் போனதை இவர்கள் செலவழித்தார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** சார், நிதியைப் பற்றியே நான் சொல்லவில்லை. எல்லோரும் ஒவ்வொரு நிதியை வைத்துப் போவார்கள். அடுத்து வருபவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) அன்பழகன், பேசுங்கள்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொல்கிறேன். இவர்கள் அதைக் கைவிட்டு விட்டார்கள். அதைத் தொடர்ந்து காப்பாற்றுகின்ற பொறுப்பு இந்தத் தமிழகத்தைக் காக்கும் தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு

உடையது என்பதைத்தான் நான் இங்கே சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் உதாரணத்திற்காக ஒன்றை மட்டும் சொல்கின்றேன். சிறுமலை நீர்த்தேக்கம், இவர்கள் காலத்திலே கொண்டுவரப்பட்ட நீர்த் தேக்கத் திட்டம். சுமார் 4 கோடி ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு வேலைகள் செய்து, 2 கோடி ரூபாயோடு கை கழுவி, அந்தத் திட்டத்தை அப்படியே விட்டுவிட்டார்கள். இன்றைக்கு நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு, அதற்கு மறு மதிப்பீடாக 8 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நோத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதேபோன்றுதான், 40-க்கும் மேற்பட்ட நீர்வளத் திட்டங்களைத் தீட்டி, தொடர்ந்து நிதி வெள்ளத்தை ஒதுக்கி, நதி வெள்ளத்தைப் பெருக்கி, இன்றைக்கு தமிழ்நாட்டைக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, ஒன்றை மட்டும் இங்கேயிருக்கிற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். இதையெல்லாம் நாங்கள் என்ன காரணத்திற்காகச் செய்கிறோம்? இப்படி வறட்சியான காலத்தில்--மிகுந்த வறட்சி என்று சொல்லக்கூடிய இந்த வறட்சியான காலத்தில்--புரட்சிகளைச் செய்வதற்குத்தான் இதை நாங்கள் செய்து கொண்டு இருக்கின்றோம்.

"தேன் வளரும் சோலை
தென்னன் வள நாடு
கனி உதிரும் சோலை
கனமதுரை நன்னாடு
வாழை வடக்கீனும்
வான் கமுகு மேற்கீனும்
கரும்பும் இளநீரும்
கண் திறந்து மடைபாயும்
கட்டுக்களம் காணும்
கதிர் உலக்கு நெல்காணும்
மாடுகட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல்லென்று
டிராக்டர் கட்டிப் போரடித்துக்"

கொண்டு இருக்கிற தமிழ்நாட்டை உருவாக்குவதற்காகத்தான் இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இவ்வளவு பெரிய, மாபெரும் திட்டங்களைத் தீட்டிச் செயலாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.



கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சாலை மேம்பாட்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். எனக்கு முன்னாலே பேசிய அருமைச் சகோதரர் சொன்னார்கள். சாலைகள் எல்லாம் இப்பொழுது குண்டுங்குழியுமாக இருக்கின்றன என்று சொன்னார்கள். கடந்த தி.மு.க ஆட்சிக் காலத்திலே பள்ளத்தாக்குகளாகவும், பீட பூமிகளுமாகத்தான் அந்தச் சாலைகள் இருந்தன. ஒத்தையடிப் பாதைகளாக இருந்த அந்தச் சாலைகளையெல்லாம் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ராஜபாட்டையாக மாற்றிக் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு, 2003-2004 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.180 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படவுள்ளன. அதேபோன்று, மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 278 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று, கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் 500 முதல் 1,000 வீடுகள் இருக்கக்கூடிய ஒவ்வொரு கிராமத்தையும் இணைக்கின்ற வகையிலே, சுமார் 120 கிராமங்களில் இணைப்புச் சாலை போடத் திட்டமிடப்பட்டுள்ளது. அதேபோன்று, நபார்டு வங்கி நிதியுதவியுடன் காவிரிப் பாசன மாவட்டங்களில் 70 பாலங்களும், இதர மாவட்டங்களில் 5 பாலங்களும், ஹட்கோ நிதியுதவியுடன் 46 பாலங்களும் இவ்வாண்டிலே கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள இருப்புப் பாதையில் இருக்கக்கூடிய கடவுகளுக்குப் பதிலாக 37 சாலை மேம்பாலங்களும், கீழ்ப்பாலங்களும் போட இன்றைக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல என்னுடைய தொகுதியில், நிலக்கோட்டை தொகுதியில் பொய்யாக் குலக்கொடி வைகையை வழி மறித்து ஒரு பேரணையைக் கட்ட வேண்டுமென்பதற்காக இராணி மங்கம்மாள் அவர்கள் அணையைக் கட்டினார்கள். அந்த அணையை மீண்டும் தொடர்ந்து கட்ட முடியவில்லை. ஒரு நாள் ஆஞ்சநேய சுவாமி கனவிலே தோன்றி, 'இந்த இடத்திலே நான் குடிகொண்டிருக்கிறேன். இந்த இடத்திலே எனக்கு ஒரு கோயிலை எழுப்பி, நீர் அணையைக் கட்டுவீரேயானால் இந்த இடத்திலே மிகப் பெரிய பேரணை உருவாகும்' என்று சொன்னதற்குப் பின்னாலே, பல நூறு வருடங்களுக்குப் பின்னால் பெரியாற்றைக் கட்டிய அந்த பென்னி க்விக் காலத்திலே 100 ஆண்டு காலத்திற்கு முன்னாலே ஒரு பேரணையைக் கட்டினார்கள். இன்றைக்கு 100 ஆண்டுகளுக்குப் பின்னாலேகூட அந்த அணை, இன்னும்

செம்மையாக இருந்த காரணத்தினால், அதிலே வழித்தடத்திற்கு வழி இல்லாமல் மக்கள் இக்கரையிலிருந்து அந்தக் கரைக்குச் செல்ல வேண்டுமேயானால் ஆற்றிலே நீச்சலடித்துத்தான் போக வேண்டிய நிலையை மாற்றுவதற்காக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு நபார்டு திட்டத்திலே ஒரு மாபெரும் சாலைப் போக்குவரத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு பிரச்சினைகளிலும் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு பல பேரணைகளை உருவாக்கவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-10*

இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, சாலை மேம்பாட்டுத் திட்டத்திலே பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு கண்டு, தீர்த்து வைத்திருக்கிறார்கள். திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்வேன். கடந்த முறை 3 கோடி ரூபாயிலே package work கொடுத்தார்கள். PM's work-இலே 3 கோடி ரூபாய்க்கு மேல் கொடுத்தார்கள். N.H.-இலே எல்லா இடங்களிலும் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. இப்படி ஒவ்வொரு திட்டத்தினையும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக உருவாக்க வேண்டும் என்பதற்காக இப்படிப் பல்வேறு திட்டங்களையெல்லாம் போட்டு, வழி நடத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இங்கே எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அரசினுடைய பட்ஜெட் என்பது ஈராக் மேலே போடப்படுகின்ற குண்டு போன்றது என்று சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'குண்டு துளைக்காத கனியை வண்டு துளைத்தது' என்று சொன்ன சீமான்களின் நெஞ்சத்தைத் தொட்ட மல்லிகைச் செண்டு; ஏழைகளின் வயிற்றிலே வார்த்த தேவாமிர்தம் வழங்கும் தொண்டு என்று சொல்லி, இந்த அருமையான பொதுப் பணித் துறை மானியத்திலே பேச வைத்த என்னுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கோடி நன்றிகளைச் சொல்லி, விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ்.

***திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியங்களின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையைப் பற்றிக் குறிப்பிடும்போது இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அன்றையதினம் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், என்கிற நிலக்கரி நிறுவனம், ரஷ்ய உதவியோடு இங்கே வந்ததாகும். இந்தியாவிலே, வட மாநிலத்திலே அந்தத் திட்டத்தினைக் கொண்டு செல்லப் போவதாக இருந்தபோது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பண்டித நேருவிடத்திலே இருந்த தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, அந்தத் திட்டத்தினைத் தமிழகத்திற்கு, நெய்வேலிக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். அப்போது அதற்காக நெய்வேலிக்கு வந்த அந்த ரஷ்ய தொழில்நுட்ப வல்லுநர்கள் எல்லாம் பார்வையிட்டு விட்டு, சாலை வழியாக வரும்போது, பெருந்தலைவர் காமராஜர் அவர்களைச் சந்தித்து இந்தத் திட்டம் தமிழகத்தில் வருவதற்கு வாய்ப்பில்லை; காரணம் சென்னைத் துறைமுகத்திலே இருந்து நெய்வேலிக்கு, நாங்கள் அனுப்புகின்ற கன ரக இயந்திரங்கள் செல்வதற்கு ஏற்ற சாலைகள், பாலங்கள் மிகக் குறுகலாக இருக்கின்றன, ஆகவே, அதற்கான வாய்ப்பு இங்கே இல்லை என்று அவர்கள் தெரிவித்தார்கள். அதற்குப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அந்தச் சாலைகளையும், பாலங்களையும் நான் அகலப்படுத்துகிறேன்; உங்கள் இயந்திரங்கள் வருவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்று கேட்டபோது, எங்களுக்கு ஆறு மாதங்களிலே ரஷ்யாவிலே இருந்து அந்த இயந்திரங்கள் சென்னைத் துறைமுகத்திற்கு வந்துவிடும் என்று குறிப்பிட்டுச் சொல்லும்போது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், நான் 4 மாத காலத்திலே அந்தச் சாலைகளை அகலப்படுத்தி, உங்களுக்குத் தருகிறேன் என்று சொல்லி, அன்றையதினம் அதைச் செய்தார்கள். செய்ததன் பயனாக இன்றைக்கு நெய்வேலி நிலக்கரி நிறுவனம் தமிழகத்திலே பல இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆண்டுக்கு 300 கோடி ரூபாயை இலாபமாக அந்த நிறுவனம் ஈட்டிக்கொண்டிருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், ஒரு மாநிலத்தின் வளர்ச்சி

மற்ற துறைகளின் மூலம் இருந்தாலும்கூட, வெளி மாநிலங்களுடன் தொடர்பு ஏற்படுத்தித் தருவது இந்த நெடுஞ்சாலைத் துறைதான். ஆகவே, அப்படிப்பட்ட இந்த நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்படுகின்ற சாலைகள் இன்றைக்கு எப்படி இருக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இங்கே அமைச்சர் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள்.

இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக ஏறத்தாழ 60,901 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. அதிலே, தேசிய நெடுஞ்சாலைகள் ஏறத்தாழ 3,850 கிலோ மீட்டர் என்றும், மாநில நெடுஞ்சாலைகள் 7,163 கிலோ மீட்டர் என்றும், மாவட்டப் பெரிய சாலைகள் 7,362 கிலோ மீட்டர் என்றும், இதர மாவட்டச் சாலைகள் —O.D.R.--40,963 கிலோ மீட்டர் என்றும் துறையால் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலேயே தெரிவித்திருக்கின்றார்கள்; இதிலே பழுதடைந்த சாலைகளுடைய மொத்த நீளம் 29,080 கிலோ மீட்டர் என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இன்னொன்றையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். 2002-2003 ஆம் நிதி ஆண்டிலே ரூ.90 கோடி செலவிலே ஏறத்தாழ 2,500 கிலோ மீட்டர் சாலை சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 2003-2004 ஆம் நிதியாண்டிலே ஏறத்தாழ 180 கோடி ரூபாய் செலவிலே 5,000 கிலோ மீட்டர் சாலைகள் சீரமைக்கப்படும் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக, இந்த 7,500 கிலோ மீட்டர் சாலைகள் இரண்டு ஆண்டுகளிலே சீரமைக்கப்பட்டாலும்கூட, துறை தெரிவித்திருக்கின்ற புள்ளிவிவரத்தின் அடிப்படையிலே இன்னும் சீரமைக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் 21,500 கிலோ மீட்டர். ஆகவே, நாம் இந்த அளவிலே நிதியை ஒதுக்கினால், ஏறத்தாழ 5,6 ஆண்டு காலமாகும் இந்த மீதிச் சாலைகளைச் சீரமைப்பதற்கு....

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சிறப்புத் திட்டமாகத்தான் 2002-2003-க்கு 90 கோடி ரூபாய் செலவில் 2,500 கிலோ மீட்டர் சாலைகளும், 2003-2004 ஆம் ஆண்டுக்கு 5,000 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் 180 கோடி ரூபாய் செலவிலும் சீரமைக்க நடவடிக்கை



மேற்கொள்ள ஆணையிட்டிருக்கின்றார்கள். மற்றபடி, ஹட்கோ, நபார்டு மற்றும் உலக வங்கியின் நிதியினைப் பெற்று, மற்றச் சாலைகளை மேம்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் நான் குறிப்பிட்டேன். இப்படி ஒதுக்கியிருக்கக்கூடிய நிதி போதாது என்கிற காரணத்தினால்தான் கூடுதலாக நிதி ஒதுக்க வேண்டும், குறுகிய காலத்திற்குள், இரண்டு, மூன்று ஆண்டு கால இடைவெளிக்குள் இந்தச் சாலைகளெல்லாம் சீரமைக்கப்பட வேண்டும் என்கின்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் என்னுடைய கருத்தினை நான் தெரிவித்தேன். அதைப்போல, ஒரு மாநிலத்தினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியில் சாலைகளுடைய பணி என்பது மிக முக்கியப் பங்காற்றுகிறது என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். அதைப்போல, இன்றைக்கு தமிழகத்திலே ஏறத்தாழ போக்குவரத்துக் கழகங்களுடைய 17 ஆயிரம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அந்தப் பேருந்துகள் எல்லாம் இந்தச் சாலைகளின் வழியாகத்தான் தினசரி சென்று வந்துகொண்டிருக்கின்றன. போக்குவரத்துத் துறை அமைச்சருக்குக்கூடத் தெரியும். சாலைகள் சரியில்லாத காரணத்தினால் இன்றைக்கு எவ்வளவு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இடையிலே நிறுத்தப்படுகின்றன; பழுதின் காரணமாக, எவ்வளவு பராமரிப்புக்காகச் செலவாகிறது என்பதையெல்லாம் அவர் நன்கு அறிவார்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகப்பேருந்துகள், சாலை வசதிகள் சரியில்லாததன் காரணமாக பல இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். சாலை வசதி சரியில்லை என்கிற காரணத்தினால் எந்த இடத்திலும் பேருந்து ஓடுவது நிறுத்தப்படவில்லை என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். எந்த இடத்திலும் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். பல இடங்களில், சாலைகள் சரியில்லாமல் பேருந்துகள் தொடர்ந்து, குறிப்பாக, இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டதற்கு சாலை வசதியின்மை காரணம் அல்ல. அதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. அதிலே சாலை வசதியை மட்டும் காரணமாகச் சொல்லக்கூடாது. அங்கு ஏற்படுகின்ற பயணிகளின் அடர்வு மற்றும் அங்கு போக்குவரத்தைப் பயணிகள் பயன்படுத்தும் முறை, வசூல் போன்ற பல்வேறு காரணங்களினால் அந்த ஒரு சில இடங்களில் தவிர்க்க முடியாத அளவிற்கு சில பேருந்துகள் நிறுத்தப்பட்டு இருக்கின்றனவே தவிர, சாலை வசதியின்மைக்காக இல்லை. குறிப்பிட்டுச் சொல்லுகின்ற அளவிற்கு அப்படி இருந்தால், எங்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவந்தால், அதைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை வசதி சரியில்லை என்று எந்தப் பகுதியிலேயும் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல பகுதிகளிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. எல்லோருக்கும் தெரியும். குறிப்பாக எங்கே என்று கேட்டார். நான் குறிப்பாக ஒரு இடத்தைச் சொல்கிறேன். அங்கே ஏன் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அவர் விளக்கட்டும். தெங்குமரஹடா என்று ஒரு இடம் நீலகிரி மாவட்டத்திலே இருக்கிறது. அது பவானி சாகரிலே இருந்து 18 கிலோ மீட்டர். சாதாரணமாக அங்கு போக வேண்டும் என்றால், கார் போவதற்கு 2 மணி நேரம், 2½ மணி நேரம் ஆகும். மேட்டுப்பாளையத்திலிருந்து அங்கே போய் வருகின்றவர்களுக்கு ஒரேயொரு வசதி, பஸ் வசதி. அங்கே ஓடிக்கொண்டிருந்த பஸ்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) ஒரு பஸ் ஓடிக்கொண்டிருக்கிறதா, இல்லையா என்பதை உறுப்பினர்



அவர்களிடம்தான் கேட்க வேண்டும். அந்த ஒன்றும் இருக்கிறதா, இல்லையா என்பது தெரியவில்லை. அங்கே அந்த பஸ்கள் எல்லாம் நிறுத்தப்பட்டிருப்பதற்கு அவர்கள் சொல்கிற ஒரே காரணம்; சாலை வசதி சரியில்லை; சாலை போட்டுக் கொடுங்கள்; நாங்கள் பஸ்களை ஓட்டுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, ஏன் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை....

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில்தான் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றனவே தவிர, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு பேருந்துகள் நிறுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்காவது ஓரிரு இடங்களில், தவிர்க்க முடியாத அளவிலே ஏதாவது நிறுத்தியிருந்தால், அது சாலை வசதி சரியில்லை என்கிற காரணத்தினால் நிறுத்தப்படவில்லை. மற்ற பிற காரணங்களினால், ஒரு சில இடங்களிலே நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், பெரும்பாலான, ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழித்தடங்களில், சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் இப்படிப் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவராஜ், பேசுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சருக்கும் சேர்த்துத்தான் பேசுகின்றேன். பேருந்துகள், சாலைகள் சரியில்லாத காரணத்தினால், அதனுடைய தேய்மானம், டயர், உதிரிப் பாகங்கள், எரிபொருள் போன்றவற்றிற்குக் கூடுதல் செலவாகின்ற காரணத்தினால், இன்றைக்குப் போக்குவரத்துக் கழகங்கள் நஷ்டத்திலே இயங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சாலைகள் மேம்பட்டால், போக்குவரத்துக் கழகங்களின் செலவு குறைந்து, இலாபம் ஈட்டும் என்பதை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். அதற்காகத்தான் நான் அதைக் குறிப்பிட்டேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, விழுப்புரம் மாவட்டத்திலே, விழுப்புரம் கோட்டத்திலிருந்து, கள்ளக்குறிச்சி கோட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு, அந்த கள்ளக்குறிச்சி கோட்டத்திலே,

கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், திருக்கோவிலூர் ஆகிய மூன்று உப கோட்டங்கள் தொடங்கப்பட்டு, அந்தக் கோட்டங்கள் தொடங்கப்பட்டதிலேயிருந்து 5 ஆண்டு காலம் சரியான நிதியொதுக்கம் இல்லாத காரணத்தினாலே, குறிப்பாக, சங்கராபுரம், திருக்கோவிலூர் உப கோட்டங்களிலே இன்றைக்கு சாலைகள் மிக மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கின்றன.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே, கீழ்க்கண்ட சாலைகள்:- சங்கராபுரம் உப கோட்டத்திலே தியாகதுருகம், பழைய சீர்வங்கூர் வழியாகச் செல்கின்ற பகண்டை கூட்டுச் சாலை, 15 கிலோ மீட்டர் மிக மோசமான நிலையிலே இருக்கின்றது. அதேபோல, ரிஷிவந்தியம்-முனிவாழை-பாசார் சாலை 6 கிலோ மீட்டர், எடுத்தனூர்- கள்ளிப்பாடி சாலை 7½ கிலோ மீட்டர், அத்தியூர்-கடுவனூர் சாலை 6 கிலோ மீட்டர், திருவரங்கம்-மூங்கில் துரைப்பட்டு சாலை 7 கிலோ மீட்டர், எகால்-மையனூர் சாலை 6 கிலோ மீட்டர். இப்படிச் சாலைகள் மிக மோசமான நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அதைப்போல, திருக்கோவிலூர் உட்கோட்டத்திலே திருக்கோவிலூர்- ஆசனூர் சாலை; இந்தச் சாலை மிக முக்கியமான சாலை அந்தப் பகுதியிலே. இது தென் மாவட்டங்களை இணைக்கக்கூடிய. திருச்சி நெடுஞ்சாலையை இணைக்கக்கூடிய சாலை. இந்தச் சாலை, Road Sector Project; 1995 ஆம் ஆண்டு அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தத் திட்டம் இன்னும் தொடங்கப்படவில்லை. கடந்த நிதியாண்டிலே, கடந்த நிதிநிலை அறிக்கையின்போது, 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், இன்று வரை அந்தத் திட்டம் தொடங்கப்படவில்லை. அந்தத் திட்டம் இராணிப்பேட்டையிலிருந்து, தூத்துக்குடி துறைமுகத்தை இணைக்கக்கூடிய, ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் திட்டம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் உலக வங்கியினுடைய நிதியினைப் பெற்று, ஆற்காட்டிலிருந்து, தூத்துக்குடி வரையிலான 732 கிலோ மீட்டர் சாலையை உலகத் தரம் வாய்ந்த சாலையாக மாற்றுவதற்காகப் பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் முடிவுற்ற நிலையில் இருக்கின்றன.



இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பணி எடுக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதனால், அந்தச் சாலைகள் காலப் பருவத்தில் புதுப்பிக்கப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. குறிப்பிட்ட அந்த 732 கிலோ மீட்டர் சாலையில் ஏதாவது பழுதுகள் ஏற்பட்டிருப்பின், அந்தப் பழுதுகளை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, கடலூர்-சித்தூர் சாலை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு நிமிடங்களில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** நான் பேசவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசவேயில்லையா? என்ன பண்ணிக்கொண்டிருந்தீர்கள்?

**திரு. சு. சிவராஜ்:** கடலூர்-சித்தூர் சாலை. அது ஒரு மாநில நெடுஞ்சாலை. அந்தச் சாலை, திருவண்ணாமலை மாவட்டத்தின் தொடக்கத்திலிருந்து அத்திப்பாக்கத்திலிருந்து மடப்பட்டு வரையிலே இருக்கக்கூடிய சாலை; தென் மாவட்டங்களிலிருந்து திருப்பதி, திருவண்ணாமலை போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்கின்ற பக்தர்கள் அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய சாலை. அந்தச் சாலை மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் போடப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்தச் சாலை பயன்படுத்த முடியாத அளவிற்கு மிக மோசமான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அந்தச் சாலையையும் சீரமைக்க வேண்டியதுடன், அந்தச் சாலையை சரிவரப் போடாத ஒப்பந்தக்காரர்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்புச் சாலையைப் பொறுத்த வரையிலே, ஏறத்தாழ, 1,560 கிலோ மீட்டர் கரும்புச் சாலைகள் இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால், 2002-2003 ஆம் ஆண்டிலே வெறும் 30 கிலோ மீட்டர்தான் சீரமைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்திருக்கின்றார்கள். அந்தச் சாலைகளெல்லாம்

ஏறத்தாழ 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட சாலைகள்; இன்றைக்கு அந்தச் சாலைகள் மிக மோசமான நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேகூட திருக்கோவிலூரிலிருந்து நத்தாமூர் செல்கின்ற அந்தக் கரும்புச் சாலை, 1980 ஆம் ஆண்டு போடப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்பு அது பராமரிக்கப்பட்டது; 10 ஆண்டுகளாகப் பராமரிப்பு இல்லாத நிலையிலே இன்றைக்கு அந்தச் சாலை மோசமாக இருப்பதுடன், 1998 ஆம் ஆண்டு வந்த வெள்ளத்திலே, கெடிலம் நதியிலே குறுக்கே கட்டப்பட்ட ஒரு தரைப் பாலமும் சேதம் அடைந்து, இன்றைக்கு அந்தச் சாலை பயன்படுத்த முடியாத அளவிற்கு இருந்து கொண்டிருக்கிறது. அதைச் சீரமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையைப் பொறுத்த வரையிலே, தமிழகத்திலே பயிரிடப்படும் பாசனத்தினுடைய பரப்பு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். இன்னும் 6 பேர் பேச வேண்டும்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 60 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் என்று குறிப்பிடப்படுகின்றது. அதிலே, கால்வாய், ஏரிகள், கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகள் போன்றவற்றின் மூலம் பெறப்படுகின்ற பாசனம் 30 இலட்சம் ஹெக்டேர் என்றும், மீதிப் பாசனப் பகுதியில் கடந்த ஆண்டு 4,924 ஹெக்டேர் பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்த ஆண்டு 9,804 ஹெக்டேருக்குப் பாசன வசதி செய்து கொடுக்கப்படும் என்ற உறுதியும் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே, வெள்ளாறு வடிநிலக் கோட்டத்திலே, மணிமுத்தாறு நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணையில் இராமராஜபுரம் அணை வாய்க்கால் புனரமைப்பு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 35 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தை



நிறைவேற்றுவதன் மூலம், அந்த வாய்க்கால் மூலம் 12 ஏரிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதோடு, ஏறத்தாழ 2 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் கூடுதலாகப் பாசன வசதி பெறுமென்ற காரணத்தினாலே, அதைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கோவிலூர் பெரிய ஏரி, சித்தேரி மற்றும் காட்டுப்பையூர், அத்தண்டமருதூர் ஏரிகளைத் தூர் வாரி, அந்த ஏரிகளை நவீனப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருக்கோவிலூர் நகரத்திலுள்ள பொதுப் பணித் துறையினுடைய ஆவியூரான், சித்தேரியான் வாய்க்கால்—வெள்ளக் காலங்களிலே வடிகால் வாய்க்காலாகவும், மற்ற காலங்களிலே கழிவு நீர் வாய்க்காலாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதைத் தூர் வாருவதன் மூலம் அந்த நகரம் சுத்தம் அடைவதுடன், அந்த வாய்க்கால்களின் இரண்டு பக்கமும் கல் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே, நிறைய மணல் குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கப்பட்டு, இப்போது அனுமதி கொடுக்காமல் சில குவாரிகள் நின்று கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) அந்த மணல் குவாரிகளைப் பொறுத்த வரையிலே, அதற்கு அனுமதி கொடுக்கும்போது, குடிநீர் ஆதாரங்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது. குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே பெண்ணையாற்றிலே, பல்வேறு குடிநீர்த் திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, பல கோடி ரூபாய் செலவிலே--பல நூறு கோடி ரூபாய் செலவிலே--நிறைவேற்றப்பட்டு, நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தத் திட்டங்களுக்கு எந்த இடையூறும் இல்லாத வகையிலே, சற்றுத் தள்ளி அந்த மணல் குவாரிகளுக்கு அனுமதி கொடுக்க வேண்டும்; அப்படிப்பட்ட குவாரிகளைத்தான் நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஐ. கணேசன் அவர்கள் (குறுக்கீடு) நன்றி சொல்லி முடித்து விடுங்கள்.

**திரு. சு. சிவராஜ்:** ஆயத்தீர்வைத் துறையைப் பொறுத்த வரையிலே, 1991-92 ஆம் ஆண்டிலே 671 கோடி ரூபாய் தீர்வையாகவும், விற்பனை வரியாகவும் இருந்த வருவாய் இன்றைக்கு ஏறத்தாழ 3,694 கோடி

ரூபாய் அளவிற்கு வளர்ந்திருந்தாலும்கூட, ஐந்து ஆண்டு கால ஒப்பிடுதலைப் பார்க்கும்போது. 2002-2003 ஆம் ஆண்டிலே வந்திருக்கின்ற வருவாய் 114 கோடி ரூபாய் அதிகம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கணக்கு முடிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், இதற்கு முந்தைய ஆண்டுகளை நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த வருவாய் குறைந்திருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நவீனமயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்திய தயாரிப்பு மதுவகை மற்றும் பீர் அட்டைப் பெட்டிகள்மீது வரி குறியிடும் Bar Coding System அறிமுகப்படுத்த....

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள். அவர் பேசி முடித்துவிட்டார். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நெடுஞ்சாலைகள் துறை, உள் துறை—சிறைச்சாலைகள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, பொதுப் பணித் துறை ஆகிய நாட்டிற்கு மிக முக்கியமான 5 துறைகள் பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எங்களையெல்லாம் 10 நிமிடங்களிலே பேசி முடியுங்கள் என்று காலையிலே உத்தரவு போட்டிருக்கிறார்கள். இது நியாயமா? எவ்வளவு பெரிய மானியம்? பொதுப் பணித் துறை மானியத்திலே பேசுவதற்கு மட்டும் 2 நாட்கள் தேவை. நெடுஞ்சாலைத் துறை பற்றிப் பேசுவதற்குக் குறைந்தது ஒரு நாள் தேவை. இப்படி, மிக முக்கியமான துறைகளை எல்லாம் ஒரே நாளிலே அடக்கி, அதிலே 8 கட்சிகள் பேசி, சுயேட்சை பேசி, மற்ற கட்சிகள் எல்லாம் பேசுவது என்பது அவ்வளவு சாதாரணமானதா? அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். வார்த்தைக்கு வார்த்தை....

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனியாக ஒரு நாள் ஐ. கணேசனுக்கு சிறப்புச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்து நாங்கள் எல்லாம் கலந்து கொள்கிறோம்.



**திரு. ஐ. கணேசன்:** ரொம்ப நன்றி அண்ணா. நீங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இருக்கும்போது, வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தீர்கள். அன்று பதில் சொன்ன அந்தக் காட்சி என்னுடைய கண் முன்னால் இங்கே ஓடிக்கொண்டிருக்கிறது. 15 நிமிடங்களிலே, இந்த அவையே வியக்கும் அளவிற்கு அற்புதமான தமிழிலே பதில் சொன்னீர்கள். அது இந்த அவையிலே இருக்கக்கூடிய எங்களுக்கு சாத்தியக்கூறானது அல்ல. ஆகையினாலே, நீங்கள் எங்களுக்கு 5 மானியங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் குறைந்தது 5 நிமிடம், 5 நிமிடம் என்று வைத்துக்கொண்டாலும்கூட, 25 நிமிடமும், இதைக் கூறியதற்கு ஒரு 5 நிமிடம் என்று, மொத்தமாக 30 நிமிடங்கள் ஒதுக்க வேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எனக்கு ரொம்ப வேண்டியவர் என்கிற காரணத்தால் உங்களுக்கு 2 மணித்துளிகள் குறைத்தேதான் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில், இந்த அவையிலே பேசிய உறுப்பினர்கள், பேசுவார்கள், பேச வேண்டும் என்று நான் எண்ணி இருந்தேன். இந்த அவையிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நிதித் துறை அமைச்சர் அவர்களும், இந்தத் தமிழகத்தினுடைய வருமானத்திலே 94 சதவிகிதம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை, மொத்தம் 5 மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன என்று சொன்னீர்கள். இப்போது சம்பந்தமே இல்லாமல் பேசுகின்றீர்களே!

**திரு. ஐ. கணேசன்:** பணியாளர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாலைப் பணியாளர்களா?

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. முதல் மானியமே அதுதான். நீங்கள்தான் படித்து வெட்டுத் தீர்மானங்கள் எல்லாம் முன்மொழியக் கூப்பிட்டீர்கள். 94 சதவிகிதம் பணம் அரசு ஊழியர்களுக்குச் சம்பளமாக வழங்கப்படுகிறது என்று நம்முடைய நிதி அமைச்சர் காலையிலேகூட எடுத்துச் சொன்னார். அரசு ஊழியர்கள்

என்பவர்கள் யார்? சற்று சிந்திக்க வேண்டும். சுமார் 1 இலட்சம் காவல் துறை அதிகாரிகள், வருவாய்த் துறையில் உள்ளவர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுப் பணித் துறையைச் சேர்ந்தவர்கள், ஆசிரியர்கள், வேளாண்மைத் துறை அதிகாரிகள், தீயணைப்புத் துறையைச் சேர்ந்தவர்கள், சிறைச்சாலை அதிகாரிகள், சமூகப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், நீதிமன்ற அதிகாரிகள், இப்படி இன்னும் பல்வேறு துறைகளிலே பணியாற்றக்கூடியவர்கள் அந்த அரசு ஊழியர்கள். அவர்கள் ஒரு தனி மரம் அல்ல. வானத்திலே இருக்கக்கூடிய சூரியனை எப்படிக் கோள்கள் சுற்றிச் சுற்றி வருகின்றனவோ, அதைப்போல ஒவ்வொரு அரசு ஊழியருடனும் இருக்கின்ற அவனை உருவாக்கிப் பெற்றெடுத்த தாய், தந்தை, அவன் பெற்ற குழந்தை, அவனுடைய மனைவி, கல்யாணம் ஆகாத தங்கைகள், கல்யாணமாகி விதவையாக இருக்கக்கூடிய சகோதரி, இத்தனை பேரையும் பாதுகாக்க வேண்டிய ஒரு மாபெரும் பொறுப்பிலே இருக்கக்கூடிய அவனைச் சுற்றி, ஒரு சின்ன உலகமே வட்டமடித்துக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த அரசு மறந்துவிடக் கூடாது. ஆகையினாலே, அவர்களுக்கு அளிக்கக்கூடிய சம்பளம்—தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். அவர்களுக்கு அளிக்கக்கூடிய சம்பளம்—எந்த வகையிலே செலவு செய்யப்படுகிறது? அவன் சம்பளத்தை வாங்கி, வீட்டு வாடகைக்குக் கொடுக்க வேண்டும்; மளிகைக் கடைக்குக் கொடுக்க வேண்டும்; அரிசி, பருப்பு வாங்க வேண்டும்; காய்கறிக் கடைக்குக் கொடுக்க வேண்டும். அது மட்டுமா? அவனுடைய குழந்தைகளுக்கு மருத்துவச் செலவுக்குக் கொடுக்க வேண்டும்; பள்ளிக் குழந்தைகளுக்குப் படிப்புக்குப் பணம் கட்ட வேண்டும். இத்தனைக்கும் செலவு செய்து, அவனுடைய பணம் இந்தப் பொருளாதாரத்திலே—நிதியமைச்சர் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும் அவனுடைய பணம்தான் பொருளாதாரத்திலே--சுற்றிச் சுற்றி வருகிறது. அந்தப் பணத்திலே, சிறிய வியாபாரிகளுடைய பிழைப்பு நடந்து, அரசுக்குக் கிட்டத்தட்ட பாதிப் பணம் வரியாகவே வந்துவிடுகிறது. அவனுடைய பணம் வீணாகிப் போவதில்லை. ஒரு சாராருடைய—வியாபாரிகள், பணக்காரர்களுடைய--பணம், கறுப்பாகி, ஹவாலாவாகி, அது பாங்கிலிருந்து அயல் நாட்டுக்குச் செல்கிறது. ஆனால், எந்த அரசு ஊழியனுடைய பணமும், அயல் நாட்டுக்கோ, ஹவாலாவாகியோ, கறுப்புப் பணமாகவில்லை. அந்த அரசு ஊழியர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும்.



பிற்பகல் 12-35

திராவிட இனத்திற்கு வித்திட்ட கலைஞர்களிலே முதன்மையானவர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) ஓர் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். பழனிசாமி (சிரிப்பு) என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், அவர் எவ்வளவு அழகாக ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்; அதுவும் நம்முடைய பேரவைத் தலைவருக்குச் சொன்னவுடனே அவருக்குத் தெரிந்திருக்கும்! 'முதல் தேதி' என்ற சினிமாவிலே— 'முதல் தேதி' என்ற சினிமாவிலே, ஒன்றிலிருந்து இருபது வரைக்கும் கொண்டாட்டம்; யாருக்கு? அரசு ஊழியர்களுக்கு. 'ஒன்றிலிருந்து இருபது வரைக்கும் கொண்டாட்டம்; இருபத்தொன்றிலிருந்து முப்பது வரைக்கும் திண்டாட்டம்' இன்று, நேற்றல்ல, 40 ஆண்டுகளுக்கு முன்னால், கலைவாணர் என்.எஸ்.கே. பாடிய அற்புதமான கருத்து. ஆனால், இன்றைய நிலை---அரசு ஊழியர்கள் 15 நாட்களிலேயே திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு அளிக்கக்கூடிய இந்த ஊதியத்தையும், சலுகைகளையும், எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த அரசு பறிக்கக் கூடாது என்பதனை மிகப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

இன்று, என்.எஸ்.கே.-வை நினைக்கும்போது, (குறுக்கீடு) அண்ணன் துரைமுருகனைப் பார்க்கும்போது எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்திற்கு வந்தது, அவர் குறுக்கே வந்ததினால்! நீண்ட நாட்களுக்கு முன்னால், நானும் (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்... நானும், என்னுடைய அண்ணன் பங்குனியார் அவர்களும் பேசிக் கொண்டிருக்கும்போது, ஒரு கதை ஞாபகத்திற்கு வந்தது. ஓர் அரசு ஊழியருடைய மகன், காசினை வைத்து விளையாடிக் கொண்டிருக்கும்போது, ஒரு காசை எடுத்து விழுங்கிவிட்டான். சில நாட்கள் கழித்து, அந்த அரசு ஊழியர் மருத்துவரிடம் அழைத்துச் செல்கிறார். மருத்துவர் அந்தப் பையனைப் பார்த்துக் கேட்கிறார் 'எத்தனை நாளாச்சி?' என்று. 'தெரியலிங்க' என்கிறான். அந்த அரசு ஊழியனிடத்திலே, அவனுடைய அப்பனிடத்திலே கேட்கிறார், '20 நாள் ஆச்சுங்க', '20 நாளா என்ன பண்ணிக்கிட்டிருந்த?'ன்னு கேட்கிறார். அதற்குச் சொல்கிறான்; 'இப்பதாங்க மாசக் கடைசி; கையிலே காசு இல்லீங்க; அதனாலே கூட்டியாறலே; இப்ப கையில காசு இருந்தால்கூட கூட்டியாந்து இருக்கமாட்டேன்'. என்று சொல்லும்போது, இந்த அரசு ஊழியனுடைய நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதனைத் தயவுசெய்து...

(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியே மெய் சிலிர்க்கிறது, கணேசன்! (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** இப்படி, எவ்வளவு கொடுமையான நிலையிலே இருக்கிறார்கள்? அவர்களுடைய சலுகைகளை அரசு தயவுசெய்து—நேற்று பேச்சுவார்த்தை, இன்று பேச்சுவார்த்தை; தண்ணீர் குடித்தால்கூட ஏதாவது சொல்வார்; அவர்களுக்கு நல்ல முடிவினை இந்த அரசு செய்து கொடுக்க வேண்டுமென்று பணிவோடு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரசு ஊழியர்கள் வீட்டுக்குப் போகிறார்களே, அதை நினைக்கும்போது இன்னும் கொடுமையாக இருக்கிறது. ஓய்வுபெற்றுப் போகிறவர்களுக்கு 33 ஆண்டு காலம் பணியாற்றினால்தான் முழு ஓய்வூதியம். இது எந்த வகையிலே நியாயம்? தாழ்த்தப்பட்டவர்கள், மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம், பணியிலே சேர்வதற்கே 30 ஆண்டுகள் என நிர்ணயித்திருக்கிறீர்கள். 30 ஆண்டுகளுக்குப் பிறகு பணியிலே சேர்ந்து, அவன் 33 ஆண்டு காலம் பணியாற்றினால், எத்தனை ஆண்டு காலம் அவர்களுக்குப் பணி கொடுக்கப் போகிறீர்கள்? எப்படி அவனால் முழு பென்ஷன் வாங்க முடியும்? சிந்திக்க வேண்டும். (குறுக்கீடு) 58 வருடம் என்று சொல்கிறார், திரு. துரைமுருகன். எப்படி அவர்களால் வாங்க முடியும்? சிந்தித்துப் பாருங்கள். முழு பென்ஷன் வாங்க முடியாது. இதனால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தச் சமுதாய மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதனைச் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

ஓய்வூதியம் பெறுவதற்கு முன்னால் அரசு ஊழியர் 55, 56-வது வயதில் அவருடைய மகனுக்கோ, மகளுக்கோ திருமண ஏற்பாடு செய்வார், எதை வைத்து? ஓய்வூதியம் வரும்; திருமணத்தைச் செய்யலாம் என்று. ஒரு சில இடங்களில் கடன் வாங்கியும் திருமணம் செய்து விடுவார். அப்படிச் செய்து, ஓய்வூதியம் வரும்போது, அவர் வெளியே போகும்போது அவரிடத்திலே ஒரு பத்திரத்தை, காகிதத்தைக் கொடுப்பது நியாயமா? அரைச் சம்பளத்தோடு ஒரு காகிதத்தைக்



கொடுப்பது நியாயமா? அது தி.மு.க. அரசு கொண்டு வந்தது; ஒத்துக்கொள்கிறோம். அதையே நீங்கள் அண்ணா தி.மு.க. அரசு நிறைவேற்ற வேண்டுமா? அந்தத் திட்டத்தை மாற்ற வேண்டும். அவர்கள் ஓய்வுபெற்றுப் போகும்போது முழு ஓய்வூதியங்களையும்—அந்தப் பணங்களையும்--நீங்கள் அளிக்க வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுப் பணித் துறை. நம்முடைய அமைச்சருக்கு மிக, மிகப் பிடித்த துறை. அதேபோல், நானும் முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றவர்கள் யாருடைய மனதையும் புண்படுத்தக்கூடாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய இதய தெய்வம், தமிழினப் போராளி, டாக்டர் ஐயா அவர்கள் சென்ற ஆண்டு 242 ஏரிகளிலே தூர் வாரி இருக்கிறார்கள். (குறுக்கீடு) குளமல்ல; ஏரி, குளங்களைத் தூர் வாரி இருக்கிறார்கள். அதேபோல இந்த ஆண்டு ஒரு இலக்கு வைத்து இருக்கிறார்கள். 1000 ஏரிகளைத் தூர் வாருதல்; அதுமட்டுமல்ல, தண்ணீர்த் திருவிழா என்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியிலே ஓர் இலக்கு வைத்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு 3 மணித்துளிகள் மட்டும்.

**திரு. ஐ. கணேசன்:** என்னங்க, இது? இப்போதுதானே ஆரம்பித்தேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்காக 15 நிமிடம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) உங்களுக்காக 15 நிமிடம் கொடுத்து இருக்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** டாக்டர் என்று சொன்னவுடன் மணி அடிப்பது நியாயம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இல்லை; (குறுக்கீடு) அதற்கெல்லாம் இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** இப்படி இந்த ஆண்டு, நாட்டுக்குத் தேவையான நல்லதை எங்களுடைய டாக்டர் ஐயா அவர்கள் சொன்னார்கள் (குறுக்கீடு) என்று சொல்வதே முறையல்ல என்று சொல்லி (குறுக்கீடு) அதேபோல, எங்களுடைய சின்னய்யா என்று சொல்லும்போது, குதித்து எழுந்தார்கள். என்ன தவறு? எங்களுடைய தலைவரை நாங்கள், இதய தீபம், இதய தெய்வம் என்று சொல்வதிலே என்ன தவறு?

நீங்கள் உங்களுடைய தலைவர்களைச் சொல்கிறீர்கள். அதேபோல, எங்களுடைய தலைவரை நாங்கள் சொல்கிறோம். இதில் என்ன தவறு? (குறுக்கீடுகள்) எப்படிக் குதித்தார்கள்? (குறுக்கீடுகள்) இராஜா தேசிங்கு: குதிரை ஏறிக் கோட்டைக்குப் போனவன் எல்லாம் இராஜா தேசிங்கா? அந்த இடத்திலே எழுந்து சொல்லி இருந்தால், எவ்வளவு பிரச்சினையாகி இருக்கும்? தயவுசெய்து சிந்திக்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மானியக் கோரிக்கையை விட்டுவிட்டுத்தானே மற்றவர்கள் போகிறார்கள்? நாங்களும் எவ்வளவு தூரம் எங்களுடைய உணர்வுகளை, சட்டமன்றத்தினுடைய மாபுகளை மதித்து, மதித்து, மதித்து உட்கார்ந்து இருப்பது? நீங்கள் சொல்ல வேண்டாமா? முறையாக நடத்த நீங்கள் முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மானியத்தை விட்டு யார் தாண்டினாலும் தடுக்க வேண்டும் என்பதனைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு நாட்டினுடைய உண்மையான ரிசர்வ் பேங்க், அந்த நாட்டில் இருக்கக்கூடிய ஏரி, குளங்கள். அந்த ஏரி, குளங்களை—நம்முடைய முன்னோர்களும், அரசர்களும், மூவேந்தர்களும், நாடு பூராவும் ஏரி, குளங்களை வெட்டி, மழை நீரைச் சேகரித்து, நாட்டைச் செழிக்க வைத்தது அந்தக் காலம். இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, குறிப்பாக, ஒரு 25, 30 ஆண்டு காலத்திலே பல்வேறு கிராம முன்சீஃபுகள், அந்த ஏரி, குளங்களை, கையூட்டுப் பெற்றுக் கொண்டு மற்றவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இன்னும் 3 மானியங்கள் இருக்கின்றன, தலைவரே! அவர்கள் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டார்கள்.....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை இங்கே தந்து கொண்டிருக்கிறார்கள். அரசு அதிகாரிகள் கையூட்டுப் பெற்றுக்கொண்டு பட்டா போட்டுக் கொடுப்பதாக இங்கே சொல்லி இருக்கின்றார்கள். அந்தத் தகவல் தவறான தகவல். எந்த



ஏரியையும் அரசின் அனுமதி இல்லாமல் பட்டா போட்டுக் கொடுக்க முடியாது என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-45

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரியை முழுமையாக அல்ல. அது ஒரு சில இடங்களிலே; சென்னையிலேகூட இருக்கிறது முழுமையாக. எங்கள் பகுதியிலே, ஆங்காங்கே பெரிய ஏரி—எடப்பாடியைப் பொறுத்த வரை பெரிய ஏரி 382 ஏக்கர் கொண்ட அந்த ஏரி அந்த ஏரியை எப்படி..... (குறுக்கீடு) குற்றத்தையும் சொல்ல வேண்டும். நிறையையும் சொல்ல வேண்டும். அவர்களுடைய உரிமையைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். தவறைக் கண்டிக்க வேண்டும். அதுதான் நெஞ்சுரம் படைத்த ஒருவருக்கு அழகு. ஆகையினால் அந்த ஏரியிலே; பல்வேறு ஏரிகளுக்குள்ளே மெத்தைகள். எடப்பாடிக்கு வாருங்கள். பல அடுக்கு மாளிகையிலே மெத்தை கட்டியிருக்கிறார்கள்; ஏரிக்குள்ளே; மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எப்படி அவையெல்லாம் வழங்கப்பட்டன? அவையெல்லாம் தடுக்கப்பட வேண்டும். அதுபோல, நாடு பூராவும் இருக்கக்கூடிய ஏரிகளிலே இதை நீங்கள் தடுக்க வேண்டும். வானம் சுருங்கினால் தானம் சுருங்கும் (மணியடிக்கப்பெற்றது) வானம் சுருங்கினால் தானம் செய்வது சுருங்கிவிடும். தயவுசெய்து—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகள்; உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தயவுசெய்து கொஞ்சம் பெரிய மனது வையுங்கள். இன்னும் பேச நிறைய இருக்கிறது என்று சொல்லி, இந்த நாடெல்லாம் செழிக்கவேண்டுமென்றால், ஏரி, குளங்கள், இவையெல்லாம் நிரம்ப வேண்டும். மழை நீர் எல்லாம் நிரப்புகிறோம் என்று சொல்கிறார்கள். தயவுசெய்து எனக்கு 5 நிமிடங்கள் கொடுங்கள் என்று சொல்லி, ஒரு கருத்தை மட்டும்—ஒரு சின்னக் கதையை மட்டும் சொல்லி விடுகிறேன். தலைவர் அவர்களே, எனக்கு ரொம்ப நாளாகப் புரியவில்லை—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், 12-46 ஆகிறது.

**திரு. ஐ. கணேசன்:** சரியாக ஒரு மணிக்கு முடித்து விடுகிறேன், தலைவர் அவர்களே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணிக்கா? *(சிரிப்பு)*

**திரு. ஐ. கணேசன்:** ஒரு மணிக்கு பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12-50-க்கு மணியை அடித்து விடுவேன். கோபித்துக்கொள்ளக் கூடாது.

**திரு. ஐ. கணேசன்;** இல்லை, இல்லை, தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். எல்லாவற்றையும் எடுத்து வைத்து விடுகிறேன். ஒரேயொரு கருத்து, ஒரு சின்னக் கருத்து. தெரியாத, ரொம்ப நாளாகப் புரியாத கதை. இதைத் தலைவர் ஒருவரால்தான் தெளிவுபடுத்த முடியும். வேறு ஒருவரால் தெளிவுபடுத்த முடியாது என்பதால்தான் இந்த அவையிலே நான் சொல்கிறேன். சொல்லிவிடலாமா பழனிசாமி? *(குறுக்கீடு)* பழனிசாமியே உத்தரவு கொடுத்து விட்டார்.

பேரவைத் தலைவரவர்களே, நான் ரோட்டிலே, வீட்டிலே இருக்கிற சாமி படத்தைப் பார்க்கிறேன். நீங்கள் எல்லாம் கோபித்துக்கொள்ளக் கூடாது. சாமி படத்தைப் பார்க்கிறேன். இந்த உலகத்தைப் படைத்த சிவபெருமான், ஏண்டா தலையிலே கங்கையை வைத்திருக்கின்றான் என்று படத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு ரொம்ப காலமாகப் புரியவில்லை; சிவனே ஏன் தலையிலே கங்கையை வைத்திருக்கிறான் என்று. அதற்கு வெவ்வேறு கருத்துகளை எல்லாம் சொன்னார்கள். அது ஒத்துப்போன கருத்தாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் இப்போது புரிகிறது. கர்நாடகத்திலே காவிரிப் பிரச்சினை. ஆந்திராவிலே கிருஷ்ணா பிரச்சினை. கேரளாவில் இருந்து வரக்கூடிய தண்ணீர், உற்பத்தி ஆகி நமக்கு வரக்கூடிய இடத்திலே, அந்தக் கேரளா தண்ணீரிலே, பவானி பிரச்சினை. உள்நாட்டிலேயே தண்ணீர் எடுத்து வரப் பிரச்சினை. இத்தனை பிரச்சினையும் நாடு முழுவதும் இருக்கிறது. எங்கே கங்கையைக் கீழே விட்டால் போய் விடுமோ என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. இன்னும் உங்களுக்குத் தெளிவாகப் புரிந்தால் என்னைத் தனியாகக் கூப்பிட்டு, அதற்கு விளக்கத்தைச் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். *(சிரிப்பு)* நம்முடைய ஏரித் திட்டம். நிச்சயமாக அதற்கு மறுப்பு வரும். பேசினால், மந்திரி சொல்வார். இருந்தாலும் சொல்லி விடுகிறேன். 1923-லே வீராணம் திட்டத்திலே 1440 மில்லியன் கன அடி அங்கே தண்ணீர் இருந்தது. இன்றைக்குக் கரையை உயர்த்தி, 1485 மில்லியன் கன அடி தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 1½ டி.எம்.சி.-க்குக் குறைவான



தண்ணீர்தானே! ஒரு டி.எம்.சி., 1½ டி.எம்.சி.-க்குக் குறைவான தண்ணீர்தான். அந்தத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கு 720 கோடி ரூபாய் செலவு. ஆனால், பல கோடி ரூபாய் நாம் கொடுத்திருக்கக்கூடிய அந்தக் கிருஷ்ணா நீரே நமக்கு இன்னும் முழுமையாக வந்து சேரவில்லை. ஒரேயொரு முறைதான் 6 டி.எம்.சி. வந்திருக்கிறது. *(குறுக்கீடு)* 6.6. மீதி நமக்கு வாவேண்டிய 12 டி.எம்.சி.யைப் பெற்றுக் கொடுத்தால் சென்னை நகருக்கு, கிட்டத்தட்ட 20 ஆண்டு, 25 ஆண்டு காலத்திற்குத் தண்ணீர்ப் பிரச்சினையே வராது. முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் இதன்மீது தனிக் கவனம் செலுத்தி, தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் தண்ணீர்ப் பிரச்சினை தீர வேண்டுமென்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்த அந்தக் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் புறக்கணிக்கப்பட்ட புதிய வீராணம் திட்டத்தைக் கைவிட வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தில் பல்வேறு கட்டங்களில் ஆந்திரப் பகுதிகளிலும், தமிழகப் பகுதிகளிலும் பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. தற்போது கடும் வறட்சியின் காரணமாக ஆந்திரப் பகுதியில் இருக்கிற ஸ்ரீசைலம், சோமசீலா, கண்டலேறு நீர்த்தேக்கங்களில் நம்முடைய பகுதிக்கு அனுப்ப வேண்டிய அளவிற்கு நீரின்றி, நீர்ப் பற்றாக்குறை மிகுந்து, நீர் குறைவாகக் காணப்படுகிறது. வருங்காலங்களில் ஸ்ரீசைலம், சோமசீலா, கண்டலேறு அணைகளில் நீர்வரத்து அதிகப்பட்டவுடன், கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்திற்கு ஆந்திர அரசு தர வேண்டிய 12 டி.எம்.சி. நீரைப் பெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், பேசி முடித்துவிடுங்கள். அடுத்து, பழனியப்பன் *(குறுக்கீடு)* இல்லை, ஒரு மணி வரைக்கும் முடியாது. இன்னும் நான்கு பேர் பேச வேண்டும்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....
*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் பழனியப்பன். ஒரு நிமிடத்தில் கணேசன் பேசி முடித்துவிடுவார்.

**திரு. ஐ. கணேசன்:** வேறு யாராவது இருந்தால் சொல்லலாம், எதிர்க்கட்சியினர் குரல்வளையை எல்லாம் நெறிக்கிறார்கள் என்று. அண்ணாவாக நினைத்து நாங்கள் பழகிவிட்டோம்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என்ன சொல்கிறார் என்றால், எதிர்க்கட்சியினுடைய குரல்வளையைத் தாங்கள் நெறிக்கிறீர்களாம். ஆகையினால் அந்த அவச்சொல் உங்களுக்கு வரக்கூடாது என்பதற்காக ஒரு ஐந்து நிமிடங்கள் அவருக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** நன்றி! அவர் சொன்ன மாதிரி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை இதையெல்லாம் சொல்ல விட்டிருப்பதிலிருந்தே உங்கள் குரல்வளையை நெறிக்கவில்லை என்பது தெரிகிறதல்லவா? (குறுக்கீடு) இன்னும் இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு ஐ. கணேசன்:** முழுமையாகத் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர்ப் பிரச்சினை தீருவதற்கு நீங்கள் முதலில் இப்போது பேசிய மாதிரி கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் ஒன்றுதான் சிறப்பான திட்டம். இதை யார் முதலில் சொல்லியிருந்தாலும், பேரறிஞர் அண்ணாவிலிருந்து, கலைஞரிலிருந்து, அம்மையாரிலிருந்து, யார் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் நம்முடைய நாடு செழிக்க வேண்டும் என்றால் காவிரி-கங்கைத் திட்டத்தை உடனடியாகக் கொண்டு வாருங்கள்.

கட்டடத்தைப் பொறுத்த வரைக்கும், எங்களுடைய எடப்பாடி தொகுதியிலே (குறுக்கீடு) தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும்.

எடப்பாடி தொகுதியிலே முதன்முதலாக தாலுகா அலுவலகம் 1997 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இதுவரை அது வாடகைக் கட்டடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. பல முறை சொல்லியும் அதற்குச் சொந்தக் கட்டடம் இல்லை. சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுங்கள்.

அதேபோல, பள்ளிக்கூடம்; எடப்பாடி பெண்கள் மேல்நிலைப் பள்ளி. அந்த அறிவியல் ஆய்வுக்கூடம்; தலைவர் அவர்கள் அப்படியே



திரும்பிப் பாருங்கள். இந்த Photo. இதைக் காலையிலேயே உங்களிடம் சொல்லிவிட்டேன். அமைச்சரிடத்திலே சொல்கிறேன். அறிவியல் ஆய்வுக்கூடம் அத்தனையும் பெண்கள் பள்ளிக்கூடத்தில் பிட்டுக்கொண்டு விழுந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அமைச்சரிடம் கொடுத்து விடுங்கள். கொடுத்துவிட்டுப் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இருங்கள். அதைக் கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனியப்பன். (குறுக்கீடு) அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள்.

**•திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டின் .....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள் பழனியப்பன். கணேசன், ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பல்வேறு வேலைகளை, சென்ற முறையும் சொன்னேன், இந்த முறையும் சொல்கிறேன். அதேபோல, நெடுஞ்சாலைத் துறைக்கு இப்போது ஒதுக்கிய பணம், கவர்னர் உரையில் சொன்னது போல ரூ.150 கோடி ஒதுக்கியிருக்கிறீர்கள். நீண்ட காலமாக அமைச்சர் சொன்னார். தி.மு.க. ஆட்சியிலே நெடுஞ்சாலை போடவில்லை, ரோடு போடவில்லை, அதனால் பழுதுபட்டுப் போய்விட்டது. இது போதாது என்று சொன்னாங்க ....(மணியடிக்கப்பெற்றது) குற்றச்சாட்டு இல்லைங்க. ஆகையினால் அந்த ரோடுகள் எல்லாம்; என் தொகுதியில் 22 ரோடுகள், 250 கிலோ மீட்டர் தூரம் மிக, மிக, மிக மோசமாக இருக்கின்றன. அதற்கு ஒரு சிறிய தொகையை ஒதுக்கி, அந்த ரோடுகளையெல்லாம் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும். அதேபோல என்னுடைய தொகுதியில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கணேசன், பேசி முடித்துவிடுங்கள். பழனியப்பன்.

**திரு. ஐ. கணேசன்:** நன்றி சொல்கிறேன். (குறுக்கீடு) நன்றி சொல்கிறேன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே -(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள். கடைசி வாக்கியத்துடன் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பாக என்னுடைய அன்புச் சகோதரர்கள், பல்வேறு உறுப்பினர்கள், அதேபோல ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியினுடைய குறைகளைப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். எனக்கு என்னவோ, அரை மணி நேரம், ஒரு மணி நேரம் கொடுப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால் நேரமில்லை. கடைசியாக, அண்ணா தி.மு.க. ஆட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனியப்பன். (குறுக்கீடு) போதும், போதும்.

**திரு. பெ. பழனியப்பன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டின் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை உள் துறை—சிறைச்சாலைகள், மதுவிலக்கு, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு ...

***திரு. ஐ. கணேசன்:** ஒரே நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க. ஆட்சி மிக உயர்வான அரசு. நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஏனென்றால் மின் கட்டண உயர்வு, பஸ் கட்டணம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உரையை முடித்துவிடுங்கள். பழனியப்பன், பேசுங்கள்.

***திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டின் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, உள் துறை-சிறைச்சாலைகள், மதுவிலக்கு, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்ததற்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)



**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் திரு. கணேசன், உட்காருங்கள்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாகவும், இரத்த நாளங்களாகவும் செயல்படுவன பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறைகளாகும். வேளாண்மை, தொழில், கனிம வளம், மின் உற்பத்தி, காடு வளர்ப்பு, பால் வளம் போன்ற நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிப்பது சாலைகளாகும். சாலைகளை மேம்படுத்துவதுடன், தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாத்துப் பராமரிக்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறப்பான திட்டம் ஒன்றினை அறிவித்துள்ளார்கள். அதனை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய குறிக்கோளான, மேம்படுத்தப்பட்ட சாலைப் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் வாகன இயக்கச் செலவினைக் குறைத்திடுதல், கிராமங்களில் இருந்து நகரங்களுக்குச் சாலை வசதி ஏற்படுத்தி விரைவான போக்குவரத்தை உறுதி செய்தல், மாவட்ட இதர சாலைகளை மாவட்டப் பெரிய சாலைகளாகவும், மாவட்ட முக்கிய சாலைகளை மாநிலச் சாலைகளாகவும் தரம் உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்ளுதல் வரையறைகளைப் பூர்த்தி செய்யும் அரசு சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக உயர்த்தித் தர வற்புறுத்துதல் போன்றவைகளைக் குறிக்கோளாகக் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை வரவேற்கவும், பாராட்டவும் கடமைப்பட்டுள்ளேன். மேலும், 2002-2003 ஆம் நிதியாண்டிலே நம்முடைய பொதுப் பணித் துறைக்காக, நெடுஞ்சாலைத் துறைக்காக ரூ.90 கோடி மதிப்பில் 2300 கிலோ மீட்டர் அரசு சாலைகளைப் புதுப்பிக்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு, 2003-2004 ஆம் நிதி ஆண்டிலே, அந்தச் சாலைகளுடைய அளவையும் அதிகப்படுத்தி, 180 கோடி ரூபாய் செலவில் 5000 கிலோ மீட்டர் சாலைகளைப் புதுப்பிப்பதற்காக நிதியொதுக்கி இருப்பதற்காக

cement slab அமைத்து, அந்த விவசாயிகளுக்கு, 18 ஏரிகளுக்கும் தண்ணீர் செல்வதற்கான வழிவகையைச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில், சேலம்-திருப்பத்தூர்-வாணியம்பாடி என்ற ஒரு சாலை இருக்கிறது. இந்தச் சாலையை எஸ்.டி.வி. சாலை என்று சொல்வார்கள். இந்தச் சாலை கிட்டத்தட்ட 120 கிலோ மீட்டர் நீளம் உடையதாகும். ஒரு சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டும் என்று சொன்னால், அதற்குச் சில தகுதிகள் தேவை. அதற்குத் தேவையான தகுதிகள் அத்தனையும் உள்ள சாலையாக இப்போது அந்தச் சாலை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. சேலம், தருமபுரி, திருப்பத்தூர் மக்கள் இங்கே சென்னைக்கு வரவேண்டும் என்று சொன்னால், இந்தச் சாலை வழியாகத்தான் வரவேண்டும். சென்னைத் துறைமுகத்திற்கு, எங்களுடைய பகுதியிலே அதிகமாக விளையக்கூடிய கருப்புக் கற்கள், சர்க்கரை, தோல் பொருட்கள் போன்ற அத்தனை பொருட்களும் இந்த வழியாகத்தான் வாவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி மாவட்டங்களிலே உள்ள அத்தனை பொது மக்களும், பக்தகோடிகளும் திருவண்ணாமலைக்கும், திருப்பதிக்கும் செல்லக்கூடிய ஒரு சாலையாக இந்த வழி இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், எங்கள் பகுதியிலே இருக்கக்கூடிய நோயாளிகள் யாராவது சிகிச்சை பெறவேண்டும் என்று சொன்னால்கூட, வேலூரிலே இருக்கக் கூடிய சி.எம்.சி. மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கிட்டத்தட்ட இந்தச் சாலையின் வழியாக ஒரு நாளைக்கு 3,000 வாகனங்கள் கடந்து செல்கின்றன. எஸ்.டி.வி. என்ற இந்த சேலம்-திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு கருத்துரு அனுப்பியிருக்கிறார்கள். அதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்தி, இந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாகப் பெற்றுத் தாவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சக்ரபாணி அவர்கள் சாலைகள் எல்லாம் மிகவும் மோசமாக



இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தச் சாலைகள் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை; பராமரிக்கப்பட்டிருந்தால், இந்தச் சூழ்நிலை இன்றைக்கு வந்திருக்காது. ஆகவே எப்படி நிதியை நீங்கள் சரிக்கட்டாமல், நிதியைச் சரியாக, சீரான முறையிலே வைக்காமல் விட்டுச் சென்றீர்களோ, அதைப்போல் சாலைகளையும் வைத்துவிட்டுச் சென்றீர்கள். அதன் காரணமாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல கோடி ரூபாய்களை ஒதுக்கி இன்றைக்கு சாலைகளைச் செப்பனிட்டு வருகிறார்கள். மேலும் தி.மு.க. அரசினுடைய அவல நிலை காரணமாக என்னுடைய தொகுதியில் பல சாலைகள் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அந்தச் சாலைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுக்கும்படி இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய குருபரஅள்ளி சாலை, பில்பருத்தி சாலை சுமார் 17.2 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. மூக்கனூர்-அரூர் சாலை சுமார் 25.2 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. மொரப்பூர்-கல்லாவி சாலை சுமார் 7.00 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. மோட்டாங்குறிச்சி-நத்தமேடு சாலை சுமார் 3 கிலோ மீட்டர் நீளம் உள்ளது எ.பள்ளிப்பட்டி-பாப்பிரெட்டிபட்டி சாலை சுமார் 5.2 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இந்தச் சாலைகளை நபார்டு திட்டத்தில் சீரமைப்பதற்காக நம்முடைய அரசாங்கத்தின் மூலமாக வரைவு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தச் சாலைகளை உடனடியாக நபார்டு திட்டத்தில் சேர்த்து, சீரமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டுத் திட்டம்;--எங்களுடைய தொகுதியிலே சித்தேரி என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்த மலைவாழ் கிராமம் கிட்டத்தட்ட 62 கிராமங்களை உள்ளடக்கிக் கொண்டதாகும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் அந்தச் சாலை--17 கிலோ மீட்டர் நீளம்--பராமரிக்கப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா ஆட்சியின்போதும் 10 கிலோ மீட்டர் சாலை பராமரிக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு வனத் துறையின் கட்டுப்பாட்டில் அந்தச் சாலை இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக அதைச் செப்பனிட வேண்டும் என்று சொன்னால், வனத் துறை அங்கே தடை விதிக்கிறது. ஆகவே, வனத் துறை அனுமதி பெறுவதோடு மட்டுமல்லாமல், அந்தச் சாலைகளைப்

நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஒன்றியங்கள் மூலம் இல்லாமலும், நெடுஞ்சாலைத் துறையுடன் தொடர்பு கொள்ளாமலும் இருக்கிற சாலைகளை--கிட்டத்தட்ட 12,000 சாலைகளை இன்றைக்கு இனம் கண்டு தேர்ந்தெடுத்து, அந்தச் சாலைகள் ஊராட்சி ஒன்றியங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு அதை நிறைவேற்றுவதற்காக இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.50 கோடி நிதியொதுக்கி இருக்கிறார்கள். இதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீராதார மேம்பாட்டிற்காக, விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-1 என்ற அற்புதமான திட்டத்தை உருவாக்கி--உலக வங்கியினுடைய நிதியுதவியைப் பெற்று 1995-லே அனுமதி பெற்ற பின்பு, இந்தத் திட்டம் தொடர்ந்து இன்று வரை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள்கூட இந்தத் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிறைய அணைக்கட்டுத் திட்டங்கள் கொண்டு வந்தது நாங்கள்தான் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் கேட்க விரும்புவது எல்லாம், அந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு வருகிற நிதி, எந்தத் திட்டத்தின் மூலம் கிடைத்திருக்கிறது என்பதை நான் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீர் ஆதார மேம்பாட்டுத் தொகுப்பு என்ற திட்டத்தை உருவாக்கியதன் காரணமாகத்தான் அந்த நிதி கிடைத்ததேயொழிய, தி.மு.க. ஆட்சியால் அந்தத் திட்டம் கொண்டு வரப்படவில்லை. அந்தத் திட்டங்கள் இன்றைக்கு வருகின்றன என்றால், அதற்கு முன்னோடி நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை, நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம்-2-ன்கீழ் கொண்டு வந்து நிதியாதாரங்களைப் பெற்று, அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை முடிப்பதற்காக புரட்சித்



தலைவி அம்மா அவர்கள் அரும்பாடுபட்டு வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, 2003-2004 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீடாக, நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ.399 கோடி ஒதுக்கி உள்ளமைக்கும் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் என்று சொன்னாலே, வீணான திட்டம் என்று சொல்வார்கள். அந்த வீணாக்கப்பட்ட திட்டத்தை, இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த மக்களின் மத்தியிலே இருந்த சூழ்நிலையை மாற்றி, "புதிய வீராணம்" என்கிற புரட்சிகரமான திட்டத்தைத் துரிதமாக நடைமுறைக்குக் கொண்டு வந்து மிக விரைவில் சென்னை மக்களுக்குக் குடிநீர் கிடைக்க வழிவகை செய்து,--புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்து வெற்றி வீராங்கனையாக--இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு நல்ல பல திட்டங்களை நாட்டு மக்களுக்காகத் தீட்டிச் செயல்படுத்தி வரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்ட மனம் இல்லையென்று சொன்னாலும்கூட, தவறான தகவல்களைச் சொல்லி மக்களை வேண்டுமென்றே திசை திருப்புவதற்காகவும், பொன்னான நேரத்தை வீணாக்கியும் பேசி வருகின்றனர். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எல்லாம் ஏதாவது பழமொழியைச் சொன்னார்கள். வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவதாக உள்ளதென்றும், பகட்டுக்குக் காட்டும் மத்தாப்பு என்றும், வெண்டைக்காய்க் குழம்பு வைத்து, கற்றாழை பிழிந்து இருப்பதைப் போல் உள்ளது என்றும் பேசினார்கள். இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் இந்த மோசமான பழமொழிகள்தானா? இதைத்தான் இவர்கள் அங்கே கற்றுக் கொள்கிறார்களா? இதைக் கேட்கிறபோதே, உங்களுக்குப் பாடம் நடத்தி வரும் , தலைமையாசிரியர் எப்படிப்பட்டவர் என்று இதிலிருந்தே தெரிகிறது.

பிற்பகல் 1-00

உதாரணத்திற்கு, மழை இல்லாது இருக்கிற காரணத்தினால், இன்றைக்கு வறட்சி வந்திருக்கிறது. இந்த வறட்சியைப் போக்குவதற்காக, ஏழை விவசாயிகளுடைய பசியைப்

போக்குவதற்காக நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உணவு வழங்கினார்கள். மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதைக்கூடப் பொறுத்துக்கொள்ள முடியாத நீங்கள் குறை கூறினீர்கள். அதையும் புரிந்துகொண்டு, மக்களுக்காக, அந்த மதிய உணவுத் திட்டத்திற்குப் பதிலாக, அரிசி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதையும்கூடப் பொறுத்துக்கொள்ள முடியாமல், இன்றைக்கு நீங்கள் அதைக் கிண்டலும், கேலியுமாகப் பேசி வருகிறீர்கள். நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்படி வறட்சி வந்துவிட்டதே என்பதற்காக, நமது கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழை, எளியவர்கள் வேலை இல்லாமல் படக்கூடிய திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக "Food for work" திட்டத்தை--வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலேகூடக் குறை கூறினீர்கள்.

எனக்கு முன்னாலே இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எ.வ. வேலு அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். எங்களுடைய தொகுதியில் 10 இடங்களிலே வேலைக்கு உணவு அளிக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. ஆனால், அந்த வேலைக்கு உணவு அளிக்கும் திட்டத்தின் மூலமாக ஆட்கள் வேலை செய்யாமல், அங்கே ஏதோ இயந்திரத்தை வைத்து வேலை செய்வதாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதற்கு நம்முடைய அம்மா புரட்சித் தலைவி அவர்கள் மிகவும் தெள்ளத் தெளிவாகவும், விளக்கமாகவும் இங்கே பதிலை எடுத்துரைத்துப் பேசியிருக்கிறார்கள். மேலும், இப்பேர்ப்பட்ட நல்ல திட்டங்களைத் தீட்டி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உறுதுணையாக இல்லாமல், ஏதேதோ அரசியல் செய்ய வேண்டும் என்று பேசிக் கொண்டிருப்பதை நீங்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு விவசாயிகளுடைய வட்டிக்காகவும், அவர்களுடைய நில வரிக்காகவும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 350 கோடி ரூபாய்க்குச் சலுகை அளித்திருக்கிறார்கள். இப்படிப் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய சிந்தனையில் உருவாகிய நல்ல பல மக்கள் நலத் திட்டங்களை மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்னதான் மூடி மறைக்கப் பார்த்தாலும், அது மக்கள் மன்றத்தில் எடுபடாது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக்



கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு உதாரணமாக, நடந்து முடிந்த இடைத் தேர்தல்களில் ஒவ்வொன்றாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தொடர்ந்து கிடைத்திருக்கிற வெற்றி, மக்கள் அம்மா அவர்கள் பக்கம்தான் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பற்றிச் சில கோரிக்கைகளை இங்கே வைக்க நான் விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலே, சென்ற நிதியாண்டில் தருமபுரி மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் பிரச்சினையாக உள்ள மொரப்பூர் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டது. அதற்காகச் சென்ற நிதியாண்டிலே ரூபாய் 9 கோடியே 50 இலட்சம் நிதியை ஒதுக்கி இன்றைக்கு அந்த மேம்பாலப் பணி நடைபெற்று வருகின்றது. அங்கே குடியிருந்த 50 ஏழை, எளியவர்கள் இன்றைக்கு அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வேறு இடத்திலே குடியிருந்து வருகிறார்கள். அந்த ஏழை, எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் இந்த நேரத்திலே பணிவுடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் மூன்று அணைகள் இருக்கின்றன. ஒன்று, வாணியாறு அணை. மற்றொன்று, ஈச்சம்பாடி அணை. இன்னொன்று, பொதியன்பள்ளம் அணை. இந்த மூன்று அணைக்கட்டுகளும் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலும், இன்றைக்கு தமிழக முதல்வராக இருந்துகொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலேயும் கொண்டு வரப்பட்டவை. பொதியன்பள்ளம் அணைக்கட்டுத் திட்டம் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 1991-96-ல் முதல்வராக இருந்தபோது கொண்டு வரப்பட்ட நல்ல அற்புதமான ஒரு திட்டமாகும். மழைக் காலங்களில் மழை பெய்கிறபோது, அந்தத் தண்ணீர் இங்கே இருக்கக்கூடிய வாய்க்கால் பகுதி களிமண்ணாக இருக்கிற காரணத்தினால், அந்தக் களிமண் கரைந்து, தண்ணீர் செல்லவிடாமல் தடுத்துவிடுகிறது. அதைப் போக்குவதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

பராமரிப்பதற்கு நெடுஞ்சாலைத் துறைக்கும் அனுமதி வழங்கி, நெடுஞ்சாலைத் துறை மூலமாகவோ, அல்லது மலைவாழ் மக்களுடைய மேம்பாட்டுத் துறை மூலமாகவோ அந்தச் சாலையைப் பூர்த்தி செய்யவேண்டும்; அந்தச் சாலையைச் சீரமைக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவன்போடு கேட்டுகொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், கிராமச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு பல்வேறு சாலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தின் மூலமாக என்னுடைய தொகுதியில் உள்ள மோளையானூர்-தேவராஜபுரம் சாலையும், இராணி மூக்கனூர்-இராமாபுரம் சாலையும், வெப்பாலம்பட்டி-தின்னஅல்லி புதூர் சாலையும், பி.பள்ளிப்பட்டி-எஸ்.பாளையம் செம்பியானூர் சாலையும் சீரமைத்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எவ்வளவுதான் வறட்சிகள் ஏற்பட்டாலும், வறட்சியைப் பொருட்படுத்தாமல், குடிநீர் மக்களுக்குக் கிடைத்தே ஆகவேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டினார்கள். இருந்தாலும்கூட, பொ.மல்லாபுரம் பேரூராட்சி என்று ஒரு பேரூராட்சி இருக்கிறது. அந்தப் பேரூராட்சி குடிநீர்ப் பிரச்சினையால் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அந்த மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக குடிநீர் வடிகால் வாரிய நிதியிலிருந்து பொதுப் பணித் துறை மூலமாக வேப்பாடி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பு அணை அமைத்துக் கொடுத்து அந்த மக்களுடைய தாகத்தைத் தீர்த்து வைக்குமாறு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை நான் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். வறட்சி நமக்கு எதிரியாக இருந்தாலும், எதிர்க்கட்சிகள் இன்று நமது அரசுக்கு எதிரியாக இருந்தாலும், தமிழகத்தை ஆளுகின்ற நமது முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சாதுர்யமான மதி நுட்பத்தால், கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுத்திய நிதிநிலைச் சீர்கேட்டைச் சரிசெய்து, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, ஏழையெளிய மக்களின் பயன்பாட்டுக்காகவும், எதிர்காலத் தலைமுறையின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காகவும் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய சிந்தனையில் உருவான நிதிநிலை அறிக்கையினைப் பாராட்டி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிற



இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று, வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் அவர்கள்.

பிற்பகல் 1-10

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கையின்மீது இரண்டு விஷயங்களை மாத்திரம் நான் அரசின் கவனத்திற்குச் சுருக்கமாகக் கொண்டு வர விரும்புகிறேன். எனக்கு முன்னால் இங்கு பேசிய உறுப்பினர்கள், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசும்போதுகூட, அரசு ஊழியர்களுக்கென ஒதுக்கப்படுகிற, செய்யப்படுகிற செலவினம் சம்பந்தமான விஷயத்தைச் சொன்னார்கள். நான் அதற்குள் ஆழமாகச் செல்லவில்லை. நிறைய விவாதங்கள் இங்கே நடந்திருக்கின்றன. ஏராளமான பதில்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களாலும், இதர நம்முடைய பொறுப்புமிக்க அமைச்சர்களாலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்போதைய நிதிநிலை அறிக்கையிலேகூட சில விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. 2002-2003 மற்றும் 2003-2004 ஆகிய ஆண்டுகளில் வரி வருவாய், வருமானத்தின் அடிப்படையில் 94 சதவிகிதம் என்கிற அடிப்படையிலே அந்தச் செலவினங்கள் வரவில்லை என்பது எங்களுடைய கருத்து. 2002-03 ஆம் ஆண்டில் 53.19 சதவிகிதமும், 2003-04 ஆம் ஆண்டில் 56.08 சதவிகிதமும்தான் உண்மையில் இதற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற வளர்ச்சித் துறைகளில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களின் ஊதியம் மற்றும் படிகள் சம்பந்தப்பட்ட வேலைகளின் தலைப்பில் செலவு எழுதப்பட வேண்டியவையாகும். ஆனால், பொதுவாக எழுதப்படுகிறது. கணக்குத் தலைப்புகளிலேயே தவறுகள் இருக்கின்றன என்பதே மார்க்சிஸ்ட் கட்சியினுடைய கருத்து. ஒரு வீடு கட்டப் படுகிறது என்று சொன்னால்,--5 இலட்சம் ரூபாய் செலவு செய்து வீட்டைக் கட்டியிருக்கிறோம் என்று சொல்லுகிறோம். செங்கல் இத்தனை ரூபாய்க்கு வாங்கினோம், மண் இத்தனை ரூபாய்க்கு வாங்கினோம், சிமெண்ட் இத்தனை ரூபாய்க்கு வாங்கினோம், கொத்தனாருக்கு இவ்வளவு கொடுத்தோம், மேஸ்திரிக்கு இவ்வளவு

கொடுத்தோம், சித்தாளுக்கு இவ்வளவு கொடுத்தோம் என்று எல்லாம் ஒன்றும் பிரித்துச் சொல்வது கிடையாது. ஆனால் இதில் அவ்வாறு சொல்லப்படுகிறது.

அதேபோன்று, அணைகள் மற்றும் பாலங்கள் கட்டும் பணிகளுக்காக சாலை போடுதல் போன்றவற்றில் தனியாருக்கே காண்ட்ராக்ட் விடுகிறோம். அப்படிப்பட்ட செலவினங்கள், அணை கட்டுவதற்கான செலவு, பாலங்கள் கட்டும் செலவு என்று கணக்கு வைக்கப்படுகிறது. ஆனால், அந்த வேலைகளை நம்முடைய துறைகளே செய்கிறபோது, அரசுத் துறைகளே செய்கிறபோது, மேற்பார்வையிடும் முதன்மைப் பொறியாளரிலிருந்து உதவிப் பொறியாளர் வரையிலான தொழில்நுட்ப ஊழியர்கள் ஆகியோருடைய ஊதியம் உட்பட, சம்பந்தப்பட்ட வேலைகளுக்கான தலைப்பில் செலவுகள் எழுதப்படுவதற்குப் பதிலாக, 'ஊதியம் மற்றும் படிகள்' என்கிற தலைப்பிலே செலவு எழுதப்படுகிறது. இது எவ்வாறு சரியான நடைமுறையாகும்? இதையெல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாகச் சொல்வது என்பது சரியாக இருக்காது.

அதேபோன்று, மருத்துவர்கள், சுகாதார அலுவலர்கள், ஆசிரியர்கள். இவர்களுடைய சம்பளங்கள் எல்லாம், சம்பந்தப்பட்ட மக்கள் நலத் திட்டச் செலவுத் தலைப்புகளில் சேருகின்றன. கல்வித் துறைக்கு ஒதுக்குகிறோம். பல்வேறு மானியங்களில், பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கிச் செலவு செய்கிறோம். அவற்றில் துறைகளின் செலவு என்று வருகிறபோது, மக்கள் நலத் திட்டங்களுக்காகச் செலவு செய்யப்படுகிறபோது, அதில் சம்பளம் அடங்கும்; ஊதியம் அடங்கும்; ஓய்வூதியம் அடங்கும்; போக்குவரத்துச் செலவுகள் அடங்கும்; மருத்துவச் செலவுகள் அடங்கும்; எல்லாம் அடங்கும். அவ்வாறு அவை கருதப்பட வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேபோல, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஊதியக் குழுவினுடைய நிலுவைகள் வழங்கப்படும்போது, அந்த நிதி சேம நல நிதிக் கணக்கில் வைக்கப்படும்; 60 சதவிகித நிலுவைத் தொகை 5 ஆண்டுகளுக்குப் பிறகு, 2003-04 ஆம் ஆண்டில் திருப்பி வழங்கப்படும் என்று அப்போது உத்தரவாதம் அளிக்கப்பட்டது. அரசு இப்போது மாறிவிட்டது. இப்போது நம்முடைய அரசாங்கம் வந்ததற்குப் பிறகு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? 3 ஆண்டுத் தவணைகளில் திருப்பி வழங்கப்படும், வட்டி கிடைக்காது, பாதி, பத்திரமாகக் கொடுக்கப்படும் என்று



சொல்கிறீர்கள். இது எந்த வகையிலே நியாயம்? ஊழியர்கள் எந்த வகையிலே இதை ஏற்றுக்கொள்ள முடியும்? அடுத்த 3 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டிலே என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. ஒருவேளை நீங்களேகூட, உங்கள் எதிர்பார்ப்புப்படி, இந்த ஆட்சியே மீண்டும் நீடித்தாலும்கூட, ஒவ்வொரு ஆட்சி மாறுகிறபோதும், அந்தந்த ஆண்டுகளில் நிதிநிலைப்படி புதுப் புது முடிவுகளை எடுக்கிறோம். 2003-2004-ல் நாங்கள் இருக்கமாட்டோம் என்ற நிலையில் தி.மு.க. இதை அறிவித்திருக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை. அப்போதைய நிலையைச் சமாளிப்பதற்காக அவர்கள் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். நீங்கள் வந்த பிறகு அதை மாற்றுகின்றீர்கள்.

இன்னொன்று எங்களுக்குத் தெரியவேண்டும். அது என்னவென்று சொன்னால், சேம நலநிதிக் கணக்கு, மாநிலக் கணக்காய்வுத் தலைவரால் பராமரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. சர்க்கார் ஊழியர்களுடைய சேம நல நிதிக் கணக்கை, Accountant -General பராமரித்து வருவதாகவும், அதற்கு Accountant-General வட்டி தருவதாகவும் தெரிகிறது. அது அவ்வாறு இருக்குமானால், இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற 60 சதவிகித நிலுவைத் தொகைக்கு Accountant-General அலுவலகத்திலிருந்து வட்டி இங்கு நமக்குக் கிடைக்கிறபோது, நம்முடைய அரசு இதற்கு வட்டி இல்லை என்று மறுக்க வேண்டிய அவசியம் எங்கிருந்து, ஏன், எதனால் ஏற்பட்டது? இவை கேள்விகளாக இருக்கின்றன. ஆகவே, இவற்றை மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது என்பது, தலைமைச் செயலகம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய அரசு ஊழியர்களுக்கு நியாயம் வழங்குவதாக இருக்கும். இருக்க வேண்டும். அந்த முறையில் இதைச் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அடுத்து, அதிகப்படியான செலவினங்கள் சம்பந்தமாகச் சொல்கிறபோது நான் வெறும் செலவை மட்டும் சொல்லவில்லை. எங்களுடைய கட்சியின் சார்பில் நான் சில ஆலோசனைகளைச் சொல்கிறேன். நிருவாகத்தைச் சீர்படுத்துவதற்கு, செம்மைப்படுத்துவதற்கு, செலவுகளைச் சிக்கனப்படுத்த வேண்டும் என்பதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு நாங்கள் முழுமையாக உடன்பட்டு நிற்கிறோம். ஆனால், அதை எங்கிருந்து தொடங்குவது?

அடிமட்ட சாலைப் பணியாளர்களிடமிருந்து அல்ல; கீழ்நிலை ஊழியர்களின் வாழ்க்கையை, அவனைத் துன்பத்திற்கு

உள்ளாக்கிவிட்டு அல்ல. எங்களுடைய கருத்து; தேவைக்கு அதிகமாக உள்ள உயர் அதிகாரிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துங்கள்; தேவையற்றவர்களை நீக்குங்கள். அதனால் ஒன்றும் குடிமுழுகிப் போகாது. ஒரு 10, 20 பேரைப் பாதித்தால் ஒன்றும் தப்பில்லை. இலட்சக்கணக்கான ரூபாய் உயர் அதிகாரிகளுக்குச் செலவு பண்ணுகிறோம். நான்கு ஆயிரம் கொடுக்கின்ற 10 ஆயிரம் பேரைத் தெருவிலே நிறுத்துகின்றோம். இந்த நிலைப்பாடுகளை நம்முடைய மாநில அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்றால்; அவர்கள்தான் வாக்காளர்களாக இருக்கின்றார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அடுத்து, பயணப் படிகள் உள்ளிட்ட நிருவாகச் செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள். அதன் மூலம் நியாயம் வழங்கப்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது அந்த வேலையிலே எப்படித் திறமையாகச் செய்யவில்லை என்றும், ஆகவே, 10 ஆயிரம் பேரை நிறுத்துகிறோம் என்றும் சொன்னார்கள். அதற்கு அவர்கள் மாத்திரமே பொறுப்பாக இருக்க முடியாது. சம்பந்தப்பட்ட இலாகாவின் துறை அதிகாரிகளும் பொறுப்பாக இருந்திருக்க வேண்டும். ஆகவே, முழுமையான பரிசீலனையின் அடிப்படையில், சாலைப் பணியாளர்கள் பற்றிய வேலை நீக்கத்திற்குண்டான நிலையை மறுபரிசிலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று வலியுறுத்துகின்றேன்.

அடுத்து, பொதுப் பணித் துறை சம்பந்தமாக; இது எங்களுடைய கட்சியின் சார்பில் மட்டுமல்ல; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, அதாவது அனைத்துக் கட்சி, அனைத்து மக்கள் சார்பிலும் உள்ள ஒரு பிரதானக் கோரிக்கை; 30 இலட்சம் ஜனங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை, அவிநாசி-அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டம். 8 சட்டமன்றத் தொகுதிகள், 2 மாவட்டங்கள் அதிலே சம்பந்தப்படுகின்றன. தேர்தல் வாக்குறுதி கொடுத்தோம். முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார்கள். மிகுந்த எதிர்பார்ப்பு, கோவை, ஈரோடு இரண்டு மாவட்டங்களுக்கும் இருந்தது. இந்த இரண்டு மாவட்டங்களிலே எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். வெளியே இருக்கக்கூடிய கட்சிகளும் இருக்கின்றன. நீண்ட காலக் கோரிக்கை அது. சென்ற நிதிநிலை அறிக்கையில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது; நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு வரி, அப்படி ஒரு திட்டம் இருப்பதாகக்கூடக் காட்டப்படவில்லையே,



(குறுக்கீடு) அவிநாசி-அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டம். நியாயமா? தொலைபேசியில் விடிய, விடிய எங்களுக்குத் தகவல் வந்துகொண்டிருக்கிறது. நாளைதானே இந்த மானியக் கோரிக்கை வ்ருகிறது, நீங்கள் பேசுங்கள், கேளுங்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இது ஒரு மிக முக்கியமான திட்டம். சிங்காநல்லூர், அவிநாசி, மேட்டுப்பாளையம், திருப்பூர், பவானி, கோபி, பெருந்துறை, காங்கேயம் ஆகிய 8 சட்டமன்றத் தொகுதிகள், கோவை, ஈரோடு என்ற இரண்டு மாவட்டங்கள் சம்பந்தப்பட்டவை. ஆகவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதற்கு ஏதாவது உடனடியாக நிவாரணமும், பதிலும் அளித்து, நிதியை ஒதுக்கீடு செய்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சின்னவடம்பட்டி; சிங்கை தொகுதியிலுள்ள சின்னவடம்பட்டி ஆற்றைத் தூர் எடுத்து, ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்துவது சம்பந்தமான கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே நடைமுறைப்படுத்தி, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற வேலை. அந்த வேலையைத் தயவுசெய்து இந்த நடப்பாண்டில் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். வெள்ளப் பாதிப்பு சங்கனூர்பள்ளத்தில் வருவதைத் தடுக்க, இந்தப் பக்கம் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் பயன்பெறக்கூடிய அளவிலே சின்னவடம்பட்டி ஏரியைத் தூர் எடுத்து, ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்த வேண்டும். வெள்ளப் பெருக்கு கோவை மாநகராட்சிப் பகுதியில் வருவதைத் தடுக்கின்ற வகையிலும், சின்னவடம்புட்டி ஏரிக்கு அந்தத் தண்ணீர் வருகின்ற வகையிலும், சங்கனூர்பள்ளத்தைத் தூர் எடுத்து ஆழப்படுத்தித் தரவேண்டும். நஞ்சுண்டாபுரம் ராஜவாய்க்காலைத் தூர் எடுத்து ஆழப்படுத்தித் தரவேண்டும். குழித்துறை பகுதி, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் உள்ள பகுதியில், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்பட வேண்டும். விளவங்கோடு தொகுதி பூந்துறை பாலம் உடைந்து போனதைப் புதுப்பிக்க வேண்டும். திண்டுக்கல் தொகுதி, தாடிக்கொம்பு, அகரம் வழியாக வரும் குடகனாற்றின் மீது பாலம் கட்டித் தரவேண்டும் என்பது நீண்ட காலக் கோரிக்கை. அதை நிறைவேற்றித் தரவேண்டும்.

அதேபோல, நம்முடைய சென்னை மாநகரத்தில், பெரம்பூர் சட்டமன்ற (மணியடிக்கப்பெற்றது). 2 மணித்துளிகளில் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்

அறிவிக்கப்பட்ட, பெரம்பூர்-வியாசர்பாடி இரயில்வே மேம்பாலக் கட்டுமானப் பணிகளை உடனே துவக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

அதேபோல, மதுரையில் சுற்றுச்சாலையை உருவாக்கும் பணி விரைவில் முடிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதேபோல, மதுரை, பெரியார் பேருந்து நிலையத்திற்கருகிலுள்ள இரயில்வே மேம்பாலப் பணியை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில், காமராஜர் சாலையில் தேங்கி நிற்கும் மழை நீரைப் பயன்படுத்த வேண்டும். அதேபோல, மழை நீர் சேகரிப்புத் திட்டம் எல்லாப் பகுதிகளிலும் உறுதி செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய பொதுப் பணித் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்; சென்ற ஆண்டில் பணிகள் முழுமையாக நடைபெறவில்லை; முழுமையாக என்றால், ஓரளவிற்கு நடந்திருக்கிறது; இன்னொரு பகுதி நடக்கவில்லை. உதாரணமாக, திண்டுக்கல் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்காக சட்டமன்ற உறுப்பினர் 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியும் அந்த வேலை இன்றுவரையிலும் நடைபெறவில்லை.

நான் இந்த அவையிலே சொல்வதற்கே ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. ஆனால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. ஏன் என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் என் தொகுதியில், எனக்கு, இன்றைக்குவரைக்கும் கட்டப்படவில்லை. இரண்டு வருடங்கள் முடிந்துவிட்டன. டிசம்பர் மாதம் வரைக்கும் இடப் பிரச்சினையாக இருந்தது. அந்த மாவட்ட நிர்வாகமும், மாநகராட்சி நிர்வாகமும் கொஞ்சம்கூட வெட்கப்படவில்லை. என்னுடைய கட்சி அலுவலகத்தில் சர்க்காருடைய கம்ப்யூட்டர் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கிறது. எம்.எல்.ஏ.க்களின் நிதியிலிருந்து வாங்கியது என்ற முறையிலே அதைப் பயன்படுத்தக் கூச்சமாக இருக்கிறது. ஏன் என்றால், எங்கள் கட்சி அலுவலகத்தில், அரசாங்கத்தினுடைய கம்ப்யூட்டரை வைத்து வேலை செய்வதற்கு எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. அலுவலகம் இன்னும் கட்டிக் கொடுக்க முடியவில்லை. என்ன காரணம் என்று கேட்டால், இடம்



வந்து விட்டது. P.W.D.யிடம் வேலை நிற்கிறது. P.W.D. இப்போது என்ன சொல்கிறது என்றால், டெண்டர் எடுக்க ஆள் வரவில்லை என்கிறார்கள். 5 தடவை டெண்டர் விட்டாச்சு, டெண்டர் எடுக்கவில்லை. ஏன் என்று கேட்டால், 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை விலை குறைக்கப்பட்டதாகவும், ஆகையினாலே பொதுப் பணித் துறையிலிருந்து பணிகளை எடுத்து நாங்கள் செய்யமாட்டோம் என்றும் அவர்கள் ஸ்டிரைக் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் வரமாட்டேன் என்கிறார்கள். அது அவ்வாறாக இருக்குமானால், அதைக் கணக்கிலெடுத்து முறைப்படுத்த வேண்டும். ஏன் என்று சொன்னால், இரும்பு, சிமென்ட், மணல், செங்கல் போன்ற கட்டுமானப் பொருட்களினுடைய, கட்டுமானப் பணிகளுடைய, விலைகள் அதிகரித்திருக்கக்கூடிய நிலையில், ஏற்கெனவே இருக்கக்கூடிய நிர்ணயிக்கப்பட்ட ரேட்டை இப்போது நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை; ஆகவே, நாங்கள் எடுத்துச் செய்யமாட்டோம் என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். இதனால், வளர்ச்சித் திட்டங்கள் தடைப்படுகின்றன. மக்கள் மத்தியில், அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர். (மணியடிக்கப்பெற்றது) இதனால், எங்களைப் போன்ற கட்சியினருக்கும், எம்.எல்.ஏ.-க்களுக்கும் கெட்ட பெயர் வருகிறது. அதை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமான 4, 5 ரோடுகள் சம்பந்தமாக; சிங்காநல்லூர், காமராஜர் ரோடு, திருச்சி சாலையையும், சென்னை சாலையையும் இணைக்கக்கூடிய பிரதான சாலை. அதை உடனடியாக நடப்பாண்டில் செப்பனிட்டுத் தர வேண்டும்.

அதேபோல, அல்பேனியா கான்வென்டிலிருந்து ஒண்டிப்புதூர் வரைக்கும் உள்ள திருச்சி ரோட்டைப் பலப்படுத்தி, அகலப்படுத்த வேண்டும்.

எஸ்.எஸ். குளம் ஊராட்சி ஒன்றியச் சாலைகள், அன்னூர் கோட்டம் (குறுக்கீடு) நெடுஞ்சாலைத் துறை அவற்றையும் சரி செய்து கொடுக்க வேண்டும். அதே மாதிரியாக இதர பிரச்சினைகளையும் நான் எழுதித் தருகிறேன்.

கடைசியாக, சிறைச்சாலை சம்பந்தமாக ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்லி நான் என் உரையை முடித்துக்கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம் மட்டும் அனுமதிக்க வேண்டும். அது என்னவென்று சொன்னால், சிறைத் துறை தற்போது

பணித் துறையாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 15-ல் சொல்லப்படுகிறது; இந்தத் துறை பொருட்களைச் சிறையில் தயாரித்து அரசுத் துறைகளுக்கு இலவசமாக வழங்குகிறது. சிறு தொழில் பிரிவுகளில் கடந்த 3 முதல் 4 ஆண்டுகளில் ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு சுமார் 4 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே இது பெருமைப்படத்தக்க விஷயம். ஆனால், இதிலே வேலை செய்து உற்பத்தி செய்யக்கூடிய சிறைத் துறையைப் பணித் துறையாக மாற்றுகிற அளவுக்குப் பணி புரிந்திருக்கும் அந்தச் சிறை ஊழியர்களுக்கு, சிறைவாசிகளுக்கு தினசரி ஊதியம்--அதிலேயே skilled, unskilled என்று இருக்கிறது. திறமையானவர்கள், திறமை குறைந்தவர்கள் என்று--18 ரூபாய், 15 ரூபாய் என்ற முறையில் அவர்களுக்குக் தினசரி ஊதியம் கொடுப்பது என்பது என்ன நியாயம்? இந்தக் காலத்திலே சாத்தியம் ஆகுமா? 50 ரூபாயாவது குறைந்தபட்சம் நிர்ணயம் செய்ய வேண்டாமா? (மணியடிக்கப்பெற்றது) அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அதே மாதிரி, சிறைச்சாலையிலுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள், அவர்களுடைய நன்னடத்தையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, அவர்களை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன நியாயம்? உரையை முடிக்கிறேன். முடிக்கிறேன் என்று சொல்லி, பேசிக் கொண்டேயிருக்கிறீர்களே, இது என்ன நியாயமா? (சிரிப்பு)

**திரு. கே.சி. கருணாகரன்:** சார், ஒரேயொரு நிமிஷம். அவர்களின் தண்டனைக் காலம் குறைக்கப்பட வேண்டும் என்பது ஒன்று.

அடுத்து, 2001-02 மற்றும் 2003-04 ஆகிய ஆண்டுகளின் கொள்கை விளக்கக் குறிப்பிலே, சிறைச்சாலைக் கையேடு பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது, 1983-லே மாற்றம் செய்யப்பட்டதாக. அதன் பிறகு, நிர்வாகத்தில் நடைபெற்ற மாற்றங்களுக்கேற்ப இக்கையேடு திருத்தப்பட வேண்டுமென்று கூறப்பட்டது. இந்த நிலையில் சிறை நிர்வாகத்தில் கடைப்பிடிக்க வேண்டிய சர்வதேச மனித உரிமைத் தரத்தினையும், அரசியல் சாசன மதிப்பீடுகள், கைதிகளை மனிதத் தன்மையுடன், பண்புடன் நடத்துவதற்கான (மணியடிக்கப்பெற்றது) தேசிய மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரைகளையும் கருத்தில் கொண்டு சிறைச்சாலைக் கையேடு திருத்தப்பட வேண்டும். இந்தக் கையேடு பொது ஆவணமாகப் பராமரிக்கப்பட்டு அதன் நகலைப்



பெற அனைத்து சிறைக் கைதிகளுக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். காவலில் கொண்டு வரப்படும் ஒவ்வொரு நபருக்கும், 'சிறைச்சாலையில் உங்களது உரிமைகள்' என்ற இந்தக் கையேடு வழங்கப்பட வேண்டும்--

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** என்ற கோரிக்கையையும், அதே நேரத்திலே, சிறைச்சாலையிலே உணவுப் பொருள் வழங்குவதற்கு, வாங்குகின்ற பொருட்களை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்து விடுங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** கூட்டுறவுத் துறையின் மூலமாக மாத்திரமே கொள்முதல் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்று சொன்னால், அதிலே பரவலான தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஒரு புறம் கூட்டுறவுத் துறை நட்டத்திலே இருக்கிறது, அதனால் மூட வேண்டும் என்று சொல்கிறீர்கள். மறு புறத்திலே...

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அந்தக் கூட்டுறவுத் துறையைப் பாதுகாப்பதற்காகவும், பலப்படுத்துவதற்காகவும்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அந்தக் கூட்டுறவுத் துறையைப் பாதுகாப்பதற்காகவும், பலப்படுத்துவதற்காகவும்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்துவிடுங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அதனுடைய விற்பனையை அதிகப் படுத்துவதற்கான முறையிலே சிறைத் துறை, கூட்டுறவுத் துறையிலே கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டு, நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of order.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் திரிசங்கு சொர்க்கத்திலே நிற்க வைக்கப்பட்டிருக்கிறேன்; அந்தரத்திலே நின்று கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டு பேரிலே ஒருவர் முடிவு செய்யுங்கள். என்ன ஞானசேகரன்? point of order கேட்கிறீர்களா? சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்கள் ஒரு முக்கியமான கருத்தை இங்கே எழுப்பினார்கள். சிறையிலே இப்பொழுது ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருக்கிறவர்களுக்கு, முன்பெல்லாம் அண்ணா பிறந்த நாள் போன்ற நிகழ்வுகளிலே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது point of order இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அவர்களுடைய அந்தச் சிறைத் தண்டனையைக் குறைத்து அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால், இப்போது இன்னும் குறைக்கப்படாமல் உள்ளது. எனவே, குறைத்து விடுதலை செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது point of order இல்லை. திரு. வை. சிவபுண்ணியம் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றையதினம் நடைபெறுகிற மானியக் கோரிக்கைகள் மிக முக்கியமானவை. அதிலும் குறிப்பாக, காவிரி டெல்டா பாசனப் பகுதியிலே வாழ்ந்து



கொண்டிருக்கிற எங்களுடைய ஜீவாதாரப் பிரச்சினை, உயிர்நாடிப் பிரச்சினையாக இருக்கிற காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி விரிவாகப் பேச வேண்டிய அவசியம் இருக்கிறது. நான் காவிரி நீர்ப் பிரச்சினை என்று சொல்வது நமது மன்றத்திலே பேசுகிற அந்த பாணியில் அல்ல. நான் தெளிவாக இருக்கிறேன். அதை விவாதப் பொருளாகவோ, வேண்டா வெறுப்பான விவாதமாகவோ அல்லாமல்--ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால்--காவிரி நீர்ப் பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வை விரைவாகப் பெறுவதற்குரிய முயற்சியை நம்முடைய தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை நான் அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இடைக்காலத் தீர்ப்பு நிறைவேற்றப்படவில்லை என்பது வேறு; இடையிலே இருக்கிற பிரச்சினைகள் என்பது வேறு. இது நீண்டு கொண்டே இருக்குமானால், காவிரி டெல்டா பாசனப் பகுதி என்பது பொய்யாகி விடுமோ என்ற அபாய விளிம்பிலே நாங்கள் நின்று கொண்டிருக்கிற காரணத்தினாலே காவிரி நீர்ப் பிரச்சினைக்கு இறுதித் தீர்ப்பை, நிரந்தரத் தீர்ப்பைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். நீதிமன்றத்திலே விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், காவிரி டெல்டா பாசனப் பகுதி என்று சொல்கிறபோது, தமிழகத்திலே பல அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. பல மாவட்டங்களில் பல அணைகள் இருக்கின்றன. ஆனால், காவிரி டெல்டா பாசனப் பகுதியைப் பொறுத்த வரையிலும் அணைகள் கட்டுவதற்குரிய வாய்ப்பே இல்லை. காவிரிப் பாசனப் பகுதி வளமான பகுதி. ஆனால், அந்த நீரை அங்கே தேக்கி வைக்க முடியாமல், பூகோள ரீதியாக இருக்கிற அமைப்பு முறைகள் இருக்கின்றன. அணைகளே கட்ட முடியாத பகுதி, காவிரி டெல்டா பகுதி. ஆகவே, தண்ணீர் சேமிக்க முடியாத பகுதியில்தான் இந்தத் தமிழகத்தினுடைய உணவு உற்பத்தி மிகப் பெரிய அளவிலே செய்யப்படுகிறது. ஆகவே, அந்த நீர் சேமிக்கப்பட முடியாத பகுதியிலே நீராதாரத்தை உருவாக்க வேண்டுமானால், காவிரி நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தர, இறுதியான தீர்ப்பு உடனடியாகக் கிடைக்க வேண்டும். அதேநோக்கில், குறிப்பாக நான் சொல்ல வேண்டுமேயானால், கிட்டத்தட்ட 2,000 ஆண்டுகள் பழமையான பாசனப் பகுதி என்று நம்முடைய கொள்கை விளக்கக்

குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப் பழமையான அந்தப் பகுதிக்கு நீர் ஆதாரம் தேவை என்றால், காவிரி நீரைக் கண்டிப்பாகப் பெற்றே ஆக வேண்டும். நம்முடைய உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். அதேபோல், பருவ மழை நமக்குத் தேவையான அளவிற்கு ஆண்டுதோறும் கிடைக்க வேண்டும். அடுத்ததாக, நிலத்தடி நீர் மட்டம் குறையாமல் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த மூன்றும் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். இந்த உத்தரவாதம் செய்யப்படுமானால்தான் காவிரி டெல்டா பகுதியைப் பாதுகாக்கமுடியும் என்ற அடிப்படையான நிலைகளைப் புரிந்து, அதற்குரிய அடிப்படையான தேவைகளை உருவாக்குவதற்கு முயற்சிகளையும், திட்டங்களையும் நம்முடைய தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஒரு நல்ல செய்தி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. காவிரி டெல்டா பாசனப் பகுதியை ஒரு சிறப்புத் திட்டத்தின் அடிப்படையிலே எடுத்து, அதற்குரிய அபிவிருத்திப் பணிகளை, நீராதாரத்தை உருவாக்குவதற்கும், பாதுகாப்பதற்குமான முயற்சிகளை எடுப்பதற்கான நல்ல முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அந்த காவிரி டெல்டா பாசனப் பகுதியிலே, நாம் சொல்லுகிற அந்த 430 கோடி ரூபாயிலே அந்த Master Plan என்ற அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சி எடுத்தோம். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற வரைக்கும் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. (குறுக்கீடு) உறுப்பினர் பேசுவதற்கு 10 நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். நான் விரைவாகப் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள் வரை அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



**திரு. வை. சிவபுண்ணியம்:** விரைவாகப் பேசி முடித்து விடுகிறேன். ரொம்ப முக்கியமான பிரச்சினைகள். உறுப்பினர்களின் மன நிலையையும் புரிந்து நான் விரைவாகப் பேசி முடிப்பேன்.

காவிரி டெல்டா பாசனப் பகுதியினுடைய தேவைகளை அறிந்து, அதற்கான அந்தத் திட்ட மதிப்பீட்டுத் தொகை 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் முதல் பகுதிக்கு உரிய நிதியை அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கான விரைவாக ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். எடுப்பதற்கான அறிவிப்பைச் செய்ததற்கு எங்களுடைய பாராட்டுதல்களை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக ஒரு கருத்து இருக்கிறது. விவசாயிகள் மத்தியிலே. பரவலாக இருக்கிற கருத்து என்னவென்றால், நீர் வளத்தைப் பாதுகாப்பதற்கு உரிய போதுமான கவனம் செலுத்தப்படவில்லையோ என்ற அச்சமும், பிரச்சினையும் இருக்கிறது. இது ஒரு குறையான விஷயம் அல்ல. காரணம், நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், பழகிப் போய்விட்ட சில காரியங்களின் காரணமாகவே, இந்த நீர் ஆதாரத்தைப் பாதுகாப்பதற்குரிய முயற்சிகள் பல ஆண்டு காலமாகவே மேலோட்டமாகக் கண்காணிக்கப்படுகின்றன. ஆகவே, இப்போது இருக்கிற இந்த நெருக்கடி நிலையை உணர்ந்ததற்குப் பின்னாலே, இந்த ஆண்டு பாதிப்பை உணர்ந்த நிலைமையிலே, நீர் ஆதாரத்தை, வளத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சியை எப்படியெல்லாம் உருவாக்க வேண்டுமோ, அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தூர் வாருகிற பணி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகளிலே அதற்கான பணிகளைச் செய்வதற்கான முயற்சிகள் இருக்கின்றன. ஆனால் தூர் வாருகிற பணிகளைப் பொறுத்த வரைக்கும், அதிலே பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. விமர்சனரீதியாக அல்ல. தூர் வாருகிற பணி, முறையாக, சரியாக அந்த விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான முயற்சியாக எடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் வலுவாக இருக்கிறது. அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமானால், அரசு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு, அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய கண்காணிப்புக் குழுவைக் கிராமங்கள்தோறும் அமைத்து, அதன் மூலமாக அந்தப் பணிகள் நிறைவேற்றப்படுமானால், கண்டிப்பாக, எந்த நோக்கத்திற்காக நிதியை

ஒதுக்கீடு செய்து இருக்கிறோமோ, அது முழுமையாக, சரியாக நிறைவேறும். அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று: நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 10-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே 40,000 கோடி ரூபாய் பெறுவதற்குரிய முயற்சி தமிழக முதல்வரால் எடுக்கப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக்கூடிய ஒன்று. அதிலே நான் கேட்டுக்கொள்வது, 40,000 கோடி ரூபாயிலே முதன்மைத் துறைக்கும் இணைந்த முறையிலே வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த முதன்மைத் துறைக்கு மேற்கொள்ளப்படும் என்பதைவிட, முதன்மைத் துறையை முக்கியமான துறையாகக் கொண்டு, அதற்குரிய தேவையான நிதியாதாரத்தை ஒதுக்கி, அந்தப் பகுதியைப் பாதுகாப்பது என்பதுதான் நமது தமிழகத்தினுடைய வருங்கால நலனுக்கு உதவியாக இருக்கும். அதைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பல ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், இவை எல்லாவற்றையும் விரைவாகத் தூர் வாருவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதிலே குறிப்பாக, நாகை, திருவாரூர் மாவட்டங்களைப் பொறுத்த வரையிலும், வீராணம் ஏரியைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்கிறோம். இது எந்த அளவுக்கு மிகப் பெரிய ஏரியாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு என்னுடைய மன்னார்குடி தொகுதியிலேயே திருமேனி ஏரி என்ற ஒன்று இருக்கிறது. ஆனால், வெளி உலகத்திற்கே அது தெரியாது. கிட்டத்தட்ட 750 ஏக்கருக்கு மேலே அந்த ஏரி இருக்கிறது. அது தற்போது கிட்டத்தட்ட 100 ஏக்கருக்குள்ளாக சுருங்கிவிட்டது. அந்த ஏரி தூர் வாரப்பட்டு இருக்குமானால், அதிலே நீர் நிலைகள் நிரப்பப்பட்டிருக்குமானால், அதனைச் சுற்றியிருக்கிற கிட்டத்தட்ட 60, 70 கிராமங்களுடைய நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட்டிருக்கும். இன்றைக்கு அங்கே குடிநீரே பிரச்சினையாக, கேள்விக்குரியாக மாற்றப்பட்டுவிட்டது. அந்த ஏரியைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்தி, தண்ணீர் நிறுத்தப்படுமானால், குடிநீர்ப் பஞ்சம் அங்கே வராது. அந்தப் பகுதியினுடைய பாசனப் பிரச்சினையையும் தீர்ப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், 'நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்ட மக்களுடைய வாழ்வுரிமை மாநாடு' என்று கடந்த மாதம் நாங்கள் நடத்தினோம். மிகப் பெரிய அளவிலே மக்களைத் திரட்டி நடத்தி,



தீர்மானங்களை நிறைவேற்றி, நம்முடைய அரசுக்கு அளித்திருக்கிறோம். அதிலே ஒரு கோரிக்கையாக, நாங்கள் முன் வந்து செய்வதென்று முடிவெடுத்திருக்கிறோம். இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 25 ஆண்டு காலத்திற்கு முன்னதாகவே சில காரியங்களைச் செய்து, அந்த அனுபவம் இருக்கிறது. குறிப்பாக, மக்களைத் திரட்டி, சிரமதானப் பணிகளைச் செய்து, மிகப் பெரிய சாதனைகளைப் படைத்திருக்கிறோம். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த, மறைந்த எஸ்.ஜி. முருகையன் ஒன்றியப் பெருந்தலைவராக இருநத காலத்தில், சிரமதானப் பணி மூலமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களைத் திரட்டி, 27 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, 22 கிலோ மீட்டர் சாலையை, மன்னார்குடியிலிருந்து முத்துப்பேட்டை வரையிலான சாலையைப் போட்டிருக்கிறோம். முற்றிலும் மக்களால் போடப்பட்ட அந்த சாலையில் இன்றைக்கு போக்குவரத்து மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அதேபோல, இந்தத் திருமேனி ஏரியைத் தூர் வாருவதற்காக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பின்னால், ஒரு இலட்சம் மக்களைத் திரட்டி, இதிலே கட்சி, சாதி, மத, இனப் பாகுபாடுகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு, அனைவரையும் இணைத்து, ஒரு இலட்சம் மக்களைத் திரட்டி, அந்தத் திருமேனி ஏரியைத் தூர் வாருவதற்கான முயற்சியை நாங்கள் எடுக்க இருக்கிறோம்.

பிற்பகல் 1-35

அந்தப் பணி மட்டுமே போதாது. அரசு தேவையான நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டும். அதிலே நம்முடைய அமைச்சர் பெருமக்களும் கலந்துகொள்ள வேண்டும். காலம், தேதி குறித்து உங்களிடத்திலே நான் கேட்கிறபொழுது, அதற்கு உதவ வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றையும் நாங்கள் முடிவெடுத்து இருக்கின்றோம். நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மழை வளம் பெருகுவதற்கு உரிய முயற்சியாக மரம் நடுகிற அந்தத் திட்டத்தைச் செய்வது என்று முடிவெடுத்து இருக்கிறோம். அந்த மாநாட்டிலே, ஆண்டுதோறும் ஒரு இலட்சம் மரக்கன்றுகளை-- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் நடுவது என்று முடிவு செய்திருக்கிறோம். இந்த ஆண்டு அந்தப் பணிகளைத் தொடங்க இருக்கிறோம். அதற்கும் பொதுப் பணித் துறையும், நம்முடைய வேளாண்மைத் துறையும் எல்லாவிதமான ஒத்துழைப்பையும் நல்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறையைப் பற்றி ஒரு செய்தி. நெடுஞ்சாலைத் துறையைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப் பட்டிருக்கிறது. அதில் பல காரியங்கள் செய்திருக்கிறோம். தேவைகள் ஏராளமாக இருக்கின்றன. பயன்பாடு அதிகமாக இருக்கின்றது. அதிலே சாலை என்று சொல்கிறபொழுது, தேவை அதோடு இருக்கிறபோது, இணைத்துப் பார்த்தால், சாலை விபத்துகள் இந்தியாவிலேயே அதிகமாக நடக்கிற மாநிலமாக நம்முடைய மாநிலம் வந்துவிட்டது. ஆகவே, சாலை ஒரு பிரச்சினையாக இருக்கிறது. மக்களின் தேவை அறிந்து, சாலைகளை எல்லா வகையிலும் நவீனப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினாலே, அதைச் செய்வதன் மூலமாகத்தான் உயிர்ப் பலிகள் நிறுத்தப்படும். ஆயிரக்கணக்கான மக்கள் இறந்துகொண்டே இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, பல சாலைகள் செப்பனிடப்பட வேண்டும். எங்களுடைய மாவட்டம் என்று சொல்கிறபொழுது, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் என்ற 3 மாவட்டங்களையும் இணைக்கும் வகையில், தஞ்சை-மன்னார்குடி-வேதாரண்யம் சாலையை நெடுஞ்சாலைத் துறை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கை இருக்கிறது. அதை, நிறைவேற்றுவதற்கு உரிய முன்வடிவிலே, முதன்மையானதாக வைத்து நிறைவேற்றித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இப்பொழுது ஒரு கருத்தை இங்கே உறுப்பினர் கருணாகரன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நெடுஞ்சாலைத் துறை, அதேபோல பொதுப் பணித் துறையிலே, இந்த ஆண்டு விலையைக் குறைத்து மதிப்பிட்டு விட்டதாக ஒரு தகவல் இருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய்க்குச் சென்ற ஆண்டு நடைபெற்ற பணிகள் இப்பொழுது 80 ஆயிரம் ரூபாயாக மாற்றப்பட்டு விட்டது. ஆகவே 20,000 ரூபாயைக் குறைக்கிறபொழுது..

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கட்டுமானபணிகளின் விலை விகிதங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்று மாமன்ற உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில் கட்டுமானப் பொருட்களுடைய தூரங்கள் பொருட்களுடைய தூரங்கள் (lead)--அதிக அளவில் கணக்கில் கொண்டு வரப்பட்டிருந்தன. தற்போது அதைச் சரி செய்து, சரியான அளவுகளில் தூரங்கள் கணக்கிடப்பட்டு, மதிப்பீடுகள் தயார்



செய்யப்பட்டிருக்கின்றன. வேலையின் தரத்தினையும், வேலையினுடைய கஷ்டங்கள் ஏதாவது, பற்றி ஒப்பந்ததாரர் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தால், அதற்கும் அவர்களுக்குக் கூடுதலாகத் தொகை ஒதுக்கித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்த வருடம் புதிய விலையை நிர்ணயிக்கின்ற நிலை வருகின்றபோது, அவை முழுமையாகச் சரி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே என்ன நிலைமை என்றால், அமைச்சர் அவர்கள் தரமாகச் செய்வதிலே எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், இப்பொழுது எங்கள் சொந்த மாவட்டமான திருவாரூர், நாகை மாவட்டங்களில் எந்தவிதமான குவாரிகளும் கிடையாது. ஜல்லிகளும் கிடையாது; கிராவலும் கிடையாது. கிட்டத்தட்ட 200 கிலோ மீட்டர் சென்றுதான் கொண்டு வரவேண்டும். ஜல்லி, கிராவல் இருக்கிற மாவட்டங்களுக்கு வேண்டுமானால் இந்த விலைப் புள்ளியைக் குறைத்தது என்பது பொருத்தமாக இருக்கும். 200 அல்லது 250 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து வரவேண்டுமென்றால், அதனுடைய செலவு என்பது அதிகரிக்கிறது. அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, சாலைப் பணியாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் பணியில் இருந்து நீக்கப்பட்டு விட்டார்கள். வேலை கொடுக்க வேண்டுமென்ற ஒரு பிரச்சினை இருக்கிறபொழுது, அவர்கள் பணியில் இருந்தபோது வாங்கியிருந்த வெண்ணிலைக் கடன் இருக்கிறதே-- கிட்டத்தட்ட 31,000 ரூபாய் அளவிற்கு ஒவ்வொருவரும் கடனாகப் பெற்றிருக்கிறார்கள். வேலை உத்தரவாதம் என்ற அடிப்படையிலே பெற்ற கடன்--அந்தக் கடனைத் திரும்பச் செலுத்தவேண்டும் என்று அவர்களுக்கு இப்பொழுது நோட்டீஸ் அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வேலையையே இழந்த நிலையில் அவர்களிடம் கடனைத் திருப்பிக் கேட்டால், எங்கிருந்து செலுத்துவார்கள்? ஆகவே, அரசு வேலையைப் பறித்தது. நீங்கள் கடனையும் பறித்து விடுங்கள், தள்ளுபடி செய்யுங்கள் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. வேலையைக் கொடுத்துவிட்டு, அந்தப் பணத்தை வசூலித்துக் கொள்ளுங்கள்.

பிற்பகல் *1.40*

**திரு. வை. சிவபுண்ணியம்:** வாக்காளர் அடையாள அட்டையைப் பொறுத்த வரையிலும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோடியே 64 இலட்சம் பேருக்கு இதுவரைக்கும் வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது; கணிசமாக வழங்கியிருக்கிறோம். ஆனால், வழங்காதது ஒரு கோடியே 64 இலட்சம் பேருக்கு என்று சொன்னால், இதிலே பல முறைகேடுகள், தவறுகள் நடப்பதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, அரசின் பொறுப்பை உடனடியாக நிறைவேற்றிவிட்டால்தான் போலி வாக்காளர்களை தவறுகள் நடப்பதைத் தடுக்க முடியும். ஆகவே, விரைவாக அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தேர்தல்களிலே இப்போது தொகுதிகளை வரையறை செய்வதற்காக ஆணையம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பற்றி ஒரு ஆய்வு செய்யப்பட இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆய்வு அறிக்கையை--ஓரிரு இடங்களிலே மக்களிடத்திலே கேட்கப்படும் என்று இதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஓரிரு இடங்களிலே கேட்டால், அதில் தீர்வு காணுவதிலே பிரச்சினை இருக்கும்; ஏற்றத்தாழ்வு இருக்கும். ஆகவே, தொகுதிவாரியாக அந்த ஆய்வுகளை நடத்துவதற்குரிய முயற்சிகளை, கருத்துகளைக் கேட்டறிய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பணியாளர்கள் போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். தமது தலைமைச் செயலகத்திலே நடைபெறுகிறது. மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து சுமூகமான தீர்வு காணவேண்டும். தேவையானால், உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, அழைத்துப் பேசி, பணியாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். மன்னர்கள் காலத்திலிருந்து அடிமைகளைப் பயன்படுத்தி வேலை வாங்கியதாகப் பல வரலாறுகள் இருக்கின்றன. அது அந்தக் காலம். ஆனால், சம்பளம் கொடுத்து வேலை வாங்குவது என்பது இந்தக் காலம். ஆனால், வேலை செய்பவர்கள் நல்ல மன நிலையோடு வேலை செய்வதற்கு உதவி செய்ய வேண்டியது நம்முடைய பொறுப்பும் கடமையும் ஆகும். அதை மட்டும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்தது, மதுவிலக்கு. ஒரே செய்தி; கள், பதநீர் இறக்குபவர்கள்; பதநீர் இறக்குபவர்களைக் கள் இறக்குபவர்களாகவும், விஷக் கள் இறக்கியதாகவும் வழக்குப் போடப்படுகிறது. கிட்டத்தட்ட 6½ இலட்சத்திற்கும் மேற்பட்ட மரம் ஏறும் தொழிலாளர்கள் இப்போது பசியால், பட்டினியால் வாடுகிறார்கள். நீங்கள் கள்ளுக் கடையைத் திறந்துவிடலாம். என்னென்னவோ மதுவைப் பற்றிச் சொல்கிறோம். பெயர் தெரியாத மதுவகைகள் கொண்டு வரப்படுகின்றன. எனவே, கள்ளுக் கடையைத் திறக்கலாம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரை இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகளைத் தமிழ்நாட்டில் விற்கின்றபோது, கள், சாராயத்தை நாம் தடை செய்திருக்கின்றோம். கள், சாராயக் கடைகளை திறப்பதன்மூலம் கிராமப்புறங்களிலே இருக்கின்ற பொருளாதாரம் பாதிக்கும்; அப்பகுதியிலே இருக்கிற மக்களும் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள் என்கின்ற கருத்து இருக்கிறது. அந்தக் கருத்தினை நாம் வலுவாக ஏற்றுக்கொண்டு, அந்தக் கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் கள்ளுக் கடைகளையும், சாராயக் கடைகளையும் நாம் திறக்காமல் இருக்கிறோம். அரசின் கொள்கை முடிவாக அது எடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே பனை ஏறுகின்ற தொழிலாளர்கள் பதநீர் இறக்குவதற்கு எந்தத் தடையும் இல்லை. கள்ளுக் கடைகளைத் திறக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். கள்ளுக் கடைகளை நாம் திறக்கின்றபோது, அதை நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்து, ஒழுங்குபடுத்துவது மிகுந்த சிரமமான காரியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. ஏனென்று சொன்னால், போதை தரக்கூடிய கள்ளினை ஒவ்வொரு மரத்தின்கீழும் நாம் கண்காணிப்பதற்கு மிகுந்த சிரமப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆந்திர அரசு கள்ளுக் கடைகளை ஆரம்பித்துவிட்டு, அங்கே பெரும் பகுதியான கள்ளில், Chloryl Hydrate என்ற இரசாயனப் பொருள் கலக்கப்பட்டு, அங்கு கிராமப்புறங்களிலே வசிக்கின்ற மக்கள், அவர்களுடைய உடல்நிலை வெகுவாகப் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப் பல விதங்களிலேயும் தீங்கிழைக்கக்கூடிய கள், சாராயக் கடைகளை, அரசு கொள்கைரீதியாகவும், அடித்தளத்திலே இருக்கின்ற மக்களைப்

பாதித்து விடக்கூடாது என்பதற்காகவும், அவை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கம் என்பது, உடல் ரீதியானதைப் பற்றிச் சொல்கிறார்கள். மருத்துவ ரீதியாகவே பார்த்தால், இப்போது நாம் வழங்கிக் கொண்டிருக்கிற மதுதான் எல்லோருடைய உயிரையும் கொன்று கொண்டிருக்கிறது. கள் சாப்பிட்டால் உடம்பு திடமாக இருக்கும் என்பது காலம், காலமாக உள்ள நம்பிக்கை. அதுமட்டுமல்ல, கிட்டத்தட்ட 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளிகள் பயனடைவார்கள். ஆகவே, நாம் பரிசீலிக்கலாம். ஏற்கெனவே தமிழகத்தில் நடைபெற்றிருக்கிறது; நன்றாக நடைபெற்றிருக்கிறது; பிரச்சினையே இல்லை. ஆகவே, திரும்பவும் பரிசீலிக்கலாம் என்பதைச் சொல்லி, சிறைச்சாலைகளைப் பற்றி ஒரே செய்தியோடு முடிக்கிறேன்.

பொதுவாக, குற்றவாளிகள் 10 ஆண்டு காலத் தண்டனை பெற்றவர்கள்; 14 ஆண்டு காலத் தண்டனை பெற்றவர்கள்; தொடர்ந்து நமது சிறைச்சாலைகளிலே தண்டனையை அனுபவிக்கிறார்கள். ஆயுள் கைதிகளாக. பல அண்டை மாநிலங்களிலே 5 வருடம் முடிந்து 6-வது வருடம் தொடங்குகிறபோதே, அவர்களுக்கெல்லாம் விதிவிலக்கு அளித்து, அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். ஆகவே, குற்றவாளிகளாக ஆவது என்பது சூழ்நிலையின் காரணமாக. தண்டனை கொடுப்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், ஆண்டுகளைக் குறைத்து—6 ஆண்டுகள், 7 ஆண்டுகள் என்று சில மாநிலங்களிலே இருக்கிறது--நாம் ஒரு நிர்ணயம் செய்து, 8 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகளுக்குள்ளாக குற்றவாளிகளையெல்லாம் தலைவர்களுடைய நினைவு தினம் போன்ற ஏதாவது ஒரு தினம் வருகிறபோது, அவர்களை விடுதலை செய்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 6. மானியக் கோரிக்கைகள், 2003–2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நெடுஞ்சாலைகள் துறை, சிறைத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, மற்றும் பொதுப் பணித் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், இந்த அவையில் மானியக் கோரிக்கைகளைத் தாக்கல் செய்ய எனக்கு வாய்ப்புத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, எனது பதிலுரையைத் தொடங்குகின்றேன்.

திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியின் சிகரமாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். உறங்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தின் உணர்வுகளைத் தட்டி எழுப்பி, உரம் கொடுக்க உருவான இயக்கம்தான் திராவிட இயக்கம். இருட்டறையில் முடங்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒளி கொடுக்கும் அகல் விளக்காகத் தந்தை பெரியார் தோன்றினார். தந்தைப் பெரியார் ஏற்றிய சுடரை அணையாது ஏந்திய குத்து விளக்காக பேரறிஞர் அண்ணா திகழ்ந்தார். பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பின்னால் திராவிட இயக்கத்தைப் பட்டுப்போக வைத்துவிட வேண்டுமென்று முயற்சித்த திட்டங்களைத் தவிடுபொடியாக்கி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒளிவிளக்காக இக்கொள்கைக்கு வலுவூட்டினார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பிறகு, இந்தச் சுடரை மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏந்தி நின்ற நேரத்தில், சுற்றி நின்ற சூதுமதி படைத்த எதிரிகள் ஒரு புறம், நேரம் வரும்போது தங்கள் கைவரிசையைக் காட்டலாம் என்று காத்திருந்த, விளைந்த

காட்டுக் குருவிகள் ஒரு புறம், அத்தனையையும் தனி ஒருவராக எதிர்த்து நின்று, அவற்றையெல்லாம் பொடிப் பொடியாகத் தகர்த்து எறிந்து, திராவிட இயக்கத்தைக் கட்டிக் காத்து, குன்றின்மேல் இட்ட விளக்காக இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒளி கொடுத்து வழிகாட்டிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொண்டனாக நின்று பேசுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை: மத்திய நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தைப் பின்பற்றி, இம்மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையம் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையிலும், அரசு அலுவல்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை கூடிய காரணத்தினாலும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் ஆகியவற்றிற்கு சிறப்புக் கவனம் அளிக்க வேண்டி, 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 6 ஆம் நாள் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை தோற்றுவிக்கப்பட்டது. இத்துறை மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். முதல் பகுதி; அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பல்வேறு பணி விதிகளை நிருவகிப்பது, பணிகள் குறித்து பொதுவான தெளிவுரைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குவது, நிருவாகச் சீர்திருத்தம் ஆகியவை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் முதன்மையான பணிகள் ஆகும். இத்துறையின் செயல்பாடுகளை, அறிவுரை வழங்குதல், சட்டபூர்வமானவை மற்றும் நிருவாகம் குறித்தவை என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். அரசு நிருவாகம் செம்மையாகச் செயல்பட கீழ்க்கண்ட முக்கியமான செயல்முறைகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன:—

(1) கோப்புகளை ஆய்வு செய்து, இறுதி முடிவு எடுக்கச் செலவிடும் நேரத்தைக் குறைக்க, நிலை தாண்டுதல் (Level Jumping) முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

(2) அரசின் நிருவாகப் பணிகளைத் தாமதமின்றிச் செயல்படுத்தி அரசாணைகளை விரைவில் வெளியிட ஏதுவாக, தலைமைச் செயலகத் துறைகள் மற்றும் சென்னையிலுள்ள துறைத் தலைமை அலுவலகங்களிடையே ஒற்றைக் கோப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.



(3) ஒரே வேலையை மீண்டும், மீண்டும் செய்வதைத் தவிர்க்கவும், வேலையைத் துரிதப்படுத்தவும், சுற்றோட்டக் குறிப்பு இல்லாமலேயே துறைச் செயலாளர் தம் கருத்தினைத் தெரிவித்து, சம்பந்தப்பட்ட கோப்பில் அமைச்சரின் ஆணை பெற ஆணையிடப்பட்டது.

பிற்பகல் 4-35

(4) வெளிப்படையான, நேர்மையும், திறமையும் உள்ள நிருவாகத்தினைச் செயல்படுத்தும் வகையில் குறை நீக்கக் கோரும் மனுக்களைப் பெற்றமைக்கான ஒப்புதலை 5 நாட்களில் அனுப்பவும், 90 நாட்களில் மனுவினைப் பரிசீலித்து, முடிவினை மனுதாரருக்குத் தெரிவிக்கவும் அரசு அறிவுறுத்தியுள்ளது. மேலும், அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் கோப்புகள் முடிக்கும் வாரம் நடத்த வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது.

(5) அரசு முறைகளைப் புரிந்துகொள்ளவும், விதிகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், கோரிக்கைகளின் நிலையினைத் தெரிந்து கொள்ளவும், மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களில் தகவல் மையங்கள் இயங்கி வருகின்றன. சென்னை மாநகரில் 10 இடங்களில் தகவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

(6) 1997 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, அரசுப் பணி சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு இரு நீதிமன்ற அமைப்பே போதுமென்ற முடிவெடுத்து, நிருவாகத் தீர்ப்பாயத்தினைக் கலைக்க சட்டத்திற்கு உரிய திருத்தம் கொண்டுவர மைய அரசின் நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் இரண்டாம் பகுதி; பயிற்சித் துறை நிருவாகத்தைச் செம்மைப்படுத்தவும், அரசுத் திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தவும், அரசு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவருக்கும் பயிற்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் ஐந்து பயிற்சி நிலையங்களின் வாயிலாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நிருவாகம் தொடர்பான பயிற்சி அளிப்பதில் அண்ணா மேலாண்மை நிலையம் முதன்மைப் பயிற்சி நிலையமாக இயங்கி வருகிறது. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், தாழ்த்தப்பட்ட மற்றும்

பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெற, அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு மையம் மூலமாக இலவசத் தீவிரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில் பயின்றவர்களில் 2001 ஆம் ஆண்டில் 23 மாணவர்களும், 2002 ஆம் ஆண்டில் 28 மாணவர்களும் அகில இந்தியக் குடிமைப் பணிகளுக்கான முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர்.

மூன்றாம் பகுதி; மாநில விழிப்புப் பணி ஆணையம்; இது 1965 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அரசுப் பணியில் ஊழலைத் தடுப்பதற்கு வகை செய்தல் மற்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும் தனிப்பட்ட நபர்களின் மீதான ஊழல் போன்றவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற மாநில நிருவாகப் பிரச்சினைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குவது விழிப்புப் பணி ஆணையத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

அரசின் எந்த ஒரு நடவடிக்கையிலும் சந்தேகப்படும்படியான முறையிலோ மற்றும் தவறான அல்லது ஊழலுக்கு வழிவகுக்கும் விதத்திலோ ஈடுபட்டிருக்கும் அரசுப் பணியாளர்மீது விசாரணை மேற்கொள்ள மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பொது ஊழியர்கள் ஈடுபடும் ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பொது நிருவாகத்தில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கென அமைப்புரீதியான முதல் நடவடிக்கையாக, தமிழ்நாடு அரசு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்ககத்தை 1964 ஆம் ஆண்டு தனியானதொரு துறையாக உருவாக்கியது.

மாநில அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பொது ஊழியர்கள் தங்களது பணிகளை நிறைவேற்றும்போது ஏற்படும் குறிப்பிடத்தக்க ஊழல் மற்றும் இதர குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மற்றும் புலனாய்வுகளையும், மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பொது நிறுவனங்களைச் சார்ந்த ஊழியர்கள் மற்றும் 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி விரிவாக்கப்பட்ட "பொது ஊழியர்கள்" என்ற சொற்களின்படி இதர நிறுவனங்களில் உள்ள பொதுப் பணி



புரியும் ஊழியர்கள் ஈடுபடும் ஊழல் குற்றங்கள் குறித்தும் விசாரணை செய்ய இத்துறை நடவடிக்கை மேற்கொள்கிறது. இத்துறையின் முக்கியப் பணிகளுள் ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்துத் தகவல்கள் சேகரிப்பது அடங்கும். மாநில விழிப்புப் பணி ஆணையத்தின் பணிகளில் உதவி புரிகின்ற முக்கியமான புலனாய்வு அமைப்பாக இவ்வியக்ககம் செயல்பட்டு வருகிறது. கூடுதல் காவல் துறைத் தலைவர் நிலையில் ஒரு இயக்குநரைத் தலைவராகவும், அவருக்குத் துணையாக காவல் துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் குற்ற வழக்குத் தொடர்பு இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிலிருந்து தருவிக்கப்படும் காவல் துறை அதிகாரிகளையும், சட்ட ஆலோசகர்களையும் கொண்டு இவ்வியக்ககம் செயல்பட்டு வருகிறது. தூய்மையான, வெளிப்படையான நிருவாகத்திற்கும், அரசு ஊழியர்களின் பணித் திறமையை மேம்படுத்துவதற்கும், பணி ஒழுக்கத்தைக் கண்காணிப்பதற்கும் உறுதுணையாக இருப்பது இத்துறை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், நாட்டின் சமூகப் பொருளாதாரப் மேம்பாட்டில், அங்கம் வகிக்கும் அடிப்படைக் கட்டுமானங்களில், சாலைகள் மற்றும் பாலங்கள் மிக முக்கிய அங்கமாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சாலைகள் மற்றும் பாலங்களை அமைத்து, கட்டி. பேணி, பராமரிப்பதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். மிகவும் நிதி நெருக்கடி இருந்தபோதிலும், கடந்த 2002 - 2003 ஆம் ஆண்டு திட்டப் பணிகளுக்கு ரூ.849 கோடியும், திட்டம் சாராப் பணிகளுக்கு ரூ.189 கோடியும், ஆக மொத்தம் ரூ.1038 கோடி அரசு ஒதுக்கீடு செய்தது.

தலைமைப் பொறியாளர் (பொது) அலகில் திட்டப் பணிகளின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 17 பாலப் பணிகளுக்கும், 373 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும் ரூ.154 கோடி ஒதுக்கப்பட்டதில், 351 கிலோ மீட்டர் சாலைப் பணிகளும், 11 பாலப் பணிகளும் ரூ.164 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன. திட்டம் சாராப் பணிகளின்கீழ் ரூ.189 கோடி செலவில் 1995 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் காலமுறை புதுப்பிக்கப்பட்டு உள்ளது.

தலைமைப் பொறியாளர் (நபார்டு) அலகில் திட்டப் பணிகளின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 125 பாலப் பணிகள் மற்றும் 405 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும், ரூ.98 கோடி ஒதுக்கப்பட்டதில், 248 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளும் 120 பாலப் பணிகளும் ரூ.114 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன.

தலைமைப் பொறியாளர் (திட்டம்-1) அலகில் திட்டப் பணிகளின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 6 சாலை மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்களுக்கும், 124 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும் ரூ.197 கோடி ஒதுக்கப்பட்டதில் 2.4 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளும், 2 சாலை மேம்பாலங்கள் மற்றும் 1 கீழ்ப்பாலம் ரூ.37 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன. மீதமுள்ள 3 சாலை மேம்பாலப் பணிகளும், சுமார் 121 கிலோ மீட்டர் சாலைப் பணிகளும் நடப்பாண்டில் செய்து முடிக்கப்படும்.

தலைமைப பொறியாளர் (திட்டம்-2) அலகில், திட்டப் பணிகளின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 48 பாலப் பணிகளுக்கு ரூ.14.5 கோடி ஒதுக்கப்பட்டதில், 39 பாலப் பணிகள் ரூ.22 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன. திட்டம் சாராப் பணிகளின்கீழ் ரூ.5 கோடி செலவில், 1,563 கிலோ மீட்டர் நீளக் கரும்புச் சாலைகளைப் பழுதுபார்க்கும் பணி செய்யப்பட்டது.

தலைமைப் பொறியாளர் (இயந்திரவியல்) அலகில் சென்னை ஆரச் சாலைகள் திட்டப் பணிகளின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 3 பாலப் பணிகள் மற்றும் 6.41 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கு ரூபாய் 11 கோடி ஒதுக்கப்பட்டதில், 2.14 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளும், இரண்டு பாலப் பணிகளும் ரூ.7 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன.

தலைமைப் பொறியாளர் (கிராமச் சாலைகள்) அலகில், திட்டப் பணிகளின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 25 பாலப் பணிகள் மற்றும் 1000 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கு ரூ.124 கோடி ஒதுக்கப்பட்டதில், 937 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளும், 10 பாலப் பணிகளும் ரூ.111 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன.



உலக வங்கியின் நிதி உதவியுடன் எடுக்கப்படவுள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு, 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.115 கோடி ஒதுக்கப்பட்டதில் ரூ.7 கோடி செலவிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின்கீழ் 185 பாலங்கள் மற்றும் சாலை மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 1541 கிலோ மீட்டர் சாலைகள் மூலப் பணிகள் மூலம் மேம்படுத்தப்பட்டன. நடப்பு 2003-2004 ஆம் நிதியாண்டில் திட்டப் பணிகளுக்கு ரூ. 977 கோடியும், திட்டம் சாராப் பணிகளுக்கு ரூ.259 கோடியும், ஆக மொத்தம் ரூ.1,236 கோடி மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள். இது கடந்த ஆண்டைவிட ரூ.197 கோடி அதிகமாகும். வரும் ஆண்டுகளில், இது மேலும் உயர்வது உறுதியாகும்.

தலைமைப் பொறியாளர் (பொது) அலகில், 2003-2004 ஆம் ஆண்டில், திட்டப் பணிகளின்கீழ், 68 பாலப் பணிகளுக்கும், 670 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும் ரூ.236 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டம் சாராப் பணிகளின்கீழ், 5 ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த ரூ.259 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 4-45

தலைமைப் பொறியாளர், (நபார்டு) அலகில், 2003-2004 ஆம் ஆண்டில், திட்டப் பணிகளின்கீழ் 93 பாலப் பணிகளுக்கும், 700 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும் ரூ.122 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தலைமைப் பொறியாளர், (கிராமச் சாலைகள்) அலகில், 2003-2004 ஆம் ஆண்டில், திட்டப் பணிகளின்கீழ், 20 பாலப் பணிகளுக்கும், 825 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும் ரூ.128 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தலைமைப் பொறியாளர் (திட்டம்-1) அலகில், 2003-2004 ஆம் ஆண்டில், திட்டப் பணிகளின்கீழ், 6 பாலப் பணிகளுக்கும், 130 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும் ரூ.149 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தலைமைப் பொறியாளர் (திட்டம்-2) அலகில், 2003-2004 ஆம் ஆண்டில், திட்டப் பணிகளின்கீழ், 55 பாலப் பணிகளுக்கும், 133 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும் ரூ.55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தலைமைப் பொறியாளர் (இயந்திரவியல்) அலகில், 2003-2004 ஆம் ஆண்டில், திட்டப் பணிகளின் கீழ், ஒரு பாலப் பணிக்கும் 4.27 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகளுக்கும் ரூ.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியுடன், எடுக்கப்படவுள்ள தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு, 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.273 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு 2003-2004 ஆம் நிதியாண்டில், 243 பாலங்களைக் கட்டி முடித்திடவும், 2,452 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்திடவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்கள், சாலைகள் பராமரிப்பின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, கடந்த ஆண்டு நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், 2002-2003 ஆம் ஆண்டில், ரூ.90 கோடி மதிப்பில், 2,500 கிலோ மீட்டர் சாலைகளையும், 2003-2004 ஆம் ஆண்டில், ரூபாய் 180 கோடி மதிப்பில் 5 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளையும், சிறப்புப் பழுதுபார்க்கும் திட்டத்தினைச் செயல்படுத்திட ஆணையிட்டுள்ளார்கள். முதற்கட்டப் பணிகளுக்கு ஒப்பந்தங்களை முடிவு செய்து, பல்வேறு கோட்டங்களில் பணிகள் தொடங்கியுள்ளன.

மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ், 338 கிலோ மீட்டர் நீளமுள்ள 29 சாலைப் பணிகள் மற்றும் காவிரி வடிநில மாவட்டங்களில் 30 பாலப் பணிகள் அடங்கிய ரூ.60.87 கோடி திட்டத்தைச் செயலாக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில், முக்கியமான மாநிலச் சாலைகளாகவும், இணைப்புச் சாலைகளாகவும், அதிக அளவில் வாகனங்கள் பயன்படுத்தக்கூடிய சாலைகளாகவும் உள்ள சாலைகளை, உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக மேம்படுத்த, உலக வங்கியின் மூலம் ரூ.2,118 கோடி நிதியுதவி பெற்றுச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இத்திட்டத்தின்படி, தமிழ்நாட்டின்



வடமேற்கில் உள்ள ஆற்காடு முதல், தென்கிழக்கில் உள்ள திருவாரூர் வரையிலும், கிழக்குக் கடற்கரையிலுள்ள நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடி வரையிலும் உள்ள 732 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்தவும், 13 நகரங்களுக்குப் புறவழிச் சாலைகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் உள்ள பல பகுதிகளிலுள்ள, 2600 கிலோ மீட்டர் நீள மாநிலச் சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை உலகத் தரம் வாய்ந்த சாலைகளாக உறுதிப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, நடப்பாண்டில் 700 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் ரூ.220 கோடி மதிப்பில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 4-50

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தமிழகத்தின் தலைநகர் சென்னையில், மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருந்தன. அவற்றில் மிக முக்கியமான 79.34 கிலோ மீட்டர் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டிற்கு மாற்றி மேம்பாடு செய்து, உறுதிப்படுத்தி, நல்ல நிலைக்குக் கொண்டுவர மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இச்சாலைகள் அனைத்திற்கும், 29 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே 36 சாலை மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்ட, இரயில்வே திட்டப் பணிகள் ஒப்புதல் வழங்கப்பட்டு, 23 மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலப் பணிகளுக்குத் தொழில்நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் 10 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 13 பணிகளுக்கு ஒப்பந்தங்கள் ஏற்கப்படும் நிலையில் உள்ளன. மீதம் உள்ள 13 பணிகளில் 6 பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் அளிக்கப்படும் நிலையில் உள்ளன. 7 பணிகளுக்கு ஒரு மாத காலத்திற்குள் ஒப்பந்தங்கள் அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சுமார் ரூ.390 கோடி திட்ட மதிப்பில் 26 மேம்பாலங்கள் கட்ட இரயில்வே நிர்வாகத்துடன் கலந்து பேசி செயலாக்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தேசிய நெடுஞ்சாலைகள்— தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் 3850 கிலோ மீட்டர் நீளம் உள்ளன. இதில் 3596 கிலோ மீட்டர் நீளம் இரு வழி மற்றும் பல வழித்தடமாக உள்ளது. மீதம் உள்ள 254 கிலோ மீட்டர் நீள ஒரு வழி மற்றும் இடைவழித்தடச் சாலைகளில் 142 கிலோ மீட்டர் இடைவழித் தடமாக ஏற்கெனவே மாற்றப்பட்டு உள்ளது. 2002-2003 ஆம் ஆண்டுத் திட்டத்தின்கீழ் 65.25 கிலோ மீட்டர் நீளச் சாலையை ரூ.17.65 கோடி மதிப்பில் இரு வழித்தடமாக மாற்றிடப் பணி நடைபெற்று வருகிறது. மீதம் உள்ள 47.20 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் ரூ.19.70 கோடி மதிப்பில் 2003-2004 ஆம் ஆண்டுத் திட்டத்தில் இரு வழித்தடமாக மாற்றப்பட உள்ளன என்பதனைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த திண்டுக்கல்-கோவை தேசிய நெடுஞ்சாலையில் ரூ.8.15 கோடி மதிப்பீட்டில் பழனி நகருக்குப் புறவழிச் சாலைப் பணியையும், குழித்துறை அருகே தாமிரபரணி ஆற்றில் ரூ.12.80 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணியையும் நடப்பாண்டில் செயல்படுத்த ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளன. இதுவன்றி தேசிய நெடுஞ்சாலை எண் 4-ல் கிலோ மீட்டர் 122/4-ல் திருவலம் பாலத்தைத் திரும்பக் கட்டிட ரூ.15 கோடி மதிப்பீட்டிற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

கிராமச் சாலைகள்—ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்தில் உள்ள மண் சாலைகளைத் தாம் உயர்த்தி தார்ச் சாலைகளாக மாற்றுகின்ற பணியினை கிராமச் சாலைகள் பிரிவு செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.105 கோடி மதிப்பீட்டில் 170 கிராமங்களுக்குப் புதிதாக 675 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேலும் 150 கிலோ மீட்டர் நீளம் உள்ள பேருந்து தடச் சாலைகளை ரூ.20 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைத் துறையைப் பொறுத்தமட்டில், சிறைத் துறை தொன்மை வாய்ந்த ஒரு துறை ஆகும். குற்றவியல் நீதி முறையின் ஓர் அங்கமான இத்துறை, கொலை, கொள்ளை, பயங்கரக் குற்றங்கள் மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுத் தண்டனை அடைந்தவர்களைச் சீர்ப்படுத்தி, நல்வழிப்படுத்தி அவர்களைத் தேசிய நீரோட்டத்தில் சேர்க்க



அரும்பாடுபடும் ஒரு துறை ஆகும். இத்துறை, அகில இந்தியக் காவல் பணியைச் சார்ந்த கூடுதல் காவல் துறை இயக்குநர் அந்தஸ்தில் உள்ள முதுநிலை அலுவலரால் சிறப்பாக வழிநடத்தப்பட்டு வருகிறது; கூடுதல் சிறைத் துறை இயக்குநரின்கீழ், சிறைத் துறைத் துணைத் தலைவர்கள் மற்றும் சிறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் அவர்களின்கீழ் சார்நிலைப் பணியாளர்கள் ஆகியோரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்துறையில் பணியாற்றுபவர்கள் சீருடைப் பணியாளர்களாக இருப்பினும், அவர்களது முக்கிய பணி, சிறைவாழ் மக்களைத் திருத்தி, அவர்களை நல்வழிப்படுத்துவதே ஆகும்.

சிறைத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 13,012 சிறைவாசிகளுக்கான இடவசதிகளைக் கொண்ட 9 மத்திய சிறைகளும், 513 சிறைவாசிகளுக்கான இடவசதிகளைக் கொண்ட 2 பெண்கள் தனிச் சிறைகளும், 453 சிறைவாசிகளுக்கான இடவசதிகளைக் கொண்ட 5 தனிக் கிளைச் சிறைகளும், 100 சிறைவாசிகளுக்கான இடவசதிகளைக் கொண்ட ஒரு திறந்தவெளிச் சிறையும், 405 சிறைவாசிகளுக்கான இடவசதிகளைக் கொண்ட ஒரு பார்ஸ்டல் பள்ளியும், 518 சிறைவாசிகளுக்கான இடவசதிகளைக் கொண்ட 10 மகளிர் கிளைச் சிறைகளும், 3,291 சிறைவாசிகளுக்கான இடவசதிகளைக் கொண்ட 105 கிளைச் சிறைகளும், 10 சிறைவாசிகளுக்கான இடவசதிகளைக் கொண்ட ஒரு பண்ணைச் சிறையும், ஒரு நன்னடத்தைப் பிரிவும் இயங்கி வருகின்றன. இம்மாநிலத்தில் பெரும்பாலான மத்திய சிறைகள் மிக அதிக அளவிலான சிறைவாசிகளைக் கொண்டுள்ளதால், இட நெருக்கடியைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு, தென் மாவட்டத்தில் உள்ள திருவைகுண்டம் கிளைச் சிறையை ரூ.85.30 இலட்சம் செலவில் மாவட்ட சிறைச்சாலையாக மாற்றம் செய்வதற்கு நிதி அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. நாங்குனேரி கிளைச் சிறை ரூ.15.20 இலட்சம் செலவில் தனிக் கிளைச் சிறையாக மாற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் பாளையங்கோட்டை மத்திய சிறையில் இட நெருக்கடி தவிர்க்கப்படும். 2003-2004 ஆம் ஆண்டில் நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல் கிளைச் சிறைகளை ரூ.4.72 கோடி செலவில் மாவட்டச் சிறைகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையங்களைப்

போன்று, இந்திய வரலாற்றிலேயே முதல் முயற்சியாக பெண் சிறைவாசிகளுக்கென, முற்றிலும் மகளிர் பணியாளர்களைக் கொண்டு நிருவகிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் 8 கிளைச் சிறைகள் மற்றும் 2 தனிக் கிளைச் சிறைகளை மகளிர் சிறைகளாக மாற்றி ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 4-55

ஏழு சிறைகளில் தற்போது செயல்பட்டு வரும் சிறைவாசிகளின் நீதிமன்றங்களை இதர சிறைகளுக்கும் விரிவுபடுத்தத் தேவையான வசதிகளை ஏற்படுத்த ரூ.15 இலட்சம் நிதி மாண்புமிகு அம்மா அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் முடிவு பெற்றுள்ளன. பாளையங்கோட்டை, கோவை, சேலம் ஆகிய சிறைகளில் இந்நீதிமன்றம் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

ஒவ்வொரு மத்திய சிறையிலும் சிறைவாசிகளுக்குச் சட்ட உதவி அளிப்பதற்கென இலவச சட்ட உதவி மையம் செயல்பட்டு வருகிறது. கடந்த 2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மாண்புமிகு அம்மா அவர்களால் காவலர்களின் குறை தீர்க்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டு, 587 பணியாளர்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு, குறை தீர்க்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி கூடுதல் சிறைத் துறை இயக்குநர் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும், சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களால் மாதம் ஒரு முறையும், சிறைக் கண்காணிப்பாளர்களால் வாரம் ஒரு முறையும் காவலர்களின் குறை கேட்கப்பட்டு, குறைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

சிறைவாசிகளின் மனித உரிமையைப் பாதுகாப்பதற்காக சிறைத் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறைக் காவலர்களுக்கு மனித உரிமைப் பாதுகாப்புக் குறித்து அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், சிறைவாசிகளுக்குச் சிறையில் அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

மைய மற்றும் மாநில மனித உரிமைக் கழக உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் சிறைகளை ஆய்வு செய்து, மனித உரிமை மீறல்கள் உள்ளனவா என்பதை நேரில் ஆய்வு செய்து, கண்டறிந்து, இம்மாநிலச் சிறைகளில் மனித உரிமை மீறப்படவில்லை என்பதற்குத் தங்களது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.



சிறைவாசிகளின் நலன் மற்றும் அவர்களது புனர்வாழ்வில் அக்கறை கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, அவர்களுக்குப் பல வசதிகளை செய்து கொடுத்துள்ளது; ஒன்று, கிளைச் சிறை சிறைவாசிகளுக்கு இதுகாறும் வழங்கப்பட்டு வந்த கேழ்வரகு களி, உணவு முறையிலிருந்து நீக்கப்பட்டு, மத்திய சிறை சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு விகிதத்திற்கு இணையாக அரிசி உணவு வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(2) சிறையிலிருந்து விடுதலை அடைந்த பின்னர், அவர்கள் சுய வேலையில் ஈடுபட்டுச் சம்பாதிக்கும் பொருட்டு, அவர்களுக்கு சிறையில், கோர்ப்பான்கள், காலணி, சோப்பு, புத்தகக் கட்டுமானம், கோப்பு அட்டைகள், அலுமினியப் பாத்திரங்கள், பினாயில், முறுக்கப்பட்ட நூல், நாடா மற்றும் செங்கல் தயாரித்தல், தையல், நெசவு மற்றும் சிறிய மின் பயிற்சி ஆகியவற்றில் முறையான பணியாளர்களால் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(3) எழுத்தறிவு இல்லாத சிறைவாசிகளுக்கு, தேசிய எழுத்தறிவு இயக்கத்தின்கீழ் ஆசிரியர்களைக் கொண்டு தொடக்கக் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. உயர் கல்வி பயில விரும்பும் சிறைவாசிகளுக்கு மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றால் நடத்தப்படும் தொலைதூரக் கல்வித் திட்டத்தின் மூலம் உயர் கல்வி பயிலவும் மற்றும் இந்திரா காந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகம் மூலம் பயிலவும், கணினி, சத்துணவு தயாரிக்கும் முறை போன்ற குறுகிய காலப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயிலவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கடந்த ஆண்டு ரூ.2,31,755 செலவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-00

சிறைவாசிகள் சிறையினுள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு சுகாதார வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது. சிறையினுள் கழிப்பிட வசதி, குளிக்கும் வசதி போன்றவை போதிய அளவில் செய்து தரப்பட்டுள்ளன. இவை சுகாதார முறையில் பேணப்பட்டு வருகின்றன. சிறைகளில் முழு நேரப் பணி மருத்துவர் மற்றும் பிற மருத்துவப் பணியாளர்களைக் கொண்ட மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. இம்மருத்துவமனைக்கு எக்ஸ்ரே, ஈ.சி.ஜி., இரத்தப்

பரிசோதனை போன்ற மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு, சிறைவாசிகளுக்கு சிறு மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டு, சிறை மருத்துவமனைகளிலேயே மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன.

சிறப்பு மருத்துவ உதவி தேவைப்படும் சிறைவாசிகளைப் பரிசோதித்து, அவர்களுக்குள்ள நோயினைக் குணப்படுத்துவதற்கென மருத்துவ நிபுணர்கள் சிறைக்கு வரவழைக்கப்பட்டு, தக்க சிகிச்சை வழங்கப்படுகிறது. மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைப்படி சிறப்பு சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகள் வெளியில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு, தக்க மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகின்றனர். இம்மாநில சிறைவாசிகளுக்குச் செய்து தரப்பட்டுள்ள ஆரோக்கிய வசதிகள் குறித்து தேசிய மனித உரிமைக் கழகம் பாராட்டுத் தெரிவித்து உள்ளது.

சிறைவாசிகளின் உள்ளம் மற்றும் மனம் தூய்மை பெற்று, அவர்கள் குற்றச் செய்கையில் இருந்து விலக அவர்களுக்கு யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சிகள், புகழ்பெற்ற தொண்டு நிறுவனங்கள் மூலம் முறையாக அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் 9,767 சிறைவாசிகள் பயன்பெற்று வருகின்றனர்.

புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளி, தமிழ்நாடு பார்ஸ்டல் சட்டத்தின்கீழ் இளம் குற்றவாளிகள் என்று தீர்ப்பு அளிக்கப்பட்ட 16 முதல் 21 வயதிற்கு உட்பட்ட ஆண் இளம் குற்றவாளிகளைச் சீர்திருத்தி, நல்வழிப்படுத்துவதற்கு என இயங்கி வருகிறது.

சிறைத் துறையின்கீழ் இயங்கி வரும் நன்னடத்தைப் பிரிவில் உள்ள நன்னடத்தை அலுவலர்கள், குற்றவாளிகள் நன்னடத்தை பற்றி விசாரணை மேற்கொண்டு, விசாரணை அறிக்கைகளை நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கின்றார்கள். முன் விடுதலை செய்யப்படும் சிறைவாசிகளையும் நன்னடத்தை அலுவலர்கள் மேற்பார்வையிடுகிறார்கள். சிறையிலிருந்து விடுதலை அடைந்த சிறைவாசிகள், அவர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க நன்னடத்தை அலுவலர்கள் உதவியுடன், அவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இது தவிர, அவர்களுக்கு வேலைவாய்ப்பு, கல்வி, குடும்பப் பிரச்சினையைத் தீர்த்தல், அநாதை இல்லத்தில்



அனுமதி, முதியோர் ஓய்வூதியம், மருத்துவம் போன்ற புனர்வாழ்வு உதவிகளும் நன்னடத்தை அலுவலர்கள் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. சிறையினுள் சிறைவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு, 11-வது நிதிக் குழுவால் வழங்கப்பட்ட ரூ.6.4 கோடி நிதி உதவியைக் கொண்டு சிறையினுள் மராமத்துப் பணிகள், சிறைவாசிகளுக்குக் கணிப்பொறிப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளுக்கான சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் ரூ.1.8 கோடி செலவில் சிறைத் துறையினைக் கணினிமயமாக்குதல், வேலூர் மத்திய சிறைக்கு சி.சி.டி.வி. வழங்குதல் போன்ற திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு செயல்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

சிறைவாசிகள் மற்றும் சிறைப் பணியாளர்கள் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, சிறையில் இட நெருக்கடியைப் போக்குவதற்காகப் புதிய சிறைகளை உருவாக்குவதற்கும், சிறையில் கட்டடங்களைப் பழுதுபார்த்து, அவற்றை சிறைவாசிகள் வாழ்வதற்கு ஏற்றதாக மாற்றுவதற்கும், சிறைவாசிகளுக்குச் சிறையில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கும், சிறைப்பணியாளருக்கு முழு அளவில் குடியிருப்பு கட்டுவதற்கும் மத்திய அரசை அணுகி, 2002 முதல் 2007 வரையிலான 5 ஆண்டுகளில் மேற்படி பணிகளை நிறைவேற்றுவதற்காக, ரூ.95.34 கோடி நிதி ஒதுக்கீடு பெற்று 2002-2003 ஆம் ஆண்டுக்கான மேற்கண்ட பணிகளுக்கு ரூ.19.07 கோடிக்கு அரசால் ஒப்பளிப்புச் செய்யப்பட்டு, இத்திட்டத்தை இவ்வாண்டில் செயல்படுத்துவதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையினைப் பொறுத்தமட்டில், இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாட்டினைத் தலைசிறந்த மாநிலமாக உயர்த்த வேண்டுமென்ற உன்னத நோக்குடன் அரும்பாடுபட்டு வரும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்குவதில் தமிழகத்தினைத் தலைசிறந்த மாநிலமாக நிலை நிறுத்தி உள்ளது. ஆயினும், ஆயத்தீர்வை வருவாயை அதிகரிக்கச் செய்ய முயற்சிக்கும் அதே நேரத்தில், ஏழை, எளிய

மக்களின் சமுதாயப் பொருளாதார வாழ்வுக்கு எவ்வித இடையூறையும் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதிலும் இந்த அரசு உறுதியாக உள்ளது. எனவேதான், மற்ற மாநிலங்களில் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது வகைகளுடன், கள் மற்றும் சாராயம் ஆகியவை விற்கப்பட அனுமதிக்கப்பட்டாலும்கூட, இம்மாநிலத்தில் ஏழை, எளிய மக்களின் உடல்நலத்திற்குப் பெரும் தீங்கு விளைவிக்கும் சாராயம் மற்றும் கள் போன்றவற்றை விற்க அனுமதிப்பதில்லை என்ற கொள்கையினை அரசு தொடர்ந்து உறுதியாகக் கடைப்பிடித்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல், கள்ளச் சாராயம், பொதுவாக ஏழை, எளிய மக்களின் உடல் நலத்தையும், பொருளாதாரத்தையும் நிலை குலையச் செய்துவிடும் என்பதால், கள்ளச் சாராயத்தினை முற்றிலும் தடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. கள்ளச் சாராயத்தின் தீமைகளைப் பாமர மக்களுக்கு எடுத்துச் சொல்லும் அனைத்து நடவடிக்கைகளிலும், அரசு சாரா நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் தொண்டு நிறுவனங்கள் போன்ற பொது நல அமைப்புகளின் பங்கேற்பு மிக முக்கியமானது என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கருதுகின்றது. ஆகவே, அவற்றை ஊக்குவித்து, கள்ளச் சாராயத்திற்கெதிராக ஓர் இயக்கமே தொடங்க இந்த அரசு முயன்று வருகிறது. மெத்தனால் உரிமத் தலங்கள் விழிப்புடன் கண்காணிக்கப்பட்டு எந்த வகையிலும் தவறான நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாமல் காவல் துறை கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்த காரணத்தினாலும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த கடுமையான நடவடிக்கைகளின் காரணமாகவும், 2002-2003 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் விஷச் சாராயம் மற்றும் மெத்தனால் போன்றவற்றினால் எந்தவித உயிர்ச் சேதமும் நிகழவில்லை என்பது உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் என நம்புகிறேன். மெத்தனால் உபயோகத்தின்மீது விழிப்பான கண்காணிப்பு தொடர்ந்து நடைபெறும். அதே நேரத்தில், அதனைத் தவறாகப் பயன்படுத்துவோர்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 5-05

2001-2002 ஆம் ஆண்டில் மதுபானச் சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்குவதன் மூலம் பெறப்பட்ட சிறப்புரிமைத்



தொகை ரூ.548.79 கோடியாகும். ஆனால், இந்த ஆண்டு இதனையும் மிஞ்சும் அளவுக்கு, இத்தொகையானது ரூ.629.51 கோடியாக உயர்ந்துள்ளது. இது 2001-2002 ஆம் ஆண்டைக் காட்டிலும் ரூ.80.72 கோடி அதிகமாகும்.

ஆயத்தீர்வை மற்றும் மதுபானங்களின் மீதான விற்பனை வரியுடன் சிறப்புரிமைத் தொகையும் சேர்த்து கடந்த ஆண்டு ரூ.3,694.29 கோடியை அரசுக்கு இத்துறை ஈட்டித் தந்துள்ளது. இந்த ஆண்டு, இதற்கு மேலாக ரூ. 3,808.35 கோடி வருவாயை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அரசுக்கு ஈட்டித் தந்துள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு மதுபானச் சில்லறை விற்பனைக் கடை உரிமையாளர்களில் சிலர் நீதிமன்றங்களில் மீண்டும், மீண்டும் வழக்குகளைத் தொடர்ந்த காரணத்தால் கடைகளுக்கு உரிமம் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டபோதும், சென்ற ஆண்டினைவிட ரூ.114.06 கோடி அதிக வருவாய் கிட்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொருளாதாரத்தில் நலிந்த ஏழை, எளிய குடும்பங்களின் துயரத்தை நீக்கிட, கள்ளச் சாராயத்தை ஒழிப்பதுதான் ஒரே வழி என்று எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதியுடன் நம்புகிறார்கள். இதற்கென மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகளைத் தீவிரப்படுத்திடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அமலாக்கப் பிரிவு தற்போது கூடுதல் காவல் துறை இயக்குநரின் தலைமையில் செயல்படுகிறது. கூடுதல் காவல் துறை இயக்குநருக்கு உதவியாக 4 காவல் கண்காணிப்பாளர்கள் செயல்படுகின்றனர். மாநிலம் முழுவதும் 94 காவல் ஆய்வாளர்களின் தலைமையில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் உள்ளன. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் எல்லையோர ரோந்து செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2003 பிப்ரவரி வரை 56.18 இலட்சம் லிட்டர் கள்ளச் சாராயமும், 7.29 இலட்சம் கர்நாடகம் மற்றும் பிற மாநில சாராயப் பாக்கெட்டுகளும், 4.07 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவியும், 164.27 இலட்சம் லிட்டர் சாராய ஊறலும் கைப்பற்றப்பட்டன. 10,141 கள்ளச் சாராய வடித்தல் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேலும், 1,078 கள்ளச் சாராய மற்றும்

மதுவிலக்குக் குற்றவாளிகளும் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கள்ளச் சாராயம் அருந்துவது ஒரு சமுதாயச் சீர்கேடாகும். இதனால் பெரிதும் பாதிக்கப்படுவோர், குடும்பத்தில் உள்ள மகளிரும், சிறுவர்களுமே என்பது வேதனையளிக்கும் விஷயமாகும். பாமர மக்கள் கள்ளச் சாராயத்தின் பாதிப்புக்கு ஆளாகாமல் தடுக்கவும், சமுதாயத்தில் சீரிய மாற்றங்களைக் கொண்டு வரவும், பெண்கள் மற்றும் குடும்பத் தலைவிகளை இந்தக் கள்ளச் சாராய ஒழிப்புப் போரில் ஈடுபடுத்த வேண்டுமென்று எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதி கொண்டுள்ளார்கள். ஆகவே, மாவட்டந்தோறும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஒத்துழைப்புடன், கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிலிருந்து மீண்டு வெளிவர விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் அவர்கள் மனம் திருந்தி நல்லதொரு வாழ்க்கையை மேற்கொள்ளவும் ஒரு விழிப்புணர்வு இயக்கம் நடத்த வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார்கள். 2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இவ்வியக்கத்தில் பல்வேறு அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஒத்துழைப்பும் பயன்படுத்தப்பட்டுள்ளது. விழிப்புணர்வுப் பேரணிகள் மற்றும் கூட்டங்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன. இத்தகைய விழிப்புணர்வு இயக்கம் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்து நடைபெறத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. கள்ளச் சாராயம் சம்பந்தப்பட்ட குற்றங்களில் ஈடுபடுவோர் பெரும்பாலும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சார்ந்தவர்கள். ஆகவே, இத்தொழிலில் ஈடுபட்டிருந்து, மனம் திருந்தி விடுபட்டு வரும் மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தை மாநிலம் எங்கும் செயல்படுத்த, கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்கென ரூ.2.50 கோடியினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள்.

பிற்பகல் 5-10

பல்வேறு மாவட்ட ஆட்சியர்கள், தத்தமது மாவட்டங்களில் மறுவாழ்வுத் திட்டக் குழு அமைத்து, முன்னாள் மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மாற்றுத் தொழில் நடத்துவதற்கான கடனுதவி



அளிப்பது போன்ற மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். உதாரணமாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசி மற்றும் கோயம்புத்தூர் வடக்கு தாலுகாக்களில் உள்ள 113 குடும்பங்களுக்கு ரூபாய் 32.63 இலட்சம் மதிப்புள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கோயம்புத்தூர், தஞ்சாவூர், பெரம்பலூர், தேனி, திண்டுக்கல் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 115 திருந்திய மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு ரூ.18 இலட்சம் அளவில் ஆடுகள், மாடுகள், வண்டி மாடுகள் வாங்கவும், சிறு தொழில்கள் செய்யவும் நிதியுதவி கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் 40 நபர்களுக்கு ரூ.5 ஆயிரம் வரை மாத ஊதியம் கிடைக்க வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட்டுள்ளன. இந்த நிதியாண்டிலும் இதுபோன்ற புதுமையான புனர்வாழ்வு அளிக்கும் முயற்சிகள் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் என்பதனை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையானது மாநிலத்தின் கடுமையான நிதி நெருக்கடியைச் சமாளிப்பதில் அரசுக்குத் துணை நிற்கும் வகையில் அதிக வருவாயை ஈட்டித் தருவதிலும், அதே சமயம், ஏழை, எளிய மக்களின் பொருளாதார வாழ்விற்குச் சவாலாக இருக்கின்ற கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதிலும், விவரம் அறியாப் பாமர மக்களின் உயிருக்குப் பங்கம் விளைவிக்கும் மெத்தனாலைக் கண்காணித்து, அது தொடர்பான உயிரிழப்புச் சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து வருவதிலும் மிகப் பெரிய சாதனைகளைச் செய்து வருகிறது. அதேபோன்று, மதுவிலக்குக் குற்றவாளிகள் மனம் திருந்தும்போது அவர்களுக்கு ஒரு நிலையான மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தினையும் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பதவியேற்றபோது மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தி, அரசுக்கு அதிக வருவாயை ஈட்டித் தருவோம் என்றும், கள்ளச் சாராயத்தின் பாதிப்பினைக் கட்டுப்படுத்துவோம் என்றும் வாக்குறுதியினை இந்த அவைக்கு

அளித்திருந்தோம். அதன்படி, கடந்த ஆண்டிலேயே ஆயத்தீர்வைத் துறையில் வருவாயை அதிகரித்துக் காட்டியிருந்தோம். இந்த ஆண்டும், சென்ற ஆண்டைவிடக் கூடுதலான வருவாயை ஈட்டித் தந்துள்ளோம் என்பதனை இத்துறையின் சாதனையாகச் சொல்லிக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையைப் பொறுத்தமட்டில், மக்களின் வாழ்வுக்கு மூல ஆதாரமாக விளங்கும் குடிநீர் மற்றும் பாசன வசதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். அத்தகைய பணிகளை நிறைவேற்றி வரும் பழமையும், பெருமையும் வாய்ந்த பொதுப் பணித் துறையின் 'பாசனம்' மற்றும் 'கட்டடங்கள்' மீதான மானியக் கோரிக்கையை இம்மாமன்றத்தின் முன் வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பொதுப் பணித் துறையானது, பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பாசனத் திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி, பராமரித்து வருகிறது. மேலும், மாநில அரசுத் துறைகளுக்கும், இதர முகமைகளுக்குமான கட்டடங்களை வடிவமைத்தல், கட்டுதல், பராமரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பாசன வளர்ச்சி—முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் 23 பெரிய மற்றும் நடுத்தரத் திட்டங்களின் மூலம் 11 இலட்சம் ஹெக்டேர் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. 9-வது திட்டக் காலத்தில் 2001-2002 முடிய கிணற்றுப் பாசனம் உட்பட பாசன வசதி பெறும் பகுதி மொத்தம் 29.72 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்தது. 2002-2003 ஆம் ஆண்டில் முடிவு பெறும் பாசனத் திட்டங்கள் மூலமாக 2000 ஹெக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதிகள் கிடைத்துள்ளன. கடந்த காலங்களில் எடுத்துக்கொள்ளப்பட்ட பாசனத் திட்டங்களிலிருந்து பயன்பெற்ற பாசன நிலப்பரப்புகளைக் காட்டிலும், மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பினை ஏற்றபின் எடுத்த சீர்திருத்த நடவடிக்கையின் மூலம், வரும் 2003-2004 ஆம் ஆண்டில் மிக உயர்ந்த இலக்காக 9,804 ஹெக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி கிடைக்கும் என்பதனை இம்மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பாசனத் திட்டங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்து வரும் முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு இதுவே சிறந்த உதாரணமாகும். நில



மேற்பரப்பிலுள்ள நீராதாரங்கள் அனைத்தும் கிட்டத்தட்ட முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு விட்ட நிலையில், பாசனப் பகுதிகளை மேலும் விரிவாக்குவதற்கு புதிய உத்திகளை வகுக்க வேண்டிய கட்டாயம் நமது அரசுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிற்பகல் 5-15

நிர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்— புதிய உத்திகளின்படி தமிழ்நாடு நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டமானது ரூ.840.84 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தயாரிக்கப்பட்டு, உலக வங்கியால் 1995 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 1995 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அடிப்படை நிலையில் ரூ.807.49 கோடிக்கு ஒப்புதலை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். இத்திட்டம் 2002-2003-ல் ரூ.1062 கோடி செலவில் முடிவடைய இருந்தது. இத்திட்டத்திற்கு உலக வங்கி ஏற்கெனவே 31-3-2003 வரை நீட்டிப்பு வழங்கியது. இப்போது உலக வங்கி இத்திட்டத்தின் காலத்தை மேலும் ஓராண்டிற்கு, 31-3-2004 வரை நீட்டிக்க ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாட்டின் பாசனப் பரப்பை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியைப் பெருக்க உதவுவதுடன், நாற்பது இலட்சம் வேளாண் மக்களுக்கு நேரடியாகப் பயன் அளித்தது. இதன் மூலம் 15 இலட்சம் ஏக்கர் நிலத்தில் வேளாண் உற்பத்தி பெருகியுள்ளது. இத்திட்டம் காவிரி டெல்டா பாசனப் பகுதியைத் தவிர்த்து, 16 பாசனத் திட்டங்கள், மற்றும் 25 சிறிய பாசனத் திட்டங்களை நவீனப்படுத்த உதவியது. இத்திட்டத்தின் மூலம் செயலாக்கத்திலுள்ள ஒன்பது பாசனத் திட்டங்களான, பொய்கையாறு, நம்பியாறு, சோத்துப்பாறை, மோர்தானா, ராஜாத்தோப்பு கானாறு, கொடுமுடியாறு, வடக்குப் பச்சையாறு, அடவிநயினார் கோவில், கிருதமால் ஆகிய பாசனத் திட்டங்கள் முடிக்கப்பட்டன. இத்திட்டத்தின்மூலம் பாலாறு, வைகை, தாமிரபரணி ஆகிய ஆற்றுப் படுகைகளில் 620 ஏரிகள் மற்றும் வரத்து வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தின் ஒவ்வொரு நதி நீர்ப் படுகையையும் ஆதாரமாகக் கொண்டு, அவற்றிலுள்ள புதிய நீர்த்தேக்கங்களைக் கட்டுவதற்கும், ஏற்கெனவே உள்ள வரத்துக் கால்வாய்கள், பாசனக் கால்வாய்கள்

அணைக்கட்டுகள், ஏரிகள், கிளைக் கால்வாய்கள் ஆகியவற்றினைப் புனரமைத்து முன்னேற்றுவதற்கும், அவற்றினைத் தொடர்ந்து பயனாளிகள் பொறுப்பிலேயே பராமரிக்க வழிவகைகளைச் செய்யவும், நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-2-ஐ 2900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நமது அரசு தயார் செய்து, அதற்கான நிதி உதவி பெறுவதற்கு மத்திய அரசு மூலம் உலக வங்கியை அணுகியுள்ளது. உலக வங்கி இதற்கான அனுமதியை விரைவில் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன், பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கேரள அரசு பவானி ஆற்றில் அணை கட்டுவதைத் தடுத்தல்— கேரள அரசு பவானி ஆற்றின் குறுக்கே முக்காலி என்னும் இடத்தில் ஒரு தடுப்பணை கட்டி, நீரை வேறு படுகைக்குத் திருப்புவதற்கு ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது என்பதை அறிந்தவுடனேயே, மாண்புமிகு அம்மா அவர்கள் காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் ஒரு இறுதித் தீர்ப்புக் கிடைக்கும் வரை இத்திட்டத்தை மேற்கொள்ளக் கூடாது என்று கேரள முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். மேலும், மத்திய அரசுக்கும், தமிழக அரசிடமிருந்து இது குறித்துக் கடிதம் எழுதப்பட்டது. இதற்கிடையில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையின் பேரில், 6-1-2003 அன்று காவிரி நடுவர் மன்றத்தின்முன் கேரளா தடுப்பணை கட்டுவதை நிறுத்தி வைக்குமாறு தமிழக அரசு ஒரு மனுத் தாக்கல் செய்தது. அந்த மனுவை விசாரித்த காவிரி நடுவர் மன்றம், 2-4-2003 அன்று காவிரிப் படுகை, நீர்ப் பற்றாக்குறைப் படுகையாக இருப்பதால், நீரை வேறு படுகைக்கு மாற்றம் செய்ய அனுமதிக்க இயலாது என்றும், காவிரி நதித் தாவாவில் இறுதி ஆணை வழங்கும் வரையில், பவானியில் கேரளா தடுப்பணை கட்டக் கூடாது என்றும் ஆணை பிறப்பித்துள்ளது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இதிலிருந்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய உரிமையை நிலைநாட்டுவதில் என்றென்றைக்கும் முன்னணியில் இருப்பார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை—காவிரி நடுவர் மன்றம் 1991 ஆம் ஆண்டு, அதன் இடைக்கால ஆணையைப் பிறப்பித்த நாள் முதற்கொண்டு, கர்நாடக அரசு அதைச் செயல்படுத்த



முன்வரவில்லை என்பதை இந்த மாமன்றம் நன்கறியும். மேட்டூர் நீர்த்தேக்கத்திலுள்ள நீர் இருப்பு, நீர் வரத்து போன்றவற்றில் 6-6-2002 அன்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, இப்பாசன ஆண்டில் காவிரியில் உரிய நீரைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தார்கள். மேலும், 21-6-2002 அன்று அமைச்சரவையைக் கூட்டி, காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து விவாதித்து, உச்ச நீதிமன்றத்தில் ஒரு புதிய சிவில் வழக்கைத் தாக்கல் செய்யவும் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவிற்கேற்ப, 10-7-2002 அன்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு புதிய சிவில் வழக்கைத் தமிழக அரசு தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில், காவிரிக் கண்காணிப்புக் குழுவின் அவசரக் கூட்டங்களும், காவிரி நதி நீர் ஆணையத்தின் அவசரக் கூட்டங்களும் மத்திய அரசால் கூட்டப்பட்டன. காவிரி நதி நீர் ஆணையக் கூட்டங்களில் தமிழகத்தின் நிலையையும், தமிழகத்தின் உரிமையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்துரைத்து, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீரை கர்நாடக அரசு அளிப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்தி வந்தார்கள். மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையின்படி தமிழக அரசு தாக்கல் செய்த சிவில் வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், 3-9-2002 அன்று, கர்நாடக அரசு 4-9-2002 முதல் நாள் ஒன்றுக்கு 1.25 டி.எம்.சி. அடி வீதம் நீர் விடுவிக்க வேண்டுமென்று உத்தரவிட்டது. அதன் பின்னர், 8-9-2002 அன்று நடைபெற்ற காவிரி நதி நீர் ஆணையத்தின் அவசரக் கூட்டத்தில், நாள் ஒன்றுக்கு 0.8 டி.எம்.சி. அடி வீதம் 9-9-2002 முதல் விடுவிக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. உச்ச நீதிமன்றம் மற்றும் காவிரி நதி நீர் ஆணையத்தின் முடிவுகளைக் கர்நாடக அரசு செயல்படுத்தத் தவறியதால், தமிழக அரசு கர்நாடக அரசின் மீது இரண்டு நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளையும் தாக்கல் செய்தது என்பதை இம்மாமன்றம் அறியும்.

பிற்பகல் 5-20

கடைசியாக, உச்ச நீதிமன்றம் அதன் 6-2-2003 ஆம் நாளிட்ட ஆணையில் கர்நாடகா, அதன் நீர்த்தேக்கங்களிலிருந்து தேவையான நீரை, அதாவது நாளொன்றுக்கு 4500 கன அடி வீதம் திறந்து விட வேண்டுமென்றும், 10-2-2003 அன்று நடைபெறவுள்ள காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டத்தில் ஏற்படும் முடிவு வரை இவ்வாணை

அமலில் இருக்கும் என்றும், காவிரி நதி நீர் ஆணையம் இது குறித்து ஒரு தகுந்த முடிவை எடுக்கலாம் என்றும் ஆணையிட்டது. 10-2-2003 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற காவிரி நதி நீர் ஆணையத்தின் 6-வது கூட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் கலந்து கொண்டு, பாசன நீர் கிடைக்காமல் பயிர்கள் வாடி வருவதால் டெல்டா பகுதி விவசாயிகளின் அவல நிலையை விரிவாக எடுத்துக் கூறி, தமிழகத்திற்கு அளிக்க வேண்டிய நீரை கர்நாடகா உடனே அளிக்க ஆணையம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். காவிரி நதி நீர் ஆணையமும், கர்நாடகா 4500 கன அடி வீதம் 3 நாட்களுக்கு நீரை அளிக்கவும், அதன் பிறகு காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையின்படி நீரை அளிக்க வேண்டும் என்றும் முடிவு செய்தது. காவிரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையின்படி தமிழகத்திற்கு உரிய நீரைப் பெறுவதற்கும், விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்கும் அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரிப் படுகையில் மேம்பாட்டுப் பணிகள்—காவிரி நதி நீர் வழக்குக் காரணமாக தமிழ்நாட்டிற்குப் பெருமளவில் உணவு வழங்கும் காவிரிப் படுகையின் மேம்பாட்டுப் பணிகளைப் பெரிய அளவில் செய்ய உலக வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களின் உதவியை உடனடியாகப் பெற இயலவில்லை. காவிரி நதி மற்றும் படுகையிலுள்ள 10 மாவட்டங்களில் வாழும் விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் துன்பங்களை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் படிப்படியாக முன்னேற்றத் திட்டங்களைச் செய்வதற்கு ஆர்வம் கொண்டுள்ளார்கள். இதன் முதற்படியாக இந்த 10 மாவட்டங்களிலுள்ள பாசன அமைப்புகளின் ரெகுலேட்டர்களில் புதிய தடுப்புப் பலகைகள் பொருத்தவும் மற்றும் பாசனக் கட்டுமானங்களைப் பழுதுபார்த்துச் சீரமைக்கும் பணிகளையும் உடனடியாகச் செய்து முடிக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

காவிரிப் படுகையில் வறட்சி நிவாரணப் பணிகள்—தொடர்ந்து பருவ மழை பொய்த்ததனால் வேலை இழந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு வகையான வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள



ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படி 2002 ஆம் ஆண்டு குறுவைப் பயிர் செய்ய இயலாததால் விவசாயிகளுக்கு நிவாரணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த ரூபாய் 164 கோடியில் பொதுப் பணித் துறை ரூபாய் 10 கோடிக்கு காவிரிப் படுகை மாவட்டங்களிலுள்ள B, C, D, கால்வாய்களில் தூர் வாரும் வேலையைச் சிறப்பாக முடித்துக் கொடுத்துள்ளது. அதனைத் தொடர்ந்து சம்பாப் பயிரும் காய்ந்து விட்டதால் பத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு நிவாரண உதவிகள் செய்ய, வேலைக்கு உணவளிக்கும் சிறப்புத் திட்டம், மொத்தம் ரூபாய் 217 கோடியில் மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, பொதுப் பணித் துறைக்கு மட்டும் ரூபாய் 30 கோடி ஒதுக்கப்பட்டு மனித உழைப்பிலேயே தூர் வாரும் வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன.

வேலைக்கு உணவளிக்கும் திட்டத்தின்கீழ் தமிழகம் எங்கும் பொதுப் பணித் துறையின்கீழ் பாசனத் தொகுப்புக்கு உட்பட்ட மற்றும் உட்படாத நீர்நிலைகளைத் தூர் வாரவும், வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடவும் 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 100 கோடி மொத்த ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் முழுவதும் மனித உழைப்பின் மூலம் செயல்படுத்தப்படும். இப்பணிகளுக்காக 25 கோடி ரூபாய் ரொக்க உதவியாகவும், 75 கோடி ரூபாய் மதிப்பிற்கு அரிசியாகவும் வழங்குவதன் மூலம் இப்பணி செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மழை நீர் சேகரிப்புப் பணிகள்—கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தமிழகம் எதிர்நோக்கி உள்ள சூழ்நிலையில், இடைக்கப் பெறும் மழை நீரை முறையாகப் பயன்படுத்துவதற்கு நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் மழை நீரைச் சேகரித்து, அதை முறையாகப் பயன்படுத்துவதற்குப் பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளார்கள். இதன் ஒரு கட்டமாக, தமிழகம் முழுவதுமுள்ள அரசுக் கட்டடங்களில் மழை நீர் சேகரிப்புப் பணிகளை உருவாக்கிச் செயல்படுத்துவதற்கு ரூபாய் 25 கோடி ஹட்கோ நிதி உதவியைப் பெற மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

நதிகள் இணைப்புத் திட்டம்—தமிழக நதிகளில் கிடைக்கும் நீரைப் பயன்படுத்துவதற்கு அநேக திட்டங்கள் தீட்டப்பட்டும், தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை மாநிலமாகவே இருந்து வருகிறது. எனவே, நாட்டிலுள்ள நதிகளை இணைத்து, உபரி நீரை—நதிகளின் மூலம் கிடைக்கும் உபரி நீரை—நீர்ப் பற்றாக்குறை மாநிலங்களுக்குத் திருப்புவது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, நதிகளை இணைப்பதற்கு மத்திய அரசு திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் 1984 ஆம் ஆண்டிலேயே பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினார்கள். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு நதிகள் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றும்படி மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. 1-4-2002 அன்று நடைபெற்ற தேசிய நீர் ஆதாரக் குழுமக் கூட்டத்தில், நதிகள் இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றும்படி மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. 1-4-2002 அன்று நடைபெற்ற தேசிய நீர் ஆதாரக் குழுமக் கூட்டத்தில் நதிகள் இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த தமிழக அரசால் வற்புறுத்தப்பட்டது. மேலும், 21-12-2002 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுமக் கூட்டத்திலும் நதிகளை இணைக்க வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசிடம் வற்புறுத்தினார்கள். தற்போது மத்திய அரசு நதிகளின் இணைப்புத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக Task Force ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை இம்மாமன்றம் அறியும். இந்த நதிகளின் இணைப்புத் திட்டத்திற்கு வேண்டிய அனைத்து ஒத்துழைப்பையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து நல்கி வருகிறார்கள் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-25*

உலக வங்கி உதவியுடன் நீரியல் திட்டம், நிலத்தடி நீர்— தமிழகத்தில் நிலத்தடி நீரும் மிகவும் குறைந்துவிட்ட நிலையில் நிலத்தடி நீரை அதிகப்படுத்துவதன் மூலம்தான் விவசாயத்தில் நல்ல வளர்ச்சியை உருவாக்க முடியும் என்பதனை உணர்ந்து, நிலத்தடி நீரை அதிகப்படுத்தி அதன் மூலம் தமிழகத்திலுள்ள கிணறுகளுக்கும், பம்புசெட்டுகளுக்கும் போதிய நீராதாரத்தைப் பெருக்க வேண்டி மாண்புமிகு அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டிலேயே இத்தகைய ஒரு திட்டத்தை ரூபாய் 52 கோடி உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த ஓர் ஒப்பந்தம் நிறைவேற்ற ஏற்பாடு



செய்தார்கள். அத்திட்டத்தின் மூலம், தமிழகத்தில் பெய்யும் மழை அளவு, நிலத்தின் மேற்பரப்பு நீர், நிலத்தடி நீரின் தாம் மற்றும் இருப்பு பற்றிய விவரங்களைத் துல்லியமாக அளவீடு செய்வதற்கான கருவிகளை ஆங்காங்கே அமைக்கவும், அந்த அளவீடுகளை நல்ல முறையில் தயார் செய்து, பதிந்து, அனைத்துத் துறைகளுக்கும் பயன்படும் விதத்தில் அளிக்கவும், அந்த விவரங்களைப் பயன்படுத்தித் திட்டங்களை வகுக்கவும், வழிமுறைகள் செய்யப்பட்டன. நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும், வழிமுறைகளையும் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. இந்த நீரியல் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயலாக்கி உள்ள நிலையில், நீரியல் திட்டம்-2 என்ற ஒரு புதிய திட்டத்தை ரூபாய் 101 கோடி திட்ட மதிப்பில் தயாரித்து மத்திய நீர்வள அமைச்சகத்திற்கு நமது அரசு அனுப்பியுள்ளது. மத்திய அரசு ஒப்புதல் கிடைத்துள்ள நிலையில், இத்திட்டத்திற்கும் உலக வங்கி உதவி விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டட அமைப்பு—பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு, தமிழக அரசின் துறைகளான சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, உள் துறை, கல்வித் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் வருவாய்த் துறை ஆகிய அரசுத் துறைகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் போன்றவற்றைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதல்லைப் பெற்று இந்தப் புதிய அறிவிப்புகளை அறிவிப்புச் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன்:

*பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை—* (1) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கான புதிய இணைய தளத்தினை உருவாக்குவதற்கும், தொடர்ந்து பராமரிப்பதற்கும் தேவையான 7 கணிப்பொறிகள் மற்றும் இதா பாகங்கள் மற்றும் ஒரு ஒளி நகல் இயந்திரம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.6.62 இலட்சம் செலவில் வாங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(2) அகில இந்தியக் குடிமைப் பணி பயிற்சி மையத்திற்கு 5 கணினிகள் 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 2 இலட்சம் செலவில் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(3) அகில இந்தியக் குடிமைப் பணி பயிற்சி மையத்திற்குப் பாத்திரங்கள் மற்றும் 50 மின் விசிறிகள் 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(4) அகில இந்தியக் குடிமைப் பணி பயிற்சி மையத்திற்குப் நூலகப் புத்தகங்கள் 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(5) பவானிசாகரில் இயங்கி வரும் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தின் கணினிப் பயிற்சிக்காக 20 கணிப்பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபாய் 10 இலட்சம் செலவில் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(6) அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு நகல் இயந்திரம் ரூபாய் 1.50 இலட்சம் செலவில் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின் மூலம் 2003-2004 ஆம் ஆண்டுக்கான அறிவிப்புகள்— (1) மைய சாலை நிதித் திட்டத்தின் மூலம் ரூபாய் 60.87 கோடி மதிப்பீட்டில் 338 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநிலச் சாலைகள் மற்றும் மாவட்டப் பெரிய சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தவும், ஓடுதளத்தை மேம்படுத்தவும், காவிரி வடிநில மாவட்டங்களில் 30 பாலங்களைத் திரும்பக் கட்டுவதற்கும் மைய அரசின் ஒப்புதல் பெற்று, பணிகளை நடப்பாண்டில் செயல்படுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிறபகல் 5-30

(2) இராமநாதபுரம் மாவட்டம், வைகை தரைப் பால சாலையில் (நதிப் பாலம்) நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ரூ.4 கோடி மதிப்பீட்டில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



(3) இராமநாதபுரம் மாவட்டி, காரனேந்தல்-தொருவலூர் சாலையில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(4) பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம், நெய்குப்பை-வேம்பாவூர் சாலையை நபார்டு வங்கி நிதியுதவியுடன் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(5) 2002-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் காவிரி வடிநில மாவட்டங்களில் பழுதடைந்த 204 பாலங்கள் ரூ.200 கோடி மதிப்பீட்டில் திரும்பக் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. அவற்றில் 2002-2003 ஆம் ஆண்டு 94 பாலங்களுக்கு நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் பணிகள் எடுக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன. 36 பாலங்கள் மைய சாலை நிதித் திட்டத்தின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளன. மீதமுள்ள 26 பாலங்களை ஹட்கோ நிதியுதவியுடனும், மாவட்டப் பெரிய சாலைகளில் அமைந்துள்ள 48 பாலங்களை நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்றும் விரைவில் பணியினைச் செய்து முடிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(6) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலை-பழனி-கொழுமம் சாலையில், குதிரையாற்றின் குறுக்கே ரூ.2 கோடி மதிப்பீட்டில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(7) காவிரி டெல்டா மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில், நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்று ரூ.40.54 கோடி மதிப்பீட்டில் 111 பாலங்கள் கட்டுதல், ரூ.9.47 கோடி மதிப்பீட்டில் 78.2 கிலோ மீட்டர் நீளமுள்ள 31 சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை எடுத்துக்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(8) கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் நபார்டு வங்கியின் நிதியுதவி பெற்று பட்டியல் 1-ன்படி ரூ.58 கோடி மதிபபீட்டில் 377 கிலோ மீட்டர் நீளமுள்ள 142 கிராமச் சாலைகளை மேம்பாடு செய்யவும், 11 பாலங்களைக் கட்டவும் மற்றும் பட்டியல் 2-ன்படி

53-51—16

ரூ.54 கோடி மதிப்பீட்டில் 357 கிலோ மீட்டர் நீளமுள்ள 144 கிராமச் சாலைகளை மேம்பாடு செய்யவும், 7 பாலங்களைக் கட்டவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(9) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் நகருக்கு ரூ.8 கோடி மதிப்பீட்டில் ஒரு புறவழிச் சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(10) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகருக்கு உத்தேசித்துள்ள புறவழிச் சாலையை முதற்கட்டமாக கும்பகோணம்-தஞ்சாவூர் சாலை வரையிலும், இரண்டாம் கட்டமாக கும்பகோணம்-திருவாரூர் சாலை வரையிலும் ரூ.20 கோடி மதிப்பீட்டில் தேவையான நிலங்களைக் கையகப்படுத்திச் செயல்படுத்தி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(11) நாகப்பட்டிணம் மாவட்டம், நந்தலார் நதியின் குறுக்கே படுகைபழையார் சாலையில் ஒரு பாலம் மற்றும் சாலை மேம்பாடு ஆகிய பணிகளை, பொருளாதாரம் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் மற்ற மாநிலங்களை இணைக்கும் வகையில் ரூ.1.4 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(12) தருமபுரி மாவட்டம், வேப்பனப்பள்ளி—ஓ.என்.கொத்தூர் சாலையில், பொருளாதாரம் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் மற்ற மாநிலங்களை இணைக்கும் வகையில் ரூ.27.01 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு தரைப் பாலம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(13) திருவள்ளூர் மாவட்டம், எகுவாமிட்டூர் செல்லும் சாலை மேம்பாட்டுப் பணியைப் பொருளாதாரம் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் மற்ற மாநிலங்களை இணைக்கும் வகையில் ரூ.57.58 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(14) 2003-2004 ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டத்தின்கீழ் மாநிலச் சாலைகளில் பழுதடைந்த 14 பாலங்கள் மற்றும் மாவட்டப் பெரிய சாலைகளில் பழுதடைந்த 12 பாலங்கள், ஆக மொத்தம் 26 பாலங்களைத்



திரும்பக் கட்டும் பணிகளுக்கு ரூ.9 கோடியை மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள்.

(15) கும்பகோணத்தில் நடைபெறவுள்ள மாகமகம் திருவிழாவை முன்னிட்டு கும்பகோணம் நகருக்குள்ளும் மற்றும் நகரைச் சுற்றியும் உள்ள அரசு சாலைகளை ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம்—தமிழ்நாடு கடல்சார் வாரியம் தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் நோக்குடன் 1997 ஆம் ஆண்டு ஏற்படுத்துவிட்டது. இருப்பினும், கடந்த ஆண்டுகளில் இதற்குத் தேவையான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(16) திருவாளர்கள் ஓபக் சிகால் டர்மினல் லிமிடெட் (ஸ்பிக் குரூப்) அவர்களால் பெட்ரோலியப் பொருட்கள் கையாளப்படுவதற்காக, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள காட்டுப்பள்ளி துறைமுகம் அறிவிக்கப்பட்டது. கடந்த 4 ஆண்டுகளாக இத்துறைமுகத்தினை மேம்படுத்துவதற்கு எவ்வித ஆர்வமும் இந்நிறுவனம் காட்டவில்லை. முன்னர் கொடுக்கப்பட்ட அனுமதியை விலக்கிக்கொண்டு, காட்டுப்பள்ளி துறைமுகத்தைக் கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, பங்கிட்டு, மாற்றுதல் அடிப்படையில் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 5-35

(17) திருவாளர்கள் இந்தியன் கேஸ் லிமிடெட் அவர்களின் வேண்டுதலின் பேரில் வேம்பாரில் அமைக்க உத்தேசித்துள்ள மின் உற்பத்தி நிலையத்திற்குத் தேவையான திரவ இயற்கை வாயுவைக் கையாளுவதற்காக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு துறைமுகம் அறிவிக்கப்பட்டது. ஆனால், இத்துறைமுகம் மேம்படுத்தப்படவில்லை. கடற்கரையில் நல்ல ஆழம் இருப்பதும், பன்னாட்டுக் கப்பல் வழித்தடத்திற்கு அண்மையில் அமைந்துள்ளதும் இத்துறைமுகத்திற்குச் சிறந்த அனுகூலமாகும். எனவே, முன்னர்

கொடுக்கப்பட்ட அனுமதியை விலக்கிக் கொண்டு, மணப்பாடு துறைமுகத்தை, பொதுத் துறைமுகமாக மாற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(18) கடலூர் துறைமுகத்தைத் தனியார் முதலீட்டின் மூலம் கட்டி, சொந்தமாக்கி, இயக்கி, பங்கிட்டு, மாற்றுதல் அடிப்படையில் சுமார் ரூபாய் 250 கோடி செலவில் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(19) நாகப்பட்டினம் துறைமுகத்தை சுமார் ரூபாய் 5.00 கோடி முதலீட்டில் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(20) உள்நாட்டுக் கப்பல் போக்குவரத்தை மேம்படுத்தும் பொருட்டு இராமேஸ்வரம் துறைமுகத்தில் சுமார் 5.00 கோடி செலவில் துறைமுகம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்பு வசதிகளை நிறுவ மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## சிறைத் துறை, புதிய அறிவிப்புகள்

(1) புழல் மத்திய சிறை—தற்போதைய சென்னை மத்திய சிறையைச் சுற்றிலும் பல கட்டடங்கள், இரயில்வே மேம்பாலம் ஆகியவை தோன்றியுள்ள சூழ்நிலையில், அச்சிறை மிகவும் பாதுகாப்பற்ற முறையில் இயங்கி வருகிறது. மேலும், இச்சிறையில் அனுமதிக்கப்பட்ட இடவசதிக்கும் மேலாக இரண்டாயிரம் விசாரணை சிறைவாசிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். ஆகையால், அண்டை மாவட்டத்திலுள்ள நீதமன்றங்களால் அனுப்பப்படும் தண்டனை சிறைவாசிகள் மற்றும் பெண் விசாரணை சிறைவாசிகள் சுமார் 150 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேலூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். இதனால் சிறைவாசிகளின் உறவினர்கள் சிறைவாசிகளைச் சென்று பார்ப்பதற்குப் பல சிரமங்கள் உள்ளன. இச்சிறை கூவம் ஆற்றுக்கு அருகில் அமைந்துள்ளதால், சிறை வளாகத்தைச் சுற்றியுள்ள இடங்களில் எலிகள், பூச்சிகள், கொசுக்கள் உருவாகி, சிறைவாசிகளுக்கு உடல்நலக் கேட்டினை உண்டாக்குவதுடன், இக்கட்டடங்களைப் பராமரிப்பதற்கும் அதிகச் செலவினம் ஏற்படுகிறது. எனவே, தற்போது சென்னையில் உள்ள மத்திய சிறையினைப் புழலுக்கு மாற்றம் செய்யவும், புழல் வளாகத்தில் புதியதாகப் பெண்களுக்கான சிறை ஒன்றை அமைக்கவும் மற்றும் சிறைவாசிகளுக்கான அனைத்து வசதிகளும் அடங்கிய மருத்துவமனையுடன் நவீன சிறை வளாகம் ஒன்றை உருவாக்கிடவும், ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



(2) சுகாதார முறையில் குறித்த நேரத்தில் உணவு தயாரித்திட மத்திய சிறைகளில் இருப்பது போன்று அனைத்து கிளைச் சிறைகளிலும் சமையல் எரிவாயு வசதி ஏற்படுத்துவதற்கு ரூபாய் 7.32 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(3) அனைத்து மத்திய மற்றும் மாவட்ட சிறைகளில் உணவு சமைப்பதற்குத் தற்சமயம் உபயோகத்தில் உள்ள அலுமினியப் பாத்திரங்களுக்குப் பதிலாக எவர்சில்வர் பாத்திரங்களை உபயோகப்படுத்துவதற்கு ரூபாய் 25.89 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(4) மத்திய சிறைகள் மதுரை மற்றும் பாளையங்கோட்டையில் எப்பொழுது அதிக அளவில் சிறைவாசிகள் உள்ளனர். போராட்ட காலங்களில் சிறைவாசிகளின் அடைப்பு பன்மடங்காக உயர்கிறது. எனவே, இட நெருக்கடியைக் குறைக்கும் பொருட்டு, திண்டுக்கல் மற்றும் நாகர்கோவில் கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாகத் தரம் உயர்த்திட 5 கோடியே 9 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(5) மாநிலத்தில் உள்ள ஒன்பது மத்திய சிறைகளுக்கும், இரண்டு மகளிர் தனிச் சிறைகளுக்கும் உணவு விநியோகிப்பதற்கு 90 தள்ளுவண்டிகள் வாங்குவதற்கு ரூபாய் 21 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள்.

(6) அனைத்து மத்திய சிறைகள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, புதுக்கோட்டை மற்றும் இரண்டு மகளிர் தனிச் சிறைகள் ஆகியவற்றில் பொதுத் தகவல் சாதனம் வாங்க ரூபாய் 12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(7) மாநிலத்திலுள்ள மத்திய சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்குக் குளியல் சோப்பு மற்றும் பற்பொடி வழங்குவதற்கு ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(8) அவசர காலங்களில் தலைமை அலுவலகத்திலிருந்து தொடர்பு கொள்வதற்காக, வேலூர் மற்றும் திருச்சி பெண்கள் தனிச் சிறைக் கண்காணிப்பாளர்களின் இருப்பிடங்களுக்கு இரண்டு தொலைபேசிகள் வழங்குவதற்காக ரூபாய் 15,000 ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(9) அரசு மற்றும் காவல் துறையினருடன் தொடர்புகொள்ள ஏதுவாக கூடுதல் சிறைத் துறைத் தலைவர் அலுவலகம், சென்னை சரக சிறைத் துறைத் துணைத் தலைவர் அலுவலகம் மற்றும் பெண்கள் தனிச் சிறைகள், வேலூர், திருச்சி ஆகியவற்றிற்கு நுண்ணலைத் தொலைபேசி இணைப்பு வழங்கிட ரூபாய் 1 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 5-40

(10) கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் கிளைச் சிறைக் கண்காணிப்பாளர்களுக்கிடையே தொடர்புகொள்ள ஏதுவாக, கிளைச் சிறைகளுக்குத் தொலைபேசி வசதி ஏற்படுத்திட ரூ.3.01 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(11) ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்படும் பொருட்களின் எடையைச் சரிபார்ப்பதற்கு ஏழு கிளைச் சிறைகளுக்கு ஏழு எடை பார்க்கும் இயந்திரங்கள் வழங்க ரூ.37,000 ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(12) தமிழகத்தில் உள்ள சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள காவல் சிறைவாசிகளுக்கு அதிகப்படியான உடைகள் வழங்குவதற்கு ரூ.2.70 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.



(13) தற்போது மத்திய சிறை மற்றும் கிளைச் சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு உணவு பரிமாறப் பயன்படுத்தும் அலுமினியப் பாத்திரங்களுக்கு பதிலாக எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்க ரூ.33 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(14) கூடுதல் சிறைத் துறை இயக்குநர் அலுவலகம், மத்திய சிறைகள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி மற்றும் பெண்கள் தனிச் சிறை ஆகியவற்றிற்கு மின்னனுத் தபால் முத்திரை இயந்திரம் வழங்க ரூ.13.05 இலட்சம் ஒதுக்கீடு செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, புதிய அறிவிப்புகள்—

(1) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பொருள் இருப்பு நிர்வாகத்தை மேம்படுத்திடவும், கிடங்குகளில் உள்ள முக்கிய விவரங்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யவும், ரூபாய் 65 இலட்சத்தில் மேலும் 15 கிடங்குகளைக் கணினிமயமாக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(2) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகம் மற்றும் கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஆயத்தீர்வை உதவி ஆணையர் அலுவலகங்களில் உரிமங்கள் வழங்குதல், சாராவி உற்பத்தி மற்றும் ஆயத்தீர்வை வருவாய் ஆகியவற்றின் விவரங்களைக் கண்காணித்தல் போன்றவற்றை ரூபாய் 10 இலட்சத்தில் கணினிமயமாக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(3) மின் ஆளுமையை (E. Governance) அறிமுகப்படுத்துவதன் ஒரு பகுதியாக, தலைமைச் செயலகத்திலுள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில், கணினி மூலம் கோப்புகள் ஆய்வு செய்தல், சமர்ப்பித்தல், சுற்றனுப்புதல் மற்றும் மின்னணு முறையில் இணைக்கும் திட்டம் போன்றவற்றை 10 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**பொதுப் பணித் துறை, புதிய அறிவிப்புகள். நீர்வள ஆதார அமைப்பு—**

(1) காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் காவிரி நீர்ப்பாசனம் பெறும் மாவட்டங்களான ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள ஆறுகள் மற்றும் கால்வாய்களில் உள்ள ரெகுலேட்டர்களின் தடுப்புப் பலகைகள் பழுதுபார்த்தல் மற்றும் புதிதாகப் பொருத்தும் பணிகளை முடிக்க ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(2) காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் காவிரி நீர்ப்பாசனம் பெறும் மாவட்டங்களான ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள காவிரி நதிப் பாசன அமைப்பில் உள்ள கட்டமைப்புகளைப் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 24 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(3) தூத்துக்குடி மாவட்டம், பெரியதாளை கிராமத்தில் கடற்கரை ஓரமாகத் தூண்டில் வளைவு அமைக்கும் பணிக்கு ரூபாய் 4 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டின் உயரத்தை இரண்டு அடி உயர்த்தி ஆழ்வார்திருநகரி, நாசரேத், கச்சானாவிளை ஆகிய பகுதிகளுக்குப் பயன் தரும் திட்டத்திற்காக ரூபாய் 1.50 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) திருநெல்வேலி மாவட்டம், பானங்குளம் கிராமத்தின் அருகே மணிமுத்தாறு முக்கியக் கால்வாயில் 12 கிலோ மீட்டரில் புதிய கிளைக் கால்வாயை ஏற்படுத்தி கருங்குளம் ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யனார்குளம்பட்டிக்குப் பயன்தரும் திட்டத்திற்காக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



(6) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை ஆகிய வறட்சிக்குட்பட்ட பகுதிகளில் தாமிரபரணி ஆற்றிலிருந்து சுமார் 60 கிலோ மீட்டர் நீளம் கொண்ட புதிய கால்வாய் அமைக்கும் பணியை நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-2-ன்கீழ் எடுத்துக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(7) தூத்துக்குடி மாவட்டம், புத்தன் தருவை மற்றும் சடயநேரி பகுதிகளுக்குப் பயன்தரும் வகையில் மருதூர் அணைக்கட்டிலிருந்து கால்வாய் ஏரிக்குச் செல்லும் மருதூர் மேலக்காலின் செலுத்தும் அளவை உயர்த்த ரூபாய் 12 கோடி திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-45

(8) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், பாலகோம்பை குட்டை அமைத்தல், கணவாய்ப்பட்டி கணேசபுரம் புதிய குளம், புலிமான்கோம்பை குட்டை அமைத்தல், அம்மாப்பட்டி, முனாண்டிப்பட்டி குட்டை அமைத்தல், தர்மத்துப்பட்டி கிராமத்தில் தனித்தனியே குட்டை மற்றும் குளம் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்காக ரூபாய் 3.78 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(9) தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், ஜி. கல்லுப்பட்டிக்கு அருகில் பச்சிலைநாச்சியம்மன் ஓடையின் அருகே புதிய ஏரி அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 1.27 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(10) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னஓவலாபுரம் மற்றும் சீப்பாலக்கோட்டை கிராமங்களில் புதிய ஏரி மற்றும் குட்டை அமைக்கும் திட்டங்களுக்காக ரூபாய் 2.52 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(11) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆலமரத்துப்பட்டி கிராமத்தில் சர்வே எண் 18-ல் சாம்பார் பள்ளம் ஓடையின் உபரி நீரை சூக்காப்பட்டி குட்டைக்கு கொண்டு செல்லும் திட்டத்திற்காக ரூபாய் 1.25 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(12) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் பாலாற்றிலிருந்து ஆத்தூர் வடபாதிக்கு நீர் வழங்கு கால்வாயின் மண் கரையைக் கல் சுவராக மாற்றி அமைக்கும் திட்டத்திற்காக ரூபாய் 1.20 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(13) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில் பாப்பான்குளம் மற்றும் இராஜாலிப்பட்டி கிராமத்தின் அருகே சூரியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுவதற்கு ரூபாய் 70 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(14) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், வட்டுவானஹள்ளி கிராமத்தில் உள்ள கோடுபட்டி அருகில் புங்கம்பள்ளத்தின் குறுக்கே அணைக்கட்டு கட்டுவதற்கு ரூபாய் 74 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(15) திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், பொன்னாத்தூர் கிராமத்தில் புளியங்குளம் வரத்துக் கால்வாயினை மேம்படுத்துதல் மற்றும் பொன்னாத்தூர் ஏரிக்குப் புதிய வாய்க்கால் அமைத்தல் திட்டத்திற்காக ரூபாய் 36 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(16) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேலசோலங்குப்பம் கிராமத்தில் மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்தினை நபார்டு வங்கிக் கடனுதவியுடன் ரூபாய் 17.54 கோடியில் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



(17) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆண்டியப்பனூர் கிராமத்தினருகில் ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்தினை ரூ.24.40 கோடியில் நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் துரிதப்படுத்தி முடிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(18) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளிமதுரை கிராமத்தினருகில் வாட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்தினை ரூபாய் 35.95 கோடியில் நபார்டு வங்கிக் கடன் உதவியுடன் துரிதப்படுத்தி முடிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(19) விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் புத்தானந்தல் அணைக்குப் புனரமைப்பு மற்றும் வரத்துக் கால்வாய் தூர் வாரும் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 30 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(20) திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டத்தில் வெரியப்பூர் கிராமத்தில் குட்டை அமைக்கும் திட்டத்திற்காக ரூபாய் 11 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(21) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொம்மராஜு பேட்டை கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு ரூபாய் 38 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(22) கோவை மாவட்டம், தம்பாகௌண்டம்பாளையம் கிராமத்தில் குட்டை அமைக்கும் திட்டத்திற்காக ரூபாய் 14.76 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(23) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சிக்கரசன்பாளையம் கிராமத்தில் குட்டை அமைக்கும் திட்டத்திற்காக ரூபாய் 32 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(24)* காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், கடலூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மழை பெய்யாததாலும், மேட்டூர் அணையிலிருந்து காவிரி நீர் திறந்து விட இயலாததாலும், அந்த மாவட்டங்களிலுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் துயர் துடைப்பதற்காக மாண்புமிகு அமமா அவர்கள் அறிவித்துள்ள சிறப்பு நிவாரணத் திட்டத்தின்படி உடனடி உதவிகள் செய்யவும், கால்வாய் மற்றும் குளங்களைத் தூர் வாரும் பணிகள் ரூபாய் 30 கோடி செலவில் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, திட்டம் நடைபெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*(25)* கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பேரம்பட்டு கிராமத்தில் பழைய கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டும் திட்டத்தை ரூபாய் 1.70 கோடியில் ஹட்கோ நிதியுடன் முடிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(26)* விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், நடுக்குப்பம் கிராமத்தில் வசிக்கும் மீனவர்களை, தீவிரக் கடலரிப்பின் அபாயத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, கடலரிப்புத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 90 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5-50*

**சென்னை நகரில் சென்ற ஆண்டு வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் நேரில் கண்டறிந்த பின்பு:—**

*(27)* கன மழையினால் வெள்ள நீரில் மூழ்கும் அபாயத்திலிருந்து சென்னை மாநகரின் மேற்குப் பகுதியைக் காக்கும் பொருட்டு விருகம்பாக்கம்—அரும்பாக்கம் வடிகால் மேம்பாட்டுப் பணிகளைச் செய்ய சுமார் ரூபாய் 3.31 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(28)* கன மழையினால் வெள்ள நீரில் மூழ்கும் அபாயத்திலிருந்து வேளச்சேரி விஜயநகரம் பகுதியைக் காக்கும் பொருட்டு, வேளச்சேரி



ஏரி முதல் பள்ளிக்கரணை ஏரி வரை வெள்ள நீர் வடிகால் அமைக்கும் பணிகளைச் செய்ய ரூபாய் 6.30 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(29)* கன மழையினால் வெள்ள நீரில் மூழ்கும் அபாயத்திலிருந்து சென்னை மாநகரின் வடக்குப் பகுதியைக் காக்கும் பொருட்டு ஓட்டேரி—நல்லா வடிகால் மேம்பாட்டுப் பணிகளைச் செய்ய ரூபாய் 85 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(30)* கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணையில் ஏற்கெனவே உள்ள பழுதுபட்ட தடுப்புப் பலகைகளுக்குப் பதிலாக புதிய தடுப்புப் பலகைகள் பொருத்தும் பணிக்கு ரூபாய் 23 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(31)* விருதுநகர் மாவட்டம், ஆணைக்குட்டம் அணையில் உள்ள பழுதுபட்ட தடுப்புப் பலகைகளைச் சீர் செய்யும் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 75.75 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(32)* காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் உயர்மட்டக் கால்வாயில் எஞ்சியுள்ள பணிகளை ரூ.1 கோடி செலவில் மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(33)* திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், செய்யார் ஆற்றின் குறுக்கே குப்பநத்தம் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்தினை ரூபாய் 41.35 கோடியில் நபார்டு கடன் உதவியுடன் விரைந்து முடிக்கும்படி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*(34)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில் பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே குளம் அமைக்கும் திட்டத்திற்காக ரூபாய் 4.50 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி

*(35)* ஒருங்கிணைந்த நீர் வள மேலாண்மைத் திட்டம்-கட்டம் I-இன்கீழ் ஹட்கோ கடனுதவியுடன் இராமநாதபுரம் மாவட்டத்தில்

நீர் ஆதாரங்களைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ள ரூபாய் 24.36 கோடி நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கட்டடப் பணிகள்—

(36) தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம், கட்டடங்கள் பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கு ரூபாய் 4 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(37) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் கட்டடங்கள் பிரிவு அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணிக்காக ரூபாய் 4 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(38) சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள பொதுப் பணித் துறை பிரதானக் கட்டடத்தில் அமைந்துள்ள தொழில்நுட்பக் கூடத்தைப் புதுப்பிக்கும் பணிக்கு ரூபாய் 15 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

(39) திருச்சி, சுற்றுலா மாளிகையில் கூடுதல் வசதிகள் செய்யும் பணிகளுக்காக ரூபாய் 5 இலட்சம் நிதி ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், திரு. கருணாகரன் அவர்கள் பேசும்போது, விளவங்கோடு—பூத்துறை சாலையில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காகக் கோரியிருக்கிறார்கள். விளவங்கோடு—பூத்துறை சாலையில் ரூபாய் 19.50 இலட்சத்தில் உயர்மட்டப் பாலம் கட்ட 1-4-2003 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் துவங்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை—கொல்கத்தா சாலையில், வியாசர்பாடியில் ரூபாய் 43 கோடியில் உத்தேசித்துள்ள இரயில்வே மேம்பாலப் பணி இரயில்வே துறையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தபின், அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



மேலும் மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது மதுரை ஆரச் சாலையின் மேம்பாடு பற்றிச் சொன்னார்கள். அந்தப் பணி-125 கிலோ மீட்டர் நீளத்திற்கு மதுரை ஆரச் சாலையின் மேம்பாட்டுப் பணி--முன்னேற்றத்தில் உள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 5-55

மதுரை எல்லிஸ் நகரில் இருக்கின்ற இரயில்வே மேம்பாலத்தைப் பற்றி அவர்கள் பேசும்போது எடுத்துச் சொன்னார்கள். எல்லிஸ் நகரில் இரயில்வே மேம்பாலத்திற்கான தள ஆய்வுகள் முடிந்து, வடிவமைப்பு தயார் செய்யப்பட்டிருகின்ற நிலையில் இருக்கின்றது. கூடிய விரைவில் ஒப்பந்தப் புள்ளி கோரப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சிங்காநல்லூர், காமராஜர் சாலை அரசு சாலையாக இல்லாததால், அதனை நெடுஞ்சாலைத் துறையால் மேம்பாடு செய்ய இயலாது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைபட்டிருக்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சிவராஜ் அவர்களின் கோரிக்கையாக, சில சாலைகளைப் பழுதுபார்ப்பதற்காகக் கேட்டிருந்தார்கள். பகண்டை சாலை, எடுத்தனூர் சாலை, ஆசனூர் சாலை, கடலூர்-சித்தூர் சாலை ஆகிய பழுதடைந்த சாலைகள் நடப்பாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த ரூபாய் 180 கோடி பராமரிப்பு நிதியிலிருந்து சீர் செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருக்கோவிலூர், சங்கராபுரம், வேங்கூர், நத்தாம்பூர் சாலைகளில் உள்ள தரைமட்டப் பாலத்தைச் சீர் செய்யக் கேட்டிருந்தார்கள். மேற்கண்ட தரைப் பாலத்தை ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பாண்டில் சீர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்புச் சாலைகளைப் பராமரிப்பது பற்றிச் சொல்லியிருந்தார்கள். அந்தக் கரும்புச் சாலைகளின் மொத்த நீளம் 1563 கிலோ மீட்டராக இருக்கின்றது. கரும்பு வரியின் மூலம் பெறப்படுகின்ற நிதி போதுமானதாக இல்லை என்ற காரணத்தினால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1563 கிலோ மீட்டர் நீளக் கரும்புச் சாலைகளை, மாவட்ட இதரசாலைகளாக

வகைப்படுத்துவதற்கு ஆணையிட்டிருக்கின்றார்கள். அந்த வகையில் அந்தச் சாலைகள் அனைத்தையும் மாவட்ட இதர சாலைகளாக வகைப்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள பெண்ணாகரம்—தருமபுரி—திருப்பத்தூர்—வாணியம்பாடி சாலையை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்துவதற்குப் பரிந்துரைக்க அனுப்பப்பட்டுள்ளது என்பதனைச் சொன்னார்கள். அந்தச் சாலையை மத்திய அரசுக்கு, தமிழக அரசின் சார்பாகப் பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றது. கூடிய விரைவில் அனுமதி கிடைக்கும். அந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குபேரப்பள்ளி சாலை, கல்லாவி சாலை, பாப்பிரெட்டிப்பட்டி சாலை ஆகிய சாலைகளில் பழுதடைந்த பகுதிகளை நடப்பாண்டில் சீர் செய்யப் பரிசீலனை செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் சொன்ன சித்தேரி சாலை வனப் பகுதியில் செல்வதால், நெடுஞ்சாலைத் துறை மூலம் மேம்பாடு செய்ய வனத் துறையின் அனுமதி பெற்று, ஆவன செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் எடப்பாடி தொகுதியில் பழுதடைந்த சாலைகளைப் பராமரிக்கக் கேட்டிருந்தார்கள். எடப்பாடி தொகுதியிலுள்ள பழுதடைந்த சாலைகள் போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில் முன்னுரிமை கொடுத்து, நடப்பாண்டில சீர் செய்யப்படும் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சிவபுண்ணியம் அவர்கள் சாலை விபத்துகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். சாலை விபத்துகளைத் தவிர்க்க, சாலை அறிவிப்பு மற்றும் எச்சரிக்கைப் பலகைகள், தடுப்புச் சுவர்கள், டிலினியேட்டர்கள்,



ரிஃப்ளெக்டர்கள் ஆகியவை சாலைகளில் பொருத்தப்படும் என்பதனையும், இது தவிர, மத்திய சாலை நிதித் திட்டத்திலும், தமிழ்நாடு சாலை மேமபாட்டுத் திட்டத்திலும் விபத்துப் பகுதிகளைத் தெரிவு செய்து மேம்பாடு செய்ய, ரூபாய் 7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேகத் தடைகளால் நேரும் விபத்துகளைத் தவிர்க்க, அவை போன்ற வேகத் தடைகளை உடனடியாக நீக்கும்படியும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தஞ்சை—மன்னார்குடி—வேதாரண்யம்—கோடியக்கரை சாலை கடந்த ஆகஸ்ட் 2001-ல் மாநிலச் சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. இச்சாலையின் போக்குவரத்துச் செறிவு 30,000-க்கும் குறைவாக உள்ளதால், தற்போது அந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(viii) அரசுப் பணியில் நியமனம் செய்ய வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிக்கு சமமான கல்வித் தகுதி நிர்ணயித்தல்/அங்கீகரித்தல் குறித்த கருத்துருவை அங்கீகரிப்புக் குழு முன் வைத்தல் மற்றும் மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடல்

**3. சட்டபூர்வமான செயல்பாடுகள்**

பணிகள் தொடர்பான கீழ்க்கண்ட சட்டமுறை விதிகளை இத்துறை நிருவகித்து வருகிறது:—

(அ) மாநில அரசின் அனைத்துத் துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்தும் பணி விதிகள் (இந்திய ஆட்சிப் பணி நீங்கலாக):—

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகள், 1987-இல் திருத்தியபடி (பொது விதிகள்)

(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973

(iii) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்

(iv) தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள், 1955

(ஆ) அனைத்து அரசுத் துறைகளுக்கும் உள்ள பொதுவான, சில குறிப்பிட்ட பணியாளர் வகையினரை முறைப்படுத்தும் பணி விதிகள்:—

(i) தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்

(ii) தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்

[2003 ஏப்ரல் 7

(iii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள் -இனம் 22.

(இ) தலைமைச் செயலகப் பணி

(i) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்.

(ii) தமிழ்நாடு பொதுப் பணி சிறப்பு விதிகள்- இனம் 12 மற்றும் 12ஏ.

(ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954.

4. **தமிழக அரசின் அலுவல்கள் தலைமைச் செயலகத்தில் கீழ்க்கண்ட விதிகளின்படி நடைபெற்று வருகின்றன:—**

(i) இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 166 உட்பிரிவு (2) மற்றும் (3)-இல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு ஆளுநரால் வெளியிடப்பட்டுள்ள 1978 ஆம் ஆண்டு அரசு அலுவல் விதிகளில் உள்ள விதிகள்;

(ii) தமிழ்நாடு அரசு அலுவல் விதி 63-இன்கீழ் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள்;

(iii) அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்;

(iv) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

**5. நிருவாகப் பணிகள்**

தலைமைச் செயலகத்தில் ஓர் அலகு முறை (One Unit System)-இன் கீழ் பணியாளர்களின் பணி அமைப்புப் பற்றி இத்துறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் ஆகியவற்றுக்கு இத்துறை நிருவாகத் துறையாகவும் விளங்குகிறது.



2003 ஏப்ரல் 7]

**6.** இத்துறை பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மன்றக் கூட்டங்களை நடத்துவது குறித்து கவனித்து வருகிறது.

**7. நிருவாகச் சீர்திருத்தங்கள்**

(அ) மாநில அரசின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்காகவும், திறமை, நேர்மை, நம்பகத் தன்மை, மக்கள் நேய அரசுப் பணி ஆகியவற்றில் சாதனை எய்த நிருவாக நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்காகவும், வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதிச் செயலர் தலைமையில் "செயலாளர்கள் குழு" ஒன்றை அரசு அமைத்துள்ளது. இக்குழு, மனித வள மேம்பாடு, தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், அலுவலகத்தை நவீனமயமாக்குதல் ஆகியவற்றை மேம்படுத்த ஆய்வு செய்து வருகிறது. அரசின் நிருவாகச் செயல்பாடுகளை ஒருமுகப்படுத்தி திறமையான, நேர்மையான மற்றும் பொறுப்புள்ள சேவையை மக்களுக்கு அளிப்பதற்கென அரசு அலுவலகங்களில் பின்பற்றப்பட வேண்டிய கீழ்க்கண்ட சில வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது:—

(ஆ) கோப்புகளை ஆய்வு செய்து இறுதி முடிவு எடுப்பதில் செலவிடும் நேரத்தைக் குறைக்கும் முகமாக "நிலை தாண்டுதல்" (Level Jump) முறையை, மார்ச் திங்கள் 2002-இல் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, பிரிவுகளில் பரிசீலிக்கப்படும் கோப்புகள் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை. மாறாக, இடைநிலை அலுவலர்களைத் தவிர்த்து உயர் அலுவலர்களுக்கு ஆணை வேண்டி சமர்ப்பிக்கலாம். தலைமைச் செயலகத்திலுள்ள ஒவ்வொரு துறையும், எந்தெந்த வகையான கோப்புகள் எந்தெந்த அலுவலர்களால் தன்னாண்மையாகப் பரிசீலித்து முடிவெடுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்துகொள்ள வேண்டும். உதாரணமாக, உதவிப் பிரிவு அலுவலர், சார்புச் செயலாளருக்கும், பிரிவு அலுவலர், துணைச் செயலாளருக்கும், சார்புச் செயலாளர், செயலாளருக்கும் கோப்புகளைச் சமர்ப்பிக்கலாம்.

(இ) அரசின் நிருவாகச் செயல்பாடுகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தவும், தலைமைச் செயலகத்தில் கோப்புகளில் துரித நடவடிக்கை எடுத்து உரிய ஆணைகள் வெளியிட ஏதுவாகவும்,

[2003 ஏப்ரல் 7

தலைமைச் செயலகத்துக்கும், சென்னை நகரில் அமைந்துள்ள துறைத் தலைமையகங்களுக்குமிடையே "ஒற்றைக் கோப்பு முறையை" அறிமுகப்படுத்தி இத்துறையால் நவம்பர் திங்கள், 2002-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இம்முறையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது குறித்து பின்னர் ஆய்வு செய்யப்படும். இம்முறையைக் கீழ்க்காணும் நேர்வுகளில் கடைப்பிடிக்கலாம்:

(i) திட்டங்கள்

(ii) பணி நியமனம் மற்றும் பணியாளர் மாற்றங்கள்

(iii) பதவி உயர்வு பட்டியல் தயாரித்தல்

(iv) அரசு ஊழியர்கள் நடத்தை விதிகளின்கீழ் அனுமதி வழங்குதல்

(v) சம்பள நிர்ணயம் மற்றும் சம்பளம் திருத்தியமைத்தல்

(vi) தற்காலிகப் பணியிடங்களை மேலும் தொடர ஒப்பளித்தல் மற்றும் அவற்றை நிலையான பணி இடங்களாக மாற்றுதல்

(vii) துறைத் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அலுவலர்களின் கட்டாய ஓய்வு நேர்வுகளை அடிப்படை விதி 56(2)-ன்கீழ் ஆய்வு செய்தல்

(ஈ) ஒரே வேலையை மீண்டும், மீண்டும் செய்வதைத் தவிர்த்தல், காலவிரயம் மற்றும் அரசளவில் கோப்புகளில் விரைவாக முடிவெடுத்தல் ஆகியவற்றிற்காக கீழ்க்கண்ட நேர்வுகளில் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைச் செயலர் சுற்றோட்டக் குறிப்பு இல்லாமலேயே, கோப்பிலேயே தன் கருத்தைத் தெரிவித்து நேரடியாக சம்பந்தப்பட்ட அமைச்சருக்குக் கோப்பினை அனுப்பி ஆணை பெறலாம் என நவம்பர் திங்கள் 2002-ல் ஆணை வெளியிடப்பட்டது.

(அ) தகவலுக்காக அமைச்சர்களுக்கு அனுப்பப்படும் நேர்வுகள்;

(ஆ) துறைத் தலைவர்களின் கருத்துகள் ஏற்கப்பட்டு பிற துறைகளுடன் கலந்தாலோசிக்கப்படத் தேவையில்லாத நேர்வுகள்;

(இ) பணியாளர்களின் பணி நியமனம் மற்றும் மாற்றங்கள்;



2003 ஏப்ரல் 7]

(ஈ) சட்டமன்ற வினாக்கள் மற்றும் சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட உறுதிமொழிகள்;

(உ) கொள்கை அல்லது நிதிச் செலவுகள் இல்லாத நேர்வுகள்;

(ஊ) கோப்புகள் முடிக்கும் வாரம்.

வெளிப்படையான, நேர்மையான, திறமையான நிருவாகம் அளிக்கும் பொருட்டு, குறையீடு மனுக்களைப் பெற்று, 5 நாட்களில் ஒப்புகைச் சீட்டு அனுப்ப வேண்டும் என்றும், 90 நாட்களில் மனுக்களை முடித்து, மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் அரசு அறிவுறுத்தியுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியரும் திங்கட்கிழமை தோறும் "மக்கள் குறை கேட்கும் நாள்" நடத்துவதைப் போல், "கோப்புகள் முடிக்கும் வாரம்" நடத்த வேண்டும்.

**8. தகவல் நிலையங்கள்**

(1) அனைத்து அரசுத் துறைகளும், தங்கள் துறை சம்பந்தப்பட்ட அரசு நலத் திட்டங்கள் மற்றும் அரசு நடைமுறை பற்றிய விவரங்கள் கணிப்பொறியில் தேசிய தகவல் மையம் மூலம் மக்களைச் சென்றடைகிறதா என உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அரசின் ஆணைப்படி, சென்னை மாநகரில் 10 அரசு அலுவலகங்களில் தகவல் நிலையங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

(2) தகவல் மற்றும் சேவை மையம்

அனைத்து தலைமைச் செயலகத் துறைகளுக்கும், மாவட்ட ஆட்சியர்களுக்கும் அரசு நடைமுறைகளை மக்கள் புரிந்துகொள்ளவும், தங்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலையைத் தெரிந்து கொள்ளவும் தகவல் மற்றும் சேவை மையம் திறக்க வேண்டுமென்ற அரசின் ஆணைக்கேற்ப தகவல் மையங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களில் இயங்கி வருகின்றன.

(3) மக்கள் சாசனம்

ஒவ்வொரு அரசுத் துறையும் கீழ்க்கண்ட விவரங்களை உள்ளடக்கி மக்கள் சாசனத்தை உருவாக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது:—

[2003 ஏப்ரல் 7

(i) மக்களுக்கு அளிக்கப்படும் பணிகள் குறித்து பதில் சொல்லும் பொறுப்பையும், ஒளிவு மறைவற்ற தன்மையையும் உறுதி செய்ய வேண்டும்;

(ii) பொது மக்கள் தங்கள் உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்கான விழிப்புணர்வையும் மற்றும் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரங்களை அறிந்துகொள்ளும் நிலையையும் அதிகரிக்கச் செய்ய வேண்டும்;

(iii) திட்டப் பணிகளுக்கு அடிப்படையாக உள்ள சிறந்த பொதுப் பணிக் கோட்பாடுகளைக் காலத்திற்கேற்றவாறு அமைக்க வேண்டும்.

மேற்கூறிய கோட்பாடுகளை உள்ளடக்கி "கையேடு" ஒன்று தயாரித்து, அனைத்துத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டது. அனைத்துத் துறைகளும் மக்கள் சாசனப் பிரதிகளைக் கொள்கை விளக்கக் குறிப்புடன் சட்டமன்றப் பேரவைமுன் வைக்க வேண்டும். தலைமைச் செயலகத்தில் 27 துறைகளும்/சில அரசு நிறுவனங்களும் கொள்கை விளக்கக் குறிப்புடன் மக்கள் சாசனத்தை 2002-2003 ஆம் ஆண்டு, சட்டமன்றப் பேரவைமுன் வைத்துள்ளன. துறைகளின் மக்கள் சாசனத்தை இவ்வரசின் www.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம். மக்கள் சாசனம் தயாரிப்பதிலிருந்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், திட்டம் மற்றும் வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு மேம்பாடு, பொது சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய ஏழு துறைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம், இத்துறைகளுக்கு மக்களுடன் நேரடித் தொடர்பு இல்லை என்பதுதான்.

**9. பணி விதிகளைக் கணினிமயமாக்கல்**

(i) தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளாலும் நிருவகிக்கப்படும் இதுநாள் வரையிலான பணி விதிகளை எளிதாகப் பார்வையிட அனைத்துப் பணி விதிகளை கணினிமயமாக்கவும், மற்றும் ஒரு "பார்வை வங்கி" (Reference Bank) உருவாக்கவும் இத்துறையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து பணி விதிகளும் முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன.



2003 ஏப்ரல் 7]

(ii) இத்துறை சார்ந்த ஆண்டு வரவு-செலவு அறிக்கை, மறு மதிப்பீடு, இறுதியான திருத்திய ஒதுக்கீடு மற்றும் பகுதி-2 திட்டங்கள் நிதித் துறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

(iii) கூடுதல் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், சார்புச் செயலாளர்கள், பிரிவு அலுவலர்கள், தனிச் செயலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியவர்களின் பணியாளர் தொகுதிப் பட்டியல்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

(iv) பணி விதிகள், திருத்தங்கள், அரசு ஆணைகள், சம்பளப் பட்டிகள், ஏ.பி.சி.டி., பணியாளர்கள் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(v) பொது மக்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட அரசாணைகள், கடிதங்கள், பணி விதிகள் போன்றவை "தலைமைச் செயலக வலை" மற்றும் "தமிழ்நாடு அரசின் இணையதளத்தில்" பதிவு செய்யப்படுகின்றன.

(vi) தகவல் தொழில்நுட்பத் துறையின் கருத்துக்கு ஏற்ப பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கென தனியாக ஒரு "வலைத்தளம்" (Website) ஏற்படுத்தும் குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

(vii) தலைமைச் செயலகத் தகவல் முறை (Secretariat Knowledge System) இத்துறையில் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**10. தலைமைச் செயலக அலுவலர்களுக்குப் பயிற்சி**

தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு, அதாவது, பிரிவு அலுவலர்கள், சார்புச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் மற்றும் இணைச் செயலாளர்களுக்கு (இந்திய ஆட்சிப் பணி அல்லாத) அண்ணா மேலாண்மை நிறுவனத்தில் பயிற்சி அளிக்க வேண்டுமென்று மார்ச் திங்கள் 2003-ல் இத்துறை ஆணைவெளியிட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம்

(அ) நிருவாகத் தீர்ப்பாயச் சட்டத்தின் பிரிவு 4(2)-ன்படி தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயம் ஒரு நடுவர் ஆயமன்றத்துடன் 12-12-1988 அன்று நிறுவப்பட்டது. 20-07-1990 அன்று இரண்டாவது நடுவர் ஆயமன்றம் ஏற்படுத்தப்பட்டது. இத்தீர்ப்பாயத்தில் வழக்குகளின் நிலுவை 28-2-2003 அன்றைய நிலவரப்படி 31,596 ஆகும்.

(ஆ) 1997 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, தீர்ப்பாயத்தின் ஆணைகள் உயர் நீதிமன்றத்தின் ஆய்வுக்கு உட்பட்டதாகும். ஆகவே, அரசுப் பணி சம்பந்தப்பட்ட வழக்குகளில் மூன்றடுக்கு நீதிமன்ற அமைப்பு ஏற்படும் (தீர்ப்பாயம், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம்) நிலை உள்ளது. அரசுப் பணி சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு ஈரடுக்கு நீதிமன்ற அமைப்பே (உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றம்) போதும் என்று இந்த அரசு முடிவெடுத்தது.

(இ) எனவே, 1985 ஆம் ஆண்டைய நிருவாகத் தீர்ப்பாயச் சட்டத்திற்கு உரிய திருத்தம் செய்து தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தைக் கலைத்து விடலாம் என 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்த அரசு கொள்கை முடிவெடுத்தது. அதன்படி தீர்ப்பாயத்தைக் கலைக்க மேற்படி சட்டத்திற்கு உரிய திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று 12-6-2001 ஆம் நாளிட்ட அரசுக் கடிதத்தில் மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இந்த அரசின் கருத்துருமீது அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டுவிட்டதாகவும், பாராளுமன்றத்தில் இது குறித்த சட்டமுன்வடிவு தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும், 25-7-2002 மற்றும் 21-1-2003 ஆம் நாளிட்ட கடிதங்களில் மத்திய அரசு இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது.

## 12. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பும், பணிகளும்

(1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளை சுயமாகவும், சீராகவும், பாகுபாடு இன்றியும் செயல்படும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத் தேர்வாணையம்



தலைவர் மற்றும் பதினொன்று உறுப்பினர்களைக் கொண்டது. இத் தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பணி நிலைகள் 1954 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

(2) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 320-ல் கூறப்பட்டுள்ள கடமைகள் மற்றும் அலுவற்பணிகளை ஆற்ற வேண்டும்.

(i) பணியாளர்களைத் தெரிவு செய்தல் இத் தேர்வாணையத்தின் தலையாய பணியாகும்.

(ii) பதவி உயர்வுகள் அளிப்பது, ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றல்கள் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள் ஆகியன குறித்து ஆலோசனை வழங்கும் குழுமமாகவும் தேர்வாணையம் செயல்படுகிறது.

(iii) பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகள் இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றல்கள் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள், அரசுப் பணியாளர்களின் ஒழுங்கு முறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு ஆகியன குறித்த எல்லாவற்றிலும் தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது.

(iv) அரசுப் பணியாளர்களுக்கான சிறப்புத் தேர்வுகள் மற்றும் துறைத் தேர்வுகளைத் தேர்வாணையம் நடத்துகிறது.

(v) டேராடூன் இந்திய பாதுகாப்புக் கல்லூரிப் பள்ளியில் நுழைவுத் தேர்வுகளை மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாகத் தேர்வாணையம் நடத்துகிறது.

(3) சம்பளம், படிகள் மற்றும் ஓய்வூதியம் உட்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனைத்து செலவினங்களும் மாநில அரசு தொகுப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. தேர்வாணையத்தின் ஆண்டறிக்கை ஆண்டுதோறும், தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்ட இனங்கள் ஏதும் இருப்பின் அதற்கான விளக்கக் குறிப்புடன், சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

[2003 ஏப்ரல் 7

## 13. மாநில விழிப்புப் பணி ஆணையம்

(1) மாநில விழிப்புப் பணி ஆணையம் 1965 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அரசுப் பணியில் ஊழலைத் தடுப்பதற்கு வகை செய்தல் மற்றும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் தனிப்பட்ட நபர்களின் மீதான ஊழல் போன்றவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவை போன்ற மாநில நிருவாகப் பிரச்சினைகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குவது விழிப்புப் பணி ஆணையத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

(2) அரசின் எந்த ஒரு நடவடிக்கையிலும் சந்தேகப்படும்படியான முறையிலோ மற்றும் தவறான அல்லது ஊழலுக்கு வழிவகுக்கும் விதத்திலோ ஈடுபட்டிருக்கும் அரசுப் பணியாளர்மீது விசாரணை மேற்கொள்ள மாநில விழிப்புப் பணி ஆணையத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## 14. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரகம்

(1) 1988 ஆம் ஆண்டைய ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பொது ஊழியர்கள் ஈடுபடும் ஊழல் குற்றச்சாட்டுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(2) பொது நிருவாகத்தில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கென அமைப்பு ரீதியான முதல் நடவடிக்கையாக தமிழ்நாடு அரசு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்ககத்தை 1964 ஆம் வருடத்தில் தனியானதொரு துறையாக உருவாக்கியது.

(3) மாநில அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பொது ஊழியர்கள் தங்களது பணிகளை நிறைவேற்றும்போது ஏற்படும் குறிப்பிடத்தக்க ஊழல் மற்றும் இதர குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை மற்றும் புலனாய்வுகளையும், மாநில அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பொது நிறுவனங்களைச் சார்ந்த ஊழியர்கள் மற்றும் 1988 ஆம் வருடத்திய ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி விரிவாக்கப்பட்ட "பொது ஊழியர்கள்" என்ற சொற்களின்படி இதர நிறுவனங்களில் உள்ள பொதுப் பணி புரியும் ஊழியர்கள் ஈடுபடும் ஊழல் குற்றங்கள் குறித்தும் விசாரணை செய்ய இவ்வியக்குநரகம் நடவடிக்கை மேற்கொள்ளுகிறது. இவ்வியக்குநரகத்தின் முக்கியப் பணிகளுள் ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து தகவல்கள் சேகரிப்பதும் அடங்கும். மாநில விழிப்புப் பணி



2003 ஏப்ரல் 7]

ஆணையத்தின் பணிகளில் உதவி புரிகின்ற முக்கியமான புலனாய்வு அமைப்பாக இவ்வியக்ககம் செயல்பட்டு வருகிறது. கூடுதல் காவல் துறைத் தலைவர் நிலையில் ஒரு இயக்குநரைத் தலைவராகவும், அவருக்குத் துணையாக காவல் துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம் ஆகியவற்றிலிருந்து தருவிக்கப்படும் காவல் துறை அதிகாரிகளையும் சட்ட ஆலோசகர்களையும் கொண்டு இவ்வியக்ககம் செயல்பட்டு வருகிறது.

(4) ஊழல் தடுப்பு மற்றும் ஒழுக்கக் கண்காணிப்பு இயக்குநரிடமிருந்து பெறப்படும் விசாரணை அறிக்கைகளை விழிப்புப் பணி ஆணையம் ஆய்வு செய்து அவ்வறிக்கைகள்மீது மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையான நடவடிக்கைகளையும், அதன் மூலம் அந்தந்தத் துறைகளில் ஊழலைத் தடுக்கும் வகையில் தொடர்புடைய தலைமைச் செயலகத் துறைகளுக்கு அறிவுரையையும் வழங்கி வருகிறது.

(5) சிறந்த முடிவுகளை எதிர்நோக்கி புலனாய்வின் வழிமுறைகளை முன்னேற்றும் பொருட்டு ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறையில் செயற்பட்டு வரும் புலனாய்வு அலுவலர்களுக்கும், சில பணியாளர்களுக்கும் அடிப்படை ஊதியத்தில் 15 விழுக்காடு சிறப்பூதியமாக, ஆண்டு தொடரும் செலவினம் ரூ. 55,74,290 என்ற வகையில் கடந்த ஆண்டு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும் ரூபாய் 24 இலட்சம் செலவில் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறைக்கு மின்னணு இயந்திரங்களான கணினிகள், நிகரி இயந்திரம் மற்றும் நிழற்படக் கருவிகள் போன்றவை வாங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இது மட்டுமன்றி, 2002 ஆம் ஆண்டில் 40 மகேந்திரா போலேரோ ஈப்புகள் 'DGSD' விலையில் வாங்குவதற்கு ரூ. 1 கோடி 60 இலட்சம் செலவில் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. முன்பு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் அலுவலகம் ஒரு தனியார் கட்டடத்தில் அதிகமான வாடகையில் இயங்கி வந்தது. சென்னை அடையாறு குமாரசாமி ராஜா சாலையில் அமைந்துள்ள அரசுக் கட்டடத்திற்கு ரூ. 9.32 இலட்சம் செலவினத்தில் மாற்ற அரசு ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் அலுவலகம் தற்போது அங்கு இயங்கி வருகிறது.

**15. ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றங்கள்**

26-09-1996 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அரசாணை (நிலை) எண் 358-ன்படி, இம்மாநிலத்தில் 10 ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றங்கள் இயங்கி வருகின்றன. இம்மன்றங்கள் சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய 10 இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றமும், நீதி முறை சார்புடைய மன்றமாக இயங்கி வருகிறது. இம்மன்றங்களில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் அல்லது மாவட்ட வருவாய் அதிகாரிகள், ஒழுங்கு நடவடிக்கை ஆணையாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர். தமிழ்நாடு குடிமைப் பணி (ஒழுங்கு நடவடிக்கைகள் மன்றம்) விதிகள், 1955-ன்கீழ், ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றங்களுக்கு அரசினால் அனுப்பப்படும் அல்லது மாற்றப்படும் வழக்குகளை விசாரணை செய்து, அவ்விசாரணையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன அல்லது நிரூபிக்கப்படவில்லை என்று கண்டறியப்பட்டு, அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

**16. பயிற்சி**

நிருவாகத்தைச் செம்மைப்படுத்தவும், அரசுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தவும், அரசு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியது இன்றியமையாததாகும். அரசுப் பணியாளர்கள், நடைமுறையில் இருக்கும் விதிகளை அறிந்து அவர்களின் செயல் திறன் மற்றும் முடிவு எடுக்கும் திறனை வளர்ப்பதில், பயிற்சி பெரும் பங்கு வகிக்கிறது. அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவருக்கும் பயிற்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் ஐந்து பயிற்சி நிலையங்களின் வாயிலாக பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிப் பிரிவானது பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி) துறைச் செயலரின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது.

(2) தலைமைச் செயலகப் பயிற்சி நிலையத்தில், நடைமுறைக்கான அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுவதுடன் அலுவலக முறை நடவடிக்கைகளுக்கான பயிற்சியும் ஒழுங்கு நடவடிக்கைக்கான பயிற்சியும் நீதிமன்ற/தீர்ப்பாய பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது. தலைமைச் செயலகப் அலுவலர்களுக்கு 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையத்தில் பயிற்சி



அளிக்கப்படுகிறது. பவானிசாகர் குடிமுறை அரசுப் பணி பயிற்சி நிலையத்தில் 'இ' மற்றும் 'ஈ' பிரிவு அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சியும், துணை வட்டாட்சியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

(3) மேலும், 2002-2003 நிதியாண்டில், தலைமைச் செயலக அலுவலர்களான இணைச் செயலர், துணைச் செயலர், சார்புச் செயலர் மற்றும் பிரிவு அலுவலர்களுக்கு அவர்களது அறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, நல்லுறவு இணக்கம், பொருளாதார சீர்திருத்தம், மனித உரிமைகள், தொடக்க நிலை வரவு-செலவுத் திட்டம், மேலாண்மை நுட்பம், நிருவாகத் திறன், ஏற்புத் தன்மை நிருவாகம், செயலாக்கம், திட்டத் திறனாய்வு மற்றும் கண்காணிப்பு ஆகிய இனங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(4) பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெற அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் மூலமாக தீவிரப் பயிற்சியளிக்கப்படுகிறது. இதில் தொடக்க நிலைத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வுக்குத் தேவையான பயிற்சிகளுடன், அவர்கள் நேர்காணல் தேர்வினை எதிர்கொள்ளும் வகையில் மாதிரி நேர்காணல் தேர்வும் நடத்தப்படுகிறது. இப்பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படுவதுடன், பயிற்சி பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் முறையே ரூ.50,000-க்கும், ஆதிதிராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,920-க்கும் உட்பட்டுள்ளதாக இருப்பின் இலவச உணவு மற்றும் உறைவிடம் அளிக்கப்படுகிறது. கடந்த 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் இப்பயிற்சி நிலையத்தில் பயின்றவர்களின் தேர்ச்சி சிறப்பான முறையில் அமைந்துள்ளது. இவ்வாண்டுகளில் 2001 ஆம் ஆண்டில் 23 மாணவர்களும், 2002 ஆம் ஆண்டில் 28 மாணவர்களும் முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

(5) தற்கால விஞ்ஞானத்தில் கணினியை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பம் பெருகி வரும் நிலையில் கணினி குறித்த தொழில்நுட்பத்தை அறிந்து கொள்ளும் வகையில் அரசுப் பணியாளர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையம் பல கணினிப்

பயிற்சிகளை அளித்து வருகிறது. இதற்காக 2003-2004-ல் இப்பயிற்சி நிலையங்களுக்கு மேலும் கணினிப் பொறிகள் வாங்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

(6) 1974 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி ஒவ்வொரு ஆண்டும் 6 அணிகளாக அமைக்கப்பட்டு பவானிசாகர் அரசு அலுவலகப் பயிற்சி நிலையத்தில் 60 நாட்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இப்பணியாளர்களின் 'தகுதிகாண் பருவம்' பூர்த்தி செய்ய, இந்த அடிப்படைப் பயிற்சியில் தேர்வு பெறுவது அவசியமாகும். அமைச்சுப் பணியில் தற்போது பயிற்சி பெற வேண்டிய அரசு ஊழியர்களின் எண்ணிக்கை 4,711 ஆக உள்ளது. இப்பயிற்சியில் ஏற்பட்ட பின்னடைவினைக் களையும் பொருட்டும், இவர்களுக்கு இப்பயிற்சி அளிப்பதைத் துரிதப்படுத்தும் பொருட்டும், அரசு அலுவலர் பயிற்சி நிலைய முதல்வரின் கண்காணிப்புக்குட்பட்டு சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாக 35 நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட பயிற்சியளிக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை 1,069 பேர் பயிற்சி பெற்றுள்ளனர்.

(7) மேலாண்மைப் பயிற்சிகள் மற்றும் 'அ' மற்றும் 'ஆ' நிலை அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சிகள் முறையே 'காஞ்சி' மற்றும் 'திருவரங்கம்' கட்டங்களிலும், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம், சென்னை, அண்ணா நகரில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 'மாற்றுக் குடியிருப்பிலும்', பயிற்சித் துறை இயக்குநர் மற்றும் அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் அனைத்தும் ஒரே வளாகத்தில் இயங்கும் பொருட்டு அனைத்துப் பயிற்சி நிலையங்களுக்கும் பொதுவான கட்டடத்தை நிர்மாணிக்க வேண்டி வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூ.10 கோடி செலவில் "கட்டட வளாகம்" அமைக்க அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநருக்கு அரசு அனுமதியளித்துள்ளது.

### 17. ஆய்வுத் துறை

(1) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் ஆய்வுப் பிரிவுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைச் செயலர் (பயிற்சி) அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. ஆய்வுப் பிரிவுகள் மூன்று உள்ளன. இரண்டு பிரிவுகள், துணைச்



செயலர்களின் மேற்பார்வையிலும், ஒரு பிரிவு மாவட்ட வருவாய் அலுவலரின் மேற்பார்வையிலும் உள்ளன. மாவட்ட அளவில் 11 மாவட்ட ஆய்வு அலுவலர்கள் துணை ஆட்சியர் நிலையில் சில பணியாளர்களுடன் இயங்கி வருகின்றனர்.

(2) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் உள்ள மூன்று ஆய்வுப் பிரிவுகளும், துறைத் தலைமை அலுவலகங்களையும், தலைமைச் செயலகத் துறைகளையும் ஆய்வு செய்வதுடன், முன்னோடிப் பயிற்சியையும், குறுகிய காலப் பயிற்சியையும் முறையே 'ஏ' மற்றும் 'பி' மற்றும் 'சி' பிரிவு அலுவலர்களுக்கு நடத்துகின்றன. ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கம், தூய்மையான மற்றும் செம்மையான வகையில் நிருவாகத்தை மேம்படுத்துவதாகும். மாநிலம் முழுவதிலும் உள்ள அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் நிருவாக நடைமுறைகளிலும் மற்றும் பணி விதிகளிலும் தெளிவூட்டுவதற்கும், அறிவூட்டுவதற்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

(3) தலைமைச் செயலகத்தில் உள்ள மூன்று ஆய்வுப் பிரிவுகளும், ஒவ்வொரு நிதி ஆண்டிலும் 30 ஆய்வுகளையும். முன்னோடி மற்றும் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளையும் நடத்துகின்றன. மாவட்ட அளவிலான 11 மாவட்ட ஆய்வு அலுவலர்கள் 132 விரிவான ஆய்வுகளையும், 2,720 திடீர் ஆய்வுகளையும் 2001-02 ஆம் நிதியாண்டில் செய்துள்ளனர். 2002-03 ஆம் நிதியாண்டிற்கு மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக்களின் செயல்பாடுகளுக்கும் முன்னோடி மற்றும் குறுகிய காலப் பயிற்சி வகுப்புகள் நடத்திடவும் ஆகும் செலவு ரூ. 90,50,000 ஆகும்.

### 18. அமைப்பு மற்றும் செயல் முறைக் குழு

(1) அரசின் பல்வேறு துறைகளின் நடைமுறைகளைச் சீர்திருத்தம் செய்வது, பணி அளவீட்டின்படி தேவையான பணியாளர்களை (மனித சக்தி) நிர்ணயம் செய்வது மற்றும் சிக்கன நடவடிக்கைகளை அமல்படுத்துவது ஆகியவைகள், அமைப்பு மற்றும் செயல் முறைப் பகுதியின் நோக்கமாகும். கீழ்க்கண்டவைகள் அமைப்பு (மற்றும்) செயல் முறைப் பகுதி ஆராய்ச்சியின் முக்கிய இலக்குகளாகும்:-

(1) பணியாளர்களை (மனித சக்தி) நிர்ணயம் செய்வது.

(2) வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை எளிதாக்குதல்.

[2003 ஏப்ரல் 7

(3) அரசுத் துறைகளில் செயல் திறன் மற்றும் சிக்கன நடவடிக்கைகளை அமலாக்குதல்.

(4) அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல், மற்றும்

(5) பதிவுருக்களை நன்முறையில் பராமரித்தல்.

(2) அமைப்பு மற்றும் செயல் முறைப் பகுதியில் தற்பொழுது இரண்டு நிருவாகக் குழுக்கள் பணியாற்றி வருகின்றன. ஒரு நிருவாகக் குழுவிற்கு அரசின் சார்புச் செயலர் தலைமை ஏற்று வழி நடத்துகிறார். மற்றொரு நிருவாகக் குழுவிற்கு அரசு துணைச் செயலர் தலைமை ஏற்று வழி நடத்துவதோடு, அமைப்பு மற்றும் செயல் முறைப் பகுதியின் அனைத்து குழுக்களும் (மேற்பார்வைக் குழுவும் உள்பட) அவரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. மேற்பார்வைக் குழு ஒன்று ஆராய்ச்சி அலுவலர் மற்றும் ஒரு உதவி பிரிவு அலுவலரையும் கொண்டுள்ளது. இது இக்குழுவின் அறிக்கைகள்மீது தொடர் நடவடிக்கைகள் எடுப்பதைக் கண்காணிப்பதோடு, இப்பகுதிக்குத் தேவையான அலுவலக நடைமுறைகளையும் செய்து வருவதோடு இப்பகுதிக்கான தனி நிதி ஒதுக்கீடு தயார் செய்யும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. இப்பகுதியில் ஏற்கனவே இயங்கிவந்த பொறியியல் குழு 18-10-2002 அன்று முதல் கலைக்கப்பட்டது. அரசுச் செயலர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை (பயிற்சி) அவர்களின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின்கீழ், இக்குழுக்கள் அனைத்தும் இயங்கி வருகின்றன.

(3) தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் மற்றும் துறைத் தலைவர்களுக்கும், அவர்களது துறைகளில் நிருவாகச் சிக்கல் இருப்பின், அதன் அடிப்படையில் அமைப்பு மற்றும் செயல் முறைக் குழுவின் ஆராய்ச்சி தேவையா என்று ஒவ்வோர் ஆண்டும் கேட்கப்படுகிறது. கோரிக்கையின் அடிப்படையில் ஒரு செயல் திட்டம் தயாரித்து, ஒவ்வொரு குழுவிற்கும் ஆராய பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதன்படி, ஒவ்வொரு குழுவும் தனக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பொருள் குறித்து தீர ஆராய்வு மேற்கொள்ளுகிறது. அரசுத் துறைகளில் பணியாற்றும் பணியாளர்களின் பணி அளவீடு, பணி அளவீட்டின் நிர்ணயம் மற்றும் பணியாளர்களின் ஒட்டுமொத்தச் செயல் திறனை மேம்படுத்துதல் குறித்தும் இக்குழு ஆய்வு அறிக்கைகள் தயாரித்து வருகின்றன. அமைப்பு மற்றும் செயல் முறைப் பகுதியில் உள்ள குழுக்கள் இதுவரையில் 224 ஆய்வு அறிக்கைகள் தயார் செய்து,



2003 ஏப்ரல் 7]

சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அவற்றை நடைமுறைபடுத்த அனுப்பியுள்ளது.

(4) அமைப்பு மற்றும் செயல் முறைக் குழுவிற்கு என தனியானதொரு நிதி ஒதுக்கீடு உள்ளது. இந்தக் குழுவிற்கான 2002-2003 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீடு முறையே ரூ.41,39,000 மற்றும் ரூ.37,88,000 ஆகும். 2001-2002 ஆம் ஆண்டின் செலவினம் ரூ.32,93,000 ஆகும்:

## 19. 2003-2004 ஆம் ஆண்டுக்கான பகுதி-2 திட்டங்கள்:

2003-2004 ஆம் ஆண்டுக்கான கீழ்க்கண்ட பகுதி-2 திட்டங்கள் நிதி நிலைக் குழுவால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | திட்டங்களின் விவரம். | 2003-2004-ஆம் ஆண்டிற்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கான புதிய இணைய தளத்தினை உருவாக்குவதற்கும், தொடர்ந்து பாரமரிப்பதற்கும் தேவையான 7 கணிப்பொறிகள் மற்றும் இதர பாகங்களும் மற்றும் ஒரு ஒளி நகல் இயந்திரமும் வாங்குதல் | 6.62 |
| 2. | அகில இந்தியக் குடிமைப் பணி பயிற்சி மையத்திற்கு 5 கணினிகள் வாங்குதல் | 2.00 |
| 3. | அகில இந்தியக் குடிமைப் பணி பயிற்சி மையத்திற்கும் பாத்திரங்கள் மற்றும் 50 மின் விசிறிகள் வாங்குதல் | 1.00 |
| 4. | அகில இந்தியக் குடிமைப் பணி பயிற்சி மையத்திற்கு நூலகப் புத்தகங்கள் வாங்குதல் | 1.00 |
| 5. | பவானிசாகரில் இயங்கி வரும் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தின் கணினி பயிற்சிக்காக 20 கணிப்பொறிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல் | 10.00 |
| 6. | அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு நகல் இயந்திரம் வாங்குதல் | 1.50 |
| | மொத்தம் | 22.12 |

## 20. வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்



அந்தந்தத் தலைப்புகளுக்கான 2001-2002 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள், 2002-2003 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் ஒதுக்கியுள்ள தொகை, 2003-2004 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவுத் திட்ட ஒதுக்கல் தொகை ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன:



(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | 2001-2002 கணக்குகள் | 2002-2003 திருந்த மதிப்பீடு | 2003-2004 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 1. | 2052 | பணியாளர்-நிருவாகச் சீர்திருத்தத் துறை | 43178 | 43289 | 49333 |
| 2. | 2070 | புதுடில்லி, இந்தியப் பொது நிருவாக நிறுவனத்திற்கு மானியங்கள் | 300 | 100 | 100 |
| 3. | 2075 | தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்திற்கு உதவி | 0 | 5 | 5 |
| 4. | 2075 | பணியாளர்களை அமர்த்திக் கொள்ளும் செலவிற்காகத் தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்திற்கு நிதியுதவி | 2 | 2 | 2 |
| 5. | 2075 | மனமகிழ் பணிகளுக்காக தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கத்திற்கு நிதியுதவி | 2 | 2 | 2 |
| 6. | 2075 | தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்/அடிப்படைப் பணியாளர் சங்கத்திற்கு நிதியுதவி | 2 | 2 | 2 |
| 7. | 2075 | தமிழ்நாடு அரசுத் துறை ஓட்டுநர் சங்கத்திற்கு நிதியுதவி | 0 | 2 | 2 |
| 8. | 2075 | தமிழ்நாடு தலைமைச் செயலகப் பிரிவு அலுவலர்கள் சங்கத்திற்கு நிதியுதவி | 0 | 2 | 2 |
| 9. | 2075 | தமிழ்நாடு தலைமைச் செயலக அதிகாரிகள் சங்கத்திற்கு நிதியுதவி-பணியாளர்களைப் பணி அமர்த்த மானியங்கள் | 0 | 1 | 1 |
| 10. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், சென்னை | 3655 | 2859 | 2958 |
| 11. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், கோயம்புத்தூர் | 1669 | 1792 | 2017 |
| 12. | 2070 | பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனம் | 5836 | 6682 | 8055 |
| 13. | 2070 | விழிப்புப் பணி-இலஞ்ச ஒழிப்பு இயக்ககம் | 88684 | 95033 | 103593 |
| 14. | 2051 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சாட்டியது | 108683 | 104470 | 116314 |
| 15. | 2070 | மாநில விழிப்புப் பணிக் குழு | 3153 | 3615 | 3984 |
| 16. | 2070 | தமிழ்நாடு மாநில நிருவாகத் தீர்ப்பாயம் | 12110 | 11543 | 13040 |
| 17. | 2014 | தமிழ்நாடு நிருவாக நடுவர் மன்றம் | 2556 | 3238 | 3530 |
| 18. | 2052 | அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனம் | 6114 | 5498 | 5662 |
| 19. | 2070 | குடிமைப் பணிப் பயிற்சி நிருவாகப் பயிற்சி நிறுவனத்தில் அடிப்படைப் பயிற்சி அளித்தல் | 1105 | 1556 | 1661 |
| 20. | 2070 | அண்ணா மேலாண்மை நிறுவனத்தின்கீழ் அனைத்திந்திய சிவில் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம் | 495 | 0 | 0 |
| 21. | 2052 | நிறுவன அமைப்புச் செயல்முறைப் பிரிவு | 3293 | 3788 | 4235 |
| 22. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை ஆணையர், மதுரை | 1125 | 1394 | 1507 |
| 23. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், திருநெல்வேலி | 1741 | 1438 | 1583 |
| 24. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், நாகர்கோவில் | 1426 | 1558 | 1740 |
| 25. | 2052 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், சேலம் | 1229 | 1236 | 1234 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | 20.52 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், வேலூர் | 1171 | 128.5 | 14.57 |
| 27. | 20.52 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், திருச்சிராப்பள்ளி | 888 | 991 | 10.59 |
| 28. | 20.52 | ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம், தஞ்சாவூர் | 983 | 1273 | 1329 |
| 29. | 20.52 | ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்றம், இராமநாதபுரம் | 1171 | 1199 | 1372 |
| 30. | 20.53 | மாவட்டங்களில் ஆய்வுக் குழுக்கள் | 9048 | 9050 | 10301 |
| 31. | 2225 | அனைத்திந்தியப் பணிகள் தேர்விற்காக ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்குத் தேர்வுக்கு முந்தைய பயிற்சி அளிப்பதற்குரிய தேர்வுப் பயிற்சி மையம் | 1913 | 2236 | 2779 |
| | | மொத்தம் | 301532 | 305139 | 338859 |

21. சமூக நீதியை உயர்த்துவதிலும், சமுதாயப் பொருளாதாரத் துறைகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதிலும், தொழில்களை வளர்க்கும் மேம்பாட்டுத் திட்டங்களை ஏற்படுத்தி வளமான மாநிலமாக உருவாக்குவதிலும் அரசு மிகுந்த நாட்டம் செலுத்தி வருகின்றது. அரசு சட்டம் மற்றும் ஒழுங்கைக் காத்து, சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அனைத்துத் தரப்பு வளர்ச்சிக்கும் தகுந்த சூழ்நிலையை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.



# இணைப்பு II

(107 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 20

## நெடுஞ்சாலைத் துறை

## சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

### I. முன்னுரை

வேளாண்மை, தொழில், கனிம வளம், மின் உற்பத்தி, காடு வளர்ப்பு, பால் வளம் போன்ற நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமான துறைகளின் மேம்பாட்டிற்கு சாலைக் கட்டமைப்பு வசதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இத்துறைகளின் வளர்ச்சி, போதுமான அளவில் சாலைகளை உருவாக்கிப் பராமரித்தல் மற்றும் பாதுகாப்பான சிறந்த சாலைப் போக்குவரத்தினை உறுதி செய்தல் ஆகியவற்றைச் சார்ந்தே உள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள் மற்றும் கரும்புச் சாலைகள் போன்ற பல்வேறு வகைகளில் மொத்தம் 60,901 கி.மீ. அளவிற்கு மிகப் பெரிய சாலைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி சிறந்த முறையில் பராமரித்து வரும் பெருமை இந்த மாநிலத்திற்கு உள்ளது.

சாலைகளை மேம்படுத்துவதுடன், தற்போதுள்ள சாலைக் கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாத்து, பராமரிக்க மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிறப்புப் பராமரிப்புத் திட்டம் ஒன்றினை அறிவித்துள்ளார்கள்.

வேளாண் விளைபொருட்களையும், கிராமங்களில் உள்ள சிறு தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும், விரைவாகவும், பாதுகாப்பாகவும், விற்பனை மையங்களுக்கு எடுத்துச் செல்ல, போதிய இணைப்புச் சாலை வசதிகள், ஊரக மக்களுக்குத் தேவைப்படுகின்றன. இந்த ஊரக மக்களின் வளர்ச்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டில் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதால், தொலைதூரத்தில் உள்ள கிராமங்களுக்கு இயன்ற அளவு இணைப்புச் சாலைகள் அமைப்பதில் நெடுஞ்சாலைத் துறை முனைப்புக் காட்டி வருகிறது. மேலும், விரைவான

மற்றும் பாதுகாப்பான, பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தினை உறுதி செய்யும் விதத்தில் அனைத்து பருவத்திற்கும் ஏற்ற சாலைகளாக இணைப்புச் சாலைகளை அமைக்க முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துறைமுகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாகனப் போக்குவரத்து அதிக அளவில் பெருகி உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சிறிய துறைமுகங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு கடல்சார் வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல்/கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல், பங்கிடுதல் மற்றும் மாற்றுதல் (BOOT/BOOST) அடிப்படையில், தனியார் துறைமுகங்கள், தோணித்துறைகள், மிதவைகள் ஆகியவற்றை அமைக்க ஊக்கம் அளிப்பதன் மூலம் இம்மாநிலத்தைத் தொழில்மயமாக்க, தமிழ்நாடு கடல்சார் வாரியம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. துறைமுகங்களை மேம்படுத்தும் பணியில், தனியார் நிறுவனங்கள் ஆர்வமுடன் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு துறைமுகக் கொள்கை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. கப்பல் உடைப்பு மற்றும் கப்பல் பழுதுபார்ப்புத் தொழில்களின் வளர்ச்சி, ஓய்வு நேர மற்றும் நீர் விளையாட்டிற்கான வசதிகளை செய்து கொடுப்பது போன்ற அம்சங்களும் துறைமுகக் கொள்கையில் அடங்கும்.

## சாலைகளும் பாலங்களும்

**II. கொள்கை வரைமுறைகள்**

நெடுஞ்சாலைத் துறை தனது கட்டுப்பாட்டில் உள்ள சாலைக் கட்டமைப்பில் சாலைகள் அமைத்தல், மேம்படுத்துதல், புதுப்பித்தல், பராமரித்தல் போன்ற பணிகளை செய்து வருகிறது. இந்த சாலைக் கட்டமைப்பில், பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலைக் கீழ்ப் பாலங்கள் ஆகியவையும் அடங்கும்.

சாலைக் கட்டமைப்பு பின்வரும் வகைப்பாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:-

i. தேசிய நெடுஞ்சாலைகள்

ii. மாநில நெடுஞ்சாலைகள்



iii. மாவட்ட பெரிய சாலைகள்

iv. மாவட்ட இதர சாலைகள்

v. பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலைக் கீழ்ப் பாலங்கள்.

**அரசு சாலைகளை மறு வகைப்படுத்துவதற்குரிய நெறிமுறைகள்**

போக்குவரத்துச் செறிவினைப் பொறுத்து சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்துச் செறிவு 30,000 பயணிகள் சீருந்து அலகினை (PCU) விடக் கூடுதலாக உள்ள சாலைகள் தேசிய நெடுஞ்சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. போக்குவரத்துச் செறிவு 10,000 பயணிகள் சீருந்து அலகினைவிடக் கூடுதலாகவும் ஆனால் 30,000 பயணிகள் சீருந்து அலகினைவிடக் குறைவாகவும் உள்ள சாலைகள் மாநில நெடுஞ்சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. அது போன்றே போக்குவரத்துச் செறிவு 10,000 பயணிகள் சீருந்து அலகினைவிடக் குறைவாகவும், ஆனால் 5,000 பயணிகள் சீருந்து அலகினைவிடக் கூடுதலாகவும் உள்ள சாலைகள் மாவட்ட பெரிய சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்து 5,000 பயணிகள் சீருந்து அலகினைவிடக் குறைவாக போக்குவரத்துச் செறிவுள்ள சாலைகள் மாவட்ட இதர சாலைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

குறிப்பிட்ட வரையறைகளுக்கு மிகுதியாக போக்குவரத்துச் செறிவு ஏற்படும்போது ஒரு குறிப்பிட்ட வகைப்பாட்டில் உள்ள சாலைகளை முறையே அதற்கு அடுத்த உயர் வகைப்பாட்டிற்கு உயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த அடிப்படையில் ஒவ்வொரு வகைப்பாடும் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

**i. தேசிய நெடுஞ்சாலைகள்**

இச்சாலைகள், பெரும் துறைமுகங்கள், மாநிலத் தலைநகரங்கள், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவைகளை இணைக்கும் வண்ணம் நாட்டின் நீளவாக்கிலும், அகலவாக்கிலும் சென்றிடும் மிக முக்கியமான சாலையாகும்.

நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டு வருவதால்,

[2003 ஏப்ரல் 7

தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு மைய அரசு இப்போக்குவரத்தின் பெருக்கத்திற்கு ஏற்ப தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் தடைகளற்ற துரிதமான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக நவீன தொழில்நுட்பங்களையும், மேலாண் தொழில் நுணுக்கங்களையும் கடைப்பிடித்து, தேவைப்படும் இடங்களில் இடவசதிக்கேற்றபடி ஓடுதளங்களை அகலப்படுத்துதல், போக்குவாத்துத் தாங்களைப் பிரித்தனுப்புதல், புறவழிச் சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், இருப்புப்பாதைக் கடவுகளில் மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசு இப்பணிகளின் செயலாக்கத்திற்கு உதவிடும் வகையில் தேவையான அடிப்படை விவரங்களை மைய அரசுக்குத் தருவதோடு, தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் இடவசதிக்கேற்றபடி நான்கு வழிப்பாதையாக, ஆறு வழிப்பாதையாக சாலையை அகலப்படுத்திட, சிமெண்ட் கான்கிரீட் ஓடுதளம் அமைக்க ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளின் பெருக்கத்திற்கு தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி தூண்டுகோலாக இருந்து வருகிறது. தற்போது தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3850 கி.மீ. அளவில் உள்ளது.

**ii. மாநில நெடுஞ்சாலைகள்**

மாவட்டத் தலைமையிடங்கள், மாநிலத்தின் முக்கிய நகரங்கள், மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களில் உள்ள நெடுஞ்சாலைகள் ஆகியவைகளை இணைக்கும் முக்கிய நெடுஞ்சாலைகள் இதில் அடங்கும்.

மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளமான 7163 கி.மீ. சாலைகளில், 2050 கி.மீ. ஒரு வழித்தட சாலைகளாகவும், 936 கி.மீ. இடை வழித்தட சாலைகளாகவும், 3980 கி.மீ. இரு வழித்தட சாலைகளாகவும், 197 கி.மீ. பல வழித்தட சாலைகளாகவும் உள்ளன. ஒரு வழி மற்றும் இடை வழித்தடங்கள் கொண்ட அனைத்து சாலைகளையும் இரு வழித்தட சாலைகளாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தவும் தற்போது இரு வழித்தடமாகவும் பல வழித் தடமாகவும் உள்ள சாலைகளில், தேவைப்படும் இடங்களில் நேர்ப்பாடுகளை மேம்படுத்தவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.



2003 ஏப்ரல் 7]

**iii. மாவட்ட பெரிய சாலைகள்**

மாவட்டத்தின் உற்பத்தி மையங்கள் மற்றும் சந்தை மையங்கள் ஆகியவற்றிற்குச் செல்லும் சாலைகள், இந்த மையங்களை ஒன்றோடொன்று மற்றும் முக்கியமான நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் சாலைகள் ஆகியவை இதில் அடங்கும். மேலும் வட்டத் தலைமையிடங்கள் மற்றும் மாவட்டத் தலைமையிடத்தை இணைக்கின்றன. மாவட்ட பெரிய சாலைகளின் மொத்த நீளமான 7362 கி.மீ. சாலைகளில் 4797 கி.மீ. ஒரு வழித்தட சாலைகளாகவும், 757 கி.மீ. இடை வழித்தட சாலைகளாகவும், 1761 கி.மீ. இரு வழித்தட சாலைகளாகவும், 47 கி.மீ. பல வழித்தட சாலைகளாகவும் உள்ளன. மாவட்ட பெரிய சாலைகள், மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான வள ஆதாரங்களை எடுத்துச் செல்லப் பெரிதும் உதவுவதால் தமிழ்நாடு அரசு ஒரு வழித்தட மற்றும் இடை வழித்தட சாலைகளை இடவசதி மற்றும் நிதிநிலைமைக்கேற்ப இரு வழித்தட சாலைகளாக விரிவுபடுத்தவும் மற்றும் இரு வழி மற்றும் பல வழித் தடசாலைகளை நேர்ப்படுத்தி மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**iv. மாவட்ட இதர சாலைகள்**

கிராமப்புற உற்பத்தி மையங்களையும், விற்பனை மையங்களையும் இணைக்கும் சாலைகள், வட்டத் தலைமையிடங்களை இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடங்கள் மற்றும் இதர பிரதான சாலைகளை இணைக்கும் சாலைகள் ஆகியன இதில் அடங்கும். இன்றைய நிலையில் மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளமான 40,963 கிலோ மீட்டரில் மிகக் குறைந்த அளவேயான 898 கி.மீ. இடை வழித்தட சாலைகளாகவும், 680 கி.மீ. சாலைகள் மட்டும் இரு வழித்தட சாலைகளாகவும், 37 கி.மீ. சாலைகள் பல வழித்தட சாலைகளாகவும் உள்ளன. ஊரகப் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இச்சாலைகள் அடிப்படையாக விளங்குவதால், நிதி நிறுவனங்களின் கடன் வசதியைப் பயன்படுத்தி மற்றும் அரசின் பங்கினை அளித்து பழுதடைந்த நிலையில் உள்ள 27,892 கி.மீ. நீளமுள்ள ஒரு வழித்தடப் பகுதிகள், 679 கி.மீ. இடை வழித்தடப் பகுதிகள் மற்றும் 26 கி.மீ. பல வழித்தடப் பகுதிகளைச் சீரமைக்கவும், 483 கி.மீ. நீளமுள்ள இரு வழித்தடச் சாலைகளை புதுப்பித்து தேவைப்படும் இடங்களில் நேர்ப்பாடுகளை மேம்படுத்தவும் இந்த அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது.

[2003 ஏப்ரல் 7

### v பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலைக் கீழ்ப்பாலங்கள்

சாலைகளின் நேர்ப்பாடுகளில் நீர் ஆதாரங்களோ, புகைவண்டிப் பாதைகளோ குறுக்கிடுவது இயற்கையானதாகும். எனவே, இந்த இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்காக, பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், சாலை மேம்பாலங்கள் மற்றும் சாலைக் கீழ்ப் பாலங்கள் ஆகியவற்றை இடவசதிக்கேற்றபடி கட்டும் பணியையும் நெடுஞ்சாலைத் துறை செய்து வருகிறது.

அரசு சாலைகளில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுள்ள பல பாலங்கள் மிகவும் பழுதடைந்து திரும்பக் கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளதென ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இப்பாலங்களை நிதிநிலைமைக்கேற்றபடி படிப்படியாகத் திரும்பக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் காவிரிப் பாசன மாவட்டங்களில் அரசு சாலைகளில் பழுதடைந்த 204 பாலங்களைத் திரும்பக் கட்ட அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில், மாவட்ட இதர சாலைகளில் உள்ள 94 பாலங்கள் நபார்டு வங்கி நிதியுதவியுடனும், மாநில சாலைகளில் உள்ள 27 பாலங்கள் மத்திய சாலை நிதித் திட்டத்திலும், மாவட்ட பெரிய சாலைகளில் உள்ள 48 பாலங்கள் நபார்டு வங்கி நிதியுதவியுடனும், திரும்பக் கட்டப்பட உத்தேசிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை தவிர, மக்கள் பிரதிநிதிகளின் வேண்டுகோளின்படியும் ஏராளமான புதிய பாலங்கள் கட்டப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அரசு சாலைகளில், ஒரு இலட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட இரயில் ஊர்தி அலகுகள் கொண்ட இருப்புப்பாதைக் கடவுக்குப் பதிலாக சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நிதி வளம் மற்றும் பணிகளின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, முன்னுரிமை அடிப்படையில், இருப்புப்பாதைப் பணிகள் திட்டத்தில் இப்பணிகள் சேர்க்கப்படுகின்றன. அணுகு சாலைகள் உட்பட சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவை மாநில அரசும், மைய அரசின் இருப்புப்பாதைகள் அமைச்சகமும் சமமாக 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. 2002-2003 ஆம் ஆண்டிற்கான இருப்புப்பாதைப் பணிகள் திட்டத்தில் சேர்த்து ஒப்பளிப்பு செய்யக் கோரி 26 பாலப் பணிகள் இரயில்வே அமைச்சகத்திற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 7]

## III. நடைபெற்று வரும் திட்டங்கள்

கொள்கை வரைமுறைப் பகுதியில் விளக்கப்பட்ட நோக்கத்தினை அடையும் பொருட்டு பின்வரும் திட்டங்களை 2003-2004-ல் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 1. தேசிய நெடுஞ்சாலைகள் மூலப் பணிகள் மற்றும் பராமரிப்பு

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 3,850 கி.மீ. ஆகும். மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைக் கொண்டு மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில், முன்னேற்றப் பணிகள், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டத்தில் ரூ.170.00 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணிகளுக்கு விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இது தவிர, தங்க நாற்கரம் மற்றும் வடக்கு, தெற்குப் பகுதிகளை இணைக்கும் மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், தமிழ்நாட்டிலுள்ள கிழக்காணும் தேசிய நெடுஞ்சாலைகளை நான்கு/ஆறு வழிப்பாதைகளாக அகலப்படுத்தும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### நான்கு பெருநகரங்களை இணைக்கும் தங்க நாற்கரத் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| i. | தே.நெ.4 (பூந்தமல்லி-காஞ்சிபுரம்-வாலாஜா பிரிவு) | 93.00 | கி.மீ. |
| ii. | தே.நெ.5. (சென்னை-கொல்கத்தா சாலை) | 42.00 | கி.மீ. |
| iii. | தே.நெ.7 (ஓசூர்-கிருட்டிணகிரி பிரிவு) | 45.40 | கி.மீ. |
| iv | தே.நெ.46 (கிருட்டிணகிரி-வாணியம்பாடி-பள்ளிகொண்டா-வாலாஜா பிரிவு) | 143.00 | கி.மீ. |
| | மொத்தம் | 323.40 | கி.மீ. |

[2003 ஏப்ரல் 7

**-கு-தெற்குப் பகுதிகளில் காஷ்மீரையும், கன்னியாகுமரியையும் இணைக்கும் திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| i. | தே.நெ.7 (பெங்களூர்-சேலம்-மதுரை பிரிவு) | : | 362 கி.மீ. |
| ii. | தே.நெ.7 (மதுரை-கன்னியாகுமரி பிரிவு) | : | 232 கி.மீ. |
| iii. | தே.நெ.47 (சேலம்-கொச்சி பிரிவு) | : | 182 கி.மீ. |
| | மொத்தம் | | 776 கி.மீ. |

மற்காணும் பணிகள் தவிர, தேசிய நெடுஞ்சாலை எண் 45- .மீ. (7/0-122/0-ல் (55 கி. மீ.) உள்ள சாலைப் பகுதியினை நான்கு ்பாதையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் மற்றும் கி.மீ. 27/ )-ல் (39.20 கி.மீ.) உள்ள சாலைப் பகுதியினை உறுதிப்படுத்துதல் ்ற பணிகளையும் வருடாந்திர கட்டுதல், நிர்வகித்தல், ஒப்படைத்தல் ' Annuity Scheme) முறையில், தேசிய நெடுஞ்சாலை ஆணைக் ்ம் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

ுக, தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 3850 கி.மீ. தேசிய ஞ்சாலைகளுள், 1194 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் கு/ஆறு வழிப்பாதைகளாக மேம்பாடு செய்யப்பட உள்ளன. இதில் கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளில் பணிகள் நடைபெற்று வறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

**ாநில நெடுஞ்சாலைகள்**

ாநிலத்தில், தற்போதுள்ள மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் 7163 ஆகும். ஒரு வழித்தடமாகவும் இடை வழித்தடமாகவும் உள்ள லப் பகுதிகளையும் இரு வழித்தட சாலைகளாக அகலப்படுத்தி திப்படுத்துதல், தற்போது இரு வழித்தடமாகவும், பல ்தடமாகவும் உள்ள சாலைகளை உறுதிப்படுத்தி மேம்படுத்துதல் ்ற பணிகளை வரும் மூன்று ஆண்டுகளில் மாண்புமிகு முதல்வரின் ஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் படிப்படியாக செயல்படுத்த ேசிக்கப்பட்டுள்ளது.

குதி-2 திட்டத்தின்கீழ் (2003-2004) மொத்தம் ரூ.503 லட்சம் ்பீட்டில் 14 பாலங்களைத் திரும்பக் கட்ட ேசிக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 7]

2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இப்பணிகளுக்கு ரூ.4.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. மாவட்ட பெரிய சாலைகள்**

இன்றைய நிலவரப்படி மாவட்ட பெரிய சாலைகளின் மொத்த நீளம் 7362 கி.மீ. ஆகும். ஒரு வழித்தடமாகவும், இடை வழித்தடமாகவும் உள்ள மாவட்ட பெரிய சாலைகளையும் அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல், இரு வழித்தடமாகவும், பல வழித்தடமாகவும் உள்ள மாவட்ட பெரிய சாலைகளை உறுதிப்படுத்தி மேம்படுத்துதல் போன்ற பணிகளை வரும் மூன்று ஆண்டுகளில், படிப்படியாக மாண்புமிகு முதல்வரின் நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.6.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. மாவட்ட இதர சாலைகள்**

தற்போதுள்ள மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளம் 40963 கி.மீ. பழுதடைந்த நிலையில் உள்ள ஒரு வழித்தட சாலைகள், இடை வழித்தட சாலைகள், பல வழித்தட சாலைகள் ஆகியவற்றை சீரமைத்தல், இரு வழித்தட சாலைகளைப் புதுப்பித்து மேம்படுத்துதல் போன்ற பணிகளை வரும் மூன்று ஆண்டுகளில், மாண்புமிகு முதல்வரின் நெடுஞ்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் படிப்படியாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. பாலங்கள்**

**(i) அரசு சாலைகளில் பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல்**

கடந்த ஆண்டுகளில் எடுக்கப்பட்ட நிலுவையில் உள்ள பாலப் பணிகள் யாவும் முடிவுறும் தறுவாயில் உள்ளன.

பகுதி-2 திட்டத்தின்கீழ் (2003-2004) மாவட்ட பெரிய சாலைகளில் ரூ.397 லட்சம் மதிப்பீட்டுத் தொகையில் 12 பாலங்களைத் திருப்பிக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 7

*2003-2004* வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்**

உத்தமர்கோயில் அருகே இருப்புப்பாதைக் கடவு எண் 246 மற்றும் திருவரங்கத்தில் கடவு எண் 241-ல் மேற்கொள்ளப்பட்ட சாலை மேம்பாலங்கள் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. தென்னூர் சாலையில் கடவு எண் 84 மற்றும் ஹீபர் சாலையில் கடவு எண் 85ல் நடைபெற்று வரும் சாலை மேம்பாலப் பணிகளை 2003-2004 ஆம் ஆண்டில் செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பாலப் பணிகள் ஹட்கோ நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளுக்காக ரூ.62.04 கோடியை ஒப்பளிப்பு செய்துள்ள ஹட்கோ நிறுவனம் இதுவரை ரூ.40.46 கோடியை விடுவித்துள்ளது.

குரோம்பேட்டை இரயில் நிலையம் அருகில், எம்.ஐ.டி. கேட் அருகில், இருப்புப்பாதைக் கடவு எண் 28-ல் நடைபெற்று வரும் சாலை மேம்பாலப் பணி 2003-2004-ல் முடிவடையும்.

*2003-2004* வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.13.11 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(iii) ஹட்கோ நிதியுதவியுடன் சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்**

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், தற்போதுள்ள இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக 36 சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்களை ரூ.513.92 கோடி மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிகளில் சென்னைக் கடற்கரை சந்திப்பிற்கும், தாம்பரம் இரயில் நிலையத்திற்கும் இடையே அகல இருப்புப் பாதையாக மாற்றும் திட்டத்தின்கீழ் கட்ட உத்தேசித்துள்ள 6 மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்களும் அடங்கும். இப்பணிகளுக்காக ஹட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து ரூ.200 கோடியினைக் கடனாக பெறவும் அரசு அனுமதித்துள்ளது.

மேலே குறிப்பிட்ட பாலப் பணிகளுள், 10 பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன. இதர பணிகள் செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.



2003 ஏப்ரல் 7]

*2003-2004* வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.45.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடனுதவியுடன் அரசு சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் புதிய பாலங்களைக் கட்டுதல்/பழுதடைந்த பழைய பாலங்களை திரும்பக் கட்டுதல்**

நபார்டு வங்கியின் கடனுதவியுடன் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி எண் II முதல் VII வரையில், மாவட்ட பெரிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகள் மேம்படுத்தும் பணிகளும் மற்றும் இச்சாலைகளில் புதிய பாலங்கள் கட்டும் பணிகள்/பழைய பாலங்களைத் திரும்பக் கட்டும் பணிகளும் கடந்த ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை, ரூ.299.17 கோடி மதிப்பீட்டில் 4346.53 கி.மீ. நீளச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், ரூ.255.98 கோடி மதிப்பீட்டில் 384 பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் கடந்த 2002-2003 ஆம் ஆண்டு வரை 4190.96 கி.மீ. நீளத்திற்கான சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், 275 பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சாலை மற்றும் பாலப் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

*2002-2003*-ல் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி VIII-இன்கீழ் ரூ.101.17 கோடி மதிப்பீட்டில் 945.22 கி.மீ. மாவட்ட இதர சாலைகளை மேம்பாடு செய்யும் இன்னொரு திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் 201.10 கி.மீ. நீள 28 சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நல்ல முன்னேற்றத்தில் உள்ளன.

ரூ.50.01 கோடி மதிப்பீட்டில் 31 சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் 111 பாலங்களைக் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள உத்தேசித்து, அதற்கான செயல் திட்டம் ஒன்று நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டு ஆய்வு நிலையில் உள்ளது. ரூ.64.96 கோடி மதிப்பீட்டில் 243 சாலைகளை மேம்படுத்தவும், 7 பாலங்களைக் கட்டவும் இன்னொரு கருத்துரு தயார் செய்யப்பட்டு நபார்டு வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 7

இவை தவிர, இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை தரைப் பாலம் சாலை கி.மீ. 0/10-1/2-ல் (நதிப் பாலம்) ரூ.4 கோடி செலவில் ஓர் உயர் மட்டப் பாலம் கட்டும் பணிக்கு ஒப்பளிப்பு அளிக்கக் கோரி தனியானதொரு கருத்துரு நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டு, வங்கியின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது.

2003-2004 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ.120.00 கோடி ஆகும்.

**7. சிறப்புப் பகுதிகளில் சாலைகள்**

(i) **சர்தார் படேல் சாலையில் (காந்தி மண்டபம்) மத்திய கைலாசத்திற்கும்-கிழக்குக் கடற்கரை சாலைக்கும் இடையில் உள்ள நெடுஞ்சாலையை ஒரு விரைவுப் பாதையாக மாற்றுதல்**

சர்தார் படேல் சாலையில் (காந்தி மண்டபம்) மத்திய கைலாசத்திற்கும்-கிழக்குக் கடற்கரை சாலைக்கும் இடையில் உள்ள நெடுஞ்சாலையை ஒரு விரைவுப் பாதையாக மாற்ற வேண்டும் என்பது, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வந்துள்ளது. ரூ.70 கோடி செலவில், உலகத் தரம் வாய்ந்த 6 வழி விரைவுப் பாதைத் திட்டத்தைச் செயற்படுத்த, தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதை நிறுவனம் (ITEL) என்ற பெயரில் சிறப்பு நோக்க அமைப்பு ஒன்றை (Special purpose vehicle) ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நடப்பாண்டில் பொதுத் துறை-தனியார் துறை பங்கேற்கும் வகையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் (TNRDC) நிறைவேற்றப்படும். இந்தப் பெருமுயற்சி, தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பின் (I.T. Corridor) விரைந்த வளர்ச்சியை உறுதி செய்யும்.

(ii) **புறவழிச் சாலைகள் மற்றும் ஆரச் சாலைகள்**

போக்குவரத்து நெரிசலை தவிர்ப்பதற்குத் புறவழிச் சாலைகள் மற்றும் ஆரச் சாலைகள் அமைப்பது அத்தியாவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இராமநாதபுரம், தேனி, திருவள்ளூர் ஆகிய நகரங்களில் புறவழிச் சாலைகள் அமைக்கும் சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்யக் கருதப்பட்டுள்ளது. மதுரை நகரை வந்தடையும் ஆரச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளுக்காக ஹட்கோ கடனுதவியுடன் ரூ.112 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 12 சாலைப் பணிகளும், ஒரு உயர்மட்டப் பாலப் பணியும், ஒரு சாலை மேம்பாலப்



2003 ஏப்ரல் 7]

பணியும் அடங்கும். இப்பணிகளுள், 12 சாலைப் பணிகளும் 2003-2004-ல் முழுமையாக செய்து முடிக்கப்பட்டுவிடும் நிலையில் நல்ல முன்னேற்றத்திலுள்ளன. இரண்டு பாலப் பணிகளும் ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு போன்ற ஆரம்பக் கட்ட நிலையில் உள்ளன. இப்பணிகளுக்கு ரூ.100.00 கோடி அளவில் நிதியுதவி அளிக்க ஹட்கோ ஒப்புக்கொண்டுள்ளது.

மேலும் சேலம், கோவை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் நகரங்களை வந்தடையும் ஆரச் சாலைகளை அமைக்கும் திட்டங்களுக்கான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்யப்படவுள்ளது.

இப்பணிகளுக்கென 2003-2004 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.67.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(iii) **பன்மாநில சாலைகள் இணைப்புத் திட்டம்**

ரூ.2.23 கோடி மதிப்பீட்டில் ஒரு சாலைப் பணி மற்றும் இரு பாலப் பணிகளை பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் மேற்கொள்ள மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் 2003-2004-ல் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இப்பணிகளுக்கென 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. சிறப்பு சாலைத் திட்டங்கள்**

(i) **தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்**

1995-ல் தமிழ்நாடு அரசு, உலக வங்கியின் உதவியை, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்காகக் கோரியது. இத்திட்டத்திற்கான திட்ட அறிக்கையைத் தயார் செய்யவும், திட்டத்தை செயல்படுத்தவும் உலக வங்கி நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது. 13 புறவழிச் சாலைகளைக் கொண்ட 732 கி.மீ. நீளச் சாலைகளுக்கு மதிப்பாய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் பாதிப்பின்மைக்கான சான்று அனைத்து கட்டப் பணிகளுக்கும் பெறப்பட்டுள்ளன. தனி சுற்றுச் சூழல் ஆய்வுப் பணி, ஆலோசகருக்கு அளிக்கப்பட்டு செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஒருங்கமைந்த சுற்றுச்சூழல் நிர்வாகத்துடன் கூடிய மறு வாழ்வுக்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 7

இத்திட்டத்திற்கான நிலங்களைக் கையகப்படுத்தவும், திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறு குடியேற்றம் மற்றும் மறு வாழ்வுக்கான செயல் திட்டங்களை மேற்கொள்ளவும் தனி வருவாய் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதேபோல் திட்ட செயலாக்கப் பிரிவில் மர வகைகள் மற்றும் விலங்குகளைப் பாதுகாக்க தனி அலுவலரும், துறைக்கு அப்பாற்பட்ட சுற்றுப்புறச் சூழல் சிறப்பு அலுவலரும், நிதி மேலாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். உலக வங்கியால் திட்ட மதிப்பீடு மார்ச் 2003-ல் முடிக்கப்பட்டுள்ளது. கடன் பெற பேச்சுவார்த்தையும் ஒப்புதலும் ஏப்ரல் 2003-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்னர், சாலைப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு ரூ.2118 கோடியாக இருக்கும்.

இத்திட்டத்தின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.271.72 கோடியாகும்.

**(ii) உள்வட்டச் சாலை-சென்னை**

வடக்குப் பகுதி மற்றும் தெற்குப் பகுதி உள்வட்டச் சாலையைத் தவிர, மற்ற எல்லாப் பணிகளும் முடிவடைந்துவிட்டன. வடக்கு உள்வட்டச் சாலையில் இரு சிறு பணிகள் தவிர, மற்ற பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டுவிட்டன. தெற்குப் பகுதி உள்வட்டச் சாலையில் சாலைக் கீழ்ப்பாலப் பணி மற்றும் 4.4 கி.மீ. சாலை அமைக்கும் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 5 கி.மீ. சாலைப் பணியில் நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. இப்பணியை விரைவில் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஹட்கோவிலிருந்து ரூ.65 கோடி கடனுதவிக்கான ஒப்புதல் பெறப்பட்டு, அதில் இதுவரை ரூ.27.85 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

2003-2004 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.22.73 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**(iii) கிராமச் சாலைகள் திட்டம் (நபார்டு கடனுதவி மூலமாக)**

கிராமங்களே நமது நாட்டின் உயிர்நாடி. கிராமச் சாலைகளே அக்கிராமங்களின் உயிர்த் துடிப்பு. தமிழ்நாட்டில் உள்ள பல கிராமங்களில் வேளாண்மையே முக்கியத் தொழிலாக உள்ளது. எனவே இக்கிராம மக்கள் தங்கள் விவசாய விளைபொருட்களை அருகில் உள்ள நகரங்களுக்கும், விற்பனைக் கூடங்களுக்கும் விரைவாக எடுத்துச் செல்ல வசதியாக கிராமச் சாலைகள் அனைத்தையும் அனைத்துப் பருவத்திற்கும் ஏற்றவாறு மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதும், அவசியமானதும் ஆகும். கிராமச் சாலைகள் கீழ்க்கண்ட மூன்று திட்டங்களின்கீழ் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன:



2003 ஏப்ரல் 7]

(அ) கிராமச் சாலைகள் திட்டம்

(ஆ) சிறப்பு உறுப்புத் திட்டம்

(இ) பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம்

**(அ) கிராமச் சாலைகள் திட்டம்**

கீழ்க்காணும் குறியீடுகளின் அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் புதிய சாலைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

* கிராமத்தின் மொத்த மக்கள் தொகை, 1999 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி 500-க்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.
* அமைக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் 1.60 கி.மீ. நீளத்திற்கு மேல் இருக்க வேண்டும்.
* ஏற்கெனவே, மேற்படி கிராமங்கள் தார்ச் சாலைகளினால் இணைப்பு பெற்று இருத்தல் கூடாது.

500 முதல் 1000 வரை மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணி 1-4-1999 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 500 முதல் 1000 வரை மக்கட்தொகை கொண்ட கிராமங்களுள், அனைத்து பருவத்திற்கும் ஏற்ற சாலை வசதிகள் இல்லாத கிராமங்கள் 4986 என கண்டறியப்பட்டது. 2002-2003 வரை 764 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது. 2003-2004-ல் மேலும் 120 கிராமங்களில் 500 கி.மீ. அளவுக்கு சாலைகள் அமைக்கவும், 10 பாலங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. எஞ்சிய கிராமங்களுக்குப் படிப்படியாக இணைப்புச் சாலை வசதி செய்து தரப்படும்.

2003-2004 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.80 கோடியாகும்.

**(ஆ) ஆதி-திராவிடர் குடியிருப்புகளுக்கு இணைப்பு சாலை வசதி (சிறப்பு உறுப்புத் திட்டம்)**

கிராம மக்கட்தொகையில் 50 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆதி-திராவிடர் மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு தார்ச் சாலை வசதி செய்திட இத்திட்டம் வழிவகுக்கிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ், 500 முதல் 1,000 வரை மக்கட்தொகை கொண்ட 238 கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி தரப்பட்டுள்ளது. 2003-2004-ல் மேலும் 50 கிராமங்களில் இணைப்புச் சாலை வசதி செய்து தரப்படவுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.25 கோடியாகும்.

**(இ) பேருந்து வழித்தட சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 3 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் இயங்கி வரும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன.

150 கி.மீ. நீளத்திற்கு சாலை மேம்பாட்டுப் பணிகளையும், 5 பாலப் பணிகளையும், மேற்படி திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.20 கோடியாகும்.

**(9) மத்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்**

**(i) மத்திய சாலை நிதித் திட்டம்**

பெட்ரோல் மற்றும் டீசல் மீதான சிறப்புத் தீர்வை மூலம் கிடைக்கப்பெறும் நிதியைக் கொண்டு மத்திய சாலை நிதி ஒன்றை, மக்களவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தின் மூலமாக மத்திய அரசு தோற்றுவித்துள்ளது. இந்நிதியிலிருந்து 15 விழுக்காடு அளவுக்கு நிதி மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. முந்தைய ஆண்டுகளில் ரூ.62.34 கோடியும், 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.62.30 கோடியும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளுக்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.75 கோடி ஆகும்.



**(ii) மேற்குத் தொடர்ச்சி மலைச் சாலைகள் வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டம் ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் நிதி ஆண்டில் ரூ.53 இலட்சம் மதிப்பீட்டிலான 3 சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.64.26 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(10) சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள்**

மாநிலத்தின் சாலையோரங்களில் கனி மற்றும் நிழல் தரும் மரங்கள் தற்போது இலட்சக்கணக்கில் உள்ளன. இதன்மூலம் பெறப்படும் வருவாய், உள்ளாட்சி அமைப்புகளுக்கு சேருகின்றன. சாலையோரங்களில் புதிய மரக்கன்றுகளை நட்டு, பராமரித்து, குறிப்பிட்ட காலத்திற்குப்பின் அவற்றை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கும் பொறுப்பை வனத் துறைக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(11) கருவிகளும், தளவாடங்களும்**

நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இயந்திர அலகு, துறையிலுள்ள பல்வேறு கருவிகள் மற்றும் தளவாடங்களின் பராமரிப்பைக் கவனித்து வருகிறது. சென்னை, புதுக்கோட்டை மற்றும் கோவை ஆகிய இடங்களில் உள்ள பணிமனைகளில் தளவாடங்களின் பெரும் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கருவிகள் மற்றும் தளவாடங்களை மட்டுமின்றி, அவற்றுக்கான உதிரி பாகங்களைக் கொள்முதல் செய்வதற்கும், மாநில அளவில் துறையின் அனைத்து அலுவலகங்களுக்குத் தேவைப்படும் விஞ்ஞானக் கருவிகள் மற்றும் இயந்திரங்களைக் கொள்முதல் செய்து விநியோகிப்பதற்கென கருவி மற்றும் தளவாடங்கள் கோட்டம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. காலாவதியான, பயன்பாட்டுக்கு அப்பாற்பட்ட கருவிகள் மற்றும் தளவாடங்கள் பயனற்றதெனக் கழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக புதிய கருவிகள் மற்றும் தளவாடங்களைக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளும் இக்கோட்டத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 192 தளவாடங்கள் பயனற்றவை என கழிக்கப்பட்டுள்ளன.

[2003 ஏப்ரல் 7

கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் அவற்றின் பராமரிப்பு ஆகியவற்றிற்கு செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டினை நிர்வகித்து அது தொடர்பான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளும் பொறுப்பு தலைமைப் பொறியாளர் (நெ), இயந்திரவியல் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம் மற்றும் துறையின் இதர அலுவலகங்களின் உபயோகத்திற்கென ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் ஃபேக்ஸ் இந்திரங்கள், கணினிகள் மற்றும் உள்ளமைப்பு வசதிகள் ஆகியவற்றிற்காக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4.82 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(12) நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்**

**(i) ஆராய்ச்சி நடவடிக்கைகள்**

சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் 1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாட்டில் அமைக்கப்படும் சாலைகள், கட்டப்படும் பாலங்கள் மற்றும் அவற்றின் பராமரிப்புத் தொடர்பான செயல்முறை ஆராய்ச்சிகளை இந்த ஆராய்ச்சி நிலையம் செய்து வருகிறது. கீழ்க்காணும் பிரிவுகளில் ஆராய்ச்சிகளை முழுமையாக மேற்கொள்ளும்வண்ணம், ஆய்வகங்கள் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளன:

(அ) மண் மற்றும் அடித்தளப் பொறியியல்

(ஆ) கற்கலவை மற்றும் கட்டுமானம்

(இ) நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள்

(ஈ) போக்குவரத்து மற்றும் போக்குவரவு

இந்நிலையத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேலும் விரிவாக்கும் பொருட்டு, இதர துறை மற்றும் நிறுவனங்கள் அளிக்க முன்வரும் ஆராய்ச்சிப் பணிகளையும் மேற்கொண்டு ஆலோசனை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள்



2003 ஏப்ரல் 7]

மூலமாகக் கிடைக்கும் பலன்களைக் கொண்டு இந்த ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்கான மதிப்பீடுகளிலும் தரக் கட்டுப்பாடு சோதனைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் 1 சதவீதத் தொகையில், 0.50 சதவீதத் தொகை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்து நவீன ஆராய்ச்சி வசதிகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சித் திட்டங்களுடன் உலக அளவில் மிக முக்கியமானதாகவும், தற்போதைய நிலைமைகளுக்குப் பொருத்தமானதாகவும் கருதப்படும் இரு பிரிவுகள் தொடர்பான ஆய்வுகளை 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐ.ஆர்.சி. வெளியிட்டுள்ள எஸ்.பி.53-ன் அடிப்படையில் இரப்பர் கலந்த நிலக்கீலைப் பயன்படுத்தி சாலைகள் அமைக்கும் புதிய தொழில்நுட்பத்தை, தேசிய நெடுஞ்சாலைகள் திட்டங்களில் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இது போலவே, தமிழ்நாடு அரசும் மாநில நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து அதிகமாக உள்ள பகுதிகளில், இரப்பர் கலந்த நிலக்கீலைக் கொண்டு சாலைகள் அமைக்க முன்வந்துள்ளது. எனினும் இரப்பர் கலந்த நிலக்கீலில் இரப்பரும், நிலக்கீலும் எந்த விகிதாச்சாரத்தில் கலக்கப்பட வேண்டும் என்பது குறித்து நிலையான குறியீடுகள் ஏதும் வரையறுக்கப்படவில்லை. இது குறித்து, ஒரு விரிவான ஆராய்ச்சியினை 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலை அமைக்கும் நடவடிக்கைகள், மாநிலத்தின் சில பகுதிகளில் சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து சாலை அமைப்பது தொடர்பாக குறியீடுகள் ஏதும் தற்போது வரையறுக்கப்படவில்லை. இத்தகைய பிளாஸ்டிக் கழிவுகளை திறம்பட நிர்வகிக்கும் வகையில், பொறியியல் ரீதியாக ஆய்வு மற்றும் சோதனைகளை மேற்கொண்ட பின்னர், சோதனை முடிவுகளின் அடிப்படையில் குறியீடுகள் நிர்ணயிக்கப்படும். இது குறித்து ஆய்வகத்திலும், பணி இடங்களிலும் முனைப்பான சோதனைகள் மற்றும் ஆராய்ச்சிகள், 2003-2004 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தால் மேற்கொள்ளப்படும். நிலக்கீலுடன் பயன்படுத்தத்தக்க பிளாஸ்டிக் கழிவுகளைக் கண்டறியவும், இயன்ற அளவு இக்கழிவுகளை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும்

[2003 ஏப்ரல் 7

ஆய்வகங்களில் பல சோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் அமைக்கப்பட்ட சாலைகளின் தரம், போக்குவாத்துச் சுமையைத் தாங்கும் திறன் போன்ற விவரங்கள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள சோதனை ஓடுபாதை மற்றும் ஆய்வகங்களில் சோதனைகள் நடத்தி சேகரிக்கப்படும். இது குறித்த சோதனை முடிவுகள் அடுத்த நான்கு மாதங்களில் தெரிந்துவிடும்.

2003-2004 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்டப் பணிகளுக்காக ரூ.2.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) **தரக் கட்டுப்பாடு**

துறையில் மேற்கொள்ளப்படும் பணிகள் செயலாக்கத்தின்போது தரக் கட்டுப்பாடு நடைமுறைகள் அமல்படுத்துவதை உறுதி செய்யவும், பணியிடங்களில் தேவைப்படும் சோதனைகளை மேற்கொள்ளவும் வசதியாக, மாநில அளவில் கூடுதல் ஆய்வு மையங்கள் தேவைப்பட்டதால், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை ஆகிய இடங்களில் வட்டார ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. துறையினால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளிலும் தரத்தினை உறுதி செயயும் பொருட்டு, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் தரக் கட்டுப்பாடு அலுவலராகச் செயல்படுகிறார். தற்போதுள்ள தரக் கட்டுப்பாட்டுப் பிரிவினை மேலும் முனைப்பாகச் செயல்படும் விதத்திலும், அரசுக்குக் கூடுதல் செலவு ஏற்படாத வகையிலும், 2003-2004 ஆம் ஆண்டில் பலப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடுகளில் தரக் கட்டுப்பாடு சோதனைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் 1 சதவீதத் தொகையில் மீதமுள்ள 0.50 சதவீதத் தொகை, தரக் கட்டுப்பாட்டு பிரிவைப் பலப்படுத்த பயன்படுத்திக் கொள்ளப்படும். இதற்கிடையில், தற்போதுள்ள தரக்கட்டுப்பாடு அலுவலர்களையும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய அலுவலர்களையும் கொண்டு, தேவைப்படும் தரக் கட்டுப்பாடு சோதனைகளும், சோதனை சரிபார்ப்புகளும், திடீர் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iii) **தகவல் தொகுப்பு வங்கி**

துறையில் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில்நுட்ப விவரங்களையும், புள்ளிவிவரங்களையும் தேவைப்படும்போது



2003 ஏப்ரல் 7]

அறிந்துகொள்ள உதவியாக தகவல் தொகுப்பு வங்கி உருவாக்கப்பட்டுள்ளது. 728 பெரிய பாலங்கள், 2718 சிறு பாலங்கள் பற்றிய விவரங்களும், 3925 இடங்களில் எடுக்கப்பட்ட போக்குவரத்து கணக்கெடுப்பு விவரங்களும் சேகரிக்கப்பட்டுவிட்டன. 2003-2004 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு அலுவலர்கள் மூலமாக கணக்கீடு செய்யும் முறையைக் கைவிட்டு தானியங்கி முறையில் கணக்கீடு செய்யும் கருவி மூலமாக கணக்கெடுப்பு செய்யும் முறையை அமல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட பெரிய சாலைகளின் மேற்பரப்பு, ஓடுதளத்தின் தரம் மற்றும் மண்ணின் தன்மை போன்ற விவாங்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்ட இதர சாலைகளைப் பற்றிய விவரங்கள் 2003-2004-ல் சேகரிக்கப்படும்.

(iv) **பயிற்சித் திட்டம்**

துறையில் பணி புரிந்துவரும் பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப ரீதியாக எழக்கூடிய ஐயங்களைப் போக்கவும், பணிகள் செயலாக்கத்தின்போது எதிர்கொள்ளவேண்டிய அடிப்படைப் பிரச்சினைகளையும், அவைகளைத் தீர்க்க எடுக்கப்படவேண்டிய வழிமுறைகளை விளக்கவும் பயிற்சியளிக்க வேண்டியுள்ளது. தொழில்நுட்ப நூல்களில் விளக்கம் கிடைக்காத நடைமுறைகளைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டிய அவசியம் உள்ளது. பொதுவாக, திட்டமிடல், வடிவமைத்தல், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு போன்ற பிரிவுகளில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு பயிற்சி மற்றும் விளக்கம் அளிக்கும் வகையில், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் முக்கியப் பங்காற்றி வருகிறது.

ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது வாரத்தில் மண்வளம், நிலக்கீல், கான்கிரிட், போக்குவாத்து மற்றும் கணினி பாடப் பிரிவுகளில், 5 நாட்களுக்கு துறையிலுள்ள உதவி கோட்டப் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்களுக்கு, குழுக் குழுவாக, தரக் கட்டுப்பாடு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு தொடர் பயிற்சித் திட்டமாகும். மதிப்பீடுகளில் சோதனைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்படும் ஒரு சதவீதத் தொகையில் 0.50 சதவீதத் தொகையை இப்பயிற்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, தேசிய மற்றும் உலக அளவில் நடத்தப்படும் தொழில்நுட்ப பயிற்சி வகுப்புகளுக்கும், கருத்தரங்குகளுக்கும், நவீன

தொழில்நுட்பத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு இத்துறையின் பொறியாளர்கள் அனுப்பிவைக்கப் படுகின்றனர். சாலைகள், பாலங்கள், போக்குவரத்து போன்ற பல்வேறு சிறப்புப் பாடப் பிரிவுகளில் 2003-2004 ஆண்டிற்கான பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தரக் கட்டுப்பாடு அமலுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியிலிருந்தும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக செய்யும் நிதி ஒதுக்கீட்டிலிருந்தும் மேற்படி பயிற்சி வகுப்புகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(v) நெடுஞ்சாலை ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைப் பயிலகம் ஒன்றைத் தோற்றுவித்தல்**

நெடுஞ்சாலை திட்டமிடல் மற்றும் மேலாண்மைத் தொழில் நுட்பங்கள் வேகமாக மாறிவரும் சூழ்நிலையில், நவீன தொழில்நுட்பம் பற்றிய தகவல்களை சேகரித்து, பராமரிக்க, பயிலகம் ஒன்றை உருவாக்கி பராமரிப்பது அவசியம் எனக் கருதப்படுகிறது. எனவே, நெடுஞ்சாலை ஆராய்ச்சி மற்றும் மேலாண்மைப் பயிலகம் என்ற பெயரில், இம்மாதிரியான ஆராய்ச்சி மற்றும் கல்விப் பயிலகங்களின் ஒத்துழைப்புடன் பயிலகம் ஒன்றைத் தோற்றுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை பொறியியல் பிரிவில் நவீன தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிப்பதன் மூலமும், சிக்கன வழியில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலமும் இப்பயிலகம் தன்னிகரற்ற ஒரு பயிலகமாக விளங்கும் வாய்ப்பு உள்ளது. இப்பயிலகத்தைத் தோற்றுவிக்க அரசாணை நிலை எண் 100, நெடுஞ்சாலைத் (எச்.ஆர்.2) துறை, நாள் 10-6-2002-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. பயிலகம் 21-2-2003 முதல் செயல்பட ஆரம்பித்துள்ளது. பயிலகத்தின் செயல்பாட்டிற்காக, ஆரம்பக் கட்ட தொடராச் செலவினங்களுக்காக ரூ.5 இலட்சம் நிதி 2002-2003 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்துவது, சிக்கனத் தீர்வு காண்பது மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குவது போன்ற பணிகளுக்கு மிகுந்த கவனம் செலுத்தப்படும்.

2003-2004-வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்டப் பணிகளுக்காக ரூ. 0.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**(13) சாலைப் பாதுகாப்புத் திட்டம்**

சாலைப் பாதுகாப்பு, புதிய சாலைக் கொள்கையின் ஒரு முக்கிய அம்சமாகும். சாலைப் பாதுகாப்பில் உள்ள குறைபாடுகளாலேயே அதிக விபத்துகளும், உயிர்ச் சேதங்களும் ஏற்படுகின்றன என்பது சாலை விபத்துக்கள் பற்றிய புள்ளிவிவரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, சாலைப் பாதுகாப்புக் கொள்கை 2001-ல் உருவாக்கப்பட்டது. இக்கொள்கையானது சாலைப் பாதுகாப்பின் நான்கு முக்கியக் கொள்கைகளான பொறியியல், அமல்படுத்துதல், அவசர மருத்துவ வசதி மற்றும் பயிற்றுவித்தல் ஆகியவைகளை உள்ளடக்கியுள்ளது. விபத்துகளைக் குறைக்க ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆரம்பக் கட்டமாக போக்குவரத்து ஆணையர், நெடுஞ்சாலைத் துறை, காவல் துறை மற்றும் மருத்துவத் துறையின் உதவியுடன், 13 இடங்களில் விபத்து உதவி மையங்களை தே.நெ. எண் 4, தே.நெ. எண் 7, தே.நெ. எண் 45 மற்றும் தே.நெ. எண் 46-ல் அமைக்க தெரிந்தெடுத்துள்ளார். இந்த விபத்து மையங்கள் 50-60 கி.மீ. இடைவெளியில் அவசர சிகிச்சை ஊர்தி, காவல் துறை வசதி, தொலைத் தொடர்பு வசதி மற்றும் சேதமடைந்தவைகளை அப்புறப்படுத்துதல் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது. அமைக்க உத்தேசிக்கப்பட்ட 13 மையங்களில் 8 மையங்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

சாலைப் பாதுகாப்பு நிதி என்ற தனிச் சிறப்பு வாய்ந்த நிதியம் ஒன்று தமிழ்நாடு அரசினால் கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

* ஒருங்கிணைந்த சாலைப் பாதுகாப்பு
* பாதுகாப்பான பயணம் குறித்த விழிப்புணர்வை துறைகள் மூலமாகவும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும் சாலை உபயோகிப்போரிடம் ஏற்படுத்துதல்
* விபத்துப் பகுதிகளில் தேவைப்படும் மருத்துவ சிகிச்சையினை உடன் அளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

[2003 ஏப்ரல் 7

நெடுஞ்சாலைத் துறை, விபத்து நேரக்கூடிய இடங்களை சீரமைக்கும் திட்டத்தை ஆண்டுதோறும் செயல்படுத்துகிறது. சாலை மைய பிரிப்புகள், சந்திப்புகளை மேம்படுத்துதல், சாலையின் பக்கவாட்டில் தேவைப்படும் இடங்களில் சுவர்கள் கட்டுதல், சாலைக் குறியீடுகளை வைத்தல், போக்குவரத்து சிக்னல்கள் அமைத்தல், பிரதிபலிப்பான்களை (Reflectors) வைத்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. தேசிய நெடுஞ்சாலைகளைப் பொறுத்த வரையில், இப்பணிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டுத் திட்டத்தில் ரூ.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போன்று, அரசு சாலைகளில் (மாநிலச் சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள்) விபத்து நடக்கக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு அப்பகுதிகளை ரூ.53 கோடி மதிப்பீட்டில் படிப்படியாக மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விதிகளை மீறுவோரிடமிருந்து வசூல் செய்யப்படும் அபராதம் மற்றும் கட்டணங்களின் மூலம் பெறப்படும் நிதியிலிருந்து சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்.

**(14) தனியார் - பொது நிறுவனங்கள் பங்கேற்பு**

கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் சாலைகள் அமைப்பு மற்றும் பராமரிப்பிற்கென குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்துள்ளது. இதனால் சாலைகளை உயர் தரத்திற்கு மேம்பாடு செய்தல், காலமுறை புதுப்பிப்பு மற்றும் வலுப்படுத்துதல் போன்ற பணிகளில் தொய்வு ஏற்பட்டது மட்டுமின்றி தற்போதுள்ள சாலை மற்றும் பாலங்களைச் சீரான முறையில் பராமரிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய புறவழிச் சாலைகளை அமைத்தல், பாலங்கள் கட்டுதல், உயர் தரச் சாலைகளை அமைத்தல் போன்ற பணிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்வதால் மட்டும் சாலைக் கட்டமைப்பை பழைய நிலைக்குக் கொண்டுவர இயலும். தற்போதுள்ள சூழ்நிலைகளில், முக்கிய சாலை மேம்பாட்டுப் பணிகளை தனியார் பங்கேற்பு மூலமாக மேற்கொள்வதால் மட்டும் இது சாத்தியமாகும்.

மேற்கூறிய எண்ணத்தின் அடிப்படையில்தான் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் ஐ.எல் & எப்.எஸ் (IL&FS) பங்கேற்கும் ஒரு கூட்டு நிறுவனமாக, வணிக ரீதியில் சாலை மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்டறிதல், திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் செயலாக்கத்தினை மேற்பார்வையிடல் ஆகியவற்றுக்காக



2003 ஏப்ரல் 7]

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டது. சாலை அமைப்பில் தனியார் பங்கேற்பிற்கு முன்னோடியாக, கிழக்குக் கடற்கரை சாலையினை கி.மீ.22/3 முதல் 135/5 வரை மேம்படுத்தி, பராமரித்தல் பணி சலுகை அடிப்படையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. இதே போன்று, மேலும் சேலம் - உளுந்தூர்பேட்டை சாலை (தே.நெ.எண் 68) மற்றும் திண்டுக்கல் - கோயம்புத்தூர் - பெங்களூர் சாலை (தே.நெ.எண் 209) ஆகிய இரு சாலைகளை மேம்படுத்திப் பராமரிப்பது தொடர்பான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை தொழில்நுட்ப ஆலோசகர்களிடம் ஒப்படைக்க தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இந்திய அரசுக்கும் இடையே ஒப்பந்தம் 10-4-2002 அன்று ஏற்பட்டுள்ளது. மேற்காணும் திட்டத்தை தேசிய நெடுஞ்சாலை 68 மற்றும் தேசிய நெடுஞ்சாலை 209-ல், கீழே குறிப்பிட்டுள்ளபடி இரு கட்டங்களில் நிறைவேற்ற தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் உத்தேசித்துள்ளது.

தே.நெ.209-கட்டம்-1- பொள்ளாச்சியிலிருந்து கோவை வரை
கட்டம்-2- திண்டுக்கல் முதல் பொள்ளாச்சி வரை

தே.நெ.68-கட்டம்-1- சேலம் முதல் இராயப்பனூர் வரை
கட்டம்-2-இராயப்பனூர் முதல் உளுந்தூர்பேட்டை வரை

மேற்படி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முன் தகுதி பற்றிய விவரங்கள் பெறப்பட்டு, தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் இறுதி செய்யப்பட்டுவிட்டது. மாநில ஆதரவு உடன்படிக்கை கையெழுத்தானவுடன் இப்பணி தொடர்பான சலுகை உடன்படிக்கையில் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனமும், மத்திய அரசின் சாலைப் போக்குவரத்து அமைச்சகமும் கையெழுத்திட உள்ளன.

**(15) தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம்**

வரைவு தமிழ்நாடு நெடுஞ்சாலை மசோதா 2001, இந்திய குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப்பின் தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம், 2001 என அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சாலையோரத் தொடர் கட்டட வளர்ச்சியைத் தடுக்கவும், நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்கான உடன்படிக்கைகளை ஏற்கவும்,

நெடுஞ்சாலை எல்லைக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றவும், சாலையோரங்களில் முறைப்படுத்தப்பட்ட வளர்ச்சியை ஏற்படுத்தவும் தேவையான அதிகாரங்களை நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுக்கு அளிக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

**(16) சாலைக் கொள்கை**

ஒரு புதிய சாலைக் கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு வருகிறது. இக்கொள்கையின்படி, பொறியியல் மற்றும் பொருளாதார அம்சங்கள் மட்டுமின்றி சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமுதாய வளர்ச்சி ஆகிய அம்சங்களையும் கருத்தில் கொண்டு பணிகள் நிறைவேற்றப்படும். இக்கொள்கையின் இதர நோக்கங்கள் பின்வருமாறு:—

* சமூக - பொருளாதாரப் பயன்களை அதிகரிக்கும் வகையில் சாலைக் கட்டமைப்பில் பணிகளை நிறைவேற்றல்.
* பொதுத் துறை மற்றும் தனியார் பங்கேற்பை ஊக்குவிப்பதன் மூலம் நிதி ஆதாரங்களுக்கு வழிவகை செய்தல்.
* நவீன தொழில்நுட்பங்கள் மூலம் சாலைகளின் கட்டுமானம், வடிவமைப்பு, திட்டமிடல் மற்றும் செயலாக்கத்தின் தரத்தினை உயர்த்துதல்.
* நெடுஞ்சாலைச் சொத்துக்களையும், ஆதாரங்களையும் சிறந்த முறையில் நிர்வகித்தல்.

**(17) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி மயமாக்கல்**

தகவல் தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதை அடுத்து இத்துறையில் மேற்கொள்ளப்படும் பணிகளின் அளவும், தரமும் உயர்ந்துள்ளன. வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப தகவல் தொழில்நுட்ப வசதிகளான இணையம் மற்றும் மின் அஞ்சல் ஆகியவை பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் நெடுஞ்சாலைத் துறையின் செயல்திறனை அதிகப்படுத்தும் நோக்குடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக நவீனமயமாக்கல், திறன் வளர்ப்பு ஆகியவற்றிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நெடுஞ்சாலைத் · துறையை, தலைமை அலுவலகம் முதல் கோட்ட அலுவலகம் வரை ரூ.15 கோடி மதிப்பீட்டில் கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டு, இதற்காக கணினிகள் வாங்கிப் பொருத்த அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.





**(18) இணையதளம்**

நெடுஞ்சாலைத் துறைக்கென பிரத்தியேகமாக www.tnhighways.org என்கின்ற விலாசத்துடன் ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறையின் அனைத்து முக்கிய செயல்பாடுகள், ஆலோசகர் அழைப்புக் கடிதங்கள், துறைக் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் போன்ற விவரங்கள் இணையதளத்தில் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவ்வப்போது இன்றைய நிலைக்கேற்ப மாற்றப்பட்டு வருகின்றன.

**(19) நிறுவன மேம்பாடு**

நெடுஞ்சாலைத் துறையின் நிறுவன மற்றும் நிதி நிர்வாகத் திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் அமெரிக்க நிறுவனமான பூஸ் ஆலன் ஹேமில்டன் என்ற ஆலோசகர் மூலமாக ரூ.2.80 கோடி மதிப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நிறுவன அமைப்பு மற்றும் மேலாண்மைத் துறையின் முழுமையான சீரமைப்பு, நிதி நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல் போன்ற அம்சங்கள் தொடர்பாக சில பரிந்துரைகளையும் இந்நிறுவனம் செய்துள்ளது. நிறுவனம் செய்துள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

**(20) தனியார் பங்கேற்புடன் கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் அடிப்படையில் திட்டப் பணிகள்**

சாலை மற்றும் பாலப் பணிகளை தனியார் பங்கேற்புடன் கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. மலேசிய நாட்டு CIDB நிறுவனம் சில பாலப் பணிகளை மேற்கொள்ள ஆர்வம் காட்டியுள்ளது. அதற்கிணங்க இந்நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு புல ஆய்வு செய்து கீழ்க்காணும் பாலப் பணிகளை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்க ஒப்புக்கொண்டுள்ளது:—

(i) விக்கிரவாண்டி - கும்பகோணம் - தஞ்சாவூர் சாலையில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கரையில் பாலம் கட்டுதல்.

(ii) நாமக்கல் மாவட்டம், மோகனூர் மற்றும் கரூர் மாவட்டம், வாங்கல் ஆகிய பகுதிகளை இணைக்க காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.

[2003 ஏப்ரல் 7

(iii) கொக்கரையான்பேட்டையை லக்காபுரத்துடன் இணைத்திட காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுதல்.

**(21) வடிவமைப்பு மற்றும் தல ஆய்வு**

துறையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்படும் பணிகள் தொடர்பாக புல ஆய்வு, தொழில் நுட்ப விவரங்கள் சேகரிப்பு, வடிவமைப்பு, மதிப்பீடு தயாரித்தல் போன்ற ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென தலைமைப் பொறியாளர் ஒருவரின் கட்டுப்பாட்டின்கீழ், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகு ஒன்று செயல்பட்டு வருகிறது.

துவக்கக் கட்ட ஆய்வுப் பணிகளில் அடித்தள அமைப்பு, நீரோட்டம் போன்ற தல விவரங்கள் சேகரிப்பு பணிகளின் தன்மைக்கேற்ப தேவைப்படும் அடிப்படை விவரங்கள் சேகரிப்பு ஆகியன அடங்கும். இவ்விவரங்கள் சேகரிக்கப்பட்டவுடன் விரிவான வடிவமைப்பும், மதிப்பீடும் இந்த அலகில் தயாரிக்கப்படுகின்றன. முன்னரே இறுதி செய்யப்பட்ட வடிவமைப்பில் கடக்கால் மாற்றம் காரணமாக, தேவையான மாற்றங்களைச் செய்வது, இலாபகரமான ஒப்பந்தங்களைப் பெற மாற்று வடிவமைப்புகளைத் தயார் செய்வது, சாலை மற்றும் பாலப் பணிகளில் கடைப்பிடிக்க வேண்டிய நிலையான தொழில்நுட்பக் குறியீடுகளை நிர்ணயிப்பது போன்ற பணிகளும் இந்த அலகில் மேற்கொள்ளப்படுகின்றன.

2003-2004-ம் ஆண்டில் ரூ.222 கோடி மதிப்பிலான 191 பாலப்பணிகள், ரூ.102 கோடி மதிப்பிலான 205 சாலைப் பணிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்க இந்த அலகு திட்டமிட்டுள்ளது.



2003 ஏப்ரல் 7]

**IV. சாலைகளும் பாலங்களும்—பகுதி-2 திட்டம் (2003-2004)**

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | பணியின் பெயர் | பணிக்கான மொத்த மதிப்பீடு | 2003-2004 ஆண்டிற்கான வரவு-செலவு |
|---|---|---|---|
| | **1. மாநில நெடுஞ்சாலைகள்** | | |
| | **பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல்** | | |
| 1 | கள்ளக்குறிச்சி - திருவண்ணாமலை சாலையில் கி.மீ. 11/8-ல் உள்ள சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 20.00 | 8.00 |
| 2 | பெரம்பலூர் - துறையூர் சாலையில் கி.மீ.114/2-ல் பாலம் கட்டுதல். | 25.00 | 10.00 |
| 3 | ஓமலூர்-சங்ககிரி - திருச்செங்கோடு - பரமத்தி சாலையில் கி.மீ.26/10-ல் உள்ள குறுகிய சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 25.00 | 10.00 |
| 4 | ஒகேனக்கல்-பெண்ணாகரம் - தர்மபுரி - திருப்பத்தூர் சாலையில் கி.மீ.5/10-ல் பாலம் கட்டுதல். | 30.00 | 12.00 |
| 5 | உதகை - கோத்தகிரி - மேட்டுப் பாளையம் - சத்தி - கோபி - ஈரோடு சாலையில் கி.மீ.58/10-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 25.00 | 10.00 |
| 6 | பொள்ளாச்சி - வால்பாறை சாலையில் கி.மீ.28/10, 29/2, 29/8, 29/10, 32/4, 40/8, 42/8, 43/8, 43/10 மற்றும் 46/4-ல் உள்ள சிறிய பாலங்களைத் திரும்பக் கட்டுதல். | 38.00 | 15.20 |
| 7 | தொப்பூர் - மேட்டூர் - பவானி - ஈரோடு சாலையில் கி.மீ. 62/2-ல் உள்ள பழுதடைந்த மற்றும் குறுகிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 25.00 | 10.00 |
| 8 | நாகப்பட்டினம் - கூடலூர் - மைசூர் சாலையில் கி.மீ. 398/2-ல் உள்ள சிறிய பாலத்தைத் தாங்கு சுவருடன் திரும்பக் கட்டுதல் | 70.00 | 28.00 |
| 9 | உத்தமபாளையம் - கருளிப்பட்டி சாலையில் கி.மீ. 18/10-ல் பாலம் கட்டுதல். | 60.00 | 24.00 |

| | | | |
|---|---|---|---|
| 10. | திண்டுக்கல் - நத்தம் - சிங்கம்புணரி - திருப்பத்தூர் - காரைக்குடி சாலையில் கி.மீ. 4/2-ல் உள்ள சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 35.00 | 14.00 |
| 11 | இராமநாதபுரம் - நயினார்கோவில்- அண்டக்குடி-இளையான்குடி-சிவகங்கை- மேலூர் சாலையில் கி.மீ. 30/4-ல் உள்ள உயர்மட்டப் பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 45.00 | 18.00 |
| 12 | பாளையங்கோட்டை - குறுக்குச் சாலை - குளத்தூர் - விளாத்திக்குளம் - நாகலாபுரம் - பந்தல்குடி - அருப்புக் கோட்டை சாலையில் கி.மீ. 35/2-ல் உள்ள சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 35.00 | 14.00 |
| 13 | ஸ்ரீவில்லிபுத்தூர் - சிவகாசி - விருதுநகர் - அருப்புக்கோட்டை - திருச்சுழி - நரிக்குடி - பார்த்திபனூர் சாலையில் கி.மீ. 25/6-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 45.00 | 18.00 |
| 14 | ஆரல்வாய்மொழி - நாகர்கோவில் - இராஜாக்கமங்கலம் - கொளச்சல் சாலையில் கி.மீ. 27/10-ல் உள்ள குறுகிய மற்றும் வலுவிழந்த பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 45.00 | 18.00 |
| | மொத்தம் | 503.00 | 201.20 |

## 2. மாவட்டப் பெரிய சாலைகள்

### வலுவிழந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல்

| | | | |
|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் - ஆத்தூர் சாலையில் கி.மீ. 16/10-ல் உயர்மட்டப் பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 25.00 | 10.00 |
| 2 | நாமக்கல் - துறையூர் சாலையில் கி.மீ. 14/2-ல் உள்ள வலுவிழந்த மற்றும் குறுகிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 25.00 | 10.00 |
| 3 | மொரப்பூர் - மாரண்டஹள்ளி சாலையில் கி.மீ. 49/2-ல் உள்ள சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 30.00 | 12.00 |
| 4 | கோயம்புத்தூர் - தடாகம் சாலையில் கி.மீ. 14/8-ல் பாலம் கட்டுதல் | 25.00 | 10.00 |
| 5 | ஈரோடு-முத்தூர் சாலையில் கி.மீ. 3/10, 4/2, 4/6, 4/8, 5/2, 5/10, 6/6, 6/10, 7/2, 9/6, 10/0, 12/2, 12/8, 13/0, 13/8 மற்றும் 17/2-ல் உள்ள தாழ்வான பகுதியை மேம்படுத்துதல். | 115.00 | 46.00 |



| | | | |
|---|---|---|---|
| 6 | பவானி - குழிந்துப்பாடி சாலையில் கி.மீ. 12/4-ல் உள்ள உயர்மட்டப் பாலம் கட்டுதல். | 50.00 | 20.00 |
| 7 | திருச்சி-மதுரை சாலையில் கி.மீ. 446/2-ல் சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 10.00 | 4.00 |
| 8 | திருச்சி-மதுரை சாலையில் கி.மீ. 443/4-ல் சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 30.00 | 12.00 |
| 9 | திருச்சி-மதுரை சாலையில் கி.மீ. 447/2-ல் சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 12.00 | 4.80 |
| 10 | கோவில்பட்டி சந்திப்பிலிருந்து செல்லும் புதுக்கோட்டை எல்லைச் சாலையில் கி.மீ. 2/2-ல் உள்ள சிறிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல். | 25.00 | 10.00 |
| 11 | மேகனாபுரம்-முனைஞ்சிப்பட்டி சாலையில் கி.மீ. 21/4-ல் பாலம் கட்டுதல். | 30.00 | 12.00 |
| 12 | சாத்தூர்-சிவகாசி- ஸ்ரீவில்லிபுத்தூர் சாலையில் கி.மீ. 13/2-ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 20.00 | 8.00 |
| | மொத்தம் | 397.00 | 158.80 |

## 3. கருவிகளும் தளவாடங்களும்

| | | | |
|---|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் (பொது) (நெடுஞ்சாலை), தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) நபார்டு, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திட்டம்-2 அலுவலகங்களுக்கு ஃபேக்ஸ் இயந்திரம் வாங்குதல் | 1.50 | 1.50 |
| 2 | தலைமைப் பொறியாளர் (பொது) நெடுஞ்சாலை அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்கு இரண்டு U.P.S. வாங்குதல். | 0.30 | 0.30 |
| 3 | கணக்கு அலுவலர்கள் (நெடுஞ்சாலை) (தேசிய நெடுஞ்சாலை) மற்றும் தே.நெ. 45 அலுவலகங்களுக்குக் கணினி மற்றும் பிரிண்டர் வாங்குதல் | 1.80 | 1.80 |
| 4 | தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) நபார்டு, கணக்கு அலுவலர்கள் (நெடுஞ்சாலை), (தேசிய நெடுஞ்சாலை) அலுவலகங்களுக்கு உள்ளிணைப்பு வசதிகள் செய்தல். | 1.20 | 1.20 |
| | மொத்தம் | 4.80 | 4.80 |

[2003 ஏப்ரல் 7

## கப்பல் போக்குவரத்து

### V. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாட்டின் 992 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும், காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், கடலூர், திருச்சோபுரம், பி.ஓய்.3 எண்ணெய் வளப் பகுதி, திருக்கடையூர், நாகப்பட்டினம், பாம்பன், இராமேசுவரம், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய 14 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன.

தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/96-ன்கீழ் 18-03-1997 முதல் தமிழ்நாடு கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியம் தமிழக அரசின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்து, கட்டுப்படுத்தி, முறைப்படுத்தி மேலாண்மை செய்து வருகின்றது.

தமிழ்நாடு கடல்சார் வாரியம், மாநிலத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முன்னுரிமை அளித்து துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட எண்ணெய் தொழிற்சாலைகள்/மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றுக்காக தனியார் துறைமுகங்கள்/தோணித்துறைகள்/ மிதவைகள் ஆகியவை நிறுவப்படுவதற்கு ஊக்கமளித்து வருகிறது. கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் பல்வகை சரக்குகளை கையாளும் துறைமுகங்களைக் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பதினான்கு சிறு துறைமுகங்களுள் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம், பிஓய்3 எண்ணெய் வளப் பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல் மற்றும் மணப்பாடு ஆகிய ஏழு துறைமுகங்கள் தனியார் பங்கேற்பின்கீழ் பிரத்யேக துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இங்கு அனைத்து கடல்சார் வசதிகளும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினராலேயே அமைக்கப்படும். இந்த ஏழு தனியார் துறைமுகங்களில், எண்ணூர் சிறு துறைமுகம், பிஓய்3 எண்ணெய் வளப் பகுதி மற்றும் திருக்கடையூர் ஆகியவை தற்சமயம் இயங்கி வருகின்றன. ஏனைய நான்கு தனியார் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.



2003 ஏப்ரல் 7]

சிறு துறைமுகங்களில் கீழ்க்காணும் சரக்குகள் கையாளப்படுகின்றன.

| ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| கச்சா எண்ணெய் | சமையல் எண்ணெய் |
| பொது சரக்குகள் | திரவ அமோனியா, நாப்தா புரப்பலீன் திரவ வாயு, கச்சா எண்ணெய், பொது சரக்குகள் |

### அணுகுமுறை

துறைமுகங்கள்/தோணித்துறைகள் கட்டுதல் மற்றும் மேம்பாடு செய்தல் குறித்து ஒளிவு மறைவற்ற வழிமுறைகள் வகுக்கப்பட்டு தனியார் பங்கேற்பு ஊக்குவிக்கப்படும். அதற்கான ஒவ்வொரு செயற்குறிப்புகளும் அதனதன் தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

### துறைமுக விரிவாக்கத்திற்கான திட்டம்

தற்போதைய சிறு துறைமுகங்கள் விரிவாக்கும் பணிகள் தனியார் பங்கேற்பு மூலம் மேற்கொள்ளப்படும்.

உலகளவிலான அறிவிப்புகள்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுவதன் மூலம் ஒளிவு மறைவற்ற தன்மை தொடர்ந்து கடைபிடிக்கப்படும்.

இத்திட்டங்கள் கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் இருக்கும்.

மேற்கூறிய திட்டங்கள் முதலில் 30 ஆண்டுகளுக்கும், பின்னர் 50 ஆண்டு வரைக்கும் நீட்டிக்கப்படும்.

கையாளும் சரக்குகளுக்கு ஒரு டன்னுக்கு நியாயமான தொகையினை அரசு வசூலிக்கும். கையாளப்படும் சரக்குகளின் குறைந்தபட்ச அளவு படிப்படியாக நிர்ணயிக்கப்படும்.

திருவாளர்கள் கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட் அவர்களால் அவர்களது பி.வி.சி. தயாரிக்கும் தொழிற்சாலைக்கான வினைல் குளோரைடு மோனமர் (விசிஎம்) கையாள்வதற்கான கடல்சார் வசதிகளை நிறுவுவதற்காக கடலூர் துறைமுகத்தின் தெற்கு எல்லைகள் விரிவுபடுத்தப்பட்டன. கடல்சார் கட்டுமானங்கள் அமைப்பதற்கான சுற்றுப்புறச் சூழல் தடையின்மைச் சான்றிதழ் எதிர்பார்க்கப்படுகின்றது.

[2003 ஏப்ரல் 7

திருச்சோபுரம் துறைமுகம், நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தார் நிறுவ உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்காக சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டது. இத்துறைமுகம் சுங்கத் துறைமுகமாக மைய அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இங்கு கடல்சார் கட்டுமான வசதிகளை நிறுவுவதற்கான சுற்றுப்புறச் சூழல் தடையின்மைச் சான்றிதழ் மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் 1-3-2000 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதிநிலை முடிப்பதற்கான ஒப்புதல் பெறப்பட வேண்டியுள்ளது.

திருக்கடையூர் துறைமுகம், திருவாளர்கள் பி.பி.என். பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தார் பிள்ளைபெருமாள் நல்லூரில் உள்ள அவர்களது 330 மெகாவாட் கேஸ் கம்பைண்ட் சைக்கிள் பவர் திட்டத்திற்குத் தேவைப்படும் எரிபொருள் நாப்தா மற்றும் இயற்கை வாயுவைப் பிரத்யேகமாகக் கையாள்வதற்காக அறிவிக்கப்பட்டது. இத்துறைமுகத்தில் 14-01-2001 அன்று, முதல் கப்பல் வருகைபுரிந்து 15,020 மெட்ரிக் டன் எடையுள்ள நாப்தாவை இறக்குமதி செய்தது. நாப்தா இறக்குமதிக்காக இத்துறைமுகத்திற்கு கப்பல்கள் தவறாமல் வந்து கொண்டிருக்கின்றன.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் ஃபுட்ஸ், பேட்ஸ் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் நிறுவனத்தார் சமையல் எண்ணெய் கையாள்வதற்கான சேமிப்புக் கலத்தை 1990-ம் ஆண்டு நிறுவியுள்ளனர்.

துறைமுக நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்காக சமையல் எண்ணெய் கையாள்வதற்கான கடல்சார் வசதிகளை நிறுவுவதற்காக தனியார் நிறுவனங்களுக்குத் துறைமுக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கட்டுமானப் பணிகள் அந்நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தார் தனது பனங்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக ஆண்டொன்றுக்கு 1 இலட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெயைக் கையாள்வதற்காக நாகப்பட்டினம் துறைமுகத்தில் அணுகு பாலத்துடன் கூடிய தோணித்துறை கட்டியுள்ளனர். இதற்கான பல்வேறு தடையின்மைச் சான்றிதழ்கள் பெறப்பட்டு, முதல் கச்சா எண்ணெய் கப்பல் 15-02-2003 அன்று துறைமுகத்திற்கு வந்து 12,520 மெட்ரிக் டன் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது. நாகப்பட்டினம் துறைமுகத்தை



2003 ஏப்ரல் 7]

மேலும் மேம்படுத்துவதற்கு தற்போதுள்ள கடல்நீர்த் தடுப்பியை வலுப்படுத்தி நீட்டித்தல், கால்வாயை ஆழப்படுத்துதல் மற்றும் தூர் வாருதல் ஆகியவை அவசியம் என அறியப்பட்டது. ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று, இம்மேம்பாட்டுப் பணிகளை படிப்படியாக மேற்கொள்வதற்கான அரசின் அனுமதியை வழங்குமாறு தமிழ்நாடு கடல்சார் வாரியம் கோரியுள்ளது.

இந்தியன் பவர் பிராஜக்ட் லிமிடெட் நிறுவனத்தார் வேம்பாரில் நிறுவப்படவுள்ள 2000 மெகாவாட் கேஸ் டர்பைன் பவர் பிராஜக்ட்டிற்கு ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் 2.5 மில்லியன் டன்கள் திரவ இயற்கை வாயுவைக் கையாளுவதற்காக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு, சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரத்தை உறுதி செய்வதற்கான ஒப்புதல் இந்நிறுவனத்தால் பெறப்பட வேண்டியுள்ளது.

மலேசிய அரசு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தினை சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் துறைமுகமாக உருவாக்குவதற்கு ஆர்வம் காட்டியது. மலேசிய அரசின் ஆலோசனையாளரால் தயாரிக்கப்பட்ட இத்துறைமுகத்தின் பொருளாதாரம் மற்றும் ஆற்றல் பற்றிய சாத்தியக்கூறு அறிக்கை ஜூன் 2001-ல் பெறப்பட்டது.

இவ்வறிக்கையின்படி குளச்சல் துறைமுகத்தின் முதற்கட்ட அபிவிருத்திப் பணிகளுக்கு ரூ.2,772 கோடி செலவாகும். இதில் ரூ.855 கோடியை மானியமாகவும், ரூ.40 கோடியை பங்குத் தொகையாகவும் தமிழக அரசு வழங்க வேண்டும் என்று மலேசிய அரசு கோரியுள்ளது. இதற்கு தமிழக அரசு ரூ.58 கோடி மானியமாகவும், தலைமை நிறுவனத்தில் 11% பங்கு மூலதனத்திற்கான ரூ.45 கோடி தொகை அளிக்கவும் பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதி முதலீடு வழிமுறை குறித்து மலேசிய அரசின் மறுமொழி எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் இலட்சியமானது துறைமுகங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இடையே உள்ள நல்லுறவினை மேலும் மேம்படுத்துவதும் மற்றும் துறைமுகத்தின் மேம்பாட்டினை தொழில் வளர்ச்சியுடன் இணைந்து மேம்படுத்துவதும் ஆகும். தனியார் பங்கேற்கும் வகையில் அதிக அளவிலான பிரத்யேகத் துறைமுகங்களை உருவாக்கி, மாநிலத்தின் பொருளாதார

[2003 ஏப்ரல் 7

வளர்ச்சியினை ஊக்குவிப்பதனை இவ்வாரியம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கப்பல் உடைப்பு மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய தொழில்களின் வளர்ச்சி, தற்போதுள்ள பெரிய துறைமுகங்களின் இட நெருக்கடியினைக் குறைத்தல், ஓய்வு நேர மற்றும் நீர் விளையாட்டிற்கான வசதிகளை செய்து கொடுப்பது ஆகியன தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கொள்கைகளில் அடங்கப்பெற்றவையாகும்.

**சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்**

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் இராமேசுவரம் அருகில் பாக் ஜலசந்தியையும், மன்னார் வளைகுடாவையும் கப்பல் செல்லும் வகையில் இணைக்கப்படவுள்ள கால்வாய்த் திட்டமாகும். இந்தியாவின் கிழக்குக் கடற்கரையினையும், மேற்குக் கடற்கரையினையும் இணைக்கும் கடல் வழியில் சுமார் 400 கடல் மைல் தூரத்தினைக் குறைக்கும் வகையில் இத்திட்டம் அமையும். மேலும், இதனால் 36 மணி நேர கப்பல் பயண நேரமும் குறையும்.

முதலில் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தின் வழிப்பாதை, இராமேசுவரம் தீவின் கிழக்குப் பக்கமாக செல்லும் வகையில் தீர்மானிக்கப்பட்டு இருந்தது. எனினும், இத்திட்டம் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் தாக்கம் தொடர்பாக மேற்கொள்ளவும் மற்றும் இதிலிருந்து குறைந்தபட்ச சுற்றுப்புறச் சூழல் தாக்குதலை ஏற்படுத்தும் சிறப்பான கால்வாய் வழிப்பாதையினைப் பரிந்துரைக்கவும், மைய அரசு, நாக்பூரிலுள்ள தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சிக் கழகத்தினை நியமித்துள்ளது. இந்தப் புதிய கால்வாய் வழிப்பாதை ஆடம்ஸ் பாலத்தின் வழியாக 200 மீட்டர் அகலம் மற்றும் 9 மீட்டர் ஆழம் கொண்டதாக அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான அறிக்கை மேற்கண்ட ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

## VI. பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11-04-1974-ல் கம்பெனிகள் சட்டம் 1956-ன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றி வருவதற்காக நிறுவப்பட்டது. இக்கழகமானது, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை ஹால்டியா, பாரதீப்



2003 ஏப்ரல் 7]

மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களிலிருந்து ஏற்றி, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்குக் கொண்டு வந்து இறக்குகிறது. நிலக்கரியைக் கொண்டு வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது 40,000 டன் கொள்ளளவுள்ள குறைந்த ஆழத்தில் செல்லவல்ல சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்களை ஆகஸ்ட் 1985 முதல் ஜனவரி 1987 வரையிலான காலகட்டத்தில் சொந்தமாகப் பெற்று, இவைகளை முழுமையாக மின் வாரியத்திற்கு நிலக்கரி கொண்டு வர உபயோகப்படுத்தி வருகிறது. இவை தவிர, கழகமானது 11 முதல் 13 கப்பல்கள் வரை இந்திய கப்பல் கம்பெனிகள் மற்றும் அயல் நாட்டு கப்பல் கம்பெனிகளிடமிருந்து வாடகைக்குப் பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களின் நிலக்கரித் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது.

கழகமானது கடந்த ஐந்து வருடங்களில் கையாண்ட நிலக்கரியின் அளவும் மற்றும் ஈட்டிய நிகர இலாபம்/ நிகர நஷ்டம் ஆகிய விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வருடம் | எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு (மெட்ரிக் டன் இலட்சத்தில்) | செய்து முடித்த வியாபாரத்தின் அளவு (ரூபாய் இலட்சத்தில்) | நிகர லாபம்/ இழப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1998-1999 | 131.78 | 28397.47 | (-)786.89 |
| 1999-2000 | 117.56 | 275[illegible].40 | (-)798.63 |
| 2000-2001 | 151.44 | 42728.50 | (-)445.35 |
| 2001-2002 | 146.21 | 34029.76 | (-)192.71* |
| 2002-2003 | 143.13 (மதிப்பீடு) | 27636.22 (மதிப்பீடு) | (-)205.00 |

*2001-2002 ஆம் ஆண்டிற்கான நஷ்டம் ரூ.192.71 இலட்சம். முந்தைய ஆண்டுகளின் வருமான வரி ரூ.1099.43 இலட்சம் சேர்த்து நிகர நஷ்டம் ரூ.1292.14 இலட்சம்.

இக்கழகம் நட்டத்தில் இயங்குவதற்கு முக்கியக் காரணம் 1998-ம் ஆண்டு தமிழ்நாடு மின் வாரியம் கொடுத்த குறைந்த சுமைக் கட்டண விகிதமேயாகும். ஒப்பந்தப்படி, மின்சார வாரியம் அனைத்து

[2003 ஏப்ரல் 7

இயக்கச் செலவினங்களையும் ஈடு செய்ய வேண்டும். ஆனால் மின்சார வாரியம், கழகத்தின் சொந்தக் கப்பல்களின் இன்றைய மதிப்புக்குரிய தேய்மானத் தொகையை ஈடு செய்யாமல் கப்பல்கள் வாங்கப்பட்ட தேதியன்று உள்ள மதிப்பு தேய்மானத் தொகையை மட்டும் சுமைக் கட்டணத்தில் ஈடு செய்கிறது. நீண்ட காலக் கடனுக்குரிய வட்டித் தொகையையும் ஈடு செய்வதில்லை. இந்தப் பிரச்சினையில் தீர்வு காண தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் 06-03-2003 அன்று ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முழுமையாகத் தீர்வு காண்பதற்காக தமிழ்நாடு மின் வாரியமும், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமும் எடுக்க வேண்டிய நடவடிக்கை மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

**நிலக்கரி கொண்டு வருதல்—2003-2004**

2003-2004-ல் கழகமானது 152 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தன் சொந்த 3 தமிழ்க் கப்பல்கள் மூலமாகவும், இந்திய கப்பல் கம்பெனிகள் மற்றும் அயல்நாட்டு கப்பல் கம்பெனிகளிடமிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் மற்றும் தானியங்கி அதிநவீன கப்பல் ஒன்று மற்றும் கிரேன் இல்லாத பெரிய கப்பல்கள் இரண்டு மூலமாகவும் நிலக்கரியைக் கொண்டு வர உத்தேசித்துள்ளது.

**நிதிநிலை விவரங்கள்-2003-2004**

இந்த நடப்பு ஆண்டு 2003-2004-ல் இக்கழகம், இயக்க இலாபமாக ரூ.448.00 இலட்சம் ஈட்டும் என்றும் மற்றும் நிகர நஷ்டம் ரூ.27.50 இலட்சம் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் நீண்ட காலக் கடனுக்குண்டான வட்டியை ஈடு செய்யாததாலும் மற்றும் சுமைக் கட்டணத்தில் கப்பல்கள் வாங்கப்பட்ட தொகையின் தேய்மானத்தை மட்டுமே ஈடு செய்வதாலும் இக்கழகம் நஷ்டத்தில் இயங்குகிறது.

**எண்ணூர் துறைமுகம்**

எண்ணூர் துறைமுகம் 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் நாள் அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இத்துறைமுகம் குறிப்பாக பாரதீப்-எண்ணூர் பாதையில் நிலக்கரியைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்டது. ரைட்ஸ் (RITES) மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பரிந்துரையின்படி



2003 ஏப்ரல் 7]

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கிரேன் இல்லாத மற்றும் கன்வேயர் பொருத்திய தானியங்கிக் கப்பல்கள் மூலம் அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரியை பாரதீப் துறைமுகத்திலிருந்து எண்ணூர் துறைமுகத்திற்குக் கொண்டு வருகிறது.

**கிரேனுடன் கூடிய தானியங்கிக் கப்பல்**

வெஸ்ட் ஏசியா மெரிடைம் லிமிடெட், சென்னை அவர்களுக்குச் சொந்தமான கிரேனுடன் கூடிய தானியங்கிக் கப்பல் எம்.வி.ஜெம் ஆஃப் எண்ணூர் 75,066 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள (2000 ஆம் ஆண்டு கட்டப்பட்டது). கப்பல் 19-02-2002 அன்று 10 ஆண்டுகளுக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது. இத்தகைய அதிநவீனக் கருவிகள் மற்றும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கப்பல் இந்தியாவிலேயே முதன்முறையாக இயக்கப்படுகிறது. இந்தக் கப்பலில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கி இயந்திரம் மற்றும் கிரேன், கன்வேயர் ஆகிய அதிநவீன கருவிகள் மூலமாக மணிக்கு 2,600 மெட்ரிக் டன் நிலக்கரியை கப்பலிலிருந்து வெளியேற்றுவதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விரைவாக நிலக்கரியைக் கொண்டு வருகிறது.

**கிரேன் இல்லாத பெரிய கப்பல்கள்**

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், இந்திய கப்பல் கழகத்திற்குச் சொந்தமான எம்.வி. ராணி பத்மினி மற்றும் திருவாளர்கள் சுரேந்திரா ஓவர்சீஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான எம்.வி., எ.பி.ஜே. ஸ்ரீதேவி ஆகிய கிரேன் இல்லாத 68,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள இரண்டு பெரிய கப்பல்கள் பாரதீப், எண்ணூர் பாதையில் நிலக்கரியை ஏற்றிவர வாடகைக்கு அமர்த்தியுள்ளது. இந்தக் கப்பல்களில் பாரதீப் துறைமுகத்திலிருந்து தானியங்கி கிரேன் மூலமாக நிலக்கரி ஏற்றப்பட்டு திருவாளர்கள் சீகால் நிறுவனத்திற்குச் சொந்தமான பி.ஓ.டி. ஒப்பந்த அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள கிரேன் மூலம் எண்ணூர் துறைமுகத்தில் இறக்கப்பட்டு வருகிறது.

**கிரேனுடன் கூடிய சிறிய வகைக் கப்பல்கள்**

ஹால்டியா-பாரதீப்-தூத்துக்குடி துறைமுகப் பாதை மற்றும் விசாகப்பட்டினம்-தூத்துக்குடி துறைமுகப் பாதையில் கிரேன் வசதியுடன்கூடிய சிறிய வகைக் கப்பல்கள் மூலம் நிலக்கரி ஏற்றிக்கொண்டு வரும் பணி தொடரப்படும்.

[2003 ஏப்ரல் 7

**கன்னியாகுமரி படகுத் துறை**

பூம்புகார் கபபல் போக்குவரத்துக் கழகமானது அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கடல் மார்க்கமாக எடுத்து வரும் சீரிய செயலோடு, குமரி முனையிலிருந்து அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு படகுப் போக்குவரத்தினை நடத்தி வருகிறது. தற்பொழுது கழகமானது எம்.எல். தாமிரபரணி, எம்.எல். பகீரதி மற்றும் எம்.எல்.விவேகானந்தா ஆகிய மூன்று படகுகளை பயணிகள் போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வருகிறது. ஒவ்வொரு வருடமும் சுமார் 14 இலட்சம் பயணிகள் படகுத் துறையின் மூலம் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் பயணம் செய்கிறார்கள்.

**தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்**

தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் தூத்துக்குடியில் 16-09-1998 அன்று துவக்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் மாலுமி பயிற்சி மற்றும் கடல்சார் பொறியியல் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிறுவனத்தில் இதுவரை 7 தொகுதி பயிற்சி வகுப்புகள் முடிவுற்றுள்ளன. தற்பொழுது மாலுமி பயிற்சி மற்றும் கடல்சார் பயிற்சி வகுப்புகளுக்குப் பதிலாக அதே எண்ணிக்கையில் மாலுமிகளுக்கான பொது வகையான பயிற்சி வகுப்புகள் நடத்தவுள்ளது. இத்துடன் பொது நோக்க கப்பல் பணியாளர் மற்றும் சர்வதேச கடல்சார் பயிற்சியாளர்களுக்கு இந்திய அரசு கப்பல் துறை 1995 விதிகளின்படி அளிக்கப்படும் ஐந்து பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் முறையே 'தன்னிலை பாதுகாப்பு உத்தி', 'கடலில் முதலுதவி செய்தல் பற்றிய பயிற்சி' 'தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு பற்றிய பயிற்சி, 'எண்ணெய் கப்பல் பாதுகாப்பு சம்பந்தமான பயிற்சி' மற்றும் 'அடிப்படை தீ அணைப்பு சம்பந்தமான பயிற்சி'கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**புதிய பயிற்சி வகுப்புகள் துவங்குவதற்கான உத்தேசம்**

கீழ்க்கண்ட புதிய பயிற்சிகளைத் துவங்குவதற்கு டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஷிப்பிங் அவர்களின் அனுமதி எதிர்நோக்கப்படுகிறது.

1. கடல்சார் பொறியாளர்களுக்குப் பயிற்சி வகுப்புகள்.
2. இயந்திர அறை கண்காணித்தல் சான்றளிக்கும் பயிற்சி.
3. கப்பல் செலுத்துதலில் கண்காணித்தல் சான்றளிக்கும் பயிற்சி.



2003 ஏப்ரல் 7]

**பொது முறை மாலுமிகளின் பயிற்சி தொடங்குவதற்கான உத்தேசம்**

டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஷிப்பிங், மும்பை அவர்களின் உத்தரவுப்படி தற்பொழுது உள்ள இயந்திர மற்றும் கப்பல் மேல்தள மாலுமிகளுக்காகத் தரப்படும் பயிற்சி வகுப்புகளை 01-04-2003 முதல் நிறுத்தி விடும்படி இந்தியாவிலுள்ள கடல்சார் பயிற்சி நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும் பன்னாட்டு வழிமுறைகளுக்குத் தகுந்தாற்போல் கப்பல்களில் பணியில் அமர்த்துவதற்கு, மாலுமிகளுக்கான பொதுவான திருத்தி அமைக்கப்பட்ட பயிற்சி வகுப்புகள் தொடங்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 7

# இணைப்பு III

(107 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 23

## உள்துறை - சிறைச்சாலைகள்

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

**முன்னுரை**

சிறைச்சாலைகள் குற்றவியல் நீதி முறையின் ஓர் அங்கமாக மாநில அரசின்கீழ் இயங்கி வருகின்றன. சிறைத் துறையின் முதன்மைக் குறிக்கோள் குற்றவாளிகளை சிறையில் அடைத்து வைத்து அவர்கள் இனிமேலும் குற்றம் இழைக்காத வண்ணம் அச்சுறுத்தி தடுப்பதுடன் நின்றுவிடுவது இல்லை. அதற்கும் மேல் அவர்கள் விடுதலை ஆகி வந்த பிறகு பயனுள்ள குடிமக்களாக வாழும் வகையில் அவர்களை சீர்திருத்தி அவர்களுக்குப் புது வாழ்வு அளித்து அவர்களை மீண்டும் சமுதாயத்தில் இரண்டறக் கலக்குமாறு செய்வதும் இத்துறையின் முதன்மைக் குறிக்கோளாகும். இக்குறிக்கோளைக் கருத்திற்கொண்டு தனிமனிதன் தேவை, சமூகக் கட்டுப்பாடுகள், குடும்பப் பொறுப்புகள் ஆகியவற்றை நிறைவேற்ற சிறைவாசிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு, வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பல்வேறு வாழ்க்கைத் தொழில் வகுப்புகள், யோகாசனம் மற்றும் தியான வகுப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், அடிப்படை வசதிகள், பாதுகாப்புத் தேவைகள், சிறைவாசிகளின் வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் அரசு கணிசமான அளவுக்கு முதலீடு செய்துள்ளது.

**II. நிறுவன அமைப்பு முறை**

**நிருவாகம்**

2. சிறை நிருவாகத்தின்கீழ், மொத்தம் 134 சிறைகள் உள்ளன. இவற்றில் 9 மத்திய சிறைகள், 2 மகளிர் தனிச் சிறைகள், 105 கிளைச் சிறைகள், 5 தனிக் கிளைச் சிறைகள், 10 மகளிர் கிளைச் சிறைகள், 1 திறந்தவெளிச் சிறை, 1 பண்ணைச் சிறை மற்றும் 1 இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி ஆகியவைகள் அடங்கும். இத்துறை



2003 ஏப்ரல் 7]

இந்திய காவல் பணியைச் சேர்ந்த ஒரு முதுநிலை அலுவலரான கூடுதல் சிறைத் துறை இயக்குநரால் நிருவகிக்கப்படுகிறது. இவருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்) ஒருவரும் மற்றும் நான்கு சரகங்களில் சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் உள்ளனர். மத்திய சிறைகளின் நிருவாகம் மற்றும் அதன் அதிகார வரம்பிற்குட்பட்ட கிளைச் சிறைகள் முதலியன சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. சிறைத் துறையில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 4,349 ஆகும். அனைத்து சிறைகளிலும் மொத்தமாக 18,302 சிறைவாசிகளை அடைக்கத்தக்க இடவசதி உள்ளது.

**பெண்கள் சிறை**

3. வேலூர் மற்றும் திருச்சியில் பெண்களால் பராமரிக்கப்படும் இரண்டு பெண்கள் தனிச் சிறைகள் உள்ளன. இவைகளைத் தவிர கீழே குறிப்பிடப்பட்டுள்ள 8 கிளைச் சிறைகள் மற்றும் 2 தனிக் கிளைச் சிறைகளில் பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு, பெண் பணியாளர்களால் மட்டுமே பராமரிக்கப்படும் சிறைகளாக அரசு அறிவித்துள்ளது. இத்திட்டம் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில்தான் செயல்படுத்தப்பட்டுள்ளது.

1. கிளைச் சிறை, விழுப்புரம்
2. கிளைச் சிறை, கிருஷ்ணகிரி
3. கிளைச் சிறை, திருவாரூர்
4. கிளைச் சிறை, நிலக்கோட்டை
5. கிளைச் சிறை, பரமக்குடி
6. கிளைச் சிறை, தக்கலை
7. கிளைச் சிறை, சாத்தூர்
8. கிளைச் சிறை, குன்னூர்
9. தனிக் கிளைச் சிறை, சேலம்
10. தனிக் கிளைச் சிறை, கொக்கிரகுளம்

**திறந்தவெளிச் சிறை**

4. 100 சிறைவாசிகளை அடைத்து வைக்கும் இடவசதியுள்ள திறந்த வெளிச் சிறை ஒன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூரில் செயல்பட்டு வருகிறது. இச்சிறையில் நவீன வேளாண்மை முறைகளில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

[2003 ஏப்ரல் 7

**பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை**

5. இப்பள்ளியில் 16-21 வயதுத் தொகுதியைச் சார்ந்த வளரிளம் பருவ இளங்குற்றவாளிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சீர்திருத்த முறையில் நடத்தப்படுவதுடன், அவர்களின் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும், விடுதலைக்குப் பின்னர் உதவியாக இருக்கும் வகையில் தொழிற்கல்விப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

**நன்னடத்தைப் பிரிவு**

6. நன்னடத்தைப் பிரிவு தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்குகிறது. இவருக்குக் கீழ் 12 வட்டார நன்னடத்தை அலுவலர்களும், 96 நன்னடத்தை அலுவலர்களும் பணியாற்றுகின்றனர். நன்னடத்தை அலுவலர்கள் நீதிமன்றங்களுக்காக குற்றவாளிகளின் நடத்தை மற்றும் இவர்களின் வாழ்க்கை நிலைமைகள் பற்றி விசாரிக்கின்றனர். மேலும், நன்னடத்தையின் காரணமாக விடுவிக்கப்படும் குற்றவாளிகளைக் கண்காணித்து அவர்களின் மறுவாழ்விற்காகவும் பணிபுரிகிறார்கள்.

2002 ஆம் ஆண்டில் நன்னடத்தை அலுவலர்களால் நீதிமன்றங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட தொடக்க விசாரணைகள் 3885 மற்றும் இதர பல்வகை விசாரணைகள் 9807 ஆகும். இவர்களால் பார்வையிடப்பட்டவர்களில் நன்னடத்தைக் கண்காணிப்பிலிருப்பவர்கள் 34030 பேரும், ஏனையோர் 1215 பேரும் ஆவர். விடுதலைக்குப் பிந்தைய பராமரிப்பு குறித்து அளிக்கப்பட்ட தொடக்க விசாரணைகள் 27612 மற்றும் பல்வகை 965 ஆகும். இவர்கள் நீதிமன்றங்களில் 6,211 முறை ஆஜராகி உள்ளனர். சிறைவாசிகளின் மறுவாழ்விற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக ரூ.7,500/- வரையில் 66 சிறைவாசிகளுக்கு இவர்களால் உதவி செய்யப்பட்டுள்ளது. காவல் நிலையங்களில் மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்திட நன்னடத்தை அலுவலர்களை காவல் நிலையத்திற்குச் சென்று பார்வையிடுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

III. **சிறை நிருவாகத்தை நிலை உயர்த்துதல்**

**சிறைச்சாலைகளை நவீனப்படுத்துதல்**

7. சிறைச்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் நிதியுதவி மற்றும் மாநில அரசின் இணை மானியம் ஆகியவற்றைக் கொண்டு சிறைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் ரூ.180.00 இலட்சம் செலவில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 7]

இத்திட்டத்தின்கீழ் தகவல் தொடர்பு சாதனங்கள், சிறைவாசிகளைக் கண்காணிக்கத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Televisions), செல்ஃபோன் செயலிழக்கும் கருவிகள், மின் கம்பி வேலி அமைத்தல், மின் விளக்கு வசதிகள், வெடிகுண்டு கண்டுபிடிப்பு சாதனங்கள், நவீன ஆயுதங்கள், பதிவு செய்யும் வசதி செய்து கொடுத்தல், வெடிகுண்டு கண்டுபிடிக்கும் கருவிகள், இரவு நேரத்திலும் பார்க்கக்கூடிய தொலைதூரக் கருவிகள், பாதுகாப்பு கோபுரங்கள், மிகவும் தீவிரமாகப் பரிசோதனை செய்யும் வெடிகுண்டு கண்டுபிடிக்கும் கருவிகள், சிறு படைக்கலன்கள், பயிற்சி வழங்கும் கருவிகள் முதலியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிறைப் பணியாளர்கள் மற்றும் சிறைகளின் பாதுகாப்பினைக் கவனிக்கும் பொருட்டு, சிறைப் பணியாளர்களுக்கு நவீன முறையில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மூன்று மத்திய சிறைகளில் உயர் பாதுகாப்பு வசதிகள் கொண்ட அறைகள் கட்டப்பட்டுள்ளன. இத்தகைய உயர் பாதுகாப்பு வசதிகள் பிற சிறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளன.

**நிதிக் குழு**

8. பத்தாவது மற்றும் பதினோராவது நிதி ஆணையத்தின்கீழ் ரூ.1,387.30 இலட்சம் இந்திய அரசால் இத்துறைக்கு நூறு விழுக்காடு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு சிறைக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல், சுகாதாரம் மற்றும் தண்ணீர் வசதிகள் ஏற்பாடு செய்தல், மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல், சிறைவாசிகளின் பயிற்சிக்காக கணினி மையம் ஏற்படுத்துதல் மற்றும் சிறைகளில் பாதுகாப்பினை மேம்படுத்துதல் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பதினோராவது நிதி ஆணையம் 2002-2003 ஆம் ஆண்டுக்கு பதின்மூன்று பணிகளுக்கு ரூ.160.34 இலட்சம் வழங்கீடு செய்துள்ளது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

IV. **மனித வள மேம்பாடு**

**காவலர் பயிற்சி**

9. இந்தப் பயிற்சி மையத்தில் சிறைக் காவலர்களுக்கு ஆறு மாத கால அளவிற்கு உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, நிருவாகம் மற்றும் சீர்திருத்த முறைகள் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

[2003 ஏப்ரல் 7

சிறைவாசிகளின் மனித உரிமைகள் குறித்த பயிற்சிக்குக் கணிசமான அளவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நவீன ஆயுதங்களைக் கையாளும் முறை குறித்தும் கற்றுத் தரப்படுகிறது. இதனைத் தவிர முதன்மை தலைமைக் காவலர்கள் மற்றும் சிறைக் காவலர்களுக்கு அவ்வப்போது நினைவுகூர் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

வேலூரில் உள்ள சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி 100 காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. கூடுதல் பயிற்சித் தேவைகளுக்காக கோயம்புத்தூரிலும் தற்காலிக பயிற்சி மையம் இயங்கி வருகின்றது. மேலும், சிறைக் காவலர்கள் சென்னை, காவல் துறை கமாண்டோ பயிற்சிப் பள்ளியில் பல்வேறு பயிற்சிகள் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

**குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிலையம், வேலூர்**

10. இந்த நிறுவனம் 1979 ஆம் ஆண்டிலிருந்து ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு சீர்திருத்தம், சிறை நிருவாகம் குறித்து பயிற்சி அளிக்கிறது. இந்த நிறுவனத்தின் செலவினத்தை நான்கு தென் மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

**தேசிய அளவில் பயிற்சி**

11. புது தில்லி, தேசிய குற்றவியல் மற்றும் தடய அறிவியல் நிறுவனம்/ காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தேசிய மனித உரிமை ஆணையம் நடத்தும் சிறை நிருவாகத்தில் மனித உரிமைகள், இடைநிலை கருத்தாய்வுப் பயிற்சி, சிறை உளவியல் மற்றும் பல்வேறு சமூக நலன் குறித்த பயிற்சி வகுப்புகளுக்கு சிறை அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர்.

**பணியாளர் தேர்வு**

12. இத்துறைக்கான சிறைக் காவலர்களை தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின்படி தேர்வு செய்து அனுப்புகிறது. எட்டு மணி நேர வேலை முறையை முழுவதுமாக செயல்படுத்திட 352 இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்திட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்தேர்வு குறித்த பணிகள் நடைபெற்று வருகின்றன.



2003 ஏப்ரல் 7]

V. **சிறை ஒழுங்கு முறை**

**உயர் பாதுகாப்பு சிறைவாசிகளைப் பராமரித்தல்**

13. பயங்கரவாத சிறைவாசிகளை அடைப்பதற்காகத் தனியாக தொகுதிகள் அமைக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கை என்பதால், தொடக்கத்தில் கோவை, சேலம் மற்றும் திருச்சியில் உயர் பாதுகாப்புத் தொகுதிகள் அமைக்கப்பட்டன. பின்னர், இத்தகைய பயங்கரவாத சிறைவாசிகளின் எண்ணிக்கை அதிகரித்து விட்டபடியாலும், பல்வேறு வகையான சிறைவாசிகளைப் பிரித்து வைக்க வேண்டியுள்ளதாலும், இத்தகைய உயர் பாதுகாப்புத் தொகுதி முறை மற்ற மத்திய சிறைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அடிப்படைவாத சிறைவாசிகள், தமிழ்நாடு விடுதலைப் படை (Tamil Nadu Liberation Army), தமிழ்நாடு மீட்புப்படை (Tamil Nadu Retrieval Troops), முற்போக்கு இளைஞர் அமைப்பு (Radical Youth League) சிறைவாசிகள் தவிர, இதர பயங்கரவாத சிறைவாசிகளையும் தீவிரக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

அடிப்படைவாத மற்றும் பயங்கரவாத சிறைவாசிகள் அடைக்கப்படும் பல்வேறு சிறைகளில் உள்ள உயர் பாதுகாப்புத் தொகுதிகள், உள்புறம் சிறைக் காவலர்களாலும், வெளிப்புறம் காவல் துறையினராலும் பாதுகாக்கப்படுகின்றன. அனைத்து சிறைவாசிகளும் உரிய பரிசோதனைக்கு தினம் உட்படுத்தப்படுவதோடல்லாமல், உயர் அதிகாரிகளால் அவ்வப்போது சோதனைக்குட்படுத்தப்படுகின்றனர். சிறை விதிகளுக்குட்பட்டு இச்சிறைவாசிகள், பிற சிறைவாசிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர்.

இச்சிறைவாசிகளை நேர்காணல் செய்ய வரும் பார்வையாளர்கள் நேர்காணலுக்கு முன்னரும், பின்னரும் சிறை மற்றும் காவல் துறையினரால் தீவிரமாக சோதிக்கப்படுகின்றனர். சிறைகளில் விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும், சிறைவாசிகள் தப்பித்து விடாமல் பாதுகாக்கவும், அழிவுச் செயல் தடுத்தல் குறித்த சோதனையும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முறையான மின்சார விளக்குகள் அமைத்தல், வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Television), வெடிகுண்டு கண்டுபிடிப்பு சாதனங்கள், செல்ஃபோன் செயலிழக்கும் கருவிகள் அமைத்தல், மின் கம்பி வேலிகள் அமைத்தல் முதலிய பாதுகாப்பு நடவடிக்கைகள், அனைத்து மத்திய சிறைகளிலும்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த உயர் பாதுகாப்புப் பிரிவில் அனுமதிக்கப்படும் அனைத்து சிறைவாசிகளும், உரிய மதிப்புடனும், அனைத்து மனித உரிமைகளுடனும் நடத்தப்படுகின்றனர்.

கோவை, மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள, தொடர் குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து சிறைவாசிகள் குறித்த விசாரணை, கோவை, சிறப்பு நீதிமன்றத்தில் தினமும் நடைபெற்று வருகிறது. இதனைத் தவிர, ஏனைய தமிழ்நாடு விடுதலைப் படை இயக்க சிறைவாசிகள் மற்றும் இதர வெடிகுண்டு வழக்கில் சம்பந்தப்பட்ட சிறைவாசிகள், பூவிருந்தவல்லி, தனிக் கிளைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். இச்சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றத்தால் இச்சிறைவாசிகள் குறித்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனைத் தவிர, வேறு சில சிறைவாசிகள் குறித்த விசாரணைகள் உள்ளூர் நீதிமன்றத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

VI. **சிறைவாசிகள் நலன்**

**உணவு மற்றும் உடை**

14. சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் சமச்சீரான உணவு சிறைவாசிகளுக்கு வரையறுக்கப்பட்ட அளவின்படி வழங்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைவாசிகளுக்கு மருத்துவ உணவாக பால், ரொட்டி, முட்டை முதலியன மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகின்றன. உடைகள் மற்றும் படுக்கைகள் சிறைவாசிகளுக்கு வரையறுக்கப்பட்ட அளவின்படி வழங்கப்படுகின்றன.

சிறைவாசிகளின் நலன் கருதி அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பருத்தியிலான சட்டை மற்றும் அரைக்கால் சட்டைக்குப் பதிலாக டெரிகாட்டன் சட்டை, அரைக்கால் சட்டை வழங்கவும் மற்றும் சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் தரை விரிப்பின் அளவினை அதிகரித்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**சுகாதாரம் பேணுதல்**

15. சிறைவாசிகளுக்குத் தேவையான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. சுகாதார முகாம்கள் முறையாக நடத்தப்படுகின்றன. மனநலங்குன்றிய சிறைவாசிகள், சென்னை, அரசு மனநல மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவதன்



மூலம் போதிய அளவிற்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறைவாசிகளிடையே காச நோயினை ஒழிப்பதற்காக குறுகிய கால நேரடி கவனிப்பு சிகிச்சை முறை (Directly Observed Treatment Shortcourse) முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறைவாசிகளின் நலன் கருதி சிறைகளில் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. அனைத்து மத்திய சிறைகளுக்கும் நோயாளர் அவசர ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. சிறிய மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக, சிறிய பரிசோதனைக் கூடங்கள், இதயத் துடிப்பை அறிய உதவும் சாதனங்கள், இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கி கருவிகள், எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ்-கதிர் படமெடுக்கும் கருவிகள் அனைத்து மத்திய சிறைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**நேர்காணல் மற்றும் பொழுதுபோக்கு**

16. சிறைவாசிகளுக்கு இலவசமாக நேர்காணல் வசதிகள் உள்ளன. நேர்காணல் குறித்த விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இப்படிவத்தினை சிறைத் துறைக்கான தகவல் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். செய்தித்தாட்கள், வாராந்திர மற்றும் மாதாந்திர செய்தித்தாள்களும் சிறைவாசிகளுக்கு அரசு செலவில் வழங்கப்படுகின்றன. இதனைத் தவிர, சிறைவாசிகள் தங்களது சொந்தச் செலவிலும் செய்தித்தாட்கள் வாங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கல்வித் தரம் மற்றும் இலக்கியத் தரம் வாய்ந்த புத்தகங்கள் சிறை நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட நூலகங்களில் இருந்தும் பெறப்பட்டு, சிறைவாசிகளின் பயன்பாட்டிற்காக வழங்கப்படுகிறது. உள்ளரங்கு மற்றும் வெளியரங்கு விளையாட்டுகள் விளையாட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சிறை அறைகளிலும், சிறை ஓய்வு இல்லங்களிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

**கல்வி**

17. சிறைவாசிகளுக்கு அரசு செலவில் தொலைதூரக் கல்வி வழி கல்வி கற்க வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. முதியோர் மூலமாக கல்வி கற்க வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தொடக்கக் கல்விக்காக, தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளிகள் சிறைகளில் இயங்கி வருகின்றன. இந்திரா காந்தி

[2003 ஏப்ரல் 7

திறந்தவெளிப் பல்கலைக்கழகம், கீழ்க்கண்ட பாட வகுப்புகளைத் தொடங்கி உள்ளது.

1. உணவு மற்றும் ஊட்டச்சத்து சான்றிதழ் படிப்பு
2. இளங்கலை ஆயத்தப் பயிற்சி
3. கணினி பயன்பாட்டுப் பயிற்சியில் சான்றிதழ் படிப்பு

நடப்பாண்டில், மொத்தம் 25 சிறைவாசிகள் மேற்காணும் படிப்புகளைப் பயில அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதற்கான செலவுத் தொகை ரூ.35,095/-ஐ அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், மத்திய சிறைகளிலுள்ள சிறைவாசிகளுக்கென்றே பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பிற்கான கல்வியை அளித்து வருகிறது. நாட்டில் முதன்முறையாகத் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ் பாட வகுப்புகள் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் பாடத் திட்டங்களின்படி இருக்கும். இத்திட்டத்தின்கீழ் பல்வேறு சிறைகளிலிருந்தும் 95 சிறைவாசிகள் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பில் சேர்ந்துள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் சேர்ந்துள்ள சிறைவாசிகளின் கல்விக்காக அரசு ரூ.1,95,110/-ஐ செலவு செய்துள்ளது.

மேலும் 5 சிறைவாசிகள் மதுரைப் பல்கலைக்கழக அஞ்சல் வழிக்கல்வித் திட்டத்தின் வாயிலாக பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு பயின்று வருகின்றனர். இச்சிறைவாசிகளின் கல்விக்காக அரசு ரூ.11,550/-ஐ செலவு செய்துள்ளது.

**சிறை நீதிமன்றங்கள் மற்றும் சட்ட உதவி**

18. சிறு வழக்குகளில் சம்பந்தப்பட்ட சிறைவாசிகள் தங்களின் குற்றத்திற்காக மன்னிப்புக் கோரும் நிலையில் அந்த வழக்குகளைத் துரிதப்படுத்தவும், விசாரணை சிறைவாசிகளை, தேவையில்லாமல் நீண்ட காலம் சிறையில் வைத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டும்,



2003 ஏப்ரல் 7]

சம்பந்தப்பட்ட நீதிமன்ற நடுவர்களை எளிதில் அணுகி தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டும், இந்தியாவிலேயே முதன்முறையாக சிறை நீதிமன்றங்கள், மூன்று சிறைகள் நீங்கலாக அனைத்து மத்திய சிறைகளிலும் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளிலும் தொடங்கப்பட்டுள்ளன. இந்த மூன்று சிறைகளிலும் விரைவில் சிறை நீதிமன்றங்கள் துவங்கப்பட உள்ளன.

சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன. சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் அதிகார மன்றம் அனைத்து மத்திய சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளிலும் இலவச சட்ட உதவி தனிப் பிரிவை தொடங்கியுள்ளது.

**குறை தீர்த்தல்**

19. சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொருட்டு, சிறைகளில் மூடி முத்திரையிடப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இந்தப் புகார் பெட்டிகளைத் திறந்து புகார்களை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார். உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் பேரில் அமர்வு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதிபதி ஆகியோர் மாதமொரு முறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளைப் பார்ப்பதுடன் சிறைவாசிகளின் குறைகள் குறித்தும் விசாரணை மேற்கொள்கின்றனர்.

**அலுவல் மற்றும் அலுவல் சாரா பார்வையாளர்கள்**

20. சிறை நிருவாகம் நல்ல முறையில் நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள், குறித்த காலத்திற்கொரு முறை சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். மேலும் சிறைவாசிகளுக்கு அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும், அவர்கள் ஒழுங்காக நடத்தப்படுகின்றனரா என்பதையும் உறுதி செய்து கொள்வதற்காக தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கியப் பிரமுகர்கள் சிறைகளைப் பார்வையிடுகின்றனர்.

பொது மக்களில், முக்கியமாக சிறைகளில் ஈடுபாடு உள்ளவர்கள், சிறந்த சமூக சேவைப் பின்னணி உள்ளவர்கள் ஆகியோர் அலுவல் சாராப் பார்வையாளராக நியமிக்கப்படுகின்றனர். இந்த அலுவல் சாராப் பார்வையாளர்கள், சிறைவாசிகளை சந்திக்கவும், சிறைவாசிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கவும், சிறைச்சாலைகளில் சிறை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிமுறைகள் சரிவர உள்ளனவா என்பதில் திருப்தி அடையும் பொருட்டு சிறைச்சாலைகளின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்றுவர அனுமதிக்கப்படுகின்றனர். இந்த அலுவல் சாரா சிறைப் பார்வையாளர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும். அனைத்து மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் சிறைப் பார்வையாளர்களை நியமனம் செய்யும் அதிகாரத்தினை கூடுதல் சிறைத் துறை தலைமை இயக்குநருக்கு அரசு வழங்கியுள்ளது.

**மனித உரிமைகள்**

21. சிறைவாசிகளுக்கு நல்ல வாழும் வசதிகள், சிறந்த உணவு, போதுமான உடைகள், நல்ல முறையில் நடத்துதல், தகுந்த மருத்துவ சிகிச்சை அளித்தல், நேர்காணல், கல்வி போன்றவற்றை அளிப்பதன் மூலம் தங்களது அடிப்படை வசதிகள் மற்றும் தங்களது மனித உரிமைகள் பாதுகாத்தல் போன்றவற்றை சிறைவாசிகள் பெறுவதை அரசு உறுதி செய்துள்ளது. சிறைவாசிகளின் அடிப்படைத் தேவை மற்றும் உண்மையான குறைகளை உணர்ந்து அதனை வரவேற்க ஏதுவாக, தகுந்த பண்புகளை வளர்த்துக்கொள்ள சிறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாண்புமிகு நீதிபதிகளும் தமிழ்நாட்டில் உள்ள சிறைகளுக்கு வருகை புரிந்து சிறைகளின் நிருவாகத்தைப் பாராட்டி உள்ளனர். தேசிய மனித உரிமை ஆணையம் சிறைகளில் அதிக இடநெருக்கடி குறித்த தனது கவலையை தொடர்ந்து தெரிவித்துள்ளது. இதனைத் தடுக்கும் பொருட்டு, மாவட்டத் தலைநகரில் உள்ள கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக உயர்த்துவதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதன் மூலம் மத்திய சிறைகளில் இட நெருக்கடியினைத் தீர்க்க இயலும், மேலும், மாவட்ட அளவில் அதிக வசதிகளை ஏற்படுத்துவதுடன், சிறைவாசிகளை, தேவையில்லாமல் இதர சிறைகளுக்குக் கொண்டு செல்வதையும் தடுக்க முடியும். இதன் முதற்படியாக, திருவைகுண்டம் கிளைச் சிறை ரூ.112.73 இலட்சம் செலவில் மாவட்டச் சிறையாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. இதனைத் தவிர, நாங்குநேரியில் உள்ள கிளைச் சிறையில் அதிக அளவில் சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க வகையில் ரூ.15.00 இலட்சம் செலவில் கட்டமைப்பு மாறுதல் மேற்கொள்ளப்பட்டு தனிக் கிளைச் சிறையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.





**VII. சிறைவாசிகளின் மறுவாழ்வுப் பணிகள்**
**யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சிகள்**

22. சிறைவாசிகளின் உடல் நலம் மற்றும் மன நலத்தினை மேம்படுத்துவதற்காக யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தனி நபர் மற்றும் நிறுவனங்கள், சிறைகளில் யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி வகுப்புகள் நடத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். சிறைப் பணியாளர்கள் மற்றும் சிறைவாசிகள் இந்த தியானப் பயிற்சி வகுப்புகளில் பங்கேற்கின்றனர். இந்தப் பயிற்சி வகுப்புகளை சிறைவாசிகள் மற்றும் சிறைப் பணியாளர்கள் சிறப்புற வரவேற்கின்றனர். இவற்றின் பலன்கள் ஊக்கமளிப்பவையாக உள்ளன. கடந்த 2002 ஆம் ஆண்டில் 8968 சிறைவாசிகள் மற்றும் 1513 சிறைப் பணியாளர்கள் இந்த வகுப்புகளில் கலந்து கொண்டுள்ளனர்.

**அரசு சாரா நிறுவனங்களின் பங்கு**

23. சிறைவாசிகளின் நலம் மற்றும் மறுவாழ்விற்காக சிறைகளில் யோகாசனம், தியானப் பயிற்சி, அறிவுரை வழங்குதல், ஒழுக்கம் சார்ந்த படிப்பினை குறித்த விளக்கம், இலவச மருத்துவ சிகிச்சை, தொழிற்கல்விப் பயிற்சி அளித்தல் போன்ற மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள, அரசு சாரா நிறுவனங்களுக்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. 2002 ஆம் ஆண்டில் இதுவரை 23 அரசு சாரா நிறுவனங்களுக்கு இத்தகைய மறுவாழ்வு நிகழ்ச்சிகளை நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**சிறைத் தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்பயிற்சி தொழில்கள்**

24. சிறைகளில் வேலை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்பயிற்சி தொழில்களும் சிறைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சுய வேலைவாய்ப்பிற்காக செங்கல் தயாரிப்புத் தொழில், குழாய் பொருத்தும் பணி, விளம்பரப் பலகை வரைதல், மின் கம்பி இணைப்புப் பணி, நெசவுத் தொழில்,

[2003 ஏப்ரல் 7

புத்தகம் கட்டமைத்தல், தையல் வேலை, கூர்நாடா தயாரித்தல், மெழுகு, பாதணிகள், பினாயில், நாடாக்கள், சோப்பு, கம்பளம், கோப்பு அட்டைகள் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சி முடிவடைந்தவுடன், மாநில வாழ்க்கைத் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் குழுவினரால் பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. சிறைவாசிகளின் மறுவாழ்விற்குப் பயன்படாத மற்றும் பழமையான தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன.

சிறைத் துறை "பணித் துறையாக" அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறை பொருட்களைச் சிறையில் தயாரித்து அரசுத் துறைகளுக்கு இலவசமாக வழங்குகிறது. சிறைத் தொழிற்பிரிவுகளில் கடந்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளில் ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு சுமார் ரூபாய் நான்கு கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மகளிருக்கான தனிச் சிறைச்சாலைகள் ஆகியவற்றில் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலில் உள்ளது.

இத்திட்டத்தின்கீழ் சிறைவாசிகளுக்கு தினசரி ஊதியம் அனைத்துப் பிடித்தங்களும் செய்த பிறகு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.18/-, ஓரளவு தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.15/-, மற்றும் தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.13.50 என்று வழங்கப்படுகிறது.

**VIII. பணியாளர்கள் நலன்**

**பதக்கங்கள்**

*25.* சிறைத் துறையில் திறமையினை வளர்க்கவும் மற்றும் ஊக்குவிக்கும் பொருட்டும் கீழ்க்கண்ட பதக்கங்கள் சிறை அதிகாரிகளுக்கு வழங்கப்படுகின்றன:

**1) முதலமைச்சர் பதக்கம்**

அ) வீர தீரச் செயல்களுக்கான பதக்கம்

ஆ) பாராட்டத் தகுந்த சேவைக்கான பதக்கம்

இ) நற்பணிப் பதக்கம் (சிறைக் காவலர்களுக்கு மட்டும்)



2003 ஏப்ரல் 7]

**2) குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்**

அ) வீர தீரச் செயல்களுக்கான பதக்கம்

ஆ) பாராட்டத் தகுந்த சேவைக்கான பதக்கம்

இ) மெச்சத் தகுந்த சேவைக்கான பதக்கம்.

**கருணைத் தொகை வழங்குதல்**

*26.* பணியில் செயலாற்றும்போது இறந்துவிடும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும், நிரந்தரமாக இயலாமை உற்றவர்கள் மற்றும் செயல் திறனற்ற சிறைத் துறைப் பணியாளர்கள் ஆகியோருக்கும் கருணைத் தொகை வழங்கப்படுகிறது.

சிறைப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால், அவர்களின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு, பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியம் அவர் பணிமூப்பில் ஓய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர் தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**முதலமைச்சர் குறை தீர்க்கும் நாள்**

*27. 2002* ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் குறை தீர்க்கும் நாள் மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. இந்தக் குறை தீர்க்கும் நாட்களில், சிறைப் பணியாளர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு அவர்களின் மனக்குறைகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்ட வரைமுறைகளின்படி, முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் சிறைத் துறையில், மூத்த அதிகாரிகளால் கீழ்க்கண்டவாறு குறை தீர்க்கும் நாள் நடத்தப்பட்டு வருகிறது:

1. கூடுதல் சிறைத் துறை இயக்குநர் - மூன்று மாதங்களுக்கு ஒரு முறை
2. சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்- மாதமொரு முறை
3. மத்திய சிறைக் கண்காணிப்பாளர் - வாரமொரு முறை

[2003 ஏப்ரல் 7

சிறைப் பணியாளர்களின் மனக்குறைகள் கேட்டறியப்பட்டு, தீர்வுகள் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

**கூடுதல் நேரப் பணி ஊதியம்**

28. காவல் துறைப் பணியாளர்களுக்கு இணையாக சிறைப் பணியாளர்களுக்கும் நாளொன்றுக்கு ரூ.100/- வீதம் கூடுதல் நேரப் பணி ஊதியம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

**உணவுக் கட்டணம் மற்றும் இரவு உணவு**

29. அவசர காலங்கள் மற்றும் மொத்தமாக சிறைவாசிகள் அனுமதிக்கப்படும் காலங்களிலும் மத்திய சிறையில் பாதுகாப்புப் பணிகளில் பணியமர்த்தப்படும் செயலாட்சிப் பணியாளர்களுக்கு உணவுக் கட்டணங்கள், மாவட்டங்களில் முறையே இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு ரூ.35/- வீதமும், முதல் நிலைக் காவலர்கள் மற்றும் முதல் தலைமைக் காவலர்களுக்கு ரூ.40/- வீதமும், துணைச் சிறை அலுவலர் பதவி வரையில் உள்ள அனைவருக்கும் ரூ.50/- வீதமும், சென்னை மாநகரில் அனைத்துப் பணியாளர்களுக்கும் ரூ.80/- வீதமும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனைத் தவிர, இரவு நேரத்தில் மத்திய சிறைகளில் பணிபுரியும் காவலர்களுக்கு இரவு உணவு மற்றும் காலை தேநீர் ஆகியவை அரசு செலவில் வழங்கப்படுகின்றன.

**சீருடை தையல் கட்டணம்**

30. சிறைக் காவலர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு ஜோடி சீருடைகள் தைப்பதற்காக ரூ.200/- தையல் கட்டணமாக வழங்கப்படுகிறது.

**பதவி உயர்வு வாய்ப்புகள்**

31. பல ஆண்டுகளாகவே இத்துறையில் பணியாற்றும் கீழ் நிலைப் பணியாளர்கள் தங்கள் பணிக்காலம் முழுவதும் ஒரு பதவி உயர்வுக்குக் கூட வாய்ப்பு இல்லாமல் மிகவும் துன்பப்பட்டு வந்தனர். இக்குறைகளைத் தீர்க்கும் வகையில் அரசு கிளைச் சிறைகளில் 112 முதல் தலைமைக் காவலர் பணியிடங்களைத் தோற்றுவித்தது. இதன் மூலம் பதவி உயர்வு வழங்கப்பட்ட பணியாளர்கள் பல்வேறு கிளைச் சிறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.



2003 ஏப்ரல் 7]

**IX. ஏனைய முயற்சிகள்**
**கொள்முதல்**
**உணவுப் பொருட்கள்**

32. கூட்டுறவு சிறப்பு அங்காடியில் மத்திய சிறைகளுக்கான உணவுப் பொருட்களை வாங்கும் பழைய முறைக்குப் பதிலாக, குறைந்த விலையில் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைச் சட்டத்தின்படி, பகிரங்க ஒப்பந்தப்புள்ளி முறையின் மூலம், உணவுப் பொருட்களை போட்டி விலையில் வாங்குவதற்கு புதிய முறையை அரசு பின்பற்றியுள்ளது. இம்முறையானது 2002-2003 ஆம் ஆண்டு முதல் பிற கிளைச் சிறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**மூலப் பொருட்கள்**

33. மத்திய சிறைகள் மற்றும் புதுக்கோட்டை சீர்திருத்தப் பள்ளி முதலியவற்றில் இயங்கிவரும் பல்வேறு தொழிற்பிரிவுகளுக்கு தேவையான மூலப் பொருட்கள் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைச் சட்டத்தின்படி பகிரங்க ஒப்பந்தப்புள்ளி முறையின் மூலம் கொள்முதல் செய்யப்படுகிறது. இவ்வாறு வாங்கப்படும் மூலப் பொருட்கள் அனைத்தும் இந்திய தரச் சான்றிதழ் தரத்துடன் இருப்பதோடு இவற்றின் விலை எப்பொழுதும் சந்தை விலையைவிடக் குறைவானதாகவும் இருக்கும்.

**தகவல் தொழில்நுட்பம்**

34. சிறைத் துறையினைக் கணினி மயமாக்குவதற்காக அனைத்து மத்திய சிறைகளுக்கும் கணினி வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தேசிய தகவல் மையத்தின் உதவியுடன், சிறைவாசிகளின் தகவல் அமைப்பு முறை குறித்து மென்பொருள் நம் நாட்டிலேயே முதன்முறையாக நம் மாநில சிறைத் துறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய தகவல் மையம், சிறைகளின் பதிவேடுகளைக் கணினிமயமாக்கும் முறை குறித்த பிற மென்பொருளையும் தயாரித்து வருகிறது. ஏற்கெனவே, இத்துறையைச் சார்ந்த 156 பணியாளர்களுக்கு கணினியினை இயக்கும் முறை குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. சிறைத் துறையைக் கணினிமயமாக்கும் நடவடிக்கையை விரிவுபடுத்துவது மட்டுமின்றி, சிறைவாசிகளின் மறுவாழ்விற்காக சிறைவாசிகளுக்குக் கணினியில் பயிற்சி அளிக்க ரூ.155 லட்சம் செலவில் ஒவ்வொரு மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச் சிறைகளிலும் கணினி மையம் தொடங்கப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 7

ஒளிவு மறைவற்ற நிர்வாகத்தினை அமைத்திடவும், பொது மக்கள் சிறைத் துறையின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளவும், தேசிய தகவல் மையத்தினரால் வடிவமைக்கப்பட்ட பின்வரும் தகவல் தளம் சிறைத் துறையால் தொடங்கி வைக்கப்பட்டது:

www.tn.nic.in/prisons

www.tn.gov.in/prisons

**புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு**

*35.* சிறைகளின் நடவடிக்கை குறித்த புலனாய்வு விவரங்களை சேகரிப்பதற்காக ஒரு காவல் துறை ஆய்வாளர், இரண்டு காவல் துறை உதவி ஆய்வாளர்கள், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர் அடங்கிய புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு ஒன்று இத்துறையில் இயங்கி வருகிறது.

**X. புதிய முயற்சிகள்**

**சீர்திருத்தத்திற்கான தொலைநோக்குத் திட்டம்**

*36.* அனைத்து சிறைகளின் தரத்தினையும் குறிப்பிட்ட அளவிற்கு நிலை உயர்த்துவதற்காக இந்திய அரசின் உள் துறை அமைச்சகம், சிறைச் சீர்திருத்தத்திற்கான தொலைநோக்குத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தினை தயாரித்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு (2002-2007) 25 விழுக்காடு மாநில அரசின் பங்கினையும் சேர்த்து உத்தேசமாக 95.34 கோடியை கீழ்க்கண்ட நான்கு முக்கியப் பணிகளில், திட்டப் பணிகளை செயற்படுத்துவதற்காக ஒதுக்கி உள்ளது:

(அ) புது சிறைச் சாலைகள் கட்டுதல்

(ஆ) தற்போதுள்ள சிறைக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

(இ) குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம்

(ஈ) சிறைப் பணியாளர்களுக்குத் தங்கும் குடியிருப்பு வழங்குதல்

இந்தப் புது சிறைச்சாலைகள் கட்டுவதற்கான தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் சில கிளைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக நிலை உயர்த்தவும், பெண்களுக்காக தனிச் சிறை ஒன்றினை மேம்படுத்தவும்



2003 ஏப்ரல் 7]

முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொலைநோக்குத் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோள், சிறைச்சாலைகளை விரிவுபடுத்துவது மற்றும் மேம்பட்ட வசதிகளை ஏற்படுத்துவதன் மூலமாகத் தற்போது சிறைச்சாலைகளில் நிலவும் இட நெரிசல்களைக் களைவது ஆகும். மேலும், தண்ணீர் விநியோகம், சுகாதாரம், பணியாளர்களுக்கான குடியிருப்பு போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதும் ஆகும்.

**புழல் சிறை வளாகம்**

*37.* சென்னை மத்திய சிறையில் இட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், தற்போதைய சென்னை மத்திய சிறையில் 800 விசாரணை சிறைவாசிகள் மட்டுமே அடைக்கும் வகையிலும், 1158 தண்டனை சிறைவாசிகள் அடைக்கத்தக்க இட வசதியுடன் கூடிய மத்திய சிறை ஒன்று புழலில் அமைத்திட முதலில் முடிவு செய்யப்பட்டது. தற்போது புழலில் உள்ள மத்திய சிறை 200 சிறைவாசிகளை அனுமதிக்கும் வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. சென்னை மத்திய சிறையில் நிலவும் அளவிற்கதிகமான இட நெரிசல் மற்றும் அதிகரித்து வரும் தேவையினைக் கருத்திற்கொண்டு மிக நவீன வசதிகளுடன்கூடிய புதிய சிறை வளாகத்தினை புழலில் அமைக்க அரசு முடிவு செய்தது. இப்புதிய சிறை வளாகம் 1250 விசாரணை சிறைவாசிகள், 1250 தண்டனை சிறைவாசிகள் மற்றும் 500 பெண் சிறைவாசிகளை அனுமதிக்கத்தக்க வகையில் அமையும். இப்புதிய சிறை வளாகம் 211.92 ஏக்கர் பரப்பளவுடன் மாசற்றதாகவும், ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழலைக் கொண்டதாகவும் அமையும். இவ்வசதி சிறைவாசிகளைக் காணவரும் உறவினர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

**கிளைச் சிறைகளில் உணவு**

*38.* மத்திய சிறைகளில் உள்ள சிறைவாசிகளுக்கு வழங்கப்பட்ட உணவுப் பண்டங்களின் அளவு மற்றும் தரத்திற்குக் குறைவாகவே கிளைச் சிறையிலுள்ள சிறைவாசிகளுக்கு உணவுப் பண்டங்கள் வழங்கப்பட்டன. இந்த வேறுபாட்டைக் களையும் பொருட்டு, மத்திய சிறையிலுள்ள சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பண்டங்களைப் போலவே, கிளைச் சிறை சிறைவாசிகளுக்கும் உணவுப் பண்டங்கள் வழங்குமாறு 5-3-2003 அன்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

[2003 ஏப்ரல் 7

### பகுதி-2 திட்டங்கள்

39. சிறைவாசிகளின் நலத் திட்டங்களில் மிகச் சிறந்த நலத் திட்டமாக, சிறைவாசிகளுக்குக் குளியல் சோப்பு மற்றும் பல்பொடி வழங்க அரசு முடிவு செய்துள்ளது. மேலும், போதுமான உடைகள் வாங்க வசதியற்ற விசாரணை சிறைவாசிகளுக்குப் போதிய உடைகள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அலுமினியப் பாத்திரங்களுக்கு, பதிலாக எவர்சில்வர் பாத்திரங்கள் உபயோகப்படுத்துவதன் மூலம் சிறைவாசிகளின் நலத்தினை மேம்படுத்தவும் அரசு முடிவு செய்துள்ளது. மத்திய சிறைகள், பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் திறமையான நிர்வாகத்தை மேற்கொள்ளுவதற்காக சிறந்த தகவல் தொடர்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இத்திட்டங்களுக்கான செலவு விவரம் பின்வருமாறு:

| வ.எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிறைவாசிகளுக்குக் குளியல் சோப்பு மற்றும் பற்பொடி வழங்குதல் | ரூ.32.00 |
| 2. | பெண்கள் தனிச் சிறைக் கண்காணிப்பாளர்களுக்கு இருப்பிடத் தொலைபேசி இணைப்பு வழங்குதல் | ரூ.0.15 |
| 3. | கூடுதல் சிறைத் துறைத் தலைமை இயக்குநர் அலுவலகம் மற்றும் பெண்கள் தனிச் சிறைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கு நுண்ணலை தொலைபேசி இணைப்பு வழங்குதல் | ரூ.1.00 |
| 4. | தெரிவு செய்யப்பட்ட 37 கிளைச் சிறைகளுக்குத் தொலைபேசி இணைப்பு வழங்குதல் | ரூ.3.01 |
| 5. | 7 கிளைச் சிறைகளுக்கு 300 கிலோ எடைத் திறன் கொண்ட மேடைத் தராசு வழங்குதல் | ரூ.0.37 |
| 6. | போதிய உடைகள் வாங்க இயலாத விசாரணை சிறைவாசிகளுக்கு அரசு செலவில் உடைகள் வழங்குதல் | ரூ.2.70 |
| 7. | அலுமினியப் பாத்திரங்களுக்கு மாற்றாக எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்குதல் | ரூ.33.00 |
| 8. | கூடுதல் சிறைத் துறை தலைமை இயக்குநர் அலுவலகம், அனைத்து மத்தியச் சிறைகள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, பெண்கள் தனிச் சிறை ஆகியவற்றிற்கு மின்னணுத் தபால் முத்திரை இயந்திரம் வழங்குதல் | ரூ.13.05 |
| | மொத்தம் | ரூ.85.28 |



2003 ஏப்ரல் 7]

### அகில இந்திய சிறைத் துறை திறனாய்வுப் போட்டிகள்

40. தமிழ்நாடு சிறைத் துறையின் முயற்சியால், இந்திய அரசின் உள் துறையின் காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், முதல் அகில இந்திய சிறைத் துறை திறனாய்வுப் போட்டிகளை நடத்துவதற்கான ஆட்சிமுறை ஒப்பளிப்பினை அளித்ததோடு, ரூ.3.86 இலட்சம் நிதியினையும் ஒதுக்கியது. இது சிறைத் துறையின் வரலாற்றில் ஒரு மைல்கல் ஆகும். தமிழ்நாடு அரசு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் திறனாய்வுப் போட்டியினை நடத்த முன்வந்ததோடல்லாமல், ரூ.6.08 லட்சம் நிதியினையும் வழங்கியது. இந்தத் திறனாய்வுப் போட்டி சென்னை, ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 27-10-2002 முதல் 29-10-2002 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் தமிழகத்தையும் சேர்த்து 11 மாநிலங்களில் இருந்து சுமார் 250 போட்டியாளர் பங்கேற்றதில், தமிழ்நாடு ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தினை வென்றது. சிறைப் பணியாளர்களின் திறமைகளை செம்மைப்படுத்தி, நல்ல முறையில் செயலாக்கப் பணிகளில் ஈடுபடச் செய்வதே இத்தகைய திறனாய்வுப் போட்டிகள் நடத்துவதன் நோக்கமாகும். மேலும் சிறைப் பணியாளர்கள், தங்கள் பணியில் மேலும் தொழில் முறையினைப் பின்பற்றி, அதன் மூலம் சிறைப் பணியாளர்களுக்கான தேசிய அவையினை அமைத்து, தங்களுக்குள் கலந்துரையாடவும், தங்கள் சிறையில் பின்பற்றப்படும் நல்ல பழக்க வழக்கங்கள் குறித்து தங்களது கருத்துகள் மற்றும் அனுபவத்தினை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதன் மூலம் இந்தியாவில் ஒரே மாதிரியான சீரான சிறை நிருவாகத்தை ஏற்படுத்த முடியும்.

### XI. முடிவுரை

41. சிறைகளின் நிருவாகத்திற்கு தமிழக அரசு உயர் முன்னுரிமையளிக்கிறது. சிறைப் பணியாளர்கள் மற்றும் சிறைவாசிகளின் அனைத்து வகை நல நடவடிக்கைகளையும் மேம்படுத்த ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறைச்சாலைகளை மேம்படுத்த அடிப்படைக் கட்டமைப்பு, சிறைகளில் காவல் மற்றும் பாதுகாப்பு, சிறைவாசிகளின் நலன் மற்றும் பல்வகை நிர்வாக மாற்றங்களும் செய்யப்படுகின்றன. சிறைகளின் சீர்திருத்தம் குறித்து பல்வேறு குழுக்களின் பரிந்துரைகள் முடிந்த வரையில் முழுமையாக செயற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டச் சிறைகள் எனும் கோட்பாடு இம்மாநிலத்தில் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. சென்னை, மத்திய சிறையில் இட நெருக்கடி மற்றும் பாதுகாப்புப்

பிரச்சினைகளாலும் இம்மத்திய சிறை பொருத்தமற்றதாக உள்ளதால் இம்மத்திய சிறை . பெண்களுக்கான தனிச் சிறை, நிலை உயர்த்தப்பட்ட மருத்துவமனை மற்றும் நவீன வசதிகளுடன் புழலில் அமைக்கப்பட உள்ள மிகப் பிரம்மாண்டமான சிறை வளாகத்திற்கு இட மாற்றம் செய்யப்பட உள்ளது. பெண்களுக்கென மட்டுமே 10 கிளைச் சிறைகள் உருவாக்கப்பட்டது இந்தியாவிலேயே முன்னோடியான முயற்சியாகும். முதல் அகில இந்திய சிறைப் பணியாளர் திறனாய்வுப் போட்டியினை சென்னையில் நடத்தியதன் மூலம், தமிழ்நாடு சிறைத் துறை பிற மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில், சிறைவாசிகளின் மனித உரிமை விதிகளை உரிய முறையில் அமல்படுத்துவதன் மூலம் சிறைச்சாலைகள் சீர்திருத்த மையங்களாக மாறி வருகின்றன என்பதை எண்ணத்திலும், செயலிலும் உறுதி செய்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.





# இணைப்பு IV

*(107 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 36

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## 2003-2004 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு

**முன்னுரை**

1.1 இந்த அரசின் மதுவிலக்குக் கொள்கையின் முக்கிய நோக்கம் ஏழை எளிய மக்களின் பொருளாதார நல்வாழ்வையும் உடல் நலத்தையும் வெகுவாகப் பாதிக்கும் கள்ளச்சாராயத்தினை ஒழிப்பதே ஆகும். இருப்பினும், ஆயத்தீர்வையால் அரசுக்குக் கிட்டும் வருவாய் வாய்ப்பு மிகக் கூடுதலாக உள்ள காரணத்தினால், சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் மதுபானங்களுக்கு செலவு செய்யும் அளவிற்கு வசதியுள்ள பிரிவினர்கள் பயன்படுத்தும் மதுபானங்களின்மீது தேவையான வரிகள் விதிப்பதன் மூலம் வருவாயைப் பெருக்கலாம் என்ற கொள்கையையும் இந்த அரசு பின்பற்றி வருகிறது.

1.2 மதுபானங்களை அருந்தத் தலைப்படும் மக்களுக்கு அவர்களது உடல் நலத்திற்கும் உயிருக்கும் பெருந்தீங்கு விளைவிக்காததாகவும், அவர்கள் செலவிடும் பணத்திற்கு ஏற்ப தரமானதாகவும் உள்ள மதுபானங்களைக் கிடைக்கச் செய்வதும் அரசின் பொறுப்பாகிறது.

1.3 இந்த அரசு கள்ளச்சாராயம் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மது/போலி மதுவகைகள் போன்றவற்றை ஒழிப்பதில் தளராது போராட உறுதி பூண்டுள்ளது. கள்ளச்சாராயத்தின் தீமைகளை, பாமர மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ள மக்களுக்கு, அறிவுறுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு மிக மிக முக்கியமானது என்பதை இந்த அரசு முழுமையாக

[2003 ஏப்ரல் 7

நம்புகின்றது. எனவே, கள்ளச்சாராயம் அருந்துவதால், சிலர் தங்களது விலை மதிப்பில்லாத உயிரை மாய்த்துக்கொள்ளும் துயரச் சம்பவங்களைத் தடுக்கும் பணியில் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள், கள்ளச்சாராயம் போன்றவற்றை அறவே ஒழிக்கவும், இத்தகைய செயல்களில் ஈடுபடுவோர்மீது மதுவிலக்குச் சட்டத்தின் கடுமையான பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுத்து, அதன் காரணமாய் அரசிற்கு ஏற்படும் வருவாய் இழப்பைத் தடுக்கவும், இத்தகைய போலி மதுவகைகளைக் குடிப்பதால், கள்ளச்சாராய மற்றும் விஷச்சாராயச் சாவுகளுக்குப் பலியாகும் ஏழை மக்களின் உயிர் காக்கவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு முழுமையாக மேற்கொள்ளும்.

1.1 இந்த அரசு பின்பற்றிய கடுமையான நடவடிக்கைகளினால் 2002-2003 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் விஷச்சாராயம் மற்றும் மெத்தனால் போன்றவற்றினால் எந்தவொரு உயிர்ச்சேத சம்பவமும் நிகழவில்லை என்பதை அறிவதில் உறுப்பினர்கள் மகிழ்ச்சி கொள்வார்கள். இந்த அரசு, மெத்தனால் உபயோகத்தின்மீது விழிப்பான கண்காணிப்பினை மேற்கொள்ளும் அதே நேரத்தில், அதனைத் தவறாகப் பயன்படுத்துவோர்மீது கடுமையான நடவடிக்கைகளையும் எடுத்து, மெத்தனால் மற்றும் கள்ளச் சாராயத்தினால் ஏற்படும் உயிர் இழப்புகளைத் தடுப்பதில் தொடர்ந்து முனைப்பாக செயல்படும்.

## 2. ஆயத்தீர்வை வருவாயின் வளர்ச்சி

2.1 இம்மாநில வருவாயில் மதுபானங்களின்மீது விதிக்கப்படும் ஆயத்தீர்வை மற்றும் விற்பனை வரிகளின்மூலம் கிடைக்கும் வருவாய் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். 2001-2002 ஆம் ஆண்டில் இத்துறை மொத்தம் ரூபாய் 3694.29 கோடியை மாநில அரசிற்கு ஈட்டித் தந்தது. இதில் ரூபாய் 2058.21 கோடி ஆயத்தீர்வை மூலமும், ரூபாய் 1636.08 கோடி மதுபானங்கள் மீதான விற்பனை வரி மூலமும் கிடைத்தது. இந்த வகையில், 2002-2003 ஆம் ஆண்டில் இத்துறையின் மொத்த வருவாய்ப் பங்களிப்பு ரூபாய் 3808.35 கோடியாகும்.



2003 ஏப்ரல் 7]

2.2 இம்மாநிலத்தில் ஆயத்தீர்வை வருவாய் முக்கியமாக இரண்டு வழிகளில் கிடைக்கிறது. (1) இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளின் சிறப்புரிமைக் கட்டணம் மற்றும் (2) மதுபானங்கள் மற்றும் இதர ஆயத்தீர்வைப் பொருட்களின்மீது விதிக்கப்படும் வரி மற்றும் கட்டணங்கள். 31-7-2002 உடன் முடிவடைந்த ஆயத்தீர்வை ஆண்டில், 5512 இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு இதன் மூலம் சிறப்புரிமைத் தொகையாக ரூபாய் 548.79 கோடி வசூல் செய்யப்பட்டது. 2002-2003 ஆயத்தீர்வை ஆண்டில் 5144 கடைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு 15-3-2003 வரை சிறப்புரிமைத் தொகையாக ரூபாய் 629.51 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை 2001-2002 ஆம் ஆண்டைக் காட்டிலும் ரூபாய் 80.72 கோடி அதிகமாகும்.

2.3 2002-2003 ஆம் ஆண்டு இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக்கு சிறப்புரிமை வழங்க கொள்கை வகுக்கும்பொழுது, மதுபான சில்லறை விற்பனை உரிமதாரர்கள் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் இலக்கை எட்டாதபட்சத்தில் அவர்களுக்கு தண்டத் தொகை விதிக்க வழிவகை செய்யப்பட்டது. இந்த நடவடிக்கைக்கு எதிராக அவர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடர்ந்தனர். இவ்வழக்குகள் சிலவற்றில் தண்டத் தொகை விதிக்க அரசிற்கு அதிகாரம் இல்லை என்றும் மற்றும் சில வழக்குகளில் கொள்முதல் இலக்கு உரிமம் வழங்கிய பின்பு தான் அறிவிக்கப்பட்டது என்றும் வாதாடப்பட்டது. இந்நிலையில் அரசு, 2002-2003 ஆம் ஆண்டு வருடத்திற்கு கடைகளின் எண்ணிக்கையினை 7000 ஆக உயர்த்திடவும், அவைகளை குலுக்கல் முறையில் புதிதாக விற்கவும், உரிமம் வழங்குவதற்கு முன்பாக கொள்முதல் இலக்கை முன்னதாகவே அறிவிக்கவும், உரிமங்கள் புதுப்பித்தல் தொடர்பான விதிகளை நீக்கம் செய்யவும் முடிவு செய்தது. இதற்கிணங்க, 8-7-2002 நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறை; அரசாணை (நிலை) எண் 128, 129, 130-இல் இம்மாநிலத்தில் 7000 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் அமைக்கவும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறை, அரசாணை (நிலை) எண் 115, நாள்

22-6-2001-இல் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளின்படி உரிமங்களை வழங்க குலுக்கல் முறையில் உரிமதாரர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனவும் அரசு உத்தரவிட்டது. வருவாயை அதிகரிக்கும் நோக்கத்தில், அரசு உரிமைக் கட்டணத்தைத் திருத்தியமைத்தது. 2002-2003 ஆம் ஆண்டுக்கான, பல்வேறு வகையான உள்ளாட்சிப் பகுதிகளுக்கேற்ப அப்பகுதிகளில் அமையவுள்ள மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட சிறப்புரிமைத் தொகைகளையும், முந்தைய ஆண்டிற்கு (2001-2002) இதே போல் நிர்ணயம் செய்யப்பட்ட சிறப்புரிமைத் தொகைகளையும் காட்டும் ஒப்புநோக்குப் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

| வ. எண். | பகுதி | 2001-2002-க் கான சிறப்பு-ரிமைத் தொகை | 2002-2003-க் கான சிறப்பு-ரிமைத் தொகை |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சங்களில்) | |
| 1 | மாநகராட்சிகள் | 14.00 | 16.10 |
| 2 | சிறப்பு நிலை/தேர்வு நிலை/நகராட்சிகள் | 12.00 | 13.80 |
| 3 | மற்ற நிலை நகராட்சிகள் | 11.00 | 12.65 |
| 4 | சிறப்பு நிலை/தேர்வு நிலைப் பேரூராட்சிகள் | 9.00 | 10.35 |
| 5 | மற்ற நிலைப் பேரூராட்சிகள் | 8.00 | 9.20 |
| 6 | கிராமப் பஞ்சாயத்துகள் | 5.00 | 6.00 |





2.4 அரசாணை நிலை எண் 129, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, நாள் 8-7-2002-ல் அரசு வருவாயை அதிகப்படுத்துவதற்காக மாநகராட்சி/நகராட்சிகளின் புற எல்லையில் அமைந்துள்ள கடைகளுக்கும் அந்தந்த மாநகராட்சி/நகராட்சிகளில் அமைந்துள்ள கடைகளுக்கு இணையான அளவில் உரிமைத் தொகை வசூலிக்க அரசு ஆணையிட்டுள்ளது.

2.5 சில உரிமதாரர்கள், உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, இவ்வாணைக்கு எதிராக உத்தரவு பெற்றதால், அரசும் இப்பொருள் குறித்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யவேண்டியதாயிற்று. கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்படும் குறைந்தபட்சக் கொள்முதல் குறித்து அரசால் எடுக்கப்பட்ட முடிவு உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டது. ஆயினும், 31-7-2002-இல் உரிமம் புதுப்பிக்கக் கோரிய உரிமதாரர்களுக்கு மட்டும் புதுப்பித்தல் ஆணை வழங்க வேண்டும் என்ற உயர் நீதிமன்ற உத்தரவினையும் உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. உச்ச நீதிமன்ற ஆணையின்படி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிமம் வழங்கப்பட்டது. மேலும், சென்னை உயர் நீதிமன்ற ஆணையின்படி நிர்ணயித்த தேதிக்குள் விண்ணப்பித்தவர்களுக்கும் உரிமம் புதுப்பிக்கப்பட்டது.

2.6 இவ்வாறாக, குலுக்கல் மூலம் மொத்தம் 4603 கடைகளுக்கும், நீதிமன்ற ஆணையின்படி கூடுதல் கடைகளாக 131 கடைகளுக்கும் 16-9-2002 முதல் ஓராண்டு காலத்திற்கு உரிமம் வழங்கப்பட்டது. மீதமுள்ள கடைகளைப் பொறுத்த வரை, பல முறை மறு குலுக்கலுக்கு அறிவிக்கை செய்தபோதிலும் உரிமம் கோர எவரும் முன்வரவில்லை என்பதால் அரசிற்கு கூடுதல் வருவாய் பெறும் நோக்குடன், விற்பனையாகாத கடைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு நியமன அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இம்முயற்சிகளின் பலனாக மதுபான சில்லறை விற்பனைக்


வருவாய் வளர்ச்சி
1991-1992 முதல் 2002-2003 முடிய




(ரூபாய் கோடியில்)
1868.68
2058.21
2110.73
2000-2001
2001-2002
2002-2003*
500
1000
1500
2000

[2003 ஏப்ரல் 7






2003 ஏப்ரல் 7]

2.8 கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைக்கப்பட்ட வருவாய் நிலையை ஒப்பிடுகையில் ஆயத்தீர்வையிலும், விற்பனை வரியிலும், வருவாய் வளர்ச்சி கணிசமாக உயர்ந்துள்ளது. கடைகளுக்கு உரிமம் வழங்குதல், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனை ஆகியவற்றில் நீதிமன்ற வழக்குகளால் பாதிப்பு இருந்தபோதிலும், மொத்தத்தில் 2002-2003-இல் ரூபாய் 114.06 கோடி கூடுதல் வருமானம் பெற இயலும் என்பது ஒரு பாராட்டத்தக்க சாதனையாகும்.

## 3. 2002-2003 ஆம் ஆண்டில் மாநிலத்தின் ஆயத்தீர்வை வருவாயைப் பெருக்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

3.1 இம்மாநிலத்தில் ஆயத்துறையின் மூலம் பெறப்படும் மொத்த வருவாய் இந்நாட்டிலேயே அதிகபட்சமாக இருந்தாலும், மேலும் கூடுதலாக வருவாயைப் பெருக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வது அவசியமென இந்த அரசு கருதியது. அதற்கேற்ப, ஆயத்தீர்வை வருவாயினைப் பெருக்குவதற்குத் தேவையான வழிவகைகளைக் கண்டறியவும், அதன்பேரில் அரசுக்குத் தக்க பரிந்துரைகள் வழங்கவும், ஒரு உயர்நிலைக் குழுவினை அமைக்க 29-7-2002ஆம் நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத், (3) துறை அரசாணை (நிலை) எண் 174-ல் அரசு ஆணைகள் வழங்கியது. அக்குழுவும், விரிவான ஆய்வுக்குப் பிறகு பல ஆலோசனைகளை வழங்கியது. அரசு 22-10-2002 ஆம் நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (6) துறை, அரசாணை (நிலை) எண் 242 வாயிலாக இவ்வாலோசனைகளை ஏற்று ஆணை வழங்கியுள்ளது.

### 3.2 அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில்

(1) இராணுவப் பண்டகசாலை (Canteen Stores Department) இறக்குமதி செய்யும் அல்லது உள்ளூரிலிருந்து வாங்கும் ரம் வகைகளுக்கு ஆயத்தீர்வையினை ஒரு புரூப் லிட்டருக்கு ரூபாய் 2.75-லிருந்து ரூபாய் 22 ஆக (ரூபாய் இருபத்திரண்டு மட்டும்) உயர்த்தி அரசு ஆணை எண் 46, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (9) துறை, நாள் 27-2-2003 இல் ஆணை வழங்கியுள்ளது.

[2003 ஏப்ரல் 7

(2) மனமகிழ் மன்றங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்கு வழங்கப்படும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது மற்றும் பீர் வகைகளின் மீதான, தமிழ்நாடு வாணிபக் கழகத்தின் இலாப விகிதத்தினை, முறையே 20 மற்றும் 40 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

(3) தங்கும் விடுதிகள் மற்றும் மனமகிழ் மன்றங்கள் இறக்குமதி செய்யும் மதுபானங்கள் மற்றும் பீர் வகைகள் ஆகியவற்றிக்கு தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் ஆதாய அளவிற்கு இணையான, சிறப்பு இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம் விதிக்க விதிகளில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(4) ஏற்கெனவே உள்ள இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகளுக்கும், ஆண்டொன்றுக்கு ஒரு மதுவகைக்குப் பதிவு புதுப்பித்தல் கட்டணமாக ரூ.2 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) விதிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(5) ஒவ்வொரு மதுவகை வில்லைக்கும் (Brand label) ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) என்ற விகிதத்தில், வில்லை ஒப்பளிப்புக் கட்டணம் வசூலிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(6) இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் பொருட்களின் தயாரிப்பாளர்கள் மற்றும் மொத்த விற்பனை உரிமையாளர் செலுத்தும் விற்பனைக் கட்டணத்தை, ஆயத்தீர்வையுடன் இணைத்து விடுவதற்கு தேவையான விதிகளில் மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கேற்ப, தற்போதைய வருவாயினைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்கப்படும் வணிக மற்றும் பணத் தள்ளுபடிகளின் விகிதங்களில் தேவையான மாற்றங்கள் செய்யப்படும்.

(7) ஏற்கெனவே உள்ள தீர்வை மற்றும் வரி விகிதங்களின் அடிப்படையில், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு



2003 ஏப்ரல் 7]

மதுபானங்களின் சாதாரண வகையில் 100 மி.லி. அளவுகளில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மதுபானங்களை அறிமுகம் செய்துள்ளது.

மேலே 1 முதல் 6 வரை குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகள் மூலமாக ஒரு நிதியாண்டில் ரூ.22.36 கோடி ஈட்ட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3.3 21-8-2002 நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறை, அரசாணை (நிலை) எண் 185-ல் பீர் பொருட்களின்மீது விதிக்கப்படும் இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம் 20—6—2002 முதல் ரூபாய் 67-லிருந்து ரூபாய் 76 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூபாய் 12.27 கோடி ஈட்ட முடியும். இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்கள்மீது விதிக்கப்படும் கூடுதல் விற்பனைக் கட்டணம் ஒரு பல்க் லிட்டருக்கு ரூபாய் 17.18-லிருந்து ரூபாய் 19.29 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்த ஆண்டில் ரூபாய் 25.50 கோடி ஈட்ட முடியும்.

### 3.4 ஆயத்தீர்வை வில்லைகள்

மதுபான மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைகளில் பாதுகாப்பு அம்சமாக ஹோலோகிராமுடன் கூடிய ஆயத்தீர்வை வில்லைகள் பயன்படுத்தப்படுகின்றன. மதுவிலக்கு ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகத்திலுள்ள ஆயத்தீர்வை வில்லை அச்சடிக்கும் இயந்திரங்கள் பல ஆண்டுகட்டு முன்பு வாங்கப்பட்டவையாதலால், அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன. இதனால் வில்லைகளின் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே, ஹோலோகிராபியில் வல்லுநராக உள்ள விஞ்ஞானிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டு வில்லைகளின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தவும், அவ்வாறு மேம்படுத்தப்பட்ட வில்லைகளை அச்சிடுவதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. குழுவின் பரிந்துரைகளை அரசு பரிசீலித்து, நகலெடுக்க இயலாத பாதுகாப்பு அம்சங்கள் கொண்ட ஹோலோகிராம்களைத் தயாரிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கும். இதன்மூலம் எதிர்காலத்தில் கடத்தல் மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் விற்கப்படுவது பெருமளவில் கட்டுப்படுத்தப்படும்.

[2003 ஏப்ரல் 7

**4. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பும், செயல்பாடுகளும்—**

4.1. தலைமைச் செயலகத்தில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, செயலாளரின் தலைமையில் இயங்குகிறது. செயலாளருக்கு உதவியாக ஒரு துணைச் செயலாளரும் மற்ற சார்புப் பணியாளர்களும் செயல்படுகின்றனர். கொள்கை உருவாக்குதல் மற்றும் செயல்பாடு குறித்த ஆய்வுகள் ஆகியவை இத்துறையின் முக்கியப் பணிகளாகும். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கட்டுப்பாட்டில் கீழ்க்காணும் மூன்று முக்கியப் பிரிவுகள் உள்ளன:—

(1) மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகம்

(2) மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

(3) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர்**

4.2 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் துறைத் தலைவர் ஆவார். ஆணையாளருக்கு உதவியாக தலைமையிடத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் இரண்டு இணை ஆணையாளர்கள் மற்றும் அரசின் நிதித் துறை இணைச் செயலாளர் என்ற பதவி நிலையில் ஒரு நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் நான்கு உதவி ஆணையாளர்கள் உள்ளனர். இவர்களைத் தவிர, திடீர் ஆய்வு நடத்திட உதவி ஆணையாளரின் தலைமையில் ஒரு பறக்கும் படை என்ற அமைப்பும் செயல்பட்டு வருகிறது.

4.3 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர், கொள்கை உருவாக்குவதில் அரசுக்கு உதவுவதோடு திட்டங்களையும் செயல்படுத்துகிறார். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 10) மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளைச் செயற்படுத்தும் பொறுப்பும் அவரிடம் உள்ளது.



2003 ஏப்ரல் 7]

4.4 அரசின் முன்னனுமதியுடன் வடிசாலை அமைப்பதற்கும் மற்றும் சாராவி தயாரிப்பதற்கும் உரிய உரிமைகள் மற்றும் உரிமங்களை வழங்கும் அதிகாரம் ஆணையாளருக்கு உள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் வகைகளை புட்டிகளில் அடைக்கும் அலகுகள் அமைப்பதற்கான உரிமைகள் மற்றும் உரிமங்களையும் அரசின் முன்னனுமதியுடன் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் வழங்குகிறார். இவ்வாறு இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ள அலகுகளின் உரிமங்களை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் அதிகாரமும் ஆணையருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மாவட்ட அமைப்பு**

4.5 மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆயத்தீர்வை நிர்வாகத்திற்குத் தலைமையேற்கிறார்கள். மதுவிலக்குச் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பல்வேறு சட்ட முறையான அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னை மற்றும் கோயம்புத்தூர் தவிர மற்ற மாவட்டங்கள் அனைத்திலும், துணை ஆட்சியர் நிலையில் ஒரு உதவி ஆணையாளர் (ஆயத்தீர்வை) மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றார். சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் துணை ஆணையாளர்கள் (ஆயத்தீர்வை) மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றனர்.

4.6 வடிசாலைகள் மற்றும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் உற்பத்தி அலகுகளில் துணை ஆட்சியர் நிலையில் முறையே வடிசாலை அலுவலர்கள் மற்றும் ஆயத்தீர்வை அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், 1955 ஆம் ஆண்டு மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்கள் தயாரிப்புச் சட்டம் மற்றும் அவற்றின்கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ், உரிமங்கள் வழங்கப்படும் அலகுகள்/வேதிப் பொருள் அலகுகள், மற்றும் பிணை முறிக் கிடங்குகள் ஆகியவற்றில் சாராவி முறையாகப் பயன்படுத்தப்படுதல் மற்றும் ஆயத்தீர்வை விதிக்கப்பட

வேண்டிய பொருள்களுக்கு ஆயத்தீர்வை விதித்தல் ஆகியவற்றை மேற்பார்வையிடும் பணிக்காக ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர் மற்றும் பிணை முறி அலுவலர்கள் (Bonded Manufactory Officers) ஆகிய பதவிகளில் முறையே வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் நிலையில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள்.

4.7. துணை ஆட்சியர்கள் பதவி நிலையில் வடிசாலைகளில் 15 வடிசாலை அலுவலர்களும், இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் மற்றும் பீர் தயாரிப்பு அலகுகளில் 7 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும் உள்ளனர். மேலும் டி.எல். உரிம அலகுகளில் (இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்தும் வேதிப் பொருள்கள் அலகுகள்) துணை வட்டாட்சியர் நிலையில் 12 ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலர்களும், தெளிந்த சாராவி பயன்படுத்தும் வேதிப் பொருள் அலகில் வட்டாட்சியர் நிலையில் ஒரு ஆயத்தீர்வை மேற்பார்வை அலுவலரும், பிணை முறி தயாரிப்புக் கிடங்குகளில் 4 பிணை முறி தயாரிப்பு அலுவலர்களும் உள்ளனர்.

**சர்க்கரை ஆலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு**

4.8. இம்மாநிலத்தில் 38 சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகள் உள்ளன. (19 தனியார் ஆலைகள், 16 கூட்டுறவுத் துறை ஆலைகள் மற்றும் 3 பொதுத் துறை ஆலைகள்) சர்க்கரைத் தயாரிப்பில் உப பொருளாக கருப்பஞ்சாற்றுக் கசண்டு கிடைக்கிறது.

4.9. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளின்படி கருப்பஞ்சாற்றுக் கசண்டினை வைத்திருத்தல், விற்பனை செய்தல் மற்றும் உபயோகப்படுத்துதல் ஆகியவற்றிற்கு, உரிய உரிமங்களை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளரின் முன்னனுமதியோடு வழங்க, மாவட்ட ஆட்சித் தலைவர்/கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர்/ மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



4.10. கருப்பஞ்சாற்றுக் கசண்டின் மீதான கட்டுப்பாடு நீக்கப்பட்டதன் காரணமாக, சர்க்கரை ஆலைகள், கருப்பஞ்சாற்றுக் கசண்டினைப் பயன்படுத்த உரிமம் பெற்றுள்ளவர்களுக்கு சம்பந்தப்பட்ட உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவிற்கு விற்பனை செய்யலாம்.

4.11. அரசின் வருவாயைப் பெருக்குவதற்காக இம்மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டிற்கு மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.200/- (ரூபாய் இருநூறு மட்டும்) நிர்வாகச் சேவைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

4.12. நடப்பு கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் (அக்டோபர் 2002 முதல் பிப்ரவரி 2003 வரை) உற்பத்தி செய்யப்பட்ட மொத்த கருப்பஞ்சாற்றுக் கசண்டின் அளவு 3.03 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும். இதில் 1.08 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்ற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நிர்வாகச் சேவைக் கட்டணமாக அரசுக்கு ரூ.2.16 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

**வடிசாலைகள் மற்றும் சாராவி**

4.13. இம்மாநிலத்தில் சாராவி தயாரிக்கும் வடிசாலைகள் 15 உள்ளன. இவைகளில் 13 வடிசாலைகள் தனியார் துறையிலும் 2 வடிசாலைகள் கூட்டுறவுத் துறையிலும் உள்ளன.

4.14. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள் தயாரிப்பிலும், பல்வேறு வேதியியல் மற்றும் வார்னிஷ் பொருட்கள் தயாரிப்பிலும் சாராவி மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. மிகச் சிறிய அளவில் கல்விக் கூடங்களிலும், ஆய்வுக்கூடங்களிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் இது பயன்படுத்தப்படுகின்றது.

4.15. மத்திய அரசு, தனது 10-6-1993 நாளிட்ட ஆணையில், 1971 ஆம் ஆண்டின் ஈதைல் ஆல்கஹால் (விலைக் கட்டுப்பாடு) ஆணையை ரத்துச் செய்தது. இதன் விளைவாக தற்போது ஈதைல் ஆல்கஹால் (சாராவி) மீது விலைக் கட்டுப்பாடு ஏதும் கிடையாது. இதன் பின்னர், அரசு உரிமதாரர்கள் சாராவியினை இம்மாநிலத்தில் விற்பதற்கும், எடுத்துச்

செல்வதற்கும், வைத்திருப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. தெளிந்த சாராவியை ஒழுங்குபடுத்தும் வகையில், அதனை விற்க, வைத்திருக்க, பயன்படுத்த, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்ய மற்றும் எடுத்துச் செல்ல 1959 ஆம் ஆண்டின் தமிழ்நாடு தெளிந்த சாராவி விதிகளிலும், இயல்பு மாற்றப்பட்ட சாராவியின் பயன்பாட்டினை ஒழுங்குபடுத்த 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் வார்னிஷ் மெத்தில் ஆல்கஹால் (பிரெஞ்சு பாலிஷ்) விதிகளிலும் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தெளிந்த சாராவியைத் தவறான வழிகளில் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு, 1959 ஆம் ஆண்டு தெளிந்த சாராவி விதிகளுக்குப் பதிலாக, 2000 ஆம் ஆண்டில் புதிய தெளிந்த சாராவி விதிகள் இயற்றப் பெற்று, இதன் மூலம் புது உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

4.16. இம்மாநிலம் சாராவி உற்பத்தியில் உபரி மாநிலம் ஆகும். எனவே, இங்குள்ள வடிசாலைகளுக்கு சாராவியினை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது. இம்மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டை இம் மாநிலத்திலேயே சாராவியாக மாற்றிப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனும், கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஒரு மூலப் பொருளாக ஏற்றுமதி செய்வதைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், அரசு ஆணை எண் 27, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (13) துறை, நாள் 13-5-2002-இல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, இம்மாநிலத்தில் உள்ள வடிசாலைகளிலிருந்து பிற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சாராவியின் மீது விதிக்கப்படும் ஏற்றுமதி அனுமதிக் கட்டணத்தை லிட்டர் ஒன்றுக்கு ரூ.6-லிருந்து ரூ.3-ஆகக் குறைத்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## 5. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

5.1 கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கள்ளச்சாராயப் போக்குவரத்து, கள்ளச்சாராயத்தை வைத்திருத்தல், கள்ளச்சாராய விற்பனை/தீர்வை செலுத்தப்படாத இந்தியத்



தயாரிப்பு அயல்நாட்டு மதுபான விற்பனை ஆகியவற்றைத் தடுக்கவும் மற்றும் அத்தகைய மதுபானங்கள் மற்ற மாநிலங்களிலிருந்து கடத்தப்படுவதைத் தடுக்கும் முனைப்பு நடவடிக்கைகள் எடுக்கவும், 1998 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மீண்டும் அமைக்கப்பட்டது. முன்பு இந்தப் பிரிவு காவல் துறைத் தலைவரின் தலைமையில் நடத்தப்பட்டு வந்தது. 13-6-2001 முதல் இப்பிரிவு கூடுதல் காவல் துறை இயக்குநரின் (அமலாக்கம்) தலைமையில் நடைபெற்று வருகிறது.

5.2 கூடுதல் காவல் துறை இயக்குநருக்கு உதவியாக, தலைமையகத்தில் மத்தியப் புலனாய்வு அலகு காவல் கண்காணிப்பாளர் மற்றும் சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 மண்டலக் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகிய 4 காவல் கண்காணிப்பாளர்கள் செயல்படுகின்றனர். மத்திய புலனாய்வு அலகு மதுவிலக்கு தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதுடன் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் உள்ளூர் காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட அமலாக்க நடவடிக்கைகள் குறித்த புள்ளிவிவரங்களைத் தயாரிக்கிறது. மத்திய புலனாய்வு அலகில் 2 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், 6 காவல் ஆய்வாளர்கள், 8 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஒரு தலைமைக் காவலர் ஆகியோர் பணிபுரிகின்றனர்.

5.3 மாநிலம் முழுவதும் ஒவ்வொரு காவல் ஆய்வாளரின் தலைமையில் இயங்கும் 94 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் உள்ளன. மேற்கூறியவற்றுடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் மதுவிலக்கு அமலாக்கத்திற்கு ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோரும் உள்ளனர். (நகரங்களில் உள்ளவர்களைச் சேர்த்து மொத்தம் 37 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 37 துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளனர்) 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள், காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

5.4 கூடுதல் காவல் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள்/காவல் துறை ஆணையர்கள் மற்றும் மதுவிலக்கு அமல் பிரிவு அலகுகள் இயங்குகின்றன. தங்களது கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள் மற்றும் உள்ளூர் காவல் துறையினரின் உதவியுடன் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள்/காவல் துறை ஆணையர்கள் மதுவிலக்கு அமலாக்கப் பொறுப்பை வகிக்கிறார்கள். 25-3-1991 ஆம் நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (5) துறையின் அரசு ஆணை (பத்தாண்டு) எண் 444-இன்படி, கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் காவல் நிலையங்களின் நிலைய இருப்பு அலுவலர்கள் (Station House Officers) ஆகியோர் கள்ளச் சாராயத்தினைக் கட்டுப்படுத்தி ஒழிப்பதில் முக்கியப் பொறுப்பேற்கிறார்கள். இந்த அறிவுரைகள் அரசால் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளன. மதுவிலக்குக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மதுவிலக்கு அமலாக்க நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

5.5 போலி/தீர்வை செலுத்தப்படாத மதுபானங்களைக் கடத்தும் வாகனங்களைக் கைப்பற்றும் காவல்துறையினரை அவர்களது பணியில் ஊக்கப்படுத்தும் நோக்குடன் இவ்வரசு 10% பண வெகுமதி வழங்க 11-2-2002 ஆம் நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 42, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறையின்படி ஆணை வெளியிட்டுள்ளது.

5.6 ரூ.2.50 கோடி செலவில் மறுவாழ்வுக் குழு மற்றும் மறுவாழ்வு நிதி ஏற்படுத்த 17-12-2002 ஆம் நாளிட்ட மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (7) துறையின் அரசு ஆணை (நிலை) எண் 263-ல் ஆணை வெயிடப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அவரவர்கள் மாவட்டத்திலுள்ள கரும்புள்ளி கிராமங்களையும், கள்ளச்சாராயம் காய்ச்சுதல்/விற்பதில் ஈடுபடுகின்ற குற்றவாளிகளையும் கண்டறிந்து, அவர்களை



இத்தகைய தீங்கு விளைவிக்கும் தொழிலிலிருந்து விடுவித்து, அவர்கள் மாற்று வாழ்க்கையைத் தொடங்குவதற்குத் தேவையான பொருளுதவி, மானியங்கள் மற்றும் கடன்களை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில், ஏற்கெனவே பல மாவட்ட ஆட்சியர்கள் உதாரணமாக, கோயம்புத்தூர், ஈரோடு, பெரம்பலூர் மற்றும் சேலம் போன்ற மாவட்டங்களின் ஆட்சியர்கள் தத்தமது மாவட்டங்களில் உள்ள முன்னாள் மதுவிலக்குக் குற்றவாளிகளுக்கு மாற்றுத் தொழில் நடத்துவதற்கான கடனுதவிகளை வழங்கியுள்ளார்கள். இதுபோன்ற புனர்வாழ்வளிக்கும் புது முயற்சிகள் மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

**மாநிலந்தழுவிய விழிப்புணர்வு இயக்கம்**

5.7 2001 ஆம் ஆண்டில் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு மற்றும் உள்ளூர் காவல் துறையினரால், மக்களிடையே, கள்ளச்சாராயம் மற்றும் மெத்தனாலின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மாநிலந்தழுவிய விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டில், இவ்வியக்கமானது மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இம்முயற்சியில், பல்வேறு அரசு சாரா நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஒத்துழைப்பினையும் பயன்படுத்திக் கொள்ள மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இவ்விழிப்புணர்வு தொடர்பான பேரணிகள்/விழாக்கள் முதலியவை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக ஈரோடு, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, மதுரை, தேனி, விழுப்புரம், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. 19-1-2003 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளரால் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உதவியுடன் ஒரு மிகப் பெரிய கூட்டமும், பேரணியும் நடத்தப்பட்டது. இவ்விழிப்புணர்வு தொடர்பான சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள்

அச்சடிக்கப்பட்டு, மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. திரையரங்குகளில் காட்சி வில்லைகள் (Slides) காட்டப்பட்டு வருகின்றன. கிராம அளவிலான தெரு நாடகங்கள், கருத்தரங்குகள் ஆகியவையும் நடத்தப்பட்டு வருகின்றன.

**மதுவிலக்குப் பிரிவின் செயல்திறன் மற்றும் சாதனைகள்**

5.8 கள்ளச்சாராயம், தெளிந்த சாராவி மற்றும் போலி/தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மது ஆகியவற்றைக் கடத்துபவர்கள், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட முக்கிய மதுவிலக்குக் குற்றவாளிகள் ஆகியோரின்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் வகையில் மதுவிலக்கு அமலாக்கமானது தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வெளி மாநில மதுபானங்கள் இம்மாநிலத்திற்குள் கடத்தப்படுவது/போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் தயாரிப்பது, ஆகியவை வெகுவாகக் குறைக்கப்பட்டு, இது தொடர்பான முக்கியக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். உரிய இடங்களில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் முழுமையான புலனாய்வு மற்றும் முறையான வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கர்நாடகம், பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து தீர்வை செலுத்தப்படாத/போலி இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம், கள்ளச்சாராயம், தெளிந்த சாராவி ஆகியன கடத்தப்படுவதைத் தடுக்கும் வகையில், தற்போது இயங்கி வரும் 21 சோதனைச் சாவடிகளின் செயல்பாடு தீவிரப்படுத்தப்பட்டதுடன், கூடுதலாக தற்காலிக சோதனைச் சாவடிகளும் நடமாடும் சோதனைச் சாவடிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கிடையே மதுபானக் கடத்தலில் ஈடுபட்டு வரும் பயங்கரக் குற்றவாளிகளான திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 'மெஜஸ்டிக்' மோகன், பாண்டிச்சேரியைச் சேர்ந்த சைமன் மற்றும் காரைக்காலைச் சேர்ந்த அனந்து ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மதுக் கடத்தல் தொடர்பாக பல நான்கு சக்கர வாகனங்கள்



கைப்பற்றப்பட்ட பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர்கள் என்பதும், மிக நீண்ட காலமாகத் தலைமறைவாக இருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. 31-1-2003 அன்று நடைபெற்ற அண்டை மாநிலங்களுடனான வட்டாரக் குழுக் கூட்டத்தின்போது, இவ்வினத்தில் அண்டை மாநிலக் காவல் துறையினரின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது.

5.9. கள்ளச்சாராயத்திற்கு எதிரான வேட்டை ஆண்டு முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. அதிலும், மனித உயிர்களைப் பலி வாங்குவதில் பெரும் பங்கு வகிக்கும் மெத்தனாலைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு எதிரான நடவடிக்கைகள் சிறப்பு முன்னெச்சரிக்கையுடன் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகளினால் சென்ற ஆண்டில் மெத்தனால் மற்றும் பிற விஷச்சாராயத்தின் காரணமாக உயிரிழப்பு போன்ற எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்பது ஆறுதல் அளிக்கும் செய்தியாகும்.

5.10. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மார்ச் 2002 வரை மொத்தம் 1246 முக்கிய மதுவிலக்குக் குற்றவாளிகளும், 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் பிப்ரவரி 2003 வரை மொத்தம் 1078 குற்றவாளிகளும் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

5.11. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மார்ச் 2002 வரை மொத்தம் 60.22 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயமும், 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் பிப்ரவரி 2003 வரை 56.18 இலட்சம் லிட்டர் கள்ளச்சாராயமும் கைப்பற்றப்பட்டது.

5.12. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மார்ச் 2002 வரை, மொத்தம் 4.81 இலட்சம் கர்நாடகம்/பிற மாநில சாராயப் பாக்கெட்டுகளும், 2002 ஏப்ரல் முதல் 2003 பிப்ரவரி வரை மொத்தம் 7.29 இலட்சம் கர்நாடகம்/பிற மாநில சாராயப் பாக்கெட்டுகளும் கைப்பற்றப்பட்டன.

5.13. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2002 மார்ச் வரை மொத்தம் 3.97 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவியும் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் பிப்ரவரி 2003 வரை 4.07 இலட்சம் லிட்டர் தெளிந்த சாராவியும் கைப்பற்றப்பட்டது.

5.14. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2002 மார்ச் வரை மொத்தம் 3890 தானியங்கி வாகனங்களும் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் பிப்ரவரி 2003 வரை 3751 தானியங்கி வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

5.15. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2002 மார்ச் வரை மொத்தம் 155.40 இலட்சம் லிட்டர் சாராய ஊறலும் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை மொத்தம் 164.28 இலட்சம் லிட்டர் சாராய ஊறலும் கைப்பற்றப்பட்டது.

5.16. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2002 மார்ச் வரை மொத்தம் 7139 கள்ளச்சாராயம் வடித்த குற்றங்கள் கண்டறியப்பட்டன. 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2003 பிப்ரவரி வரை 10141 கள்ளச்சாராயம் வடித்த குற்றங்கள் கண்டறியப்பட்டன.

5.17. பல்வேறு ஆண்டுகளாக கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் விற்பனை நடைபெற்று வரும் பல்வேறு "கரும்புள்ளி கிராமங்கள்" கண்டறியப்பட்டு, ஒவ்வொரு காவல் நிலையத்திலும், மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகளிலும் கரும்புள்ளி கிராமப் பதிவேடுகள் குறிப்பிட்ட படிவத்தில் தொடங்கப்பட்டுள்ளன. கள்ளச்சாராயக்காரர்களின் நடவடிக்கைகளைத் தடுக்க, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கள்ளச்சாராயத்தைக் கிராமங்களிலிருந்து ஒழிப்பதன் மூலமும், தக்க மறுவாழ்வு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமும், விழிப்புணர்வுக் கூட்டங்கள் மற்றும் மதுவிலக்குக் கண்காணிப்புக் குழுக்களின் உதவியுடன், பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதன் மூலமும், இம்மாநிலத்திலுள்ள பல கிராமங்களை கள்ளச் சாராயமற்ற கிராமங்களாக மாற்ற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.





[2003 ஏப்ரல் 7






2003 ஏப்ரல் 7]



[2003 ஏப்ரல் 7






2003 ஏப்ரல் 7]

**6. போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு**

6.1 இம்மாநிலத்தில், மாநில அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மாவட்டக் காவல் துறை, இரயில்வே காவல் துறை, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும், மத்திய அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, சுங்கத் துறை, வருவாய் உளவுத் தகவல் சேகரிப்பு இயக்கம் ஆகியவையும் போதைப் பொருள் தடுப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

6.2 2002 ஆம் ஆண்டில் போதை மருந்துகள் புலனாய்வுப் பிரிவு 1166 வழக்குகளில் 3828.2 கிலோ கொண்ட உலர்ந்த கஞ்சாவைக் கைப்பற்றியது. இதனுடைய மொத்த மதிப்பு ரூபாய் 1.91 கோடியாகும். அதே ஆண்டு 97 வழக்குகளில் 1,14,628 கிலோ அளவில் கஞ்சாச் செடிகளையும் கைப்பற்றியது. இதன் மதிப்பு ரூபாய் 22.93 கோடி ஆகும். போதை மருந்துகளைப் பொறுத்தமட்டில் 15 வழக்குகளில் ஒரு கோடி மதிப்புள்ள 0.996 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

**7. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)**

7.1 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) 23-5-1983 அன்று 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் 10) 17-C (1-A) (ஆ) பிரிவின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகளை மொத்த விற்பனை மூலம் வழங்கும் தனியுரிமை தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் செயலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் தலைவர் ஆவார்.

7.2 இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. இத்தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநருக்கு உதவியாக, மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் ஒரு பொது மேலாளரும், பொது மேலாளர் (நிதி) மற்றும் நிறுவனச் செயலரும், இரண்டு மேலாளர்களும் மற்றும் ஏனைய சார்நிலை அலுவலர்களும் உள்ளனர்.

7.3 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், அனுமதிக்கப்பட்ட மூலதனமாக ரூ.15 கோடியைக் கொண்டுள்ளது. இதில் அரசு, 1983 ஆம் ஆண்டு ரூ.5 கோடியும், 1998 ஆம் ஆண்டு ரூ.2 கோடியும், ஆக மொத்தத்தில் ரூ.7 கோடியினை இக்கழகத்தில், பங்கு மூலதனமாக முதலீடு செய்துள்ளது. பாரத ஸ்டேட் வங்கி ரூ.65 கோடியினை இக்கழகத்திற்கு ரொக்கக் கடனாக அளித்துள்ளது.

7.4 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இம்மாநிலத்திலுள்ள ஐந்து இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானத் தயாரிப்பாளர்களிடமிருந்தும், இரண்டு பீர் தயாரிப்பாளர் களிடமிருந்தும் இந்தியத் தயாரிப்பு மதுவகைகளையும் மற்றும் பீரையும் கொள்முதல் செய்து வருகின்றது. ஒரு சில இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், ஸ்காட்ச் மற்றும் பீர் வகைகள் மட்டும் பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

7.5 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஐந்து மண்டல அலுவலகங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் உள்ள முதுநிலை மண்டல மேலாளர் தலைமையில் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், இம்மாநிலத்தில் உள்ள 40 கிடங்குகளின் மூலம்





மதுபானங்களை விநியோகம் செய்து வருகின்றது. இந்தக் கிடங்குகள் வட்டாட்சியர் நிலையிலுள்ள மேலாளர்கள் தலைமையில் இயங்குகின்றன.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான மதுபானக் கிடங்குகள்**

7.6 1983 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் விற்பனை, பத்து மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளதாலும், ஆரம்பத்திலிருந்தே வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வந்த கிடங்குகளில் போதுமான இட வசதி இல்லாமல் இருந்ததாலும், காத்திருக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், இன்றியமையாத மது வகைகளின் இருப்பின்மை ஏற்படும் நிலை உருவானது. எனவே, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு, போதிய இட வசதியுடன் கூடிய சொந்தக் கிடங்குகள் அவசியம் என உணரப்பட்டது. முன்பு தமிழ்நாடு சாராயக் கழகத்தின் வசமிருந்த நாட்டு மதுக் கலவை ஆலைகளை 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் தன்னகப்படுத்தி அவைகளில் பத்து கிடங்குகளை அமைத்துள்ளது.

7.7 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் கீழ்க்கண்ட இடங்களில் தனது சொந்த அலுவலகம் மற்றும் கிடங்குகளைக் கட்டி முடித்துள்ளது. இக்கட்டடங்களில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் கிடங்குகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவையாவன:

| | | |
|---|---|---|
| 1. அம்பத்தூர்-II | 2. திருவள்ளூர் | 3. நாமக்கல் |
| 4. சிவகங்கை | 5. தூத்துக்குடி | 6. விருதுநகர் |
| 7. இராமநாதபுரம் | 8. புதுக்கோட்டை | 9. காஞ்சிபுரம் |
| 10. தஞ்சாவூர் | | |

**கணினிமயமாக்கல் திட்டம்**

7.8 திறன்பாடு மிக்க பொருள் இருப்பு நிர்வாகத்தை மேம்படுத்துவது, சரக்கு நிலவரம் சம்பந்தமாக நாளது வரையிலான தகவலின் மூலம் வேகமாக விற்பனையாகும் சரக்குகளின் இருப்பின்மையைத் தடுப்பது, அல்லது அத்தகைய நிகழ்வுகளை வெகுவாகக் குறைப்பது, மாவட்ட வாரியாக மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் வாரியாக இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் கொள்முதலை சரியான முறையில் கண்காணிப்பது, வியாபாரிகள், தீர்வை செலுத்தப்படாததுபோலி மதுபான விற்பனையில் ஈடுபடுவதை முற்றிலும் தடுப்பது, மேலும், இக்கழகத் தலைமை அலுவலகம் மற்றும் அரசுக்குச் சமர்ப்பிக்கின்ற பல்வேறு அறிக்கைகள்/ விவர அறிக்கைகள் ஆகியவற்றை குறித்த காலத்தில் மற்றும் துல்லியமான முறையில் சமர்ப்பிப்பது ஆகியவற்றுக்காக, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் செயல்பாடுகளை கணினிமயமாக்கிடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, மொத்தமுள்ள 40 மதுபானக் கிடங்குகளின் செயல்பாடுகளும் வெற்றிகரமாக கணினிமயமாக்கப் பட்டுள்ளன. கணினிமயமாக்கப்பட்ட பொருள் இருப்பு தகவல் முறையினால், வேகமாக விற்பனையாகும் சரக்குகள் எல்லாக் கிடங்குகளிலும், எல்லாக் காலங்களிலும் தேவையான அளவில் இருப்பில் வைத்திருக்கும் நிலையில் இன்று இக்கழகம் உள்ளது.

**விற்பனை அளவு**

7.9 2002-2003 ஆம் ஆண்டில் (2003 பிப்ரவரி வரையில்) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினால் செய்யப்பட்ட விற்பனை அளவு ரூ.2,663 கோடியாகும்.

**இடைநிகழ்வு இழப்பில் குறைவு**

7.10 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகக் கிடங்குகளில் இறக்கப்படும் மதுபானம் மற்றும் பீர் சரக்குகள் உரிய கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டு, இடைநிகழ்வு இழப்பு, கடந்த 1998-99 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது,. 0.29 சதவீதத்திலிருந்து 2002-2003 இல் 0.16





சதவீதம் என்ற வகையில் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் 1998-99 ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது, 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 1.41 கோடி வரையிலும் காப்பீடு கட்டணத் தொகை சேமிக்கப்பட்டுள்ளது.

**ஈவுத் தொகை**

7.11 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், 2001-2002 ஆம் ஆண்டிலும் கூடுதல் வருமானம் ஈட்டுவதைத் தொடர்ந்து மேற்கொண்டு 5 சதவீத ஆதாயப் பங்கான ரூ.35 இலட்சங்களை அரசுக்கு செலுத்தியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டிலும் இதேபோன்ற ஆதாயப் பங்கினை அரசுக்கு அளிக்க இயலும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ)**

7.12 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் (டாஸ்மாக்) துணை நிறுவனமான, தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ), இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகைகள், பீர் மற்றும் நாட்டுமது ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்கத்திற்காக 1989 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகம், 31-12-1989-லிருந்து பீர் உற்பத்தியையும், 21-7-1990-லிருந்து நாட்டு மது உற்பத்தியையும் தொடங்கியது. எனினும், 16-7-1991 முதல், நாட்டு மது உற்பத்தியையும் மற்றும் 31-1-1992 முதல் பீர் உற்பத்தியையும் இக்கழகம் நிறுத்திவிட்டது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடன் தமிழ்நாடு சாராவிக் கழகம் ஒருங்கிணைப்பு**

7.13 அரசு ஆணை (நிலை) எண் 183, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (8) துறை, நாள் 14-9-2000 இல், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்துடன் தமிழ்நாடு சாராவிக் கழகத்தை ஒருங்கிணைப்பதென்பது, பொது நலன் கருதி எடுக்கப்பட்ட முடிவு என்று சான்றிதழ் வழங்கப்பட்டு, ஒருங்கிணைப்புத் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியது. பிறகு, இவ்வொருங்கிணைப்புத் திட்டம் மத்திய அரசின்

ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இந்திய அரசின் கம்பெனிகள் விவகாரத் துறை இதற்கு ஒப்புதல் அளித்து, 9-1-2003 நாளிட்ட இந்திய அரசு சிறப்பிதழில் இதற்கான அறிவிக்கையை வெளியிட்டுள்ளது. இவ்வறிவிக்கையின்படி, 9-1-2003 முதல் டாஸ்கோ நிறுவனம் கலைக்கப்பட்டுவிட்டது.

**செயல்முறைத் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகள்**

**7.14 தொடரமைப்பு இணைப்பு**

தலைமைச் செயலகத்திலுள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் செயலாளர் அலுவலகம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் தலைமை அலுவலகத்துடன் ரூ.13.80 இலட்சம் செலவில் தொடரமைப்பு முறையில் இணைக்கப்பட்டு உள்ளது. இத்திட்டம், நிர்வாகம் தொடர்பான அனைத்து விவரங்களையும் உடனுக்குடன் தலைமைச் செயலகத்தில் பெற ஏதுவாக உள்ளது.

**தமிழ்நாடு மாநில வாணிபக் கழகக் கிடங்குகளின் செயல்பாடுகளை நவீனமயமாக்குதல்**

7.15 கிடங்குகளில், கணினி மென்பொருட்கள் (Software) மற்றும் வன்பொருட்களின் (Hardware) தரம் (Configuration) உயர்த்துதல்.

2002-2003 ஆம் ஆண்டைய கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் செயல்பாட்டினைப் படிப்படியாக நவீனப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதிக அளவில் மதுபான விற்பனை நடைபெறுகின்ற கீழ்க்கண்ட பத்து கிடங்குகள் முதற்கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, கணினி மென்பொருட்கள் (Software) மற்றும் வன்பொருட்களின் (Hardware) தரம் (Configuration) மேம்படுத்தப்பட்டது:



| | |
|---|---|
| 1. அம்பத்தூர்-I | 2. அம்பத்தூர்-II |
| 3. அம்பத்தூர்-III | 4. திருமழிசை-I |
| 5. திருமழிசை-II | 6. பல்லாவரம் |
| 7. கோயம்புத்தூர் (வடக்கு) | 8. திருப்பூர் |
| 9. திருச்சிராப்பள்ளி | 10. திருநெல்வேலி |

7.16 எவ்விதத் தடையுமின்றி மிகப் பெரிய அளவிலான புள்ளி விவரங்களைக் கையாளுவதற்கு ஏதுவாக, கணினி மென்பொருட்களை பாக்ஸ்ப்ரோ (Foxpro) நடையிலிருந்து ஆரகில் (Oracle) நடைக்கு மாற்றக் கருதப்பட்டுள்ளது. அதே போல், ரூ.45.50 இலட்சம் செலவு மதிப்பீட்டில், இக்கிடங்குகளில் சில முக்கியமான கணினி வன்பொருட்கள் மற்றும் தொடர்புச் சாதனங்கள் நிறுவும் பணி விரைவில் முடிவு பெற உள்ளது.

**7.17 வரிக் குறியீடு (Bar coding)**

* நவீனமயமாக்குதலின் ஒரு பகுதியாக இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுவகை/பீர் பாட்டில்கள் மற்றும் வெளிப்புற அட்டைப் பெட்டிகளின் மீது வரிக் குறியிடும் முறை (Bar coding) அறிமுகப்படுத்தப்படும்.

* இந்த முறையில், உணர்வுக் கருவி (Scanner) மூலம் வரிக் குறியீட்டில் உள்ள விவரங்களை அறிய இயலும்.

* இந்த முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம், மதுபான நுகர்வு சம்பந்தமான விவரங்கள், தயாரிக்கப்படும் நிறுவனத்திலிருந்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகக் கிடங்குகள் வரை மட்டுமல்லாமல் சில்லறை விற்பனைக் கடைகள் வரை தெரிந்துகொள்ள இயலும். இது, விவரப் பட்டியல் மேலாண்மையினை எளிதாக்குவதோடு, தீர்வை செலுத்தப்படாத மது வகையின் விற்பனையைத் தடுக்கவும் உதவும்.

அதுமட்டுமல்லாது, மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் தானியங்கி விற்பனைச் சீட்டு வழங்குவதற்கும் இது ஏதுவாக இருக்கும்.

## 8. ஆயத்தீர்வை நிர்வாகத்தில் நவீன காணுமுறைகள்

8.1 இது ஒரு கணினிமயமாக்கல் காலம் என்பதால் அன்றாட நிர்வாகத்தினை முழுமையிலும் கணினிமயமாக்குவது மிகவும் அவசியமாகி உள்ளது. இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியின் பலனைப் பெறுவதற்கு ஆயத்தீர்வைத் துறை கீழ்க்காணும் தொடக்க முயற்சிகளை எடுத்து வருகிறது:

### மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் மின்னணுத் தொடரமைப்பு ஏற்படுத்துதல்

8.2 தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அலுவலகம் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஆகியவை ஒன்றுடன் ஒன்று மின்னணு முறையில் இணைக்கப்படும். இதன் மூலம் இத்துறை சம்பந்தப்பட்ட அடிப்படை விவரங்கள் மற்றும் தகவல் தொகுப்புகளை உடனுக்குடன் எளிதாக அனுப்ப இயலும். இதனால் கோப்புப் பணிகள் குறைக்கப்பட்டு காலதாமதம் நீக்கப்படும். தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் ஏற்கனவே ரூபாய் 13.80 இலட்சம் செலவில் தலைமைச் செயலகத்தில் உள்ள மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையுடன் மின்னணு முறையில் இணைக்கப்பட்டு விட்டது.

## 9. முடிவுரை

9.1 சாராவி மற்றும் அதைச் சார்ந்த மதுபானங்களின் மீது ஆயத்தீர்வை, விற்பனை வரி போன்ற வரி விதிப்புகளின் மூலம் அரசுக்கு பெரிய அளவில் வருவாய் ஈட்டித்தர இயலும் என்பதை





இவ்வரசு தெளிவாக அறிந்து வைத்துள்ளது என்பதால் இந்தத் துறையின் அதிகபட்ச வருவாய்த் திறனைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் மதுபான சில்லறை விற்பனை உரிமம் வழங்கும் முறைகளைச் சீராக்கி மேம்படுத்த தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும். இவ்வாறு கூடுதலாகப் பெறப்படும் வருவாய் மாநிலத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதால் அரசு மதுபான விற்பனையினை உன்னிப்பாகக் கண்காணிக்கவும், வெளி மாநிலங்களிலிருந்து கள்ள மற்றும் போலி மதுபானங்களின் ஊடுருவலை முற்றிலும் தடுக்கும் வகையில் அமலாக்க நடவடிக்கைகளை மேலும் கடுமையாக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

9.2 இந்த அரசு கள்ளச்சாராயத்தைக் கட்டுப்படுத்தவும், மக்களிடையே குடிப்பழக்கத்தை வலுவிழக்கச் செய்து புத்துணர்வளிக்கும் வகையில் வித்தியாசமான பல புது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் என்பது வறுமை நிலையில் உள்ள சிலரின் அடிப்படைத் தேவைகளுக்காகச் செய்யப்படும் தொழிலாக இருந்து வருகிறது என்பதும் ஏழ்மையின் காரணமாகவே இவர்கள் அருவருக்கத்தக்க இத்தொழிலை நாடுகின்றனர் என்பதும் கசப்பான உண்மையாகும். வெறுக்கத்தக்க இத்தொழிலிலிருந்து விடுபட்டுத் திருந்திய குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிக்க எடுக்கப்படுகின்ற திட்டவட்டமான நடவடிக்கைகளும், குடிப்பழக்கத்திற்கு எதிராக மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கொண்டுள்ள முயற்சிகளும், சமூகத் தீமையாகிய குடிப்பழக்கத்தினை வேருடன் ஒழிக்க எடுக்கப்பட்டுள்ள வேறுபட்ட முயற்சிகளாகும். சமூக நலத்திற்குப் பெருந்தடைகளாக இருக்கும் குடிப்பழக்கத்தினை மாற்றுவதிலும், கள்ளச்சாராயத்தினைக் கட்டுப்படுத்துவதிலும் கண்கூடாகக் காணத்தக்க ஒரு மாற்றத்தினைக் கொண்டுவரும் வகையில் இந்த முன்முயற்சிகள், மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

[2003 ஏப்ரல் 7

## இணைப்பு-1

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் அமைப்பு வரைபடம்**




* ஆ.ம.ஆ. ஆணையர், மதுவிலக்கு-ஆயத்தீர்வை
* த.மா.வா.க. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
* ம.அ.பி. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு

## இணைப்பு-2

**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் அலுவலக அமைப்பு வரைபடம்**






2003 ஏப்ரல் 7]

* இ.ஆ. இணை ஆணையர்
* நி.க.அ. நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்
* து.ஆ. துணை ஆணையர்
* உ.ஆ. உதவி ஆணையர்
* இ.த.அ.ம. இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம்
* ப.ப. பறக்கும் படை
* உ.க.அ. உதவி கணக்கு அலுவலர்
* ஆ.மே. ஆய மேற்பார்வையாளர்

## இணைப்பு-3

**மதுவிலக்கு அமலாக்கப் பிரிவின் அமைப்பு வரைபடம்**




* கா.க காவல் கண்காணிப்பாளர்
* ம.பு.பி. மத்திய புலனாய்வுப் பிரிவு
* மா.கா.க. மாவட்ட காவல் கண்காணிப்பாளர்
* கூ.கா.க கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
* து.கா.க துணைக் காவல் கண்காணிப்பாளர்
* ம.அ.பி.அ. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அலகுகள்
* கூ.து.ஆ கூடுதல் துணை ஆணையர்

[2003 ஏப்ரல் 7

## இணைப்பு-4

### தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்




| | |
|---|---|
| * பொ.மே(பொது) | பொது மேலாளர்(பொது) |
| * பொ.மே(நிதி) மற்றும் நி.செ. | பொது மேலாளர்(நிதி) மற்றும் நிறுவன செயலர் |



2003 ஏப்ரல் 7]

## இணைப்பு-5

### இம்மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றின் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் பற்றிய விவரங்கள்

| தொடர் எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| | **கூட்டுறவுத் துறை** | |
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 7,000 |
| 8 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 10,000 |
| 9 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 10 | செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |
| 11 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் அலகு-1 | 15,000 |
| 12 | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 13 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் அலகு-2 | 12,000 |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 19,000 |
| 15 | என்.பி.கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 18,000 |
| 16 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | மொத்தம் .. | 2,26,000 |

## பொதுத் துறை

| | | |
|---|---|---|
| 17 | மதுரா சுகர்ஸ் | 6,000 |
| 18 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 19 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| | மொத்தம் .. | **32,000** |

## தனியார் துறை

| | | |
|---|---|---|
| 20 | எஸ்.வி. சுகர் மில்ஸ் நிறுவனம் | 9,200 |
| 21 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 12,000 |
| 22 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் அலகு-1 | 12,600 |
| 23 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் அலகு-2 | 12,000 |
| 24 | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,000 |
| 25 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 18,000 |
| 26 | ஸ்ரீஅம்பிகா சுகர்ஸ் நிறுவனம், துகிலி | 22,500 |
| 27 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், நெல்லிக்குப்பம் | 18,000 |
| 28 | சவுத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம் | 16,500 |
| 29 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 8,400 |
| 30 | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-1 | 14,500 |
| 31 | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம், அலகு-2 | 12,000 |
| 32 | காவேரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 7,000 |
| 33 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், புகலூர் (டெக்கான்) | 14,700 |
| 34 | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,300 |
| 35 | தரணி சுகர்ஸ் அலகு-2 | 10,000 |
| 36 | அம்பிகா சுகர்ஸ் நிறுவனம், பெண்ணாடம் | 25,000 |
| 37 | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம், குரும்பூர் | 5,000 |
| 38 | அருணாசலம் சுகர்ஸ் | 6,000 |
| | மொத்தம் | **2,49,300** |
| | ஒட்டு மொத்தம் | **5,07,300** |



# இணைப்பு-6

## வடிசாலை-சாராவி உற்பத்தி

### (சாராவி ஆண்டு: டிசம்பர்-நவம்பர்)

| தொடர் எண். | வடிசாலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அளவு (மெட்ரிக் டன்களில்) | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு (மெட்ரிக் டன்களில்) | 2001-2002 ஆம் சாராவி ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு (கோடி லிட்டர்களில்) |
|---|---|---|---|---|
| | **தனியார் துறையிலுள்ள வடிசாலைகள்** | | | |
| | **திருவாளர்கள்** | | | |
| 1. | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 82,500 | 24,722 | 0.97 |
| 2. | பண்ணாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 71,350 | 22,800 | 1.29 |
| 3. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிசும்பள்ளி, அலகு-1 | 60,000 | 15,046 | 0.37 |
| 4. | கெம்ப்ளாஸ்ட் சன்மார் நிறுவனம், காடாம்புலியூர், அலகு-2 | 1,10,000 | 20,800 | 1.48 |
| 5. | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 12,000 | 0.64 |
| 6. | இ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம் | 60,000 | 14,077 | 1.09 |
| 7. | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 6,000 | 1.00 |
| 8. | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,480 | 0.38 |
| 9. | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | 25,000 | 4,758 | |

[2003 ஏப்ரல் 7

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 78,260 | 18,600 | 2.75 |
| 11. | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,10,000 | 33,300 | 1.11 |
| 12 | மோகன் புரூவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,646 | 1.01 |
| 13 | கோலிக்ஸ் பீவரேஜஸ் நிறுவனம் | .. | .. | 0.02 |
| | **கூட்டுறவுத் துறையிலுள்ள வடிசாலைகள்** | | | |
| 14 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.65 |
| 15 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 0.47 |
| | மொத்தம் .. | **8,68,110** | **2,26,829** | **13.28** |



2003 ஏப்ரல் 7]

# இணைப்பு-7

## இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரம்

| ஆண்டு | இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபான உற்பத்தி அளவு (கோடி பல்க் லிட்டர்களில்) | பீர் உற்பத்தி |
|---|---|---|
| 1991-92 | 4.42 | 3.36 |
| 1992-93 | 6.40 | 4.64 |
| 1993-94 | 7.03 | 3.86 |
| 1994-95 | 8.10 | 4.18 |
| 1995-96 | 8.13 | 5.79 |
| 1996-97 | 12.78 | 5.33 |
| 1997-98 | 10.90 | 5.25 |
| 1998-99 | 9.81 | 5.29 |
| 1999-2000 | 11.74 | 4.23 |
| 2000-2001 | 12.43 | 5.76 |
| 2001-2002 | 13.32 | 5.06 |
| 2002-2003 (பிப்ரவரி வரை) | 9.44 | 3.18 |

## இணைப்பு-8

**ஆயத்தீர்வை வருவாய் மற்றும் விற்பனை வரி வருவாய் பற்றிய விவரங்கள்**

| தொடர் எண் | ஆண்டு | ஆயத்தீர்வை வருவாய் | விற்பனை வரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் | கோடிகளில்) | |
| 1 | 1991-92 | 483.12 | 188.23 | 671.35 |
| 2 | 1992-93 | 564.86 | 297.83 | 862.69 |
| 3 | 1993-94 | 568.82 | 318.33 | 887.15 |
| 4 | 1994-95 | 614.74 | 380.95 | 995.69 |
| 5 | 1995-96 | 934.66 | 491.27 | 1425.93 |
| 6 | 1996-97 | 1063.07 | 583.89 | 1646.96 |
| 7 | 1997-98 | 1299.85 | 669.81 | 1969.66 |
| 8 | 1998-99 | 1709.82 | 1009.49 | 2719.31 |
| 9 | 1999-2000 | 1833.74 | 1172.79 | 3006.53 |
| 10 | 2000-2001 | 1868.68 | 1504.88 | 3373.56 |
| 11 | 2001-2002 | 2058.21 | 1636.08 | 3694.29 |
| 12 | 2002-2003 (ஒத்திசைவு செய்யப் படவில்லை) | 2110.73 | 1697.62 | 3808.35 |





## இணைப்பு V

*(107 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 38**

**பொதுப் பணித் துறை**

**2003-2004 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கக் குறிப்பு**

**முன்னுரை**

பழமையும், பெருமையும் வாய்ந்த பொதுப் பணித் துறையின் "பாசனம் மற்றும் கட்டடங்கள்" மீதான கோரிக்கையை இம்மாமன்றத்தின் முன்வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுப் பணித் துறையானது, பெரியதும், நடுத்தரமானதும், சிறிய அளவிலானதுமான பாசனத் திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும், மாநில அரசுத் துறைகளுக்கும், அரசின் இதர முகமைகளுக்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு எனவும், கட்டட அமைப்பு எனவும் 1995 டிசம்பர் முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. நீர்த் தேவையைக் கோரும் எல்லாப் பகுதியினரும் பயன்பெறும் வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கீடு செய்து அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதே பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களைச் சிறந்த தொழில்நுட்ப உதவியின் துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும், கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

### பாசனம்

**பாசன நிலை**

புவியியல் அடிப்படையில் 130 இலட்சம் எக்டேர் நிலப் பரப்பளவு கொண்டுள்ள தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் 11 ஆம் இடத்தை

[2003 ஏப்ரல் 7

வகிக்கிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு சுமார் 60 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் சுமார் 30 இலட்சம் எக்டேர் பரப்பு, அதாவது 50 விழுக்காடு கீழே குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதியைப் பெறுகின்றன.

| | | |
|---|---|---|
| (1) | கால்வாய்கள் | - 9.50 இலட்சம் எக்டேர் |
| (2) | ஏரிகள் | - 9.00 இலட்சம் எக்டேர் |
| (3) | கிணறுகள், குழாய்க் கிணறுகள் | .. 11.50 இலட்சம் எக்டேர் |

**தமிழ்நாட்டின் பாசன வளர்ச்சி**

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரமான நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப் பரப்பானது 15 இலட்சம் எக்டேர் என தேசிய வேளாண்மைக் குழு 1976 ஆம் ஆண்டில் மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கத்தில் 23 பெரிய மற்றும் நடுத்தரத் திட்டங்களின் மூலம் 11 இலட்சம் எக்டேர் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. ஒன்பதாவது திட்டக் காலத்தில் 2001-2002 முடிய பாசனம் பெறும் பகுதி 29.72 இலட்சம் எக்டேராக உயர்ந்தது.

2002-2003 ஆம் ஆண்டில் 4924 எக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 9804 எக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அண்டை மாநில நதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் திருப்பி விடுதல்**

தமிழ்நாடு, அனேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்திவிட்டது. ஆனால் அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவை நல்ல நீர்வளம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதிகளில் உள்ள மிகை நீரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பி விடுவதற்கு மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையை தமிழ்நாடு அணுகியுள்ளது.

தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையானது இந்தியத் தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு



2003 ஏப்ரல் 7]

செய்கிறது. மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறட்சியான பகுதிகள் பயன்பெறும் வகையில் கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் மிகை நீரைத் திருப்புதலும் இதில் அடங்கும். இவ்வரசு இதுபற்றி கேரள அரசுடனும், மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மகாநதி - கோதாவரி - கிருஷ்ணா - பெண்ணாறு - பாலாறு-காவிரி - வைகை இணைப்புகளில் மிகுதியான நீரைத் திருப்புதல் குறித்தும் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அத்திட்டங்களின் சாத்தியக்கூறுகள் பற்றிய முன்னோடி அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதனையன்றி பாண்டியாறு - புன்னம்புழா ஆறுகளில் பாசனம் மற்றும் புனல் மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் முழு மூச்சாக தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது.

**நீர்வள ஆதார அமைப்பு**

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தைச் செயலாக்குவதில் முதற்படியாகவும், அதனை திறம்படச் செயலாக்குவதன் பொருட்டும், தனித்தன்மையுடன் செயல் புரியவும், பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பு 1995 டிசம்பர் முதல் மாற்றியமைக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நீர்ப் பங்கீட்டு நிர்வாகம், நீர்வள ஆதார அமைப்பின் கீழ் வடிநில வாரியாகப் பிரித்துப் பரவலாக்கப்பட்டு, சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார்.

நீர்வள ஆதார அமைப்பானது கீழே குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது.

(1) முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை.

(2) தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை.

(3) தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை.

(4) தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை.

(5) தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நில மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், சென்னை.

(6) தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை.

(7) தலைமைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி.

(8) தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், கோயம்புத்தூர்.

(9) தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை.

(10) இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர் ஆய்வு நிறுவனம், தரமணி, சென்னை.

(11) இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி.

**பாசன நீர்ப் பயன்பாட்டில் சிக்கனம்**

மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அனேகமாக முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், பெரியது மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாகவே உள்ளன. இந்தச் சூழலில், தற்போதைய கால்வாய்ப் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம் நீர் வீணாகாமல் தடுப்பதுடன், நீரைச் சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. இம்முயற்சியால் சேமிக்கப்படும் நீரைக் கொண்டுதான் புதிய பகுதிகளில் பயிர்ச் சாகுபடி செய்யவும், ஏற்கெனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாகச் சாகுபடி செய்யவும் இயலும்.

இந்நோக்கத்துடன் பெரியாறு - வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்தும் பணி உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதேபோல் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், உலக வங்கி உதவியுடன் சாத்தனூர், கோதையாறு,



தாமிரபரணி, கம்பம் பள்ளத்தாக்கு, அமராவதி பழைய கால்வாய்கள், சேத்தியாத்தோப்பு, மருதா நதி போன்றவற்றுடன் இதர பாசனப் பரப்பு அமைப்புகளின் செயல் திறனை மேம்படுத்த பாசனக் கட்டுமானங்களைப் புனரமைத்தும், நவீனப்படுத்தியும், நீர் வினியோக அளவை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் வகையிலும் ஆயக்கட்டு முழுமைக்கும் சரிசமமாகப் பாசன நீர் வழங்கும் முறையைப் பின்பற்றியும் உற்பத்தியளவையும், பண்ணை வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தைப் போலவே பொறியியல் சிறப்பியல்புகளும், வேறு பல சிறப்பியல்புகளும் கூடுதலாக உள்ள தமிழ்நாடு நீர்வளத் தொகுப்புத் திட்டமானது 1995-1996 முதல் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. உலக வங்கி இத்திட்டப் பணிகளில் எஞ்சியுள்ளவற்றை முடிக்க 31-3-2003 வரை ஒரு முறை கால நீட்டிப்பு வழங்கிய பின்னர், இப்போது மேலும் ஓர் ஆண்டுக்கு 31-03-2004 வரை கால நீட்டிப்பு வழங்கியுள்ளது.

**நிதி ஒதுக்கீடு**

2003-2004 நிதியாண்டுத் திட்ட மதிப்பீடு ரூ.399.07 கோடியாகும். இதில் ரூ. 16.98 கோடி நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் சார்ந்ததாகும்.

**பெரிய நீர்ப் பாசனத் திட்டங்கள்**

மாநிலத்தில் மேற்பரப்பு நீர் அனேகமாக முற்றிலும் பயன்படுத்திவிட்ட நிலையில், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

**மாநிலத் திட்டப் பணிகள்**

**நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள்**

2003-2004 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இருந்து பின்வரும் நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெறுகின்றன:—

(1) பெரியாறு அணையை வலுப்படுத்துதல் (பீர்மேடு, கோள மாநிலம்)

(2) நங்கஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்)

[2003 ஏப்ரல் 7

(3) இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

(4) சண்முகா நதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)

(5) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)

(6) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)

(7) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

(8) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

(9) பத்தலப்பள்ளி - மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)

(10) குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)

(11) வாட்டாறு-வள்ளி மதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தருமபுரி மாவட்டம்)

(12) கால்வாய் - சடையனேரித் திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)

(13) நாராயண காவேரி வாய்க்கால் (இராமநாதபுரம் மாவட்டம்)

(14) உப்பு ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

(15) முதலை முத்துவாரியின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)

(16) கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)

(17) நாயோடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

(18) இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)



2003 ஏப்ரல் 7]

(19) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (ஈரோடு மாவட்டம்)

(20) ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

(21) சாஸ்தாகோயில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

(22) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

(23) சிறுமலையாற்றின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

(24) கொடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்தல் (கரூர் மாவட்டம்)

(25) நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகு படுத்துதல்

(26) வண்டியூர் குளத்தைத் தூர் எடுத்து நவீனப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)

(27) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்

(28) திருச்சிராப்பள்ளி மாவட்டம், காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்ப்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்கள் பலப்படுத்துதல்

(29) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்

(30) நிலையூர் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)

(31) பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே உள்ளாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

(32) மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

[2003 ஏப்ரல் 7

(33) கீழ்பவானி பாசன அமைப்பைப் புனரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல்

(34) கூடுதல் நிதியில் கும்பகோணம் நகர எல்லைக்குள் உள்ள நான்கு வாய்க்கால்களைப் புனரமைத்தல்

(35) உய்யகொண்டான் வாய்க்கால், குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு தூர் வாருதல் மற்றும் திருச்சி நகரத்தில் வெள்ளப் பாதுகாப்புக்காகக் கரைகளை வலுப்படுத்துதல்

(36) திருச்சியிலிருந்து கரூர் வரை காவிரியில் கருவேல மரங்கள் மற்றும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றுதல்

(37) மாசுபட்ட நொய்யல் ஓரத்துப்பாளையம் நீரைத் திருப்பிவிட புகலூர் கால்வாயில் நீர்க்குழி கட்டுதல்

(38) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி அருகே நங்கஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டு புனரமைத்தல்

(39) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல்

(40) சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்

(41) மேலூரிலிருந்து மாவன்மங்கலம் குளம் வரை பெரியாறு பிரதானக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்

(42) திருச்சி மாநகரத்தில் வெள்ளத் தடுப்பு திட்டம்

(43) குழித்துறை ஆற்றின் விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டத்தைப் புனரமைத்தல் (நீ.ஆ.தொ.தி.)

(44) பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (கன்னியாகுமரி மாவட்டம்)

(45) நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

(46) இராஜாதோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)



2003 ஏப்ரல் 7]

(47) கவுண்டின்யா நதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)

(48) அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)

(49) அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் (நீ.ஆ.தொ.தி.) (விருதுநகர் மாவட்டம்)

(50) வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

(51) கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

(52) (வராக நதி) சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்) (நீ.ஆ.தொ.தி)

குறிப்பு: மொத்தம் 52 திட்டங்களில் 9 திட்டங்கள் (வரிசை எண் 44 முதல் 52 வரை) நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் "நடைபெறும் நீர்த்தேக்கத் திட்டப்பணிகள் முடிவாக்கம்" என்ற தலைப்பின்கீழ் செயலாக்கப்படுகின்றன.

**நடைபெற்றுவரும் நடுத்தரப் பாசனத் திட்டப் பணிகளின் செயலாக்க நிலை**

**(1) பெரியாறு அணையை வலுப்படுத்துதல்**

தேக்கடியின் அருகிலுள்ள பெரியாறு அணை தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள மொத்தம் 84269 எக்டேர் ஆயக்கட்டுகளுக்குப் பிரதான பாசன ஆதாரமாகும்.

1886 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 999 ஆண்டுகளுக்கான குத்தகை உடன்படிக்கையின்படி, பெரியாறு அணை 1887-1895 ஆண்டுகளில் 152 அடி மட்டம் வரையில் நீரைத் தேக்கும் விதமாகக் கட்டப்பட்டது.

1979 ஆம் ஆண்டு அணையின் பாதுகாப்பு மற்றும் பலம் பற்றிய ஐயங்கள் எழுந்தபோது, இதுகுறித்து ஆய்வு மற்றும் அறிவுரைக்காக இப்பொருள் மத்திய நீர்க்குழுவின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. இரு மாநில அரசுகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பின், மத்திய நீர்க்குழு பின்வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுரை வழங்கியது:

அ. அவசர நடவடிக்கைகள்:

1. கான்கிரீட் கேப்பிங் (capping) மற்றும் அணையின் மேல் பகுதியை ஆறு அடி அகலப்படுத்துதல்.

2. கூடுதல் நீர் வழிந்தோடிகள் அமைத்தல்.

ஆ. இடைநிலைக் கால நடவடிக்கைகள் (Medium term measures):
கேபிள் ஆங்கரிங் (cable anchoring)

இ. நீண்ட கால நடவடிக்கைகள்:

அணையின் மேல் கான்கிரீட் பூச்சுப் பூசி பலப்படுத்தல்

ஈ. பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு உபரி நீர் போக்கியின் மதகுகளை இம்மட்டத்திலிருந்து +136 அடிக்குத் தற்காலிகமாக உயர்த்துதல்.

மேற்கண்டவற்றுடன், சிற்றணையை பலப்படுத்தல், கைப்பிடிச் சுவரை உயர்த்துதல் மற்றும் திறன் சிதறல் ஏற்பாடுகள் ஆகியவையும் மத்திய நீர்க்குழுவால் பரிந்துரைக்கப்பட்டன.

மத்திய நீர்க்குழுவின் பரிந்துரையின்படி, அவசரக் கால மற்றும் இடைநிலைக் காலப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபின் 145 அடி வரையிலும், அனைத்து பலப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டபின், 152 அடி வரையிலும் நீரைத் தேக்கலாம்.

1979-ல் நடந்த மைய நீர்க்குழுவின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளின்படி, சிற்றணை பலப்படுத்தும் பணி தவிர இதர அணை பலப்படுத்தும் பணிகள் அனைத்தும் முடிவு பெற்றன.

பெரியாறு அணை தொடர்பாக, வல்லுநர் குழுவின் இறுதி அறிக்கை மார்ச் 2001-ல் மைய நீர் ஆதார அமைச்சகத்துக்கு அளிக்கப்பட்டது. தமிழக அரசும் இறுதி அறிக்கையின் மீதான அதன் கருத்தை மைய அரசுக்கு அனுப்பியுள்ளது. மைய நீர் ஆதார அமைச்சகம், வல்லுநர் குழுவின் இறுதியறிக்கையின் மீதான அறிக்கையை, உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. உச்ச நீதிமன்றம் இரு மாநில அரசுகளையும், வல்லுநர் குழுவின் இறுதி அறிக்கை மீதான அறிக்கையைக் கோரியுள்ளது. தமிழக அரசு 6-2-2002-ல் தனது இறுதி அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. மேலும் கேரள அரசு





தாக்கல் செய்த அறிக்கை மீதான தனது பதிலையும் 25-2-2002-ல் தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. மாறுதல் மனு உச்ச நீதிமன்றத்தால் தீர்க்கப்படவுள்ளது.

சிற்றணை பலப்படுத்தும் பணிக்கான கருத்துரு 1987-ல் கேரள அரசுக்கு அனுப்பப்பட்டது. தமிழக அரசால் பல முறை கேட்கப்பட்டும் கேரள அரசின் இசைவு கிடைக்கப் பெறவில்லை. எனினும் கேரள அரசின் இசைவை எதிர்நோக்கி. சிற்றணை பலப்படுத்தும் பணிக்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் கேரள அரசின் இசைவுக்குப் பின்னரே பணி மேற்கொள்ளப்படும்.

இப்பணியின் ஒப்பந்தக்காரர் 12-09-1999-ல் கேரள உயர் நீதிமன்றத்தில் சிற்றணை பலப்படுத்தும் பணிக்கு கேரள அரசு தடை செய்யக் கூடாதென்று மனுச் செய்துள்ளார். இந்த வழக்கு கேரள உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளது. இந்நிலையில் அரசின் அறிவுரையின்படி ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்ட நிலம் உடன்படிக்கை முடிவு செய்யாமல் 13-09-2002 அன்று திரும்பவும் எடுத்துக்கொள்ளப்பட்டது. எனவே சிற்றணைப் பணி இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு தமிழக முதல்வரின் கோரிக்கைக்கிணங்க, தமிழக மற்றும் கேரள பொதுப் பணித் துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட பெரியாறு அணை தொடர்பான இரு மாநிலக் கூட்டம் 10-06-2002-ல் நடைபெற்றது.

சிற்றணைப் பணிக்கான 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 0.01 இலட்சம்.

**(உ) நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இடையன்கோட்டை கிராமத்தினருகில் அமராவதியாற்றின் கிளையாறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் ரூ.20.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டத்திலுள்ள இடையன்கோட்டை, வளயபட்டி, சின்னக்காமாபட்டி கிராமங்களிலும் மற்றும் கரூர் மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள சேந்தமங்கலம் கிராமத்திலும் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும், 2,530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் தடையில்லா நீர்வழிந்தோடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண் அணை மற்றும் வழிந்தோடி அமைக்கும் பணியும் பிரதானக் கால்வாய் வெட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ. 37.30 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அநேகப் பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 80 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2003-2004 நிதி ஒதுக்கீடு—ரூ.348.35 இலட்சம்.

**(3) இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாற்றின் குறுக்கே ரூ.28.70 கோடி மதிப்பீட்டில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டத்தில், இராஜாபட்டி, மாசர்பட்டி சக்கிகாப்பட்டி, தப்பாத்து, கீழ்நாட்டுகுறிச்சி, மேல்கரண்டை, செங்கோட்டை, கீழ்காண்டை, வடமலபுரம், வெளவால் தொத்தி, வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் மொத்தம் 3,705 எக்டேர் புன்செய் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் கிடைக்க வழிவகை செய்கிறது.

அர்ஜுனா மற்றும் வைப்பாறு நதிகளின் குறுக்கே கல்லணை கட்டும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. கால்வாய் கட்டும் பணி 80 விழுக்காடும், கிளைக் கால்வாய்ப் பணிகளில் 95 விழுக்காடும் முடிவடைந்துள்ளன. கால்வாயில் குறுக்குக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருத்திய மதிப்பீடு ரூ.62.20 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.2000.00 இலட்சம்.

**(4) சண்முகா நதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமத்தருகே சண்முகா நதியின் (வரட்டாறு) குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.



இத்திட்டத்தினால் கம்பம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள மல்லிங்கபுரம், சின்னஓவலாபுரம், இரசக்கநாயக்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, அழகாபுரி, ஓடைப்பட்டி மற்றும் சீபாலகோட்டை கிராமங்களில் 664 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கப்படும்.

அரசு இத்திட்டத்திற்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ.14.70 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் மண் அணை, கல்லணை, வழிந்தோடா பிரிவு, தடையில்லா நீர்வழிந்தோடி, தலைமதகு மற்றும் தேவையான கட்டமைப்புகளுடன்கூடிய கால்வாய்கள் அடங்கும். இத்திட்டத்தில் பகிர்மானக் கால்வாய்ப் பணிகள் தவிர எஞ்சிய பணிகள் யாவும் முடிவு பெற்றன. பகிர்மானக் கால்வாய்ப் பணிகள் முடியும் தறுவாயில் உள்ளன.

அரசு இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ரூ.14.70 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.100.00 இலட்சம்.

**(5) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்பாடி கிராமம் அருகாமையில், கமுதி நீர்க் கட்டுப்பாட்டு மதகிற்குக் கீழ்ப்புறமாகக் கிருதமால் மற்றும் பரளையாறுகள் மலட்டாற்றுடன் சங்கமிக்கும் இடத்திற்குக்கீழ் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்ட இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தின் மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டங்களிலுள்ள ஓ. கரிசல்குளம், வேப்பங்குளம் (கமுதி வட்டம்), பம்மனேந்தல், அரியமங்கலம், புன்னவாசல், வேப்பங்குளம் (கடலாடி வட்டம்), மீனன்குடி, ஓரிவாயல் மற்றும் கடுகுசந்தை கிராமங்களில் உள்ள 1758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் 54 கண்மாய்களின்கீழ் 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.15.40 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. கல்லணை, இரண்டு தலைமதகுகள், கட்டமைப்புகளுடன்கூடிய வலது மற்றும் இடது பிரதானக் கால்வாய்கள் இத்திட்டத்தின் முக்கிய அங்கங்களாகும்.

இத்திட்டத்தில் எல்.எஸ். 0 மீ. முதல் 200 மீ. மற்றும் 200 மீ. முதல் 385 மீ. வரை அணைத் தடுப்புச் சுவர் கட்டும் பணி முடிவுற்றது. வலதுபுறத் தலைமதகு கட்டும் பணி மற்றும் மணல்போக்கி மதகு கட்டும் பணி, மண் அணை அமைத்தல், மற்றும் இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இடதுபுறத் தலைமதகு அமைத்தல் மற்றும் மணல் போக்கி கட்டும் பணிகளுக்கு ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளன. 2003-2004 நிதி ஒதுக்கீடு—ரூ.500.00 இலட்சம்.

**(6) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)**

உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்பொருட்டு, வைகை அணையின் வழிந்தோடியிலிருந்து 2425 மீட்டர் தொலைவில் வைகை அணையின் வலது கோடியில் ஓர் உயர்மட்டக் கால்வாய் 27.26 கி.மீ. நீளத்திற்கு அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. கற்காரை பூசப்படாத இக்கால்வாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் வைகை அணை நிரம்பி வழியும்போது உபரி வெள்ள நீரைப் பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்குப் பாசன வசதியளிக்க உள்ளது. இத்திட்டத்தில் மூன்று புதிய கண்மாய்கள் அமைப்பதும் அடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.33.81 கோடி அனுமதி அளித்துள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கிறது. மேலும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள மூன்று கசிவு நீர்க் குட்டைகள், 29 கண்மாய்களின் கீழ் உள்ள 128 எக்டேர் விடுபட்ட நன்செய் நிலங்கள் பயனடையும். இவை தவிர, புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் புதிய நன்செய் நிலமும் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்தில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பதினான்கு பணிகளில் 12 பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 9 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. கட்டடப் பணிகள் முடிவடைந்தன. 3 பணிகள் நிலச் சொந்தக்காரர்களின் ஆட்சேபத்தால் தாமதமாகின்றன. இரண்டு பணிகளுக்கு மறு ஒப்பந்தம் கோரப்பட உள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.526.25 இலட்சம்.



**(7) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில், ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே 112 மில்லியன் கன அடி கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.18.28 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.27.38 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் மற்றும் இருணாப்பட்டு கிராமங்களின் 810 எக்டேர் நிலம் நேரடியாக இருபோக புன்செய் சாகுபடியின்கீழ் வரும்.

இத்திட்டத்திற்கு 39.69 எக்டேர் வனத் துறை நிலம், பொதுப் பணித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. மேலும் 15 எக்டேர் புறம்போக்கு நிலம் மற்றும் 100.245 எக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தவும் வேண்டியுள்ளது. இதில் நீதிமன்ற வழக்கில் உள்ள 9.85 எக்டேர் தவிர மீதமுள்ள இடத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. முதற் கட்டப் பணிகளான அணுகு சாலை அமைத்தல் மற்றும் முகாம் காலனி பணிகள் முடிவுற்றன. பிரதானப் பணிகளுக்கு ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நபார்டு வங்கிக் கடனுதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2003-2004 நிதி ஒதுக்கீடு-ரூ.1292.00 இலட்சம்.

**(8) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில், செண்பகத்தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினை ரூ.21.33 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூ.34.00 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

[2003 ஏப்ரல் 7

இத்திட்டத்தினால் போளூர் வட்டத்திலுள்ள வள்ளூர், கங்காரமந்தல், சந்தவாசல், நாரமங்கலம், இலுப்பகுப்பம், பார்வதி சகரம், அலியாபாத், எந்துவம்பாடி கிராமங்களிலும், ஆரணி வட்டத்திலுள்ள குப்பம், காமக்கூர், ஆரணி, மாமண்டூர், கல்பூண்டி, முள்ளிப்பட்டு, பையூர் கிராமங்களிலும், ஆற்காடு வட்டத்திலுள்ள வாழப்பந்தல், மேல்புதுப்பாக்கம், மாம்பாக்கம் மேம்பலந்தை, அரூர், சுரையூர் மற்றும் பொன்னம்பலம் கிராமங்களிலும், செய்யாறு வட்டத்திலுள்ள திருமணி, முனுகப்பட்டு, மேல்புத்தூர் மற்றும் மேல் சேவுமங்கலம் கிராமங்களிலும், வந்தவாசி வட்டத்தில், அன்மருதை கிராமத்திலும் மொத்தம் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும். இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் இந்தப் பிற்பட்ட பகுதியின் பாசன வசதிக்கான நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும்.

முதற்கட்டப் பணிகளான சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி, அலியாபாத்தில் வேலி அமைக்கும் பணி உள்ளிட்ட இதர பணிகள் முடிவுற்றன.

இத்திட்டத்திற்கு 99.62 எக்டேர் வனத் துறை நிலமும், 21.50 எக்டேர் தனியார் பட்டா நிலமும் மற்றும் 3.25 எக்டேர் புறம்போக்கு நிலமும் தேவைப்படுகின்றன. புறம்போக்கு நிலம் மாற்றம் சம்பந்தமாக வருவாய்த் துறையின் ஆய்வில் உள்ளது.

பிரதானப் பணிக்கு ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டுள்ளது. பட்டா நிலங்கள், வனத் துறை நிலங்கள் பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட்டு விட்டன. நபார்டு வங்கி கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. பணி முன்னேற்றத்தில் உள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு ரூ.1979.38 இலட்சம்.

**(9) பத்தலப்பள்ளி - மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)**

இத்திட்டமானது வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலப்பள்ளி கிராமம் அருகே மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு வகை செய்கிறது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.29.55 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வட்டத்தில் பாலூர் மச்சம்பட்டு, வசனம்பள்ளி, நரியாம்பட்டு, ரெட்டிமான்குப்பம், சாரங்கல்,



2003 ஏப்ரல் 7]

கைலாசகிரி, ஆயுதம்பட்டு, சாதம்பாக்கம், ராஜக்கால், ஆளியங்குப்பம், மால்முருங்கை, மேல்பட்டி, குளித்திகை, சின்ன தொட்டாளம், உள்ளி, கோதகுப்பம், அரங்காநல்லூர், ஓகடசி மற்றும் சிட்லாத்தூர் கிராமங்களில் மொத்தம் 1064 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 61 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசனமும் கிடைக்கப் பெறும். இத்திட்டத்தில் பேரணாம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதியும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் காலப்போக்கில் மீண்டும் நல்ல நீரை வழங்க ஏற்றதாக மாறும்.

மண் அணை, உபரி நீர்வழிந்தோடி, ஆற்றுமதகு, அபிவிருத்தி அணைக்கட்டு மற்றும் நீர்த்தணிவு அமைத்தல் இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 36.98 எக்டேர் பட்டா நிலமும், 17.81 எக்டேர் வனத் துறை நிலமும் மற்றும் 11.32 எக்டேர் புறம்போக்கு நிலமும் பொதுப் பணித் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.100.00 இலட்சம். நபார்டு வங்கியின் கடனுதவி பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(10) குப்பநத்தம் நீர்த் தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

இத்திட்டமானது திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதாகும். இத்திட்டத்திற்கு அரசு ரூ.35.46 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைகளின் கீழுள்ள 22 ஏரிகள் மற்றும் இரண்டு நேரடிக் கால்வாய்களின் மூலம் செங்கம் வட்டத்தில் காயம்பட்டு, வடங்குப்பம், வளையம்பட்டு, தண்டப்பட்டு, கரையமங்கலம், பக்கிரிபாளையம், மேல்வணக்கம்பாடி, மேல்புழுதியூர், பெரும்பட்டம், சென்ன துக்கப்பேட்டை, மேமலூர், காயம்பட்டு, கங்காரவரன், சமுத்திரம், பொன்னேரி சின்ன சமுத்திரம், படியகரம், நரசிங்கநல்லூர், தொரப்பாடி, முன்னூர் மங்கலம், நாச்சிப்பட்டு, குஞ்சிலம், பெரியஏரி, உண்ணாமலைபுரம், புதுசெங்கம், அன்வர்பாத், ஆலப்புதூர்,

தாமரைப்பாக்கம் மற்றும் அரிதாரை மங்கலம் கிராமங்களிலும், திருவண்ணாமலை வட்டத்தில் முன்னூர் மங்கலம், கரியாந்தல், ஆனந்தாள், மேல்புஞ்சை, வாசுதேவன் பட்டு மற்றும் கிழித்தூர் கிராமங்களிலும், போளூர் வட்டத்தில் கடலாடி, குணத்தூர், கீழத்தூர் கிராமங்களிலும் மொத்தம் 2528 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கப் பெறும்.

மண் அணை, கற்கட்டு நீர்வழிந்தோடி, ஆற்றுமதகு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 190.42 எக்டேர் புன்செய் பட்டா நிலமும், 103.75 எக்டேர் புறம்போக்கு நிலமும், 13.34 எக்டேர் வனத் துறை நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டு, வனத் துறை நிலம், பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது. பட்டா நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் புறம்போக்கு நிலம் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது. வடிவமைப்பு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.250.00 இலட்சம்.

**(11) வரட்டாறு - வள்ளி மதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தருமபுரி மாவட்டம்)**

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளி மதுரை கிராமம் அருகே வரட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.19.[illegible] கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ.35.95 கோடிக்கு திருத்திய [illegible]வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் அரூர் வட்டத்தில் உள்ள வள்ளி மதுரை, தத்தவளசி, சோமநாதன், கீரைப்பட்டி, குடிமியாம்பட்டி, அச்சல்வாடி மற்றும் சோமநாதம் புதூர் கிராமங்களில் கீரைப்பட்டி அணைக்கட்டு, எல்லப்புடயாம்பட்டி அணைக்கட்டு மற்றும் மாங்குப்பம் ஏரி ஆகியவற்றின்கீழ் பாசனம் பெறும் 110 எக்டேர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன உறுதி மற்றும் 1047 எக்டேர் ஒரு போக புன்செய்ப் பயிர் செய்வதற்கான பாசன வசதியும் கிடைக்கப் பெறும்.





இத்திட்டமானது மண் அணை, உபரி நீர்போக்கி, தலைமதகுகள் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்திற்கு 94.31 எக்டேர் புன்செய் பட்டா நிலமும் 24.87 எக்டேர் வனத் துறை நிலமும், மற்றும் 23.82 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. மைய அரசு 22-12-2000-ல் வனத் துறை நில மாற்றத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. பணிகளுக்கான ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நபார்டு வங்கி கடனுதவி வழங்கியுள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு-ரூ.[illegible]6.00 இலட்சம்.

**(12) [illegible] சடையனேரி திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)**

இத்திட்டத்தின் பணிகளுக்காக அரசு ரூ.12.33 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. ஏற்கெனவேயுள்ள கால்வாய் சடையனேரி வாய்க்காலை கால்வாய் ஏரி வரை அகலப்படுத்துதல் மற்றும் ஏற்கெனவேயுள்ள சடையனேரி வாய்க்காலை அகலப்படுத்துதல், சடையனேரி நீட்டிப்பு வாய்க்கால் வெட்டுதல், கருமேனியாற்றிலிருந்து வைரவன்தருவை வரையில் ஏற்கெனவேயுள்ள முதலூர் ஓடையை மேம்படுத்துதல் மற்றும் வைரவன்தருவை முதல் புத்தன் தருவை வரையில் ஓர் இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும்.

இத்திட்டத்தின் மூலம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரைக் கொண்டு சடையனேரி கால்வாயின் கீழுள்ள 12 ஏரிகள் மற்றும் தஞ்சைக் குளத்தின்கீழ் 314 எக்டேர் நிலங்களுக்கு நீர் வழங்கவும், இரு ஏரிகளை நிரப்புவதன் மூலம் 4 கிராமங்களில் உள்ள 634 கிணறுகளில் நிலத்தடி நீர் அதிகரிப்பதால் 875 எக்டேர் தென்னந்தோப்புகளும் பயன் பெறும். இத்திட்டத்தினால் திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களில் கால்வாய், வெள்ளூர், உடையார் குளம், வெள்ளமடம், பிடனேரி, எழுவரைமுக்கி, மங்கைமொழி, சாத்தான்குளம், சாஸ்தாவிநல்லூர், குமடிக்கோட்டை, திருப்பணிபுத்தன் தருவை, பாட்டக்குறிச்சி ஆகிய கிராமங்கள் பயன் பெறும்.

இத்திட்டம் மாநில நிதித் தொகுப்பின்கீழ் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணிகளில் 98 விழுக்காடு முடிவுற்றன. எஞ்சிய பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. 2003-2004 நிதி ஒதுக்கீடு—ரூ.0.01 இலட்சம்.

**(13) நாராயணக் காவேரி வாய்க்காலைப் புனரமைத்து சீர் செய்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள நாராயணக் காவேரி வாய்க்கால் மற்றும் அதன்கீழ் உள்ள சாயல்குடி மற்றும் 33 கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கும் மண்டலமாணிக்கம் அணைக்கட்டு புனரமைத்து சீர் செய்ய ரூ.5.75 கோடி மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கமுதி வட்டத்திலுள்ள மண்டலமாணிக்கம், கமுதி, மண்டல்நாடு, கே. நெடுங்குளம், சீமானேந்தல், குண்டுக்குளம், கே.வேப்பங்குளம், ஓ. கரிசல்குளம், கோவிலங்குளம், கூம்பூதி, எம்.புதுக்குளம், மற்றும் வில்லாநேந்தல் கிராமங்களிலும், திருச்சுழி வட்டத்திலுள்ள கல்லகரி கிராமத்திலும், கடலாடி வட்டத்திலுள்ள சாயல்குடி, எம். கரிசல்குளம், என். கரிசல்குளம், எ. உசிலம்குளம், எஸ். வாகைகுளம், பிள்ளையார்குளம், எஸ். கீரண்டை மற்றும் கீழ் அல்லிக்குளம் ஆகிய கிராமங்களிலும் 1942.97 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

90 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.200.00 இலட்சம்.

**(14) உப்பு ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கானக்கிளிய நல்லூர் உள்கிடைக் கிராமமான சிறுவயலூர் அருகே உப்பு ஓடை நந்தியாற்றுடன் கலக்கும் இடத்திற்கு மேலே, ஓடையின் குறுக்கே ரூ.4.18 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கானக்கிளிய நல்லூர் கிராமத்தில் 152 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

மண் அணை, உபரி நீர்போக்கி, மூன்று பாசன மதகுகள் மற்றும் மூன்று கால்வாய்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதுவரை 75 விழுக்காடு பணிகள் முடிவு பெற்றுள்ளன.

மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003-2004 நிதி ஒதுக்கீடு-ரூ.60.00 இலட்சம்.



**(15) முதலைமுத்துவாரியின் குறுக்கே ஒரு குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)**

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள சென்னம்பட்டி கிராமத்தில் முதலைமுத்துவாரியின் குறுக்கே ரூ.9.73 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சென்னம்பட்டி. வல்லம்புதூர் கிராமங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கரும்பூண்டி கிராமம், இவைகளில் 110 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 9 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 364 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

2300 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, தடையில்லா நீர்வழிந்தோடி மற்றும் 4 மதகுகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதுவரை 78.50 விழுக்காடு பணிகள் முடிவு பெற்றுள்ளன.

மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. நில எடுப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2003-2004 நிதி ஒதுக்கீடு-ரூ.200.00 இலட்சம்.

**(16) கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஏற்கெனவே உள்ள கடானா அணையின் வலதுபுறத்தில் ரூ.18.82 கோடி மதிப்பீட்டில் ஒரு விரிவாக்க நீர்த்தேக்கத்தை அமைக்க அரசு அனுமதி அளித்தது.

இத்திட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சிவசைலம், மேல் ஆம்பூர், கீழ் ஆம்பூர், மன்னார்கோவில் ஆகிய கிராமங்களில் 511 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 187 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 67 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் அளிக்கும்.

930 மீட்டர் நீளத்திற்கு மண்கரை, ஒரு பாசனத் தலைமதகு, 18.71 கி.மீ. நீளத்தில் 3 கிளைக் கால்வாய்களுடன் பிரதானக் கால்வாய், உபரி நீர்வழிந்தோடியிலிருந்து 120 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு நீர்வழி ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

[2003 ஏப்ரல் 7

இத்திட்டப் பணிகளில் 70 விழுக்காடு முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கு நபார்டு வங்கி கடனுதவி செய்துள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.294.20 இலட்சம்.

**(17) நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள கன்னிவாடி கிராமத்தில் மங்கறியாற்றின் உப நதியான நாயோடையின் குறுக்கே ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்க அரசு அனுமதி அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.7.20 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள கன்னிவாடி, ஆலாந்துரரான்பட்டி, வீரப்புடையான்பட்டி மற்றும் தெட்டுப்பட்டி கிராமங்களிலுள்ள 148 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி கிடைக்கும்.

620 மீட்டர் நீளத்திற்கு மண்கரை, 30 அடி நீள அதிவேக நீர்ப்போக்கி, ஒரு தலைமதகு மற்றும் 4120 மீட்டர் நீளம் கண்ணி வாய்க்கால் இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

மண் அணை மற்றும் உபரி நீர்ப்போக்கி அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.200.00 இலட்சம்.

**(18) இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ. வெள்ளோடு மற்றும் கீழக்கோட்டை கிராமங்களில் குடகனாற்றின் உப நதிகளான இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடை இவற்றின் குறுக்கே ரூ. 3.55 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ. 5.65 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ. வெள்ளோடு மற்றும் கீழக்கோட்டை கிராமங்களில் 107.65 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.



2003 ஏப்ரல் 7]

480 மீ. நீளத்திற்கு மண்கரை, இராமக்கல் ஓடையில் உள்ள உபரி நீர்ப் போக்கியுடன் இணைக்க உபரி நீர்க் கால்வாயுடன் ஓர் உபரி நீர்ப் போக்கி, தலைமதகு, ஆற்று நீர்ப் போக்கி மதகு மற்றும் கண்ணி வாய்க்கால்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது. நிலம் கையகப்படுத்தல் பணிக்கான கணக்குகளைச் சரி செய்யும்முன் பணி மேற்கொள்ள வேண்டாமென உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.300.00 இலட்சம்.

**(19) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)**

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம் பொன்னிவாடி கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ. 31.01 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ. 42.70 கோடிக்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள நல்லான்பாளையம், ஆலம்பாளையம், பொறாமியம்தூரம்பாடி, மூலனூர் மற்றும் பொன்னிவாடி கிராமங்களில் 1919.87 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

3450 மீ. நீளம் மண்கரை, தடையில்லா நீர்வழிந்தோடி, தலைமதகு மற்றும் ஆற்று மதகு இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

குடியிருப்புக் கட்டடங்கள், உப கோட்ட அலுவலகக் கட்டடப் பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன. மண் அணை மற்றும் மிகை நீர் வழிந்தோடி பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ. 450.00 இலட்சம்.

**(20) ஆண்டி ஓடையின் குறுக்கே ஓர் அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கல்லகம் கிராமத்திற்கு அருகே ஆண்டி ஓடையின் குறுக்கே ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் ஓர் அணை கட்ட அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள கல்லகம் கிராமம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம் அரியலூர் வட்டத்திலுள்ள பூண்டி கிராமம் இவற்றில் 82 எக்டேர் நஞ்சை

[2003 ஏப்ரல் 7

நிலங்களுக்குப் பாசன உறுதியும், 81 எக்டேர் புன்செய் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் அளிக்கும்.

36 மீட்டர் நீளம் கல்லணை, தலைமதகு, 3350 மீட்டர் நீளம் குறுக்கு கட்டுமானப் பணிகளுடன் பிரதான வாய்க்கால் (இடதுபுறம்) மற்றும் 700 மீட்டர் நீளம் வெள்ளத் தடுப்புக் கரை ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

அனைத்துப் பணிகளும் முடிவு பெற்றன.

**(21) சாஸ்தாகோயில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம் சாஸ்தாகோயில் அருகே நகரியாற்றின் குறுக்கே ரூ.7.97 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம் இராஜபாளையம் வட்டதிலுள்ள வடக்கு தேவதானம், தெற்கு தேவதானம், சேத்தூர், முத்துசாமிபுரம், கோவிலூர், நல்லமங்கலம் மற்றும் செட்டியார்பட்டி கிராமங்களில் 13 கண்மாய்களின் மூலம் ஏற்கெனவே பாசனம் பெறும் 1016 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 184 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்கிறது.

1600 மீட்டர் நீள மண்கரை, தடையில்லா நீர்வழிந்தோடி, ஆற்று மதகு மற்றும் உபரிநீர்க் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

50 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்திற்கு நபார்டு வங்கி கடனுதவி அளித்துள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ. 493.00 இலட்சம்.

**(22) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், விண்ணமங்கலம் கிராமத்தினருகே வெள்ளக்கால் கானாறின் குறுக்கே ரூ. 7.70 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள கண்ணாடிகுப்பம், பெரியன்குப்பம், சானார்குப்பம், மேல்கிருஷ்ணாபுரம், ஆம்பூர்,



2003 ஏப்ரல் 7]

சாமளாபுரம், கருண்வரம், வடபுதுபபட்டு, கீழ்முருகி, தொட்டாலம் மடமூர் மற்றும் காட்டாம்பாக்கம் ஆகிய கிராமங்களில் 431 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 57 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

320 மீட்டர் நீளம் மண் அணை, 40 மீட்டர் நீள உபரி நீர்ப்போக்கி, ஆற்று மதகு ஆகியன இப்பணியின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 35.82 எக்டேர் வனத் துறை நிலம் தேவைப்படுகிறது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

வன நிலம் கையகப்படுத்தும் பணிக்கு மத்திய அரசின் முதல் நிலை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் பணி துவங்கப்படும். 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ. 200.00 இலட்சம்.

**(23) சிறுமலையாற்றின் குறுக்கே ஒரு புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக்கோட்டை அருகில் சிறுமலையாற்றின் குறுக்கே ரூ. 4.91 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.8.87 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள ஒருதட்டு கிராமத்தில் 128 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

975 மீட்டர் மண்கரை, 40 மீட்டர் நீளம் உபரி நீர்ப்போக்கி, ஒரு தலைமதகு மற்றும் 60 மீ. நீளம் உபரிநீர்க் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும். இதுவரை மண் அணை 0.500 மீ. மதகு மற்றும் உபரி நீர்க் கால்வாய்ப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள பணிகள் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட தடங்கலால் தாமதமாகிறது.

**(24) குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கும் (கரூர் மாவட்டம்)**

குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்கு ரூ. 1.00 கோடி மதிப்பீட்டில் பாசன வசதி அளிக்க அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், வீராராக்கியம் மற்றும் வளையல்காரன்புதூர் கிராமங்களில் 440 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 116 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

53.50 கி.மீ. நீளமுள்ள வலது பிரதானக் கால்வாயைப் புனரமைத்து மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள குறுக்குக் கட்டுமானப் பணிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் ஐந்து உள்வரத்து மதகுகள் கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தின் பணிகள் 80 விழுக்காடு முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.

**(25) நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துதல்**

நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துவதற்கான திட்டத்தை ரூ. 2.00 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி, சாத்தனூர், அமராவதி, வைகை, ஆழியாறு, பவானிசாகர், மணிமுத்தாறு, வீடூர் மற்றும் முக்கொம்பு ஆகிய அணைப் பகுதிகளில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது.

கிருஷ்ணகிரி, சாத்தனூர், வைகை, வீடூர், அமராவதி, பவானிசாகர், ஆழியாறு, முக்கொம்பு மற்றும் மணிமுத்தாறு ஆகிய அணைப் பகுதிகளின் பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்தும் பணி முடிவடைந்துள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ. 0.01 இலட்சம்.

**(26) வண்டியூர் குளத்தைத் தூர் எடுத்து நவீனப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)**

வண்டியூர் குளத்தை ரூ. 2.50 கோடி மதிப்பீட்டில் தூர் எடுத்து நவீனப்படுத்தி பூங்கா அமைத்து அழகுபடுத்தும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது. தூர் வாரும் பணி முடிவடைந்துள்ளது.





**(27) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் ரூ. 26.52 கோடி மதிப்பீட்டில் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் உத்தமபாளையம் வட்டம், தெம்புச்சேரி, டி.சிந்தளச்சேரி, பண்ணைபுரம், கோம்பை, சங்கராபுரம், வெம்பக்கோட்டை, தேவாரம், லட்சுமிநாயக்கன்பட்டி, போத்தைபுரம், மீனாட்சிபுரம், கூடலூர் மற்றும் உத்தமபாளையம் கிராமங்களில் 511.16 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 73.90 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 22.81 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகு கட்டுதல், 38.90 கி.மீ. நீளமுள்ள கால்வாய் வெட்டுதல் மற்றும் 4 புதிய ஏரிகள் அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதற்கான மதிப்பீடு ரூ. 26.52 கோடியாகும்.

இப்பணி மூன்று பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**(28) திருச்சிராப்பள்ளி மாவட்டம் காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்ப்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்கள் பலப்படுத்துதல்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்ப்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்களை ரூ. 6.00 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்த ஒப்புதல் அளித்தது. பணிகள் முடிவடைந்தன.

**(29) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் வில்லுக்குறி கிராமத்தின் அருகே மாம்பழத்துறையாற்றின் குறுக்கே ரூ. 9.50 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் கல்குளம் வட்டம், கல்குளம் மற்றும் வில்லுக்குறி கிராமங்களில் 3.57 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 25.82 எக்டேர் ஒருபோகப் பயிர் மற்றும் 18.14 எக்டேர் இருபோகப் பயிர் விடுபட்ட நிலங்களுககுப் பாசன வசதி மற்றும் 308.98 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

295 மீ. நீளம் மண் அணை, 50 மீ. நீளம் உபரி நீர்வழிந்தோடி, மதகு கட்டுதல் மற்றும் வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்கள் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

**(30) நிலையூர்க் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)**

மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள கம்பிக்குடி கண்மாய் தொடர் குளங்களுக்கு நீர் வழங்க ரூ. 8.94 கோடி மதிப்பீட்டில் பெருங்குடி மேல் ஓடையிலிருந்து நிலையூர்க் கால்வாய் நீட்டிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் மதுரை தெற்கு வட்டம், வலையப்பட்டி, தோதியப்பட்டி, சின்ன உலகாணி, வலையன்குளம், நெடுமதுரை, குடகோயில், வெள்ளாளகுளம், பெரிய ஆலங்குளம், சம்பாகுளம், கொம்பாடி, அய்யம்பட்டி, எலியார்பட்டி, மொச்சிபட்டி, பாறைபட்டி, புளிச்சங்குளம், ஆனைக்குளம், சங்குமடை, சல்லாங்குரினி, நல்லூர், வடக்குபீரிக்குளம், பாப்பாமேனாடை, இராமன்குளம், கலுவன்குளம், விதனூர், முத்தான்குளம், பனைக்குளம், எம்.ஆலங்குளம், நெடுங்குளம், சாத்தான்குளம், சகடதட்டி, சின்னஉடப்பு, குதிரைகுட்டி, கோடல்செங்குளம், கொசான்குண்டு, உடைக்குளம், கொசரபட்டி மற்றும் கொன்தாகுளம் கிராமங்களிலும், திருமங்கலம் வட்டம், சின்ன உலகாணி, விருசன்குளம், விடாதகுளம் மற்றும் கீலஉப்பலிகுண்டு கிராமங்களிலும், கரியபட்டி வட்டம், கடம்பன்குளம், ஆவியூர், பூலப்பட்டி, மாங்குளம், குராதி, உடைக்குளம், அரசகுளம், இராயர்பட்டி, கம்பிகுடி, பாப்பன்குளம், எஸ்.ஆளங்குளம், அன்மால்பெருக்கி, சத்திரம்பூலம்குளம், பண்ணைவளத்தான்பட்டி, வெற்றிலைமுறிச்சான்பட்டி மற்றும் அல்லாலப்பேரி கிராமங்களிலும், மானாமதுரை வட்டம், கள்சான்குளம், வலையன்குளம், சூரம்பட்டி, திரலியார், முக்குடி, இலந்தைகுளம், வதுான்குளம், கரன்கலகுடி, இராக்கன்குளம், செங்குளம், வடக்கூர், பரையன்குளம் மற்றும் உசலன்குளம் கிராமங்களிலுள்ள 2686.53 எக்டேர் நிலங்களுக்குப்





பாசன உறுதியும், மற்றும் 1126.03 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகுடன்கூடிய ரெகுலேட்டர், 7.850 கி.மீ. நீளம் பிரதானக் கால்வாய் வெட்டுதல், குறுக்குக் கட்டுமானங்கள் உட்பட 3.00 கி.மீ. நீளம் கிளை கால்வாய் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

55 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ரூ. 19.49 கோடிக்குத் திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. நபார்டு வங்கி கடனுதவி தா ஒப்புதல் அளித்துள்ளது.

**(31) பாலையாறு மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே உள்ளாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம் மற்றும் கிராமத்தின் அருகே பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே ரூ. 39.20 கோடி மதிப்பீட்டில் உள்ளாறு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின் மூலம் சிவகிரி வட்டம், இராயகிரி, சிவகிரி, தென்மலை, திருமேலபுரம், நாரணபுரம், கோட்டையார், சிந்தாமணிப்பேரி, கூடலூர் மற்றும் இராமநாதபுரம் கிராமங்களிலும், சங்கரன்கோயில் வட்டம், பனையூர், வயலி, மரதோனி, திருவேங்கடம், சத்திரபட்டி மற்றும் கரிசாத்தான் கிராமங்களிலும் 971.95 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் மற்றும் 595.18 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

மண் அணை, நீர்வழிந்தோடி, இரண்டு மதகுகள் கட்டுதல், இராசிங்க பெரியாறு மற்றும் குலசேகர பெரியாறு பகுதிகளாகப் பிரிக்கும் சுவர் கட்டுதல் மற்றும் கண்மாய்கள், அணைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

திட்ட வடிவமைப்புப் பணி முன்னேற்றத்தில் உள்ளது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ. 100.00 இலட்சம்.

[2003 ஏப்ரல் 7

**(32) மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்சோழங்குப்பம் கிராமம் அருகே மிருகண்டா நதியின் குறுக்கே ரூ. 16.79 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்சோழங்குப்பம், கங்காவரம், சேனேந்தல், நல்லான்பிள்ளைபெற்றான், கங்கமலதேவி, கேட்டவரம்பாளையம், சிறுவல்லூர், எர்ணாமங்கலம் மற்றும் சோளவாம் கிராமங்களிலுள்ள 778.05 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 81.10 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

670 மீ. நீளம் மண் அணை, கட்டுப்பாடில்லா உபரி நீர்வழிந்தோடி, ஒரு தலைப்பு மதகு மற்றும் ஒரு ஆற்று மதகு கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 80.82 எக்டேர் பட்டா நிலமும் மற்றும் 23.37 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த தேவைப்படுகிறது.

தனியார் நிலம் கையகப்படுத்தும் பணிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. திட்டப் பணிகள் நடப்பு ஆண்டில் துவங்கப்படும். நபார்டு வங்கி மூலம் கடனுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 2003-2004 நிதி ஒதுக்கீடு - ரூ.440.00 இலட்சம்.

**(33) கீழ்பவானி பாசன அமைப்பைப் புனரமைத்து நவினப்படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல் - மதிப்பீடு ரூ.55.00 கோடி**

கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலத்தினைச் சேர்க்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

1999-2000-ல் ரூ. 6.84 கோடி செலவில் கீழ்பவானி திட்டக் கால்வாய்களில் 313 கி.மீ. நீளத்திற்குத் தூர் வாரும் பணி செய்து முடிக்கப்பட்டது. 2000-2001-ல் ரூ.6.27 கோடி செலவில் கீழ்பவானி திட்டக் கால்வாய்களில் தூர் வாரும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 2001-2002 நிதியாண்டிற்கு ரூ. 1.02 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தமுள்ள 800 கி.மீ. நிலத்தில் 280 கி.மீ. நீளம் தூர் வாரும் பணி முடிவடைந்துள்ளது.



2003 ஏப்ரல் 7]

நடப்பு ஆண்டில் 4 மாதங்கள் கால்வாய்களில் நீர்வரத்து இல்லாத நிலையில் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். எஞ்சிய பணிகள் இரண்டு ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

**(34) கூடுதல் நிதியில் கும்பகோணம் நகர எல்லைக்குள் உள்ள நான்கு வாய்க்கால்களைப் புனரமைத்தல் - மதிப்பீடு ரூ. 1.91 கோடி**

3 கால்வாய்ப் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள கால்வாய்ப் பணிகளில் 50 விழுக்காடு பணி முடிவுற்றது.

**(35) உய்யக்கொண்டான் வாய்க்கால், குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு தூர் வாருதல் மற்றும் திருச்சி நகரத்தில் வெள்ளச் சேதத்தைத் தவிர்க்கக் கரைகளை வலுப்படுத்துதல் - மதிப்பீடு ரூ. 2.50 கோடி**

பணிகள் முடிவடைந்தன.

**(36) திருச்சியிலிருந்து கரூர் வரை காவிரியில் கருவேல மரங்கள் மற்றும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றுதல் - மதிப்பீடு ரூ. 10 இலட்சம்**

பணிகள் முடிவுற்றன.

**(37) மாசுபட்ட நொய்யல் ஒரத்துப்பாளையம் நீரைத் திருப்பிவிட புகளூர் கால்வாயில் நீர்க்குழி கட்டுதல் - மதிப்பீடு ரூ.35 இலட்சம்**

ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும், இது சம்பந்தமாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் உள்ளதால், பணி துவங்கப்பட இயலவில்லை.

**(38) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி அருகே நங்காஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டுப் புனரமைத்தல் - மதிப்பீடு ரூ.33 இலட்சம்**

65 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(39) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல் - மதிப்பீடு ரூ.50 இலட்சம்**

40 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.

[2003 ஏப்ரல் 7

**(40) சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள் - மதிப்பீடு ரூ.15 இலட்சம்**

பணி முடிவுற்றது.

**(41) மேலூரிலிருந்து மரவன்மங்கலம் குளம் வரை பெரியாறு பிரதானக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள் - மதிப்பீடு ரூ.1.00 கோடி**

62 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.

**(42) குழித்துறை ஆற்றின் விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டத்தைப் புனரமைத்தல் - மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் (நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது)**

பணி முடிவடைந்தது.

**(43) திருச்சி மாநகரத்தில் வெள்ளத் தடுப்புத் திட்டம்**

திருச்சிராப்பள்ளி மாநகரத்தில் 1999 நவம்பர் மாதத்தில் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட சேதம் மீண்டும் ஏற்படாமல் தவிர்க்க ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

குடமுருட்டியாறு காவிரி நதியில் சேரும் பகுதியில் உள்ள தடைகளை நீக்குதல், ஆரியாறு, கோரையாறு, கொடிங்கல் வடிகால் கால்வாய்களை அகலப்படுத்துதல் மற்றும் உய்யக்கொண்டான் கால்வாயின் கரைகளைப் பலப்படுத்துதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். மதிப்பீடு நடப்பு விலை விகிதத்துக்கு மாற்றப்பட்டு, கால்வாய் வடிவமைப்பு ஒப்புதல் பெறப்பட்ட பின், இத்திட்டப் பணிகள் ஹட்கோ நிதியுதவியுடன் 2003-2004-ல் மேற்கொள்ளப்படும்.

1999-2000 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட சிறு பாசனத் திட்டங்களின் முன்னேற்ற விவரம்:

**(1) ராஜகம்பிரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் நீர் வசதி பெற வைகை வெள்ள நீரைத் திருப்பி விடும் திட்டம் (சிவகங்கை மாவட்டம்)**

அரசு, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ள ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் நீர் வசதி பெற வைகை வெள்ள நீரைத் திருப்பி விடும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.



2003 ஏப்ரல் 7]

இத்திட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ள எம். கரிசல்குளம், சின்னக்கண்ணனூர், ராஜகம்பீரம், கிளங்காட்டூர், அன்னவாசல் மற்றும் அரிமண்டபம் ஆகிய கிராமங்கள் மற்றும் பரமக்குடி வட்டத்திலுள்ள வேலனேரி, கள்ளிகுடி மற்றும் பிடாரிசேரி கிராமங்களில் 1039.61 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 198.99 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 8.25 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

வைகையாற்றின் எல்.எஸ். 32.050 கி.மீட்டரில் தலைப்பு ரெகுலேட்டர் கட்டுதல், வலது பிரதானக் கால்வாய் எல்.எஸ். 32,050 மீ. முதல் 33,900 மீ. வரை அடித்தளம் மற்றும் பக்கங்களுக்கு அகவுறை செய்தல், எல்.எஸ். 33,885 மீட்டரில் ரெகுலேட்டர் கட்டுதல் மற்றும் வலது பிரதானக் கால்வாய் எல்.எஸ். 33,870 மீட்டரில் தலைப்பு மதகு கட்டுதல், வழங்கு வாய்க்கால் 2.20 கி.மீ. வெட்டுதல் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

15 குளங்களின் கரைகள் சீரமைக்கப்பட்டன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. 2003-04-ல் அனைத்துப் பணிகளும் முடிக்கப்படும்.

**(2) வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டி, பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு நீர் வசதி அளித்தல் (புதுக்கோட்டை மாவட்டம்)**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டம் ஆளபிறந்தான் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டி, பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு ரூ.141.00 இலட்சம் மதிப்பீட்டில் நீர் வசதி அளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம் பஞ்சாத்தி, அமான்ஜி, குண்டகவயல், கீழச்சேரி, சிவந்தன்காடு மற்றும் பெருனாவலூர் கிராமங்களில் 672.14 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் மற்றும் 35.11 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

அணை கட்டுதல், வழங்கு கால்வாய் வெட்டுதல், வெள்ளக்கரை அமைத்தல் மற்றும் கண்மாய்கள் மேம்பாடு செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

பணிகள் முடிவு பெற்றன. இத்திட்டத்திற்கு நபார்டு வங்கி கடன் உதவி செய்துள்ளது.

[2003 ஏப்ரல் 7

2001-2002 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட பணிகளின் முன்னேற்றம் பற்றிய விவரம் (பகுதி-2 திட்டங்கள்)

## (1) சிறு பாசனத் திட்டங்கள்

| வ. எண் | | திட்டத்தின் பெயர் | விவரம் |
|---|---|---|---|
| 1. | தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தாலுக்கா ராமகொண்டஹள்ளி அருகே மத்தளபள்ளம் குறுக்கே ஒரு கண்மாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.1415 இலட்சம் பயனடையும் பாசனப் பரப்பு முதல் பயிர் 700 ஏக்கர் இரண்டாவது பயிர் 400 ஏக்கர். | பாசன நில விவரப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆற்றின் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நபார்டுவங்கிக் கடனுதவி பெற கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. |
| 2. | கடலூர் மாவட்டம் சிதம்பரம் தாலுக்கா பெரும்பட்டு கிராமம் அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டுக் கட்டுதல் | மதிப்பீடு ரூ.162 இலட்சம் புதிய பாசனப்பரப்பு 400 ஏக்கர். | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. ஹட்கோ வங்கிக் கடனுதவி பெற கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. |
| 3. | தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுகா படத்தலார் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் மற்றும் கீழ் உள்ள 10 கண்மாய்களுக்கு நீர் கொண்டு செல்ல புதிய வழங்கு காலவாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.700 இலட்சம் ஆயக்கட்டு இடைவெளி 840.74 ஏக்கர் புதிய ஆயக்கட்டு 500 ஏக்கர் | பாசன நில விவரப் படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நபார்டு வங்கிக் கடனுதவி பெற கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. |
| 4. | கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலுகா, கடஞ்சேரி (புதுக்கடை) இறைவைப் பாசனத் திட்டம் | மதிப்பீடு ரூ.219 இலட்சம் புதிய ஆயக்கட்டு 572.50 ஏக்கர். | அனைத்துப் பணிகளையும் 2003-2004 ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. |



2003 ஏப்ரல் 7]

| | | | |
|---|---|---|---|
| 5. | தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலுகா தெப்பம்பட்டி கிராமம் வெள்ளப்பாறை ஓடையின் குறுக்கே புதிய கண்மாய் அமைத்தல். | மதிப்பீடு ரூ.119 இலட்சம் புதிய ஆயக்கட்டு 104.28 ஏக்கர். | 70 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |

## (2) சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| (1) | வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பாச்சூர் கிராமத்தைச் சார்ந்த பாயப்பநாயக்கன் பேட்டையில் குட்டை அமைத்தல். | மதிப்பீடு- ரூ.12.00 இலட்சம் பயனடையும் புதிய பாசனப் பரப்பு-19.88 ஏக்கர் கூடுதல் உற்பத்தி 17.36 மெடன் | நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பணிகள் துவங்கப்பட வேண்டும். |
| (2) | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், சேமபள்ளி கிராமத்தில் மலை ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல். | மதிப்பீடு-ரூ.13.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு-33.39 ஏக்கர். இருபோகம் கூடுதல் உற்பத்தி 30.88 மெடன் | பணிகள் தொடங்கப்பட்டு முடியும் நிலையில் உள்ளன |
| (3) | நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், உனன்தங்கல் கிராமத்தில் சர்வே எண் 123-ல் குட்டை அமைத்தல். | மதிப்பீடு- ரூ.25.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு-37.35 ஏக்கர். பாசன உறுதி-19.19 ஏக்கர். கூடுதல் உற்பத்தி 21.07 மெ. டன். | அரசாணை எண் 307 பொ.ப.து. நாள்: 9-8-2002-ன்படி திட்டம் கைவிடப்பட்டது. |
| (4) | தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம். பெரிய பனமுட்லு கிராமத்தில் புது ஏரியினைப் புனரமைத்தல். | மதிப்பீடு- ரூ.15.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு- 65.10 ஏக்கர் கூடுதல் உற்பத்தி 32.55 மெ. டன் | பணிகள் தொடங்கப்பட்டு 70 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |

| | | |
|---|---|---|
| (5) திருச்சி மாவட்டம். முசிறி வட்டம். பிள்ளாபாளையம் கிராமத்தில் சர்வே எண் 721-ல் புதிய அமைத்தல் | மதிப்பீடு- ரூ.23.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு-51.00 ஏக்கர். கூடுதல் உற்பத்தி-23.93 மெ.டன் | பணி முடிவுற்றது. குட்டை |
| (6) திருச்சி மாவட்டம். முசிறி வட்டத்தில் புலிவலம் கால்வாய் மூலம் புலிவலம் ஏரிக்கு நீர் வழங்க ஆகாச குடமுனியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீடு ரூ.32.00 இலட்சம் பாசன உறுதி 58.95 ஏக்கர் பழைய பாசனப் பரப்பு- 244.74 இடைவெளி கூடுதல் உற்பத்தி 342.42 மெடன். | பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| (7) கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம். மேல் முனையனூர் கிராமத்தில் வாரியின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல். | மதிப்பீடு-ரூ.14.00 இலட்சம். பழைய பாசனப்பரப்பு 103.00 ஏக்கர். கூடுதல் உற்பத்தி 44.00 மெ. டன. | ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது பணி விரைவில் துவங்கப்படவுள்ளது. |
| (8) புதுக்கோட்டை மாவட்டம். குளத்தூர் வட்டம். ராஜகிரி கிராமத்தில் நல்ல பங்கான் குளம் மற்றும் நான்கு ஏரிகளுக்கு நீர் வழங்க கோரையாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | மதிப்பீடு- ரூ.47.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு 33.11 ஏக்கர். பழைய பாசனப் பரப்பு 87.29+7.83 ஏக்கர் கூடுதல் உற்பத்தி 09.06 மெ.டன. | பணி முன்னேற்றத்தில உள்ளது. |
| (9) திண்டுக்கல் மாவட்டம். வேடசந்தூர் வட்டம். கக்கயபட்டி கிராமத்தில் புதிய குளம் அமைத்தல | மதிப்பீடு-ரூ.38.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு 37.00 ஏக்கர் கூடுதல் உற்பத்தி 43.42 மெ.டன் | 2003-2004-ல் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். |
| (10) திண்டுக்கல் மாவட்டம். ஒட்டன் சத்திரம் வட்டம். வாடிப்பாடி கிராமத்தில் சர்வே எண் 73, 74 மற்றும் 75-ல் புதிய குளம் அமைத்தல். | மதிப்பீடு-ரூ.14.00 இலட்சம். பயனடையும் புதிய பாசனப் பரப்பு- 37.50 ஏக்கர் (இருபோகம்) கூடுதல் உற்பத்தி- 35.82 மெ. டன். | 2003-2004-ல பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். |



**(2) கடலரிப்புத் தடுப்புத் திட்டம்**

| | | |
|---|---|---|
| 1. வடசென்னையில் கடல் ஓரப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் கட்டுதல் | மதிப்பீடு - ரூ.283.00 இலட்சம். | பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. |
| 2. திருவொற்றியூர் முதல் தாளங்குப்பம் வரை 2.83 கி.மீட்டரில் எஞ்சியுள்ள கரைப் பாதுகாப்பு. | மதிப்பீடு - ரூ.1057.39 இலட்சம். | பணி மேற்கொள்ளப்படும். |

**2003-2004 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும் புதிய திட்டங்கள்**

**பகுதி-II திட்டங்கள்**

| | |
|---|---|
| 1. காஞ்சிபுரம் மாவட்டம். செங்கல்பட்டு வட்டத்தில் உள்ள பாலாற்றிலிருந்து ஆத்தூர் வடபாதிக்கு நீர் வழங்கு கால்வாயின் மண் கரையை கற்கவராக மாற்றி அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை - ரூ.120.00 இலட்சம் பயன்கள் பாசன உறுதி 398.13 ஏக்கர் விடுபட்ட பரப்பு 293.65 ஏக்கர். |
| 2. சேலம் மாவட்டம். மேட்டூர் வட்டம். ஆனைமரத்துப் பட்டி கிராமத்தில் ச. எண் 18-ல் சாம்பார் பள்ளம் ஓடையின் குறுக்கே குட்டை அமைத்து பழுதான சொரக்காப்பட்டி ஏரியை குட்டையாக மாற்றி யமைத்து சாம்பார் பள்ளம் குட்டையின் உபரி நீரை சொரக் காப்பட்டி குட்டைக்கு வழங்க ஒரு இணைப்பு ஏற்படுத்தி பாசன வசதி செய்தல். | மதிப்பீட்டுத் தொகை - ரூ.125.00 இலட்சம் பயன்கள் புதிய பாசனப் பரப்பு 450.32 ஏக்கர். |
| 3. தேனி மாவட்டம். பெரியகுளம் வட்டம். ஜி. கல்லுப்பட்டிக்கு அருகில் பச்சிலைநாச்சியம்மன் ஓடையின் குறுக்கே (மான்துறை ஓடை) புதிய ஏரி அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை - ரூ.127.00 இலட்சம் பயனகள் புதிய பாசனப் பரப்பு 160.00 ஏக்கா. |

[2003 ஏப்ரல் 7

| | | |
|---|---|---|
| 1. தேனி மாவட்டம், உத்தமபாளையம், சின்ன ஓவலாபுரம் கிராமத்தில் பெரிய களத்து ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல் | மதிப்பீட்டுத் தொகை - ரூ.202.00 இலட்சம் பயன்கள் | |
| | புதிய பாசனப் பரப்பு 117.16 ஏக்கர் | |

சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| 1. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகாவில் பாப்பான்குளம் மற்றும் இதர குளங்களுக்கு நீர் வழங்க குண்டாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல். | மதிப்பீடு - | ரூ.70.00 இலட்சம் |
| | பயன்கள் | |
| | பாசன உறுதி | 86.64 ஏக்கர் |
| | விடுப்பட்ட பரப்பு | 98.34 ஏக்கர் |
| 2. தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தாலுகா வட்டுவனஹள்ளி கிராமத்தில் உள்ள கோட்டைமேடு அருகில் புங்கம் பள்ளத்தின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீட்டுத் தொகை | ரூ.74.00 இலட்சம் |
| | பயன்கள் | |
| | புதிய பாசனப் பரப்பு | 86.05 ஏக்கர் |
| 3. திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், பெரியகுளத்தூர் கிராமத்தில் புளியன் குளம் வழங்கு வாய்க்கால் மேம்படுத்துதல் மற்றும் புளியன் குளத்தில் இருந்து பெரியகுளத்தூர் ஏரிக்குப் புதிய வாய்க்கால் அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை | ரூ.36.00 இலட்சம் |
| | பயன்கள் | |
| | பாசன உறுதி | 102.47 ஏக்கர் |
| | விடுபட்ட பரப்பு | 83.58 ஏக்கர் |
| 4. தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம் பாலக்கோம்பை கிராமத்தில் உள்ள ஓடையின் குறுக்கே புதிய தடுப்பணை அமைத்தல். | மதிப்பீட்டுத் தொகை | ரூ.54.00 இலட்சம் |
| | பயன்கள் | |
| | பாசன உறுதி | 78.64 ஏக்கர் |
| | புதிய பாசனப் பரப்பு | 63.35 ஏக்கர் |

**கூடுதல் பாசன வசதி**

2003-2004 ஆம் ஆண்டில் நடுத்தர மற்றும் சிறு பாசனத் திட்டங்களால் (அணைக்கட்டுகள்/நீர்த்தேக்கங்கள்) சிறு பாசனக் குளங்கள் மூலம் 9,804 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 7]

**நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் (நீ.வ.ஆ.தொ.தி.)**

(i) தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்பு திட்டமானது ரூ.840.84 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு உலக வங்கியால் 1995 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. தமிழக அரசு இத்திட்டத்திற்கு 1995 செப்டம்பர் திங்களில் அடிப்படை விலையின்படி ரூ.807.49 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் 31-3-2002-ல் முடிவடையும் நிலையில் இருந்தது. ஆனால் மாநில அரசின் வேண்டுகோளின்படி உலக வங்கி 31-3-2003 வரை நீட்டிப்பு வழங்கியுள்ள நிலையில், இத்திட்டக் காலத்தை 31-3-2004 வரை மேலும் ஓர் ஆண்டு நீட்டித்து உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

(ii) இத்திட்டம் மாநிலம் தழுவிய பகுதி முதலீட்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டுப் பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சி மூலம் உற்பத்தியைப் பெருக்க உதவும். பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சியானது வேளாண் மக்களைப் பாசன மேலாண்மையில் ஈடுபடுத்துதல், நீர்வள மேம்பாடு, நீர் மேலாண்மை மற்றும் நீர்வளத் திட்டமிடல் போன்றவற்றில் நிறுவனம் மற்றும் தொழில்நுட்பத் திறனை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவும்.

(iii) இத்திட்டம் 40 இலட்சம் வேளாண் மக்களுக்கு நேரடிப் பயனளிக்கும். இத்திட்டம் 6 இலட்சம் எக்டேர் நிலத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும். (இது இம்மாநிலத்தின் பாசனப் பரப்பில் 50 விழுக்காடாகும்). பாசன ஆதாரங்களைப் புனரமைத்து நவீனப்படுத்துவதன் மூலமும் மேம்பட்ட பராமரிப்பு மற்றும் நீர் மேலாண்மை இவற்றில் வேளாண் மக்களை இணைப்பதன் மூலமும் பாசனம் ஒரு நீடித்த வளர்ச்சியிலான அடித்தளத்தில் அமையும்.

(iv) இத்திட்டம் காவிரி வடிநில பாசன வடிநிலப் பகுதியைத் தவிர்த்து 16 பாசனத் திட்டங்கள் மற்றும் 25 சிறிய பாசனத் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தலுக்கும் வழிகோலும். மேலும் செயலாக்கத்திலுள்ள 9 பாசனத் திட்டங்களான பொய்கையாறு நம்பியாறு, சோத்துப்பாறை மோர்தானா, ராஜாதோப்புகானாறு, கொடுமுடியாறு, வடக்குப்பச்சையாறு, அடவிநயினார்கோவில், கிருதமால் ஆகிய நிறைவேறி வரும் பாசனத் திட்டங்களை முடிப்பதற்கும் வழிகோலும்.

(v) அரசு இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து ஒப்புதல் வழங்கியதில், ரூ.1,062 கோடி மதிப்பீட்டில் 2,317 பணிகளுக்கு

[2003 ஏப்ரல் 7

(சிப்பங்கள் உட்பட) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு:

| வ.எண் | பணிகளின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட சிப்பங்கள் (Packages)-ன் எண்ணிக்கை | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | புனரமைப்புப் பணி | (சிப்பங்கள் உட்பட) | |
| | (அ) பாசன ஏற்பாடுகளின் மேம்பாடு மற்றும் புனரமைப்பு வேளாண் பெருமக்களுக்குப் பயிற்சி அளித்தல், திட்டங்களை முடித்தல் உட்பட | 343 | 744.53 |
| | (ஆ) குறைந்த அளவு புனரமைப்புப் பணிகள் | 946 | .. |
| 2. | விவசாயச் சங்கங்கள் அமைத்தல் மற்றும் ஒப்படைத்தல் | 15 | 4.00 |
| 3. | இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான தளவாடங்கள் | 3 | 18.00 |
| 4. | பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் | 14 | 13.00 |
| 5. | நீர் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி | 68 | 42.00 |
| 6. | கடற்புறச் சூழல் நிர்வாகம் | 12 | 10.00 |
| 7. | நில எடுப்பு மற்றும் பொருளாதாரப் புனர்வாழ்வு | 4 | 17.00 |
| 8. | நிறுவனங்களை வலுப்படுத்துதல், மற்றும் கட்டடங்கள், கணிப்பொறிகள், வாகனங்கள், அலுவலகத் தளவாடங்கள், தொலைபேசிகள் முதலியன மற்றும் பிணைப்பு ஆலோசனை போன்ற பொதுவானவை | 311 | 77.87 |
| 9. | **கூடுதல் திட்டப் பணிகள்** | | |
| | (அ) முறையில்லா பாசனக் கண்மாய்கள் புனரமைத்தல் | 620 | 100.00 |



2003 ஏப்ரல் 7]

| | | | |
|---|---|---|---|
| | (ஆ) அணைப் பாதுகாப்புத் திட்டப் பணிகளில் மீதமுள்ள பணிகள் (கோமுகி, சாத்தனூர், வெலிங்டன், வீடூர், சேத்தியாத்தோப்பு) | 5 | 20.00 |
| | (இ) இந்நிறுவனங்களை வலுப்படுத்துதல், மேலாண்மை மற்றும் தகவல் தொடர்புப் பணிகள், கணினிமயமாக்குதல் | 6 | 15.00 |
| | மொத்தம் | 2,347 | 1062.00 |

(vi) 2003-2004 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.16.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

2003-2004 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் பின்வரும் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன:

**(44) பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (கன்னியாகுமரி மாவட்டம்)**

இந்நீர்த்தேக்கம் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி கிராமத்தின் அருகே பொய்கையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் தோவாளை வட்டத்தில் செண்பகராமன்புதூர், ஆரல்வாய்மொழி கிராமங்களிலும், இராதாபுரம் வட்டத்தில் பழவூர் கிராமத்திலும் மொத்தமாக 202 எக்டேர் புதிய புன்செய் நிலம் பாசன வசதியும், 192 எக்டேர் நிலம் பாசன உறுதியும், 57 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும் பெறும். இதுதவிர, தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் 4 கிராமங்களுக்குக் குடிநீர்த் தேவைக்காக 20 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

மண் அணையின் ஒரு பகுதி மாநில நிதியுடன் செயலாக்கப்பட்டது. மண் அணை அமைப்பதில் நிலுவையிலுள்ள பணிகள், குறுக்குக் கட்டுமானப் பணிகள் உட்பட புதிய பிரதானக் கால்வாய், உபரி நீர்க் கால்வாய், இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகிய பணிகள், சாலை அமைத்தல், கைப்பிடிச் சுவர் கட்டுவது போன்ற பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.11.75 கோடி திருத்திய மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுவிட்டன.

நிதி ஒதுக்கீடு 2003-2004-ரூ.0.01 இலட்சம்.

[2003 ஏப்ரல் 7

**(45) நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டத்தில் நம்பியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால், இராதாபுரம் வட்டத்தில் கோட்டை கருங்குளம், உருமாங்குளம், இராமநாதபுரம், கரைசிட்டிப்புதூர், கஸ்தூரி ரங்காபுரம், குமாரபுரம், முத்து மோதுமொழி மற்றும் திசையன்விளை கிராமங்களில் மொத்தமாக 152 எக்டேர் புதிய புன்செய் நிலத்திற்குப் பாசன வசதியும், 18.5 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும், 369 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும் கிடைக்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைத்தல், வலதுபுறக் கால்வாய் மதகு கட்டுதல் மற்றும் வலதுபுறப் பிரதானக் கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகள் மாநில நிதியுடன் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகளில் 3 கூடுதல் தொகுப்புகள் தவிர, இதர பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.20.50 கோடி திருத்திய மதிப்பீட்டில் முடிக்கப்பட்டன. நிதி ஒதுக்கீடு 2003-2004-ரூ.0.01 இலட்சம்.

**(46) இராஜாத்தோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த குடியாத்தம் வட்டத்தில் செஞ்சி கிராமத்திற்கு அருகில் இராஜாத்தோப்புகானாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர், மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் செஞ்சி, லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் மற்றும் சேறூர் கிராமங்களில் மொத்தம் 202 எக்டேர் நிலப் பரப்பிற்குப் பாசன உறுதியும், 17 எக்டேர் விடுபட்ட நிலப் பரப்பிற்குப் பாசன வசதியும் ஏற்படும்.

இத்திட்டத்தில் மண் அணை உபரி நீர்ப்போக்கி, உபரி நீர்ப்பாதை, கால்வாய் மதகு 0 மீ. முதல் 5000 மீ. வரை குறுக்கு வடிகால், கட்டுமானப் பணி உட்பட கால்வாயில் கற்காரை பூசும் பணி மாநில நிதியில் மேற்கொள்ளவே முடிவெடுக்கப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 7]

நிலுவையிலுள்ள அணை கட்டும் பணி, லத்தேரி, விழுந்தக்கால், ஒய்யாத்தூர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் இணைப்புக் கால்வாய் மற்றும் கால்வாயில் 5,000 மீட்டர் நீளத்திற்கு கற்காரை பூசுதல், குறுக்கு வடிகால் பணிகள் ஆகியவை நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.2.56 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டப் பணிகள் அனைத்தும் 31-7-2000-ல் முடிவடைந்தன. நிதி ஒதுக்கீடு 2003-2004—ரூ.0.01 இலட்சம்.

**(47) கவுண்டின்யா நதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் மோர்தானா கிராமத்திற்கு அருகே கவுண்டின்யா நதியின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர் வட்டங்களில் 34 கிராமங்களில் 1152 எக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் பாசன வசதி அளிப்பதுடன், 2585 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 285 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் ஏற்படும்.

1990-91-ல் கல் அணையாகக் கட்ட திட்டமிடப்பட்டது. பிறகு 1-7-94-ல் திட்டம் நிறைவேற்றுதலின்கீழ் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, திட்டத்தில் புதிய வலது மற்றும் இடதுபுறக் கால்வாய் வெட்டும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. நீர்த்தேக்கப் பணிகள் முடிவடைந்தது.

எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. நிதி ஒதுக்கீடு 2003-2004 ரூ.17.01 இலட்சம்.

**(48) அடவிநயினார்கோவில் நீர்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்திலுள்ள மேக்கரை கிராமத்தில் அனுமநதி ஆற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் செங்கோட்டை மற்றும் தென்காசி வட்டங்களில் வடகரை கீழ்ப்பிடாகை, வடகரை மேல்பிடாகை, பன்மொழி, அச்சன் புதூர், நெடுவயல், கொடிக்குறிச்சி, நயினார் அகரம், இலங்காடு மற்றும் ஆயக்குடி கிராமங்களில் 1562 எக்டேர் நிலத்திற்கு

நிலையான பாசன வசதியும், 616 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும், 93 எக்டேர் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும். இத்திட்டத்துக்கு அரசின் நிர்வாக ஒப்புதல் மே 1990-ல் ரூ.47.09 கோடிக்கு வழங்கப்பட்டது.

பணிகள் அனைத்தும் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.64.29 கோடி திருத்திய மதிப்பீட்டில் முடிக்கப்பட்டன.

நிதி ஒதுக்கீடு 2003-2004—ரூ.0.01 இலட்சம்.

**(49) அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணைகட்டுதல் (நீ.ஆ.தொ.தி.) (விருதுநகர் மாவட்டம்)**

இத்திட்டம் விருதுநகர் மாவட்டம், அத்திக்குளம் கிராமத்தின் அருகிலுள்ள கிருதமால் ஆற்றின் குறுக்கே நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.3.17 கோடி மதிப்பீட்டில் அணை கட்டி இடது, வலதுபுறக் கால்வாய்கள் வெட்டும் திட்டமாகும்.

இத்திட்டம் திருச்சுழி வட்டத்தில் இருஞ்சிறை, உலக்குடி மற்றும் இதர ஆறு கண்மாய்கட்கு நீர் வழங்கி அதன்மூலம் அத்திக்குளம், மானூர், மறையூர், உலக்குடி, நரிக்குடி இருஞ்சிறை, ஆதித்தனேந்தல் மற்றும் வரிசையூர் கிராமங்களில் 913 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும் 323 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

அனைத்துப் பணிகளும் ரூ.2.53 கோடி மதிபபீட்டில் முடிவுற்றன.
நிதி ஒதுக்கீடு 2003-2004-ரூ.0.01 இலட்சம்.

**(50) வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)**

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டத்திலுள்ள மஞ்சுவிளை கிராமம் அருகே பச்சையாற்றின் குறுக்கே ஒரு நீர்தேக்கம் அமைப்பது ஆகும்.

இத்திட்டத்தினால் நாங்குனேரி வட்டத்தில் உள்ள களக்காடு, நாங்குனேரி, உள்ளாங்குளம், இல்லான்குளம், மற்றும் புறப்பாடி கிராமங்களில் 574 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசனமும், 464 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் மற்றும் 45 கண்மாய்களின்கீழ் உள்ள 769 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒருபோகமே





விளையும் 1508 எக்டேர் நிலங்களுக்கு இரண்டாவது போகமாக புன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்யவும் பாசன வசதி செய்யப்படும்.

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.45.38 கோடி திருத்திய மதிப்பீட்டில், திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டன.

நிதி ஒதுக்கீடு 2003-2004—ரூ.0.01 இலட்சம்.

**(51) கொடுமுடியாறு திட்டம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் திருக்குருங்குடி கிராமத்தில், கொடுமுடியாறும், கோம்பையாறும் கூடுமிடத்தில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் இராதாபுரம், நாங்குநேரி வட்டங்களில் உள்ள மயிலாடி, எருவாடி, நம்பித் தலைவன் பட்டியம், வடக்கு வள்ளியூர், தெற்கு வள்ளியூர், இராஜாக்கமங்கலம், அச்சம்பாடு, தலைக்குளம், ஆனைக்குளம், தெற்கு களிக்குளம், சண்முகரெங்காபுரம், கும்பிகுளம், ஆழ்ங்கிணறு, திருமாலபுரம் மற்றும் இராதாபுரம் கிராமங்களில் 791 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 779 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசனமும், 193 எக்டேர் ஒருபோக நிலங்களுக்கு இருபோகப் பாசன வசதியும் கிடைத்திட வழி செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள கால்வாய்களின் மேம்பாட்டுப் பணிகள் மாநில நிதியில் முடிக்கப்பட்டன. எஞ்சிய பணிகள், 4 கூடுதல் தொகுப்புகள் தவிர, இதர பணிகள், நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.30.50 கோடி திருத்திய மதிப்பீட்டில் முடிக்கப்பட்டன.

நிதி ஒதுக்கீடு 2003-2004—ரூ.0.01 இலட்சம்.

**(52) வராக நதி-சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (தேனி மாவட்டம்)**

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்திலுள்ள தென்கரை கிராமத்தின் அருகில் வராக நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் பெரியகுளம் வட்டத்தில் உள்ள தென்கரை மற்றும் தாமரைக்குளம் கிராமங்களில் 739 எக்டேர் நன்செய்

[2003 ஏப்ரல் 7

நிலத்திற்கு நிலையான பாசனமும், 27 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசனமும், 105 எக்டேர் புன்செய் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் மாநில நிதித் தொகுப்பின்கீழ் கல்லணை கட்டும் பணி ஒரு பகுதி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.34.72 கோடி திருத்திய மதிப்பீட்டில் முடிக்கப்பட்டன.

நிதி ஒதுக்கீடு 2003-2004—ரூ.0.01 இலட்சம்.

நீர்வள ஆதாரத் தொகுப்பு திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு முக்கியப் பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | சிப்பங்களின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப்பட்ட சிப்பங்களின் எண்ணிக்கை | முன்னேற்றத்தில் உள்ளவை | எடுத்துக் கொள்ளப்படாமல் உள்ளவை |
|---|---|---|---|---|---|---|
| | சென்னை மண்டலம் | | | | | |
| 1 | செய்யாறு அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 610.63 | 7 | 7 | .. | .. |
| 2 | பாலாறு அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு | 1883.45 | 18 | 18 | .. | .. |
| 3 | பொயனி அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு | 651.03 | 8 | 8 | .. | .. |
| 4 | திருக்கோவிலூர் அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணி | 938 | 7 | 7 | .. | .. |
| 5 | தொழுதூர் மற்றும் பிளாந்துறை அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணி | 480.87 | 9 | 9 | .. | .. |
| 6 | சிறு பணிகள் | 3576.46 | 14 | 14 | .. | .. |



2003 ஏப்ரல் 7]

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | சாத்தனூர் சிஸ்டம் புனரமைப்புப் பணிகள். | 1890 | 19 | 19 | .. | . |
| 8 | சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 1016.74 | 9 | 9 | .. | . |
| 9 | மோர்தானா நீர்த்தேக்கத் திட்டம் | 8229.57 | 11 | 7 | 4 | . |
| 10 | ராஜாத்தோப்பு கானாறு நீர்த்தேக்கத் திட்டம் | 131 | 3 | 3 | .. | .. |
| | பொள்ளாச்சி மண்டலம் | | | | | |
| | பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் | 15214 | 61 | 60 | 1 | .. |
| | மதுரை மண்டலம் | | | | | |
| 1 | சித்தார் அணைக்கட்டு ஏற்பாடு மேம்பாட்டுப் பணிகள் | 705 | 10 | 10 | .. | .. |
| 2 | மஞ்சளாறு நீர்த் தேக்கத் திட்டம் புனரமைப்புப் பணிகள் | 102 | 5 | 5 | .. | .. |
| 3 | வைகை பழைய ஆயக்கட்டு புனரமைப்புப் பணிகள் | 5867 | 21 | 21 | .. | .. |
| 4 | சிறிய பணிகள் | 875 | 15 | 12 | 3 | .. |
| 5 | கம்பம் பள்ளத்தாக்கு ஏற்பாடு | 568 | 11 | 11 | .. | .. |
| 6 | கோதையாறு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 3552 | 36 | 36 | .. | .. |
| 7 | மருதா நதி நீர்த்தேக்கத் திட்டப் புனரமைப்புப் பணிகள் | 106 | 3 | 3 | .. | .. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | தாமிரபரணி ஏறபாடு புதுப்பித்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் | 32.37 | 23 | 20 | 3 | .. |
| 9 | பெரியாறு வைகை ஏற்பாடு புனரமைப்பு | 1000 | 8 | 7 | 1 | .. |
| 10 | அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்ட மீதமுள்ள முடிக்க வேண்டிய பணிகள் | 6128.70 | 3 | 3 | | .. |
| 11 | கிருதமல் அணைக்கட்டு ஏற்பாடு கட்டுமானப் பணிகள் | 213.20 | 3 | 1 | | |
| 12 | கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் | 30.50 | 5 | 4 | 1 | .. |
| 13 | நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் மீதமுள்ள பணிகள் | 20.50 | 9 | 8 | 1 | |
| 14 | பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்ட முடிக்கப்பட வேண்டிய மீதமுள்ள பணிகள் | 117.5 | 9 | 9 | | .. |
| 15 | சோத்துப்பாறை நீர்த்தேக்க திட்ட மீதமுள்ள பணிகள் | 31.72 | 4 | 4 | | .. |
| 16 | வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் மீதமுள்ள பணிகள் | 45.38 | 9 | 9 | | .. |
| | | 72200.71 | 340 | 326 | 14 | .. |



**நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்—இரண்டாம் கட்டம்**

நம் மாநிலத்தின் குறைவான நீர் ஆதாரங்களின் ஒட்டுமொத்த செயல்திறனை அதிகரிக்கவும், கொள்ளளவை மேம்படுத்தவும் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் தொடர் திட்டமாக நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-II-ஐ ரூ.2,890.00 கோடி மதிப்பில் உலக வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தில் சேர்க்கப்படாத சில பணிகள், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா ஏரிகளின் புனரமைப்பு, புதிய மற்றும் நடைபெற்றுவரும் பாசனத் திட்டங்கள் ஆகியவை இந்தப் புதிய திட்டக் கருத்துருவில் இடம் பெற்றுள்ளன. இதில் சுற்றுப்புறச் சூழல் நிலைநிறுத்தும் பணிகளும் அடங்கியுள்ளன.

வடிநிலங்களின் பாசனதாரர்களின் தேவைகளை எல்லாம் ஒருங்கிணைத்து வடிநிலவாரியாக பெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனடிப்படையில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. வடிநிலங்களில் தண்ணீர் அளவை ஆய்வுகளின் அடிப்படையில் ஆதார ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டக் கருத்துருக்கள் மத்திய நீர்வள அமைச்சகத்தின் பரிந்துரையுடன் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இத்திட்டம் 2003—2010-ல் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் பாசன அமைப்புகளும், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பொறுப்புகளை ஒப்படைத்தலும்**

தமிழ்நாட்டில் 1995-96-ல் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் உலக வங்கி நிதி உதவியுடன், பிரதானக் கால்வாய் மற்றும் பிரிவு வாய்க்கால்களின் மேம்பாட்டுப் பணிகள் விவசாயிகளின் முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்தப்பட்டு விவசாயச் சங்கங்களிடம் மேலாண்மைப் பொறுப்புகளை ஒப்படைக்கும் பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் மொத்தப் பாசனப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு பாசனப் பரப்பு இந்தத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சுமார் 1,900 நீர் உபயோகிப்பாளர் சங்கம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் 1-10-2002 முதல் தகுந்த விதிகளுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் சுமார் 7 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பு உள்ளடக்கியதாகும். முன்னரே அமைக்கப்பட்ட நீர் உபயோகிப்பாளர் சங்கங்கள் தகுந்த முறையில் தொடர்ந்து நீடிப்பதற்கும், திறம்படச் செயல்படுவதற்கும் 2003-2004 ஆம் ஆண்டில் தேவைப்படும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும். மீதமுள்ள பாசனப் பரப்பிற்கும் இந்தத் திட்டத்தினை செயல்படுத்துவதற்குத் தகுந்த வழிவகைகளும் செயல்பாட்டுத் திட்டங்களும் உருவாக்கப்படும்.

2003-2004—நிதி ஒதுக்கீடு ரூ. 0.01 இலட்சம்

**பாசன மேலாண்மைப் பணிகளில் பங்கு கொள்ளுதல்**

தற்பொழுது 7.00 இலட்சம் ஹெக்டேர் நிலங்களில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் மற்றும் பாசனப் பரப்பு மேம்பாட்டுத் திட்டம் மூலம் மேலாண்மைப் பணிகளில் விவசாயிகள் பங்குகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. 10-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மீதமுள்ள 10.00 இலட்சம் ஹெக்டேர் நிலங்களில் இந்தப் பணிகள் விரிவு படுத்தப்படும்.

**தண்ணீர்த் தீர்வைக் குழு**

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் நீருக்கான வரியினை நில வரியிலிருந்து பிரித்துச் சீரமைப்புச் செய்து, பராமரிப்புப் பணிக்கான செலவினத்தை உபயோகிப்பாளரிடமிருந்து முழுவதும் பெறுவதற்கு ஏற்ற வகையில் உலக வங்கியின் வேண்டுகோளின்படி ஒரு குழு 1996-ல் அமைக்கப்பட்டது. இந்தக் குழு நில நிர்வாகத் துறை ஆணையரைத் தலைவராகவும், அரசின் மற்ற துறைச் செயலாளர்களை உறுப்பினர்களாகவும் மற்றும் விவசாயம் சார்ந்த பொருளாதாரத் துறை நிபுணரைக் கலந்தாலோசகராகவும் கொண்டு பரிசீலித்து வருகின்றது. இக்குழு இதுவரை பதினைந்து முறை கூடியுள்ளது. கடைசியாக 27-6-2002-ல் நடந்த கூட்டத்தில் நில வருவாயிலிருந்து நீர்க் கட்டணத்தைப் பிரிப்பதற்குப் பதிலாக, உள்ளூர் வரி, உள்ளூர் மேல் வரி ஆகியவற்றை உயர்த்தலாமென்று பரிந்துரைக்க முடிவு செய்யப்பட்டது.



இக்குழுவின் பரிந்துரைகள் 25-7-2002-ல் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப்பட்டன. அமைச்சரவைக் கூட்டம், முதல் மற்றும் 2 ஆம் வகுப்பு நன்செய்ப்பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.70 வீதமும் (எக்டேருக்கு ரூ. 175) புன்செய்ப் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.60 வீதமும் (எக்டேருக்கு ரூ. 150) கூடுதல் பாசன வரி விதிக்க ஒப்புதல் வழங்கியது. இதைச் செயல்படுத்தும்பொருட்டு, நவம்பர் 11, 2002-ல் அரசு சட்டத் திருத்தம் அறிவிப்புச் செய்துள்ளது. 01-07-2003 முதல் சட்டத் திருத்தத்தை அமல்படுத்தும்பொருட்டு, அரசு 18-03-2003 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் பாலாறு, தாமிரபரணி மற்றும் வைகை வடிநிலப் பகுதியில் உள்ள 620 மானாவாரி சிறு பாசன ஏரிகளை ரூ.104.29 கோடி செலவில் புனரமைக்கும் திட்டம்:

உலக வங்கியின் பத்தாவது மேற்பார்வை குழு 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியிலிருந்து 24 ஆம் தேதி வரை சென்னை மற்றும் கோயம்புத்தூர் மண்டலங்களில் நேரடி ஆய்வு செய்து, ரூபாய் மதிப்புக் குறைவினால் நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தில் கிடைத்த சேமிப்பிலிருந்து ரூ.379.6 கோடி மதிப்பில் கூடுதல் திட்டப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு மேற்கொண்டது.

மனித உழைப்பின் பயனைக் கருத்தில் கொண்டும், நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும், ஓரளவிற்கு குடிநீர்ப் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கும், உலக வங்கிக் குழு, மானாவாரி சிறு பாசன ஏரிகளை மேம்படுத்தும் திட்டத்தினைப் பரிசீலித்தது. இத்திட்டத்தின்கீழ் பாலாறு வடிநிலப் பகுதியில் உள்ள 63,002 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 462 மானாவாரி சிறு பாசன ஏரிகள் ரூ. 81.90 கோடி மதிப்பீட்டிலும், தாமிரபரணி வடிநிலப் பகுதியில் உள்ள 10,140 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 77 ஏரிகள் ரூ.13.18 கோடி மதிப்பீட்டிலும், வைகை வடிநிலப் பகுதியில் உள்ள 7,678 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 81 ஏரிகள் ரூ. 11.18 கோடி மதிப்பீட்டிலும் மொத்தம் 620 ஏரிகள் ரூ.104.29 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளன.

ரூ.104.29 கோடி மதிப்பீட்டில் 620 ஏரிகளின் புனரமைப்புப் பணிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஜனவரி 2002 வரை 381 பணிகள் முடிக்கப்பட்டன. அவைகளுடன் 620 ஏரிகளிலும் பாசன நீர் பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்பட்டு விரிந்த தொகுப்பிற்கான உடன்படிக்கைகளும் கையொப்பம் பெறப்பட்டன.

2003-2004 நிதி ஒதுக்கீடு ரூ.0.01 இலட்சம்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு வங்கி) நிதி உதவியின் மூலம் சிறு பாசன ஏரிகளை நவீனப்படுத்துதல் மற்றும் பாசன மேலாண்மைப் பணிகளுக்கான திட்டம் - ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி - V:

**நபார்டு ஊ.உ.வ.நி.V-முதல் கட்டம்**

தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் உள்ள 44 சிறு பாசன ஏரிகளை ரூ.11.06 கோடி மதிப்பீட்டில் 5,054 எக்டேர் நிலங்கள் பயன்பெற நபார்டு வங்கி நிதி உதவியின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் குறிக்கோளானது ஏரிகளை நவீனப்படுத்தி, தரத்தை உயர்த்தி, நீர்ப்பாசனத் திறனை உயர்த்துவதன் மூலம், வாய்க்கால்களுக்கு அகவுறை அமைத்தல், மதகுகளை மேம்பாடு செய்து, கலிங்குகளை மேம்படுத்துதல் மற்றும் உள் வாய்க்கால்களைச் சீரமைத்தல் போன்றவை ஆகும்.

அரசு ரூ.11.06 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, இப்பணியினை, நீர்வள ஆதார அமைப்பைச் சார்ந்த மண்டலங்கள் மூலம் செயல்படுத்த ஆணை வழங்கியது.

மேலும், இப்பணிகளை நீர் உபயோகிப்போர் சங்கங்களின் மூலம் அரசு சாரா அமைப்பின் பங்கேற்புடன் செயல்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன.

2003-2004-நிதி ஒதுக்கீடு ரூ. 116.11 இலட்சம்.

**ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மை: இராமநாதபுரம் மாவட்டம்**

அரசு ரூ.21.36 கோடி மதிப்பில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மைத் திட்டத்தில் முதல் கட்டப் பணிகளை ஹட்கோ கடனுதவியுடன் செயல்படுத்தத்





தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகளும், கால்வாய் முதலான நீர் ஆதாரங்களும் புனரமைத்து மேம்படுத்தப்படும்.

**கடலரிப்புப் பாதுகாப்புத் திட்டங்கள்**

தமிழ்நாட்டின் கடற்கரையின் நீளம் 960 கி.மீ. ஆகும். இதில் 900 கி.மீ. வங்காள விரிகுடாக் கரையோரமாகவும், 60 கி.மீ. அரபிக் கடலோரமாகவும் அமைந்துள்ளது. கிழக்குக் கடற்கரை தொடர்ந்து கடலரிப்பிற்கு உள்ளாகிறது. சமீப ஆண்டுகளில் கடலரிப்பின் தாக்கம் அச்சம் தரும் விதமாக உள்ளது. இப்பிரச்சினையைத் தீர்க்க அரசு பல பாதுகாப்பு முறைகளை அமல்படுத்தி வருகிறது.

வடசென்னையில் திருவொற்றியூர் முதல் தாளக்குப்பம் வரையுள்ள 2.38 கி.மீ. நீளமுள்ள எண்ணூர் நெடுஞ்சாலைக்கு கடலரிப்புப் பணிகளுக்காகவும், ஏற்கெனவே உள்ள கற்சுவர்களைச் சீரமைக்கவும், அரசு ரூ. 1,057.38 இலட்சம் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ஹட்கோ கடனுதவி ரூ. 828 இலட்சம், மாநில அரசு நிதி ரூ. 229.38 இலட்சமாகும்.

கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ. 57.69 கோடி மதிப்பீட்டுச் செலவில் கடற்கரைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதலளித்துள்ளது. இதில் ஹட்கோ ரூ.46.00 கோடி உதவியுள்ளது. இப்பணிகள் தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும் மைய நீர்வள ஆணையத்தின் வழிகாட்டுதல்படி தேசிய கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இதுவரையில் எந்தத் திட்டத்திலும் இடம் பெறாத 7 மாவட்டங்களில் உள்ள 13.824 கி.மீ. நீள கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்திற்கான திருத்திய கருத்துரு ரூ. 169.39 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு மைய நீர்வள ஆணையத்திடம் 5-9-2002 அன்று அளிக்கப்பட்டது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடி மக்களின் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை அளிப்பதற்காகவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு

தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், நாமக்கல், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளை பழங்குடியினர் பகுதியாகக் கண்டறிந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மலைப் பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசின் 100 சதவிகித நிதி உதவியுடன் காட்டோடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

**மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

1986-87 ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 21 வட்டங்களைத் தெரிந்தெடுத்து மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு அணைகள் கட்டுதல், புதிய குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் ரூ.28.00 இலட்சங்கள் மதிப்பில், 7 திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**தமிழ்நாட்டில் கண்மாய்கள், வரத்துக் கால்வாய்களைத் தூர் எடுத்துப் புனரமைத்தல்**

நமது மாநிலத்தில் கண்மாய்கள் முக்கியமாக நீர்வள ஆதாரத்தைப் பெருக்கவும், கிராமப்புற மக்களுக்குப் பயன்பெறும் வகையிலும் உள்ளது. முக்கியமாக நதிகள் இல்லாத பகுதியில் பல கண்மாய்கள் அமைந்துள்ளன. இந்த நீர் சேகரிப்புக் கண்மாய்கள் நமது முன்னோர்களால் அமைக்கப்பட்டு உள்ளூர் மக்களால் பல காலங்களாக மேலாண்மை செய்யப்பட்டு வந்துள்ளன.





கடந்த சில வருடங்களாக கண்மாய்களினால் பயன்பெறக்கூடிய விவசாயப் பரப்பு குறைந்து வருகிறது. இதன் முக்கியக் காரணம், படுகையில் வண்டல் மண் படிதல், வரத்துக் கால்வாய் மண் படிதல், ஆக்கிரமிப்புகள் கண்மாய்க் கரைகளிலும், உள் வாயிலிலும் மற்றும் நீர் நிரம்பும் பகுதிகள் மற்றும் வழங்கு கால்வாயிலும் இருத்தல், மடைகள், கலுங்கு மற்றும் கரைகளில் பழுது காணப்படுதல் ஆகும்.

இந்த மாநிலத்தில் கண்மாய்கள் அழிந்து வரும் நிலையிலும், பருவ மழை சரியாகப் பெய்யாததாலும் நடுத்தர மற்றும் சிறு விவசாயிகள் துன்பப்பட்டுக் கடனாளிகளாக மாறிய நிலையில் உள்ளனர்.

இந்த நிலையைப் போக்கவும், கண்மாய்களின் நீர்க் கொள்ளளவுத் திறனை அதிகரிக்கவும் இந்த அரசு, இருக்கின்ற நீர்வளத்தை நன்கு பயன்படுத்த அக்கறை கொண்டுள்ளது. இந்த நீர்க் கொள்ளளவுத் திறன் அதிகரிப்பினால் விவசாயத்திற்கும், குடிநீருக்கும் கிராம மக்களுக்குப் பெரும்பாலும் பயனுள்ளதாக அமையும்.

இதனைக் கருத்தில் கொண்டு பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள முறைப் பாசன ஏற்பாடு இல்லாத மழை நீர் சேகரிப்புக் கண்மாய்களின் நிலையைச் சரிசெய்து உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் ரூ.24.36 கோடி மதிப்பில் ஹட்கோ நிதியுதவி பெற்று நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல் மற்ற மாவட்டங்களில் உள்ள மழை நீர் சேகரிப்புக் கண்மாய்களின் நிலையினைக் கருத்தில் கொண்டு மற்ற நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்று புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**காவிரி டெல்டா பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல்**

காவிரி டெல்டா பாசனம் சுமார் 2000 ஆண்டுகள் பழமையானது. இதிலுள்ள அடிப்படை வசதிகள் நவீனப்படுத்தப்பட்டால்தான் இப்பாசனத் திட்டம் திறம்படச் செயல்படும். முதன்முதலில் 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள் புனரமைப்பு உள்ளிட்ட காவிரி டெல்டா பாசனத் திட்ட நவீன மயமாக்கும் பணிக்கு மாஸ்டர் பிளான் தயாரித்தது. இருப்பினும் மாநிலங்களுக்கிடையே பிரச்சினை உள்ளதால்

இத்திட்டத்திற்கு மைய அரசின் நீர்வள அமைச்சகத்தின் இசைவு கிடைக்கவில்லை. இருப்பினும் பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள், இவற்றின் அவசரத் தேவைகளுக்காக காவிரி டெல்டா பகுதிகளில் சிறு பணிகள் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இருப்பினும் காவிரி டெல்டா பாசனத் திட்டத்தின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியவில்லை.

எனவே காவிரி டெல்டா பாசனப் பகுதி நவீனமயமாக்கும் திட்டத்தை மூன்று பகுதிகளாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இதன் முதற்பகுதியாக 100 கோடி ரூபாய்க்கு ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு உலக வங்கி உதவிக்காக அனுப்பும்பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த முதற்பகுதியில் பின்வரும் பணிகள் உள்ளடங்கியுள்ளன:

1. காவிரி டெல்டா பாசனப் பகுதியில் 70,000 ஹெக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 10 ஆறுகளைப் புனரமைப்புச் செய்து நவீனமயமாக்குதல்.
2. 323 கால்வாய்களைப் புனரமைப்புச் செய்து நவீனமயமாக்குதல்.
3. 109 வடிகால்களை மேம்படுத்துதல்.
4. ரூ.23.02 கோடி மதிப்பில் வெள்ளத் தடுப்புப் பணிகளை நிறைவேற்றுதல்.
5. பிற பணிகளை நிறைவேற்றுதல்.

**காவிரி நதி நீர்த் தாவா**

காவிரி நீர்த் தாவா நடுவர் மன்றம் (CWDT) 1991-ல் அளித்த இடைக்காலத் தீர்ப்பை கர்நாடக அரசு இதுகாறும் செயற்படுத்தவில்லை. கர்நாடக மாநிலம் பருவ மழை ஆரம்பித்தவுடன் வரும் நீர் அனைத்தையும் தனது பெரிய 4 நீர்த்தேக்கங்களான கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹாரங்கி மற்றும் ஹேமாவதி ஆகியவற்றில் தேக்கி வைத்துக்கொள்வதுடன் அவர்களின் பாசனத் தேவைக்கான மொத்த நீரையும் விடுவித்துக்கொள்கிறது. உபரியாக நீர் ஏதேனும் வரும்போது மட்டும் கீழே, அதுவும் தாமதமாக விடுவது வழக்கமாகிவிட்டது. இதன் விளைவு, காவிரி டெல்டா





பகுதிகளில் ஜுன் மாதத்தில் ஆரம்பமாக வேண்டிய குறுவை சாகுபடி நேரத்தில் செய்ய இயலாமல் போவதுடன், வருடத்திற்கு வருடம் குறுவை சாகுபடி செய்யும் பரப்பளவு வெகுவாகக் குறைந்து வருகிறது.

நல்ல பருவ மழை பெய்யும் ஆண்டுகளில் சாதாரணமாக மேட்டூருக்கு நீர்வரத்து 205 டி.எம்.சி.யைவிடக் கூடுதலாகவே வந்துள்ளது. ஆனால் 1995 ஆம் ஆண்டைப் போல் பருவ மழை குறையும் ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நீர்ப்பாசனம் மிகவும் பாதிக்கப்படுவதுடன் உச்ச நீதிமன்றத்தின்முன் நமது கோரிக்கைகளுக்குப் பயன் ஏதும் இல்லை. அந்த ஆண்டில் 2 இலட்சம் ஏக்கர்களுக்கும் மேலாகப் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர் வீணானது.

1992-ல் உச்ச நீதிமன்றத்தில், இடைக்கால ஆணையை உறுதியுடன் செயல்படுத்தக் கோரி தமிழக அரசு தாக்கல் செய்த வழக்கில் (ஓ.எஸ்.1/92) நீதிமன்றத்தின் தூண்டுதல் காரணமாக மத்திய அரசு பிரதமரைத் தலைவராகவும், 4 காவிரி வடிநில மாநில முதல்வர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட காவிரி நதி நீர் ஆணையத்தை 1998-ல் அமைத்தது. மேலும், அலுவலர்களை உள்ளடக்கிய காவிரி கண்காணிப்புக் குழு, தன்னிச்சையாக முடிவு எடுக்கும் அதிகாரமின்றி காவிரி நதி நீர் ஆணையத்திற்கு உதவுவதற்காக அமைக்கப்பட்டது.

காவிரி நதி நீர் ஆணையம்கூட ஒரு சாதாரண அரசியல் குழு போல் மாறிவிட்டதையும், அதனால் கர்நாடக மாநிலத்தை நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவைத் தெளிவாக செயல்படுத்திடச் செய்ய இயலாது என்பதையும் தமிழக அரசு கண்டு கொண்டது. இதன் விளைவாக வருடா வருடம் காவிரியில் எவ்வளவு நீர் வரும் என்று முன்கூட்டி கணிக்க இயலாமலும், தாமதமாக சாகுபடிப் பணிகள் ஆரம்பித்தலுமாக தமிழ்நாடு தொடர்ந்து பாதிக்கப்பட நேர்கிறது. எனவே தமிழ்நாடு, 2001 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் (ஓ.எஸ்.எண் 3/2001) காவிரி நதி நீர் ஆணைய அமைப்பை நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவையும், அதைத் தொடர்ந்து இறுதி உத்தரவையும் வலிமையுடன் நிறைவேற்றத் தக்கதாக மாற்றி அமைக்கக் கோரி வழக்குத் தொடர்ந்தது.

2002-2003 ஆம் ஆண்டு தமிழ்நாட்டை மிகவும் பாதித்த சராசரிக்கும் குறைவான மழை பெய்த ஒரு ஆண்டாகும். முந்தைய பாசன ஆண்டான 2001-2002-ல் மேட்டூருக்கு வந்து சேர வேண்டிய நீரில் 43 டி.எம்.சி. அளவு குறைவாக நீர் தமிழகத்திற்கு விடப்பட்டது. இதனை கர்நாடகம் இறுதி வரை ஈடுசெய்யவில்லை. பருவம் தவறி பிப்ரவரி மாதம் 2002-ல் பெய்த மழையும் அறுவடைக்குத் தயாராக இருந்த பயிரை வீணாக்கியது. கடந்த பாசன ஆண்டின் இறுதியில் மேட்டூரில் நீர் இருப்பு 11 டி.எம்.சி. என்ற அளவில் மிகவும் குறைவாக இருந்த காரணத்தால் 2002-2003 ஆம் ஆண்டில் பாசனத்திற்கு மேட்டூர் அணையைத் திறக்க வேண்டிய நாளான ஜூன் மாதம் 12 ஆம் தேதி திறக்க இயலவில்லை.

இந்த ஆண்டில் தென் மேற்கு பருவ மழை 3-6-2002-ல் ஆரம்பமானாலும்கூடத் தொடர்ந்து தீவிரமடையாது ஜூலை மாதத்தில் ஏற்றம் பெற்று, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் விட்டு விட்டு மழை பெய்தது. மொத்தத்தில் தென் மேற்குப் பருவ மழை இந்த ஆண்டில் காவிரி வடிநிலத்தில் குறைவு என்பதுடன் கர்நாடக நீர்த்தேக்கங்களில் நீர்வரத்து வழக்கத்தைவிடக் குறைவு. வழக்கம்போல, கர்நாடக மாநிலம் தனது நீர்த்தேக்கங்களில் இருந்து இடைக்கால உத்தரவுப்படி மேட்டூரில் நீர்வரத்தை உறுதி செய்யவில்லை என்பதுடன் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகியவற்றிற்கு, தான் பெற்ற நீரின் ஒரு சிறு பகுதியைக்கூட அளிக்கவில்லை.

எனவே, தமிழ்நாடு உச்ச நீதிமன்றத்தை மறுபடியும் அணுகி ஜூலை 2002-ல் வழக்கு ஒன்றை (ஓ.எஸ்.எண் 3/2002) தாக்கல் செய்தது. இந்த வழக்கில் (ஓ.எஸ்.எண் 3/2002) தாக்கல் செய்த இடைக்கால மனுமீது உச்ச நீதிமன்றம் தனது 03-09-2002 நாளிட்ட உத்தரவில் கர்நாடக அரசு தனது நீர்த்தேக்கங்களில் இருந்து பற்றாக்குறை வருடங்களில், குறைவாகப் பெறும் நீரை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பதற்கான விதிமுறை வகுத்து நடைமுறைப்படுத்த காவிரி நதி நீர் ஆணையம் ஒரு முடிவை எடுக்கும் வரையில் 1.25 டி.எம்.சி. அளவு நீரை தமிழ்நாட்டில் மேட்டூர் நீர்த்தேக்கம் 4-9-2002 முதல் தினசரி பெறுவதை உறுதி செய்யுமாறு பணித்தது.

கர்நாடகாவில் இருந்து நீர் வாராத நிலையில் குறுவை சாகுபடியை இழந்து தஞ்சை வடிநில விவசாயிகளுக்கு உச்ச நீதிமன்றத்தின் இந்த ஆணை நம்பிக்கையை அளித்தது. தமிழ்நாடு அரசு மேட்டூர் நீர்த்தேக்கத்தை பாசனத்திற்காக 06-09-2002 அன்று திறந்தது.



08-09-2002 அன்று கூடிய காவிரி நதி நீர் ஆணையம், 1.25 டி.எம்.சி. நீர் நாளொன்றுக்கு மேட்டூரில் விட வேண்டும் என்று தமிழகம் வற்புறுத்தியதற்கு மாறாக வாராந்திர சராசரி அடிப்படையில் தினசரி விநாடிக்கு 9000 கன அடி வீதம் தமிழ்நாட்டிற்கு நீர் அளிக்க வேண்டும் (நாளொன்றுக்கு 0.8 டி.எம்.சி.) எனத் தீர்மானித்தது.

கர்நாடக மாநிலம் உச்ச நீதிமன்றத்தின் ஆணையையோ அல்லது காவிரி நதி நீர் ஆணையத்தின் வழிகாட்டுதலுக்கோ உடன்படவில்லை என்பதுடன் தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய நீரையும் விடவில்லை. 21-09-2002 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்து இப்பிரச்சினையில் அவரது தலையீட்டைக் கோரி மனு அளித்தனர். தொடர்ந்து மேட்டூருக்கு நீர்வரத்து மிகவும் குறைந்ததைத் தவிர வேறெதுவும் நடைபெறவில்லை.

நாளொன்றுக்கு 1.25 டி.எம்.சி. நீரை விடுவிக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றாமைக்கு 2002ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒன்றும், காவிரி நதி நீர் ஆணையத்தின் முடிவை செயல்படுத்தாமைக்கு 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றும் ஆக இரு நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை உச்ச நீதிமன்றத்தில் கர்நாடக முதலமைச்சருக்கு எதிராகத் தொடுக்க வேண்டிய கட்டாயம் தமிழகத்திற்கு ஏற்பட்டது. கர்நாடக மாநில முதல்வர் அவர்கள் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணையின்போது உச்ச நீதிமன்றத்தின் கடுமையான நிலை காரணமாக 27-10-2002 அன்று உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை மதித்து நடக்காததற்கு நிபந்தனையற்ற மன்னிப்பைக் கோரியதுடன் கர்நாடக அரசு அன்றைய நாள் காலை முதல் வினாடிக்கு 10,000 கன அடி அளவு நீரை விடுவிக்கத் தொடங்கி இருப்பதாக நீதிமன்றத்திற்கு உறுதியளித்தார். உச்ச நீதிமன்றம் கர்நாடக முதல்வரின் ஆணை உறுதிப் பத்திரத்தின்மேல் எவ்வித உத்தரவையும் பிறப்பிக்கவில்லை. ஆனால் வழக்கை, கர்நாடகத்தின் நடவடிக்கைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதைக் கண்காணிக்க ஏதுவாக நவம்பர் மாதம் முதல் தேதிக்குத் தள்ளி வைத்தது. நீர் விடுப்புக் குறைந்து கொண்டே வந்து அக்டோபர் 2002 இறுதியில் உச்ச நீதிமன்றத்தின் ஆணை மற்றும் காவிரி நதி நீர் ஆணையத்தின் வழிகாட்டுதல்படியான கணக்கெடுப்பின்படி மேட்டூர் நீர்த்தேக்கத்தின் நீர்வரத்தில் ஒட்டுமொத்தக் குறைவு என்பது 23.18 டி.எம்.சி. ஆனது.

1-11-2002 அன்று உச்ச நீதிமன்றம் மறுபடியும் கூடியபொழுது கர்நாடகம் 6 ஆம் தேதி நள்ளிரவு வரை மேட்டூரில் தினந்தோறும் வினாடிக்கு 9000 கன அடி வீதம் நீர் தொடர்ந்து விட வேண்டும் என்றும், அதன் பின்னர் நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவுப்படி செயல்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது. காவிரி நதி நீர் ஆணையம், செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2002 மாதங்களையும் சேர்த்து 31-10-2002 அன்று வரை குறைவுபட்டுள்ள 23.18 டி.எம்.சி. அளவு நீரைச் சரிசெய்வது உட்பட மேற்கொண்டு முடிவெடுக்கும்பொருட்டு கூட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டது.

2002 நவம்பர் மாதத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி 6 ஆம் தேதி முடிய மேட்டூரில் வந்து சேரவேண்டிய நீர்வரத்தும், அதன் பின்னர் நடுவர் மன்ற இடைக்கால உத்தரவுப்படி வந்து சேரவேண்டிய நீர்வரத்தும் பெறப்பட்டது என்றாலும் 31-10-2002 வரை குறைவுபட்ட 23.18 டி.எம்.சி. அளவு நீர் சரி செய்யப்படவில்லை.

டிசம்பர் 2002-ல் நடுவர் மன்ற இடைக்கால ஆணைப்படி பெறப்பட வேண்டிய 10.37 டி.எம்.சி. நீருக்குப் பதிலாக 6.1 டி.எம்.சி. மட்டுமே பெறப்பட்டது.

29-11-2002 அன்று நடைபெறுவதாகத் திட்டமிட்டிருந்த காவிரி நதி நீர் ஆணையக் கூட்டம் உறுப்பினர் குறைபாட்டால் (quorum) நடைபெறவில்லை. கர்நாடக மாநில முதல்வரால் கோரப்பட்ட நிபந்தனையின்படி மன்னிப்பு உச்ச நீதிமன்றத்தால் இன்னமும் ஏற்கப்பட வேண்டியுள்ளது.

உச்ச நீதிமன்றம், நீர்வரத்தில் ஏற்பட்ட குறைபாட்டைச் சரி செய்வது தொடர்பான தனது முந்தைய உத்தரவுப்படி காவிரி நதி நீர் ஆணையத்தின் இறுதி முடிவிற்குக் காத்திருக்கிறது.

காவிரி வடிநிலப் பகுதிகளில் பாசனத்தின் நிலை மிகவும் மோசமாக உள்ளது.

குறுவை சாகுபடி இழப்பால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சம்பாப் பயிரை மிகுந்த யோசனையுடன் ஆரம்பிக்க வேண்டி இருந்தது. மழைவரத்து காப்பாற்றும் என்ற நம்பிக்கையுடன் சிலர் நாற்றுவிட்டும், சிலர் நேரடியாக விதைத்தும் உள்ளனர். இன்னமும் கூட 11 இலட்சம் ஏக்கரில் ஏறக்குறைய 8 இலட்சம் ஏக்கரில் மட்டுமே



சம்பாப் பயிர் செய்ய முடிந்துள்ளது. மேட்டூரில் உள்ள குறைந்த நீரை வைத்துக்கொண்டு மிகவும் சிக்கனமாகவும், குறைந்த இடைவெளியில் மட்டும் நீரை விட்டும், நீரை விடாமல் நிறுத்தி வைத்தும் இதுவரை மேட்டூர் நீர் நிர்வாகத்தில் கேட்டிராத வழிகளில் எல்லாம் செயல்பட்டாலும்கூட, மேட்டூர் நீர் இருப்புக் குறைந்துவிட்டது. சம்பாப் பயிருக்குக் குறைந்தபட்சம் பிப்ரவரி மாதம் கடைசி வரையாவது தண்ணீர் தேவைப்படும். துரதிர்ஷ்டவசமாக வடகிழக்குப் பருவ மழையும் இந்த ஆண்டு மோசமாகப் பொய்த்துப் போனது.

கர்நாடகம் தனது பயிர்க் காலம் முடிந்தும் தற்போது தான் தேக்கி வைத்துள்ள நீரைப் பிரித்துக் கொடுக்க மறுக்கும் பிடிவாதப் போக்கு காரணமாக தமிழக அரசும், விவசாயிகளும் 8 இலட்சம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட சம்பாப் பயிரில் ஒரு சிறு பகுதி தவிர ஏனைய பெரும் பகுதிகளைக் காப்பாற்ற இயலாமல் போனது.

### கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டம்

1983ஆம் ஆண்டு ஏப்ரல் 18ஆம் நாள் தமிழக அரசு ஆந்திரப்பிரதேச அரசிடம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி சென்னைப் பெருநகர் குடிநீர் வசதிக்காக கிருஷ்ணா நதியிலிருந்து ஓராண்டில் 8 மாத காலங்களில் வழியில் ஏற்படும் இழப்பான 3 டி.எம்.சி. போக 12 டி.எம்.சி. நீர் ஆந்திர அரசால் தமிழ்நாடு-ஆந்திர எல்லையில் வழங்கப்படும். தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பணிகள் "கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம்" என்றும், ஆந்திர எல்லைக்குட்பட்ட பணிகள் "தெலுங்கு கங்கைத் திட்டம்" என்றும் அழைக்கப்படுகின்றன.

கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டத்தில் தமிழ்நாடு எல்லையில் செய்யப்படும் பணிகளுக்காக, அரசு முதன்முதலில் ஒப்பளித்த மதிப்பீட்டின் தொகை ரூ.46.44 கோடியாகும். இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டின் தொகை 1996-97 ஆம் ஆண்டுக்குரிய விலைப பட்டியலின்படி ரூ.196.04 கோடியாகும்.

தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகளின் மொத்த மதிப்பீடு 9/97 திட்ட அறிக்கையின்படி ரூ.2345.00 கோடியாகும். இதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.639.40 கோடியாகும். இதுவரை ஆந்திரப்பிரதேச அரசு ரூ.1820 கோடி செலவு செய்துள்ளது. தமிழக அரசு தன் பங்காக ரூ.512 கோடி ஆந்திரப்பிரதேச அரசுக்குக் கொடுத்துள்ளது.

[2003 ஏப்ரல் 7

கண்டலேறு அணையிலிருந்து 29-9-1996 அன்று முதன்முதலாக ஆந்திர மாநிலம் தண்ணீர் திறந்து விட்டது.

கண்டலேறு அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் அளவும் மற்றும் தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | கண்டலேறு அணையிலிருந்து கே.பி. கால்வாயில் திறந்து விடப்பட்ட நீரின் அளவு | தமிழ்நாட்டின் எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு | பெறப்பட்ட நீர் அளவின் விழுக்காடு |
|---|---|---|---|
| | டி.எம்.சி. | | |
| 1996-1997 | 0.610 | 0.076 | 12.5% |
| 1997-1998 | 4.339 | 2.290 | 52.80% |
| 1998-1999 | 4.077 | 2.810 | 69.00% |
| 1999-2000 | 3.990 | 1.830 | 45.86% |
| 2000-2001 | 17.790 | 6.688 | 37.59% |
| 2001-2002 | 1.108 | 0.400 | 36.10% |
| 2002-2003 இன்றுவரை | 9.461 | 3.262 | 34.48% |

5-2-2002-ல் நடைபெற்ற 38-வது கூட்டுக் குழுக் கூட்டத்தில் ஆந்திர அரசிடம் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு நீரினைத் திறந்துவிடக் கேட்டுக்கொள்ளப்பட்டது. கண்டலேறு அணை முதல் பூண்டி வரை உள்ள கால்வாயில் ஆந்திர எல்லை வரை 12 டி.எம்.சி. நீர் பெறும் வகையில் மேம்படுத்தும் பணிகளை செய்ய ஸ்ரீசத்தியசாய் அறக்கட்டளை முன்வந்துள்ளது.

அக்டோபர் 2001 மற்றும் நவம்பர் 2001-ல் தமிழ்நாட்டில் பெய்த பெருமழையினால் தமிழ்நாட்டின் எல்லையில் 0 மீட்டர் முதல் 4-வது கிலோ மீட்டர் வரை கால்வாயில் பழுது ஏற்பட்டுள்ளது. இதனைச் சரி செய்ய ரூ.71.88 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.



2003 ஏப்ரல் 7]

சென்னைக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்குத் தமிழக அரசால் ரூ.493 கோடிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

கொசஸ்தலையார், கூவம், அடையாறு மற்றும் பாலாற்றில் மழைக் காலங்களில், அதிகப்படியான தண்ணீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தவிர்க்க தரைமட்ட அணை நீர்த்தேக்கம், கசிவுநீர்க் குட்டை அமைத்து, வீணாகும் தண்ணீரைச் சேமித்து சென்னைக் குடிநீர் உபயோகத்திற்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம். மேற்கண்ட திட்டத்திற்குக் கருத்துரு தற்போது ரூ.340 கோடிக்குக் குறைத்துத் தயார் செய்யப்பட உள்ளது.

**புதிய வீராணம் திட்டம்**

புதிய வீராணம் திட்டம் ஆகஸ்டு 93 ஆம் ஆண்டு உலக வங்கித் திட்டமாக "இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டம்—புதிய வீராணம்" என்ற பெயரில் ரூ.464.00 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டது. 'இத்திட்டத்தின் மூலம் சென்னைக்கு ஒரு நாளைக்கு 190 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இவ்வொப்பளிப்பில் ரூ.60 கோடி கீழ்க்கண்ட நீர் ஆதார மேம்பாட்டு வேலைகளை உள்ளடக்கியது.

(1) கீழ்க் கொள்ளிடம் அணைக்கட்டிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் எடுத்துச் செல்லும் வடவாறு கால்வாயை மேம்படுத்துதல்.

(2) வீராணம் ஏரியில் உள்ள திட்டுகளை அகற்றுதல்; ஏரியின் உயரத்தை 2 அடி உயர்த்தி தற்போதைய கொள்ளளவான 935 மி.கன அடியிலிருந்து 1485 மி.கன அடியாக அதிகப்படுத்துதல்.

(3) ஏரியின் மேற்கரையினைப் பலப்படுத்துதல்.

திருத்திய நிர்வாக ஒப்பளிப்பில் வடவாறு (1996 ஏப்ரல்) கால்வாயிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுத்துச் செல்லும் மற்ற கால்வாய்களை நவீனப்படுத்தும் உறுப்பும் இணைக்கப்பட்டு ரூ.110.95 கோடி நீர்வள ஆதார மேம்பாட்டு வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் 56,034 ஏக்கர் (வடவாற்றின் 11,178 ஏக்கரும், வீராணம் ஏரியின் 44,856 ஏக்கரும் உள்ளடக்கியது) நிலத்திற்குத் தடையி பாசன வசதி செய்திட எதிர்நோக்கப்பட்டது.

[2003 ஏப்ரல் 7

அரசு சென்னைக் குடிநீர் வழங்கு திட்டத்தை 18 மாதங்களுக்குள் நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது. இதற்காக நீரை அனுப்பும் பணிகளை 2003 செப்டம்பருக்குள் முடிக்க, சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. திட்டச் செயலாக்கத்துக்கு அத்தியாவசியப் பணிகளுக்கு ரூ.35 கோடி கடனுதவியை வழங்க தமிழ்நாடு நகர நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டு நிறுவனம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தில் 25 தொகுப்புகள் உள்ளன. அவற்றின் மதிப்பீடுகளும் தற்போதைய நிலையும் கீழே தரப்பட்டுள்ளன:

| வ. எண். | பணிகளின் விவரம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் கோடியில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | வடவாறு கால்வாயினை மேம்படுத்துதல் | 6 | 26.39 | 3 தொகுப்புகளிலுள்ள வேலைகள் முடிவுற்றன. மீதமுள்ள 3 தொகுப்புகளிலுள்ள பணிகளில் 90 விழுக்காடு முடிவுற்றன. |
| 2. | வீராணம் ஏரியின் முழு நீர்த்தேக்க மட்டத்தினை 2 அடி உயர்த்தி அதன் முக்கியக் கரையினைப் பலப்படுத்துதல். | 4 | 10.68 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3. | தற்போதைய மேல்புறக் கரையினைப் பலப்படுத்துதல் மற்றும் புதிய மேற்புறக் கரை அமைத்தல். | 4 | 10.31 | வேலை முடிவுற்றது. |
| 4. | பாசன நீர் எடுத்துச் செல்லும் வடவாற்றின் 24 கால்வாய்களையும். வீராணம் ஏரியின் 34 கால்வாய்களையும் நவீனப்படுத்துதல். | 2 | 25.00 | வடவாற்றில் 7 வாய்க்கால்களும், வீராணம் ஏரியில் 5 வாய்க்கால்களும் புனரமைக்கும் பணி முன்னுரிமை அடிப்படையில் வேலைகள் துவங்கப்பட உள்ளது. |
| 5. | வீராணத்தின் முக்கியக் கரையின் மேல் தார்ச் சாலை அமைத்தல் | 2 | 1.50 | முக்கிய வேலைகள் முடிவுற்றபின் நிதி நிலைக்கேற்ப செயல்படுத்தப்படும். |
| 6. | கீழ் அணைக்கட்டு மதகுகளைச் சீர் செய்தல் | 1 | 1.08 | 17 சதவீத வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7. | வீராணத்தின் கீழ்மட்ட கலுங்கு, கோதாவரி வடிகால் மற்றும் உபரி நீர்ப்போக்கி மதகு மற்றும் யு.என்.எஸ்.எஸ். மதகுகளை மேம்படுத்துதல், வடவாற்றின் குறுக்கே புதிய மதகினை அமைத்தல் | 4 | 5.37 | கோதாவரி வடிகால் நீங்கலாக இதர பணிகள் முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு மேற்கொள்ளப்பட உள்ளன. |
| 8. | பணியாளர் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் மற்றும் புதிய திட்ட இல்லம் கட்டுதல் | 2 | 0.55 | பணியாளர் குடியிருப்புகள் பழுது பார்க்கும் பணிகள் முடிவுற்றன. |
| 9. | இதர இனங்கள், விலையேற்றம் உட்பட | | 30.07 | |
| | மொத்தம் | 25 | 110.95 | |



2003 ஏப்ரல் 7]

கட்டுமானப் பொருட்கள் மற்றும் வேலையாட்களின் கூலி போன்றவற்றில் விலை ஏற்றத்தால் திருத்திய மதிப்பீடு ரூ.150 கோடிக்குத் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.54.10 கோடி செலவிடப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ.1000.00 இலட்சம்.

**பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம்-ஒப்பந்தம் புதுப்பித்தல்**

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களும் ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், பாலாறு, ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும் ஆறுகளின் நீரை மின்சாரம்

தயாரிக்கவும், பாசனத்திற்கும், குடிநீர் விநியோகத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்த இவ்விரு அரசுகளுக்கு இடையே 9-11-1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஒரு ஒப்பந்தம் 29-5-1970-ல் கையெழுத்தானது, ஒப்பந்த விதிகளின்படி 9-11-1958 முதல் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அக்கால அனுபவத்தின் அடிப்படையில் இருசாரார் ஒப்புதலின் பேரில் ஒப்பந்தம் மறுபரிசீலனைக்குட்பட்டது. இந்த ஒப்பந்தம் 9-11-1988-ல் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இதன்படி இரு அரசுகளும் 21-9-1989 அன்று தங்களது ஆவணங்களைப் பரிமாற்றிக்கொண்டு அமைச்சர்கள் மட்டத்தில் பல முறை பேச்சுவார்த்தைகள் நடத்தின. பரம்பிக்குளம்-ஆழியாறு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து ஒரு விவரமான அறிக்கை தயாரிக்க இரு மாநில அரசு அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுமம் அமைக்கப்பட்டது. இக்குழுமம் திருவனந்தபுரம் மற்றும் அட்டகட்டி ஆகிய இடங்களில் கூடிப் பேசியபோதிலும் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை.

கேரள அரசு பரிசீலிக்க வேண்டியவை:-

(1) இடமலையாறு புனல் மின் திட்டத்ினைச் செயலாக்கியதன் மூலமாக, ஒப்புக்கொண்டபடி 2.5 டி.எம்.சி. தண்ணீரை ஆனைமலையாற்றிலிருந்து பரம்பிக்குளம்-ஆழியாறு பாசன அமைப்பிற்குத் திருப்பி விடுவதை ஏற்க வேண்டும்.

(2) ஒப்பந்தத்தின்படி இடமலையாறு மற்றும் இடுக்கி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் மேல் நீராறு தண்ணீர் முழுவதையும் எவ்விதத் தடையுமின்றி அக்டோபர் முதல் ஜனவரி முடிய தமிழகத்தில் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.

(3) மணக்கடவு மதகிற்கு சேமித்து பாசன உறுதி செய்திடும் வகையில் ஒரு சம நிலை நீர்த்தேக்கம் அமைக்க கேரளம் இசைவு அளிக்க வேண்டும்.

(4) மேல் நீராறு நீரை ஒரு குகைப் பாதை வழியாக நல்லாறுக்குக் கொண்டுவந்து அங்கு ஒரு புனல் மின் நிலையம் அமைத்து வெளிவரும் நீரைத் திருமூர்த்தி அணைக்குத் திருப்புவதற்கான புதிய திட்டத்திற்கு இசைவு அளிக்க வேண்டும்.



(5) கேரளத்தில் சித்தூர்புழா வடிநிலத்தின் தேவைக்கு தமிழகத்திற்குரிய 2.5 டி.எம்.சி.க்கு மேல் உள்ள நீரை ஆனைமலையாற்றிலிருந்தோ அல்லது தேக்கடியாறிலிருந்தோ திருப்பிக்கொள்ள வேண்டும்.

கடந்த 28-11-1996-ல் மாநில அமைச்சர்கள் மட்டத்தில் சென்னையில் இரு தரப்புப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கைகளின்மீது எந்த முடிவும் எடுக்கப்படாததால் மீண்டும் கூடிப் பேசத் தீர்மானிக்கப்பட்டது.

10-6-2002 அன்று சென்னையில் நடந்த இரு மாநில அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது. 1970 ஆம் வருடத்தில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தினை ஆய்வு செய்ய ஒவ்வொரு மாநிலத்திலிருந்து 3 பொறியாளர்கள் வீதம் முறையே நீர்வள ஆதாரத் திட்டத்தில் இருந்து 2 பொறியாளர்களும், மின் வாரியத்திலிருந்து 1 பொறியாளரும் தேர்ந்து எடுத்து ஒரு தொழில்நுட்பக் குழு அமைப்பது என்றும், அக்குழு பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தம் தொடர்பான பொருள்களைக் குறித்துப் பேசி முடிவெடுத்து அறிக்கை சமர்ப்பிக்கும். இவ்வறிக்கையின்மீது இரு மாநில அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறு தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு 11-12-2002 அன்று பரம்பிக்குளத்தில் முதல் கூட்டம் நடத்தி பல்வேறு பொருள்கள் குறித்து விவாதித்தது.

**பாண்டியாறு-புன்னம்புழா திட்டம்**

மாநிலங்களுக்கிடையே ஓடும் நதியான பாண்டியாறு-புன்னம்புழா தமிழ்நாட்டில் தோன்றி கேரள மாநிலத்தில் உள்ள சாளியாற்றில் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பாண்டியாறு-புன்னம்புழா, நீலகிரி மலையில் உள்ள உயர்ந்த சிகரங்களில் தோன்றி கூடலூர் நகரத்திற்கு 5 கி.மீ மேற்கே இணைகின்றன. இந்த இணைப்புக்குக் கீழ் இந்த ஆறு புன்னம்புழா என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறு கேரள மாநிலத்தில் நீலாம்பூர் அருகே சாளியாற்றுடன் கூடுகிறது. கடைசியாக இந்த ஆறு "பேபூர்" என்ற இடத்தில் அரபிக் கடலில் கலக்கிறது. இந்தத் திட்டத்திற்கான தளம் ஊட்டி-மைசூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் 1965 ஆம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளின் 171.38 ச.கி.மீ. (66.20 ச.மைல்) பரப்புடைய நீர்ப்பிடிப்புப் பரப்பிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி 14 டி.எம்.சி. தண்ணீரை 500.60 மீ. (1642 அடி) உயரத்திலிருந்து கிடைக்கும் நீர் விசையைப் பயன்படுத்தி முதல் கட்டமாக 100 மெ.வா. (2X50 மெ.வா.) மின்சாரம் தயாரிக்கவும், இறுதியாக 150 மெ.வா. மின்சாரம் தயாரிக்கவும் திட்டம் தீட்டப்பட்டது. இதனால் 109 மி.யூ. ஆண்டு சராசரி மின்சாரம் கிடைக்கும். திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1969-ல் ஒப்புதல் அளித்தது.

அதன்பிறகு, கோவை மாவட்ட விவசாயிகள் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை தமிழ்நாடு பயன்பெறும்வண்ணம் பவானி ஆற்றின் கிளையாறான மோயாற்றில் இணைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கேட்டுக்கொண்டதின்பேரில், பரிசீலனை செய்ததில் இந்தத் திட்டமும் செயல்படுத்த முடியும் என்று தெரிந்தது. தமிழ்நாடு குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீரையாவது தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட விரும்பியது.

கடந்த 28-11-1996-ல் சென்னையில் நடைபெற்ற கேரளம் மற்றும் தமிழ்நாடு பாசனத் துறை அமைச்சர்களின் பேச்சுவார்த்தையின்போது, பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தில் மின் உற்பத்திக்குப் பிறகு வெளியேறும் நீரில் கோயம்புத்தூர்-ஈரோடு மாவட்டங்களில் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தேவையான நீரை எதிர்நோக்கி, குறைந்தது 7 டி.எம்.சி.யாவது தமிழ்நாட்டுக்குத் திருப்ப அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. திட்டத்திற்கான அறிக்கையைப் பரிசீலித்த பிறகு அதன்மீது கருத்துத் தெரிவிப்பதாக கேரளா தெரிவித்தது.

பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை தமிழ்நாடு மின் வாரியம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்ற தயாரித்துள்ளது. முதல் கட்டத்தில் கிடைக்கும் 14 டி.எம்.சி. நீரில் 50 விழுக்காடான 7 டி.எம்.சி.யைப் பயன்படுத்தி 2X50 மெகாவாட் மின்சாரம் தயாரித்த பின் அந்த நீரை கேரளத்திற்குத் திருப்பி விடுவது. அப்போதே 7 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடும் பணி துவங்கப்படும். இரண்டாவது கட்டத்தில் திருப்பிவிடப்பட்ட 7 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டில் சிகூர் வடிநிலத்தில் 2X30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க



உத்தேசிக்கப்பட்டது. மின் உற்பத்திக்குப்பின் வெளியேறும் நீர் தமிழ்நாட்டில் மோயார் ஆற்றில் கலக்கும். இத்திட்டத்திற்கான செலவு 1998 ஆம் ஆண்டு விலைப்படி ரூ.904 கோடியாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் வாரியம் இதற்கான திட்ட அறிக்கையைத் தயார் செய்து, இத்திட்ட செயலாக்கத்திற்கு கேரள அரசின் ஒத்திசைவிற்காக 1998 செப்டம்பரில் அனுப்பியது. கேரள அரசு தனது இசைவினைத் தெரிவிக்காததோடு, கிழக்கு நோக்கி 7 டி.எம்.சி. தண்ணீரைத் திருப்பிவிடுவதற்கும் ஒத்துக்கொள்ளவில்லை. தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

தமிழக அரசு ஏப்ரல் 1998-ல் மேற்படி பணியினை தேசிய நீர் மின் சக்திக் கழகம் (என்.எச்.பி.சி.) மூலம் செய்யக் கேட்டுக் கொண்டுள்ளது. இந்தப் பொருள் பற்றிய இரு மாநில அரசுச் செயலர்கள் மீண்டும் கூடிப் பேசத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 10-06-2002 அன்று சென்னையில் நடந்த இரு மாநில அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது. கேரள அரசு அலுவலர்கள் இத்திட்டம் தொடர்பான திட்ட அறிக்கை தங்களால் பெறப்படவில்லை எனத் தெரிவித்தனர். எனவே தமிழ்நாடு மின் வாரிய திட்ட அறிக்கையினை கேரள மின் வாரியத்திற்கு அனுப்புவது எனவும், பின்பு இரு மாநில மின் வாரியத் தலைவர் அளவில் கூடி விவாதித்து முடிவு எடுக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி 10-07-2002 அன்று இரு மாநில மின் வாரியப் பொறியாளர்கள் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. மேல் நடவடைக்கை தொடர்கிறது.

**தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டம், மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-காவிரி-வைப்பாறு இணைப்புகள்**

தென்னிந்திய நதிகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு நதிகளை இணைக்கும் கருத்து மத்திய அரசு தயாரித்துள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இவ்விணைப்புப் பணிகளுக்கான ஆய்வு அறிக்கைகளை தேசிய நீர் மேம்பாட்டு முகமை தயாரித்து வருகின்றது.

[2003 ஏப்ரல் 7

இதுவரை மகாநதி-கோதாவரி, கோதாவரி-கிருஷ்ணா, கிருஷ்ணா-பெண்ணாறு, பெண்ணாறு-காவிரி இணைப்புகளுக்கான முதல் நிலை அறிக்கையினை தேசிய நீர் மேம்பாட்டு முகமை தயாரித்துள்ளது. இம்முகமை உபரி மற்றும் பற்றாக்குறைப் படுகைகளைத் தெரிந்தெடுத்து மகாநதி மற்றும் கோதாவரி நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய உபரி நீரை கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி மற்றும் வைகைப் படுகைகளுக்குத் திருப்பிவிடலாம் என்று தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின்படி மகாநதி மற்றும் கோதாவரி நதிகளின் உபரி நீர் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள பெண்ணாற்றுக்குத் திருப்பி விடப்படும். பெண்ணாற்றிலிருந்து காவிரிக்குத் திருப்பி விடப்படும் நீர் சுமார் 534 கி.மீ. நீளமுள்ள இணைப்புக் கால்வாய் வழியாக சோமசிலா அணைக்கட்டிலிருந்து சுமார் 9,455 மி.க.மீ. (334 டி.எம்.சி.) பெண்ணாற்றின் உபரி நீர் காவிரி நதியின் குறுக்கே அமைந்துள்ள கல்லணை வரை திருப்பப்படும். இணைப்புக் கால்வாய் ஆரம்பிக்கும் சோமசிலா அணை முதல் தமிழகத்தின் கல்லணை வரை இடைப்பட்ட ஆந்திரம் மற்றும் தமிழ்நாட்டுப் பகுதிகளின் பாசனம், குடிநீர் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும். மேலும் சுமார் 3,855 மி.க.மீ. (136.1 டி.எம்.சி.) அளவு நீர் கல்லணைப் பகுதியில் விடப்படும். அது காவிரி வடிநிலப் பகுதி மற்றும் காவிரிப் படுகைக்குத் தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் பாசனத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

காவிரி-வைகை-குண்டாறு இணைப்பானது இணைப்புத் திட்டத்தின் கடைசி அங்கமாகும். இந்த இணைப்பின் நோக்கம் காவிரியில் கிடைக்கப்பெறும் 3,855 மி.க.மீ. (136.1 டி.எம்.சி.) நீரில் 2,252 மி.க.மீ.(79.5 டி.எம்.சி.) அளவு நீரை காவிரியின் தெற்கில் குண்டாறு வரையில் உள்ள பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர் வசதிகளுக்காகத் திருப்புவதே ஆகும்.

தீபகற்ப நதிகளின் இணைப்புத் திட்டம் விரைவில் செயலாக்கப்பட வேண்டுமென்பதில் தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. தமிழக அரசு தீபகற்ப இணைப்புத் திட்டத்தினை இந்தியப் பிரதமர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைத்து விரைந்து செயல்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.



2003 ஏப்ரல் 7]

**மாநில நில நீர் மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்**

நில நீர்வளத்தினைப் பல்வேறு வகைகளில் பெருக்குகின்ற மாநிலங்களில் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கின்றது. பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் உள்ள மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்தின்கீழ், முறையான மற்றும் அறிவியல்பூர்வமான நில நீர் ஆய்வு மற்றும் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இம்மையம் விரிவான அறிவியல் ரீதியான நில நீர் ஆய்வினை மேற்கொண்டு தமிழ்நாட்டில் நில நீர்வளத்தினை தொடர்ந்து கணித்து வருகின்றது. இவ்வகையில் ஜூலை 1997 வரை சுமார் 63 விழுக்காடு நில நீர்வளம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்தினைக் குறிக்கோளாகக் கொண்டு பொதுப் பணித் துறையின்கீழ் இயங்கும் மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிபபு மையம், நிலத்தடி நீர்வளங்களை அவ்வப்போது மதிப்பிடவும், பயன்படுத்தவும் நிலத்தடி நீர் நிர்வாகம் மற்றும் அதன் பெருக்கத்திற்கான ஆய்வுப் பணிகளை முறையாகவும், அறிவியல் அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இத்துறையினால் நடத்தப்பட்டு வரும் பல வகைப்பட்ட பணிகள் உள்ளடக்கிய நில நீர் ஆய்வு பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(1) தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1746 கிணறுகளில் நீர் மட்டளவுகள் எடுக்கப்பட்டு நீர் மட்ட ஏற்ற இறக்கம் பற்றிய அறிக்கைகள் டீ.எச்வி. கன்சல்டன்ஸி உதவியுடன் தயாரித்தல், தமிழகத்தில் நில நீரின் நிலைமை மற்றும் நீரின் தன்மை அறிவதற்காகவும், தொழிற்சாலைக் கழிவு நீர் மற்றும் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் உரம், பூச்சி மருந்து ஆகியவற்றால் நில நீர் பாதிப்படைவதைக் கண்டறியவும், ஒட்டுமொத்த நில நீர்த் தன்மை கண்டறியும் அமைப்பான "டெல்மட் ஐட்ராலிக்ஸ் வோன் கன்சல்டன்ட்"-ன் கலந்தாலோசனையுடன் இறுதி செய்யப்பட்டுள்ளது. அடிப்படை ஆய்விற்கு வருடத்திற்கு ஒரு முறையும், நில நீர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3 மாதத்திற்கு ஒரு முறையும் நீர் மாதிரி சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.

(2) தமிழகத்தில் நில நீரின் நிலைமை மற்றும் அதன் தன்மைகளை (3,400 நீர் மாதிரிகள்) கண்காணித்தல்.

(3) தமிழகத்தில் மண் பரிமாணத்திற்கு ஏற்ப 16 இடங்களில் நிறுவப்பட்ட நீர்ப்பிரி முகடுகளில் இருந்து நீரியல் மற்றும் வானிலை தொடர்பான விவரங்களைத் தொகுத்தல்.

(4) மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள 400 மழையளவு நிலையங்களில் இருந்து காலந்தோறும் மழையளவு விவரங்களைச் சேகரித்து, மழை நீர்வரத்திற்கும் பூமியில் நீர் இழப்பிற்கும் உள்ள தொடர்பினைக் கண்டறிதல்.

(5) 1997-ல் நிலத்தடி நீர்வளம் கண்டறிவதற்கான அமைக்கப்பட்ட நிலத்தடி நீர் ஆதார மதிப்பீட்டுக் குழுவின் வரையறைகளின்படி தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் தீவிர ஆய்வு மேற்கொள்ளுதல்.

(6) வேளாண் மக்கள் அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு நில நீர் எடுப்பதற்கான அமைப்புகளைக் கட்டுமானம் செய்யத் தகுந்த ஆலோசனைகள் வழங்குதல்.

(7) சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்ற நில நீர் அனுமதிச் சான்று வழங்கல்.

(8) கடலோரப் பகுதிகளில் உள்ள நீர்ப் படிவங்களில் (920 கி.மீ. அளவிற்கு) கடல் நீர் ஊடுருவலைச் சிறப்பாய்வு மூலம் கண்காணித்தல்.

(9) நில நீர் ஆய்விற்கான ஆழ்துளைக் கிணறுகள் (50 எண்கள்) துளையிடுதல்.

(10) மேலும் செயற்கை முறையில் நில நீர்ப் பெருக்கத்திற்கான திட்டங்கள் மேற்கொள்வதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

இவைதவிர, விஞ்ஞானத் தொழில்நுட்ப உள்ளமைப்பு மற்றும் ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்கள், நிலத்தடி நீர்வள உபயோகிப்பு குறித்த பயிற்சி, செயல் திட்டங்கள் குறித்த விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.



2003-2004 ஆம் ஆண்டில் மேற்கண்ட பணிகளுக்காக ரூ.207.33 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**உலக வங்கி நிதியுதவியில் தமிழகத்தில் "நீரியல் திட்டம்"**

தமிழகம் உட்பட எட்டு மாநிலங்கள் மற்றும் ஐந்து இந்திய அரசு நிறுவனங்களில் உள்ள நீரியல் சுழற்சி சம்பந்தப்பட்ட மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் அளவு, தன்மை பற்றிய விவரங்களை அறிவியல்பூர்வமாக ஆய்ந்து மேம்படுத்த உலக வங்கியால் ரூ.51.149 கோடி மதிப்பீட்டில் நீரியல் திட்டம் 1996-ல் தொடங்கி 6 ஆண்டுத் திட்டமாக (31-3-2003 முடிய) இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் பெறப்பட்ட நீரியல் தகவல் அமைப்பு (HIS) மாபெரும் வெற்றியீட்டியுள்ளது.

இத்தகைய பயன்களை ஒருமித்துப் பயன்பெற நீரியல் திட்டம் II தொடங்கப்பட உள்ளது. ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மை, நில மற்றும் மேற்பரப்பு நீரை இணைந்து பயன்படுத்துதல், மழை நீர் சேகரிப்பு முதலிய முக்கியமான சில தலைப்புகளை உள்ளடக்கியது, இந்த நீரியல் திட்டம் II ஆகும்.

இத்திட்டம் மேற்பரப்பு நீர்ப் பகுதி, நில நீர்ப் பகுதி என இரண்டு பகுதிகளாகச் செயல்பட உள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.101 கோடி என தற்சமயம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய நீர்க் கொள்கையின் (2002) வழியில் இந்த நீரியல் திட்டப் பயனான ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மை எட்டப்பட்டு, தமிழகத்திற்குப் பயன் அளிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

**2003-2004 திட்டம்**

31-3-2003 வரைதான் இத்திட்டத்திற்கு உலக வங்கி நிதியைப் பயன்படுத்தலாம் எனவும், 31-3-2003-க்குப் பிறகு இத்திட்டத்தின் பயன்பாடுகள் தொடர்வதற்காக உரிய இயக்குதல் மற்றும் பாராமரிபபுச் செலவினங்களுக்கு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட வேண்டும் என உலக வங்கி தெரிவித்துள்ளது. இருப்பினும் மேலும் 9 மாத காலத்திற்கு திட்டத்தின் செயலாக்கத்தினை உலக வங்கி நீட்டிப்பு செய்துள்ளது. இந்தப் பணிகளைச் செயலாக்குவதற்கு ரூ.265.50 இலட்சம் 2003-04 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2003 ஏப்ரல் 7

**மைய அரசின் நிதி உதவியுடன் செயற்கையாக நிலத்தடியில் நீர் செலுத்தும் திட்டம்**

தமிழ்நாடு வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளதாலும், 95 விழுக்காடு மேற்பரப்பு நீரும், 68 விழுக்காடு நிலத்தடி நீரும் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், வேளாண்மையை மேம்படுத்தும்பொருட்டு, நிலத்தடி நீரின் பயன்பாட்டை அதிகரித்தல் முக்கியத்துவம் பெறுகிறது.

நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்குவது மிகவும் அவசியம். நிலத்தடி நீர் மட்டம் இயற்கையாகத் தேவைப்படும் அளவு விரைவாக உயராதபோது, செயற்கையாக நிலத்தடியில் நீரைச் செலுத்த வேண்டியுள்ளது.

இதன்பொருட்டு வெவ்வேறு தொழில்நுட்பங்களின் அடிப்படையில் பல்வேறு திட்டங்கள் கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்படுகின்றன:

1. ஆறுகள், ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல்.
2. புவியியல் தகவல் தொழில்நுட்பம், தொலைதூர அறிவியல் ஆகியவற்றின் அடிப்படையில் தக்க இடங்களைக் கண்டறிந்து கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல்.

மைய அரசு நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்காக கட்டுமானப் பணிகளுக்கு நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது. பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்தும்பொருட்டு பல்வேறு வகையான திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. திட்டச் செயலாக்கத்தைக் கண்காணிக்கும்பொருட்டு மாநில அளவிலான குழுக்களும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

நிலத்தடி நீர் செலுத்தும் கட்டுமானப் பணிகளுக்கான கருத்துரு மாவட்டத் தொழில்நுட்பக் குழுக்களால் தயாரிக்கப்பட்டு, மாநிலத் தொழில்நுட்பக் குழுவுக்கு ஒப்புதலுக்காகவும் நிதி அளிக்கும்பொருட்டும் அனுப்பப்படும்.

**மழை நீர் சேகரிப்பு**

தமிழக அரசு அடுத்த ஐந்தாண்டுகளில், அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் நல்ல குடிநீர் கிடைக்குமாறு செய்ய உறுதி கொண்டுள்ளது. முழுமையாக வறண்ட, பகுதி வறண்ட மற்றும்



2003 ஏப்ரல் 7]

கடின மண் பகுதிகளில் மழை நீர் சேகரிப்பு மட்டுமே, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ரீதியாக செயல்படுத்தக்கூடிய தீர்வாகும்.

மழை நீர் சேகரிப்பு என்பது, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை நீரைச் சேகரித்து, குடிநீர் மற்றும் பாசனத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதாகும்.

பொதுவாக மழை நீர் சேகரிப்பு, குளங்கள், பூசப்பட்ட குழிகள், சிறிய அணைகள் அல்லது ஆறுகளின் மணற்பாங்கான படுகைகளில் செய்யப்படும்.

மழை நீர் சேகரிப்பு, சேமிப்பு போன்றவை மழைக் காலங்களில் செய்யப்படும்.

சேகரிக்கப்படும் மழை நீரின் அளவு, மழை பெய்யும் எண்ணிக்கை மற்றும் மழையின் வேகம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும்.

மழை நீர் சேகரிப்பு கோடைக் காலங்களில் வீடுகளின் நீர்த் தேவையைச் சமாளிக்க உபயோகமாகும்.

மேலும் மழை நீர் சேமிப்பதால், நிலத்தடி நீர் சேமிப்பு பெருகவும், நிலத்தடி நீர் மட்டம் குறைவதைத் தடுக்கவும் ஏதுவாகிறது.

நிலத்தடி நீரின் தரம் உயர்வதோடு, மண் அரிப்பைத் தடுக்கவும் இது உதவுகிறது. மழை நீர் சேகரிப்பினை, கூரை மேல் சேகரிப்பு மற்றும் ஓடும் மழை நீர் சேகரிப்பு ஆகிய முறைகளில் செய்யலாம்.

தமிழக அரசு முதல் கட்டப் பணிகளில், மழை நீர் சேகரிப்பை முன்னுரிமை வழங்கி செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

**நில நீர் சட்டம்**

தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக, தொடர்ச்சியாக நிலத்தடி நீர் மிக அதிகமாக எடுக்கப்பட்டு வருவதால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்ததுடன், நீரின் தரம் குறைந்து பாசன மற்றும் குடிநீர்க் கிணறுகள் வறண்டுள்ளன. இந்த நிலையால் தங்கள் பாசனத்திற்கு நிலத்தடி நீரை மட்டுமே நம்பியுள்ள சிறு விவசாயிகள் மிகுந்த பாதிப்படைந்துள்ளனர்.

சிறு விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும்பொருட்டு, வரம்பு மீறி நிலத்தடி நீரை எடுப்பதைத் தடுத்து, நெறிப்படுத்தும் பொருட்டு, தமிழக அரசு "நில நீர் (வளர்ச்சி மற்றும் மேலாண்மை) சட்டம், 2003" என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

**அணைப் பாதுகாப்புத் திட்டம்** [2003 ஏப்ரல் 7

அணைப் பாதுகாப்புப் பணிகளை உலக வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்வதற்காக ரூ.60.00 கோடி மதிப்பீட்டிலான கருத்துருவானது மத்திய அரசின் நீர் ஆதார அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இக்கருத்துருவானது தற்போது மத்திய அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பத்து அணைகளின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது:

1. சாத்தனூர், 2. பொன்னியாறு, 3. சித்தமல்லி, 4. சோலையார், 5. பெருஞ்சாணி, 6. மணிமுத்தா நதி, 7. பெரியாறு, 8. பேச்சிப்பாறை, 9. மணிமுத்தாறு, 10. அமராவதி.

**சென்னைப் பெருநகர நீர் வழிகளை செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்:**

1. சென்னைப் பெருநகர நீர் வழிகளை ஹட்கோ நிதியுதவியுடன் செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்.

சென்னை நகரில் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மேட்மெக்டொனால்டு என்ற பன்னாட்டு ஆலோசனை நிறுவனம் வழங்கிய திட்டத்தின் அடிப்படையில் ஹட்கோ நிறுவனத்திடம் கடனுதவி பெற்று "புத்தாயிரமாண்டுத் திட்டமாக" தமிழக அரசால் 1998 ஆம் ஆண்டு ரூ.300 கோடிக்கு ஆணை வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமே, சென்னை நகரில் ஓடும் அடையாறு, கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரிநல்லா, காப்டன் காட்டன் கால்வாய் மற்றும் சென்னைப் பெருநகர எல்லைக்குள் இருக்கும் ஏனைய பெரிய வடிகால்களில் படிந்துள்ள மணற்படிமங்கள் மற்றும் சேற்றினை அகற்றி வடிகால்களைப் புனர் வடிவமைத்து வெள்ள நீர் விரைந்து கடலில் கலக்க வழிவகை செய்வதே ஆகும். மேலும் ஆற்றுக் கரைகளில் ஆக்கிரமிப்பு செய்துள்ள குடியிருப்போரை அகற்றி, அவர்களை வேறு இடத்திற்கு மறுகுடியமர்வு செய்யவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைச் செயல்படுத்த 1999 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் நான்கு சிப்பங்களாக ஆரம்பிக்கப்பட்டு, கூவம் தவிர 3 சிப்பங்கள் செயலாக்கத்தில் உள்ளன.



2003 ஏப்ரல் 7]

சிப்பம்-1: எண்ணூர் முதல் முட்டுக்காடு வரை உள்ள பக்கிங்காம் கால்வாயினைத் தூர் வாரி புனரமைத்தல்.

இச்சிப்பத்தில் சுமார் 85% பணிகள் முடிவடைந்து விட்டன. தெற்கு பக்கிங்காம் கால்வாயில் 4.6 கி.மீ. நீளத்திற்கு கால்வாயின் இருபுறமும் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, மீட்புப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. பணிகள் விரைவில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிப்பம்-2: அடையாறு ஆற்றில் படிந்துள்ள மணற்படிமங்கள் மற்றும் திட்டுக்களை அகற்றி வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், கொசஸ்தலையார் ஆற்றில் வெள்ளக் கரை அமைத்தல், வேளச்சேரி ஏரி வடிகாலில் சிறிய பாலங்கள் அமைத்தல்.

இச்சிப்பத்தில் சுமார் 40% பணிகள் முடிவுற்று விட்டன. வேளச்சேரி வடிகாலில் சிறிய பாலங்களும், கொசஸ்தலையார் ஆற்றில் வெள்ளக்கரை அமைக்கும் பணிகளும் முடிவுற்று விட்டன. அடையாறு ஆற்றில் நந்தம்பாக்கம் பாலம் மேற்புறம் முதல் ஆதனூர் ஏரி வரை பணிகள் முடிவுற்று விட்டன. தற்போது பணிகள் நந்தம்பாக்கம் பாலம் கீழ்ப்புறம் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைவில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிப்பம்-3: சென்னைப் பெருநகரின் எல்லைக்குள் உள்ள மற்ற பெரிய வடிகால்களில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளுதல்.

இச்சிப்பத்தின்கீழ் வடசென்னையில் உள்ள தணிகாசலம் நகர், மற்றும் அம்பத்தூர், மாதவரம், கொரட்டூர் ஆகிய ஏரிகளின் மிகை நீரினை வெளியேற்ற புதிய கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2. அடையாறு மற்றும் கூவம் ஆறுகள் கடலோடு கலக்கும் இடங்களில் ஏற்பட்டுள்ள மணல் மேடுகளை அகற்றி மீண்டும் மணல் மேடு ஏற்படாவண்ணம் செய்தல்.

சென்னையைச் சேர்ந்த இந்திய அரசு அமைப்பாகிய தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் கூவம் முகத்துவாரத்தில் மணல் மேடு ஏற்படாமல் தடுக்க கிராயின் கட்டும் திட்டத்தை அளித்தது. இதனடிப்படையில் ரூ.78 லட்சம் செலவில் 170 மீ. நீளத்திற்கு

கிராயின் கடலின் உள்ளே கட்டப்பட்டுள்ளது. இந்த கிராயின் உயரத்தை 1.5 மீ. உயர்த்தி கடல் தொழில்நுட்ப நிறுவனம் கருத்துரு அளித்துள்ளது.

கூவம் முகத்துவாரத்தில் கட்டப்பட்டுள்ள கிராயினின் செயலாக்கத்தைச் சோதித்தறிந்த பின்னரே அடையாறு முகத்துவாரத்தில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

2003-2004 நிதி ஒதுக்கீடு—ரூ.2300.00 இலட்சம்.

**பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்**

திருச்சி துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், இந்நாட்டிலுள்ள பதினொன்று பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும். இந்நிறுவனம் 1984-ல் பன்னாட்டு நிதி உதவியுடன் துவங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் விவசாயிகள், நீர்வளத் துறை, விவசாயப் பொறியியல் துறை மற்றும் விவசாயத் துறையைச் சார்ந்த களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது இந்நிறுவனம் தமிழ்நாடு அரசின் நிதி உதவி பெற்றுச் செயல்பட்டு வருகிறது.

**(1) பயிற்சிகள்**

உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதார அமைப்பினால் செயல்படுத்தப்படும் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சிகள் அளிப்பதற்கு இந்தப் பயிற்சி நிலையம் முனைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. உலக வங்கியின் ஆலோசனையின்படி தற்சமயம் இந்நிலையம் நீர்வள ஆதார நிறுவன அலுவலர்கள், களப்பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கான பாசன மேலாண்மை குறித்து சிறப்புப் பயிற்சிகளை அளித்து வருகின்றது.

நடப்பு ஆண்டில் 180 உள்நாட்டுப் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்தத் திட்டங்களினால் 2500 விவசாயப் பெருமக்களும், 2000 நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்களும் பயன்பெற உள்ளார்கள்.

**(2) நீர்ப்பாசன விவசாய முனைப்புத் திட்டம்**

வெப்பப் பிரதேசமான தமிழ்நாட்டில் குறைந்தது 20 முதல் 50 சதம் வரை பாசன நீர் ஆவியாகி மண்ணில் கரைந்து வீணாகிறது. இதனைத் தவிர்த்து பாசன நீர் கொண்டு செல்லும்போது உண்டாகும்



சேதத்தைத் தடுத்து, வேளாண்மைக்கு அறிவியல் ரீதியாக, பயிரின் பருவங்கள், மண்ணின் தன்மை ஆகியவைகளுக்குத் தேவையான நீரை மட்டும், பாய்ச்சி, பாசனப் பரப்பை அதிகரிப்பதும், உற்பத்தியைப் பெருக்குவதுமே பாசன மேலாண்மைத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் நீர்வள ஆதார அமைப்பு, வேளாண்மைப் பொறியியல் துறை, வேளாண்மைத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் ஆகியவை இணைந்து ரூ650 இலட்சம் செலவில் மூன்றாண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ளது. திருச்சி, பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், திட்டச் செயலாக்க முகவராகச் செயல்பட உள்ளது. இத்திட்டத்தில் 400 பண்ணை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகளில் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டு சிமெண்ட் வாய்க்கால்கள் கட்டி நீரளவு சாதனம் பொருத்தி, நீர் திருப்ப தொட்டிகள் வேளாண்மைப் பொறியியல் துறையினரால் அமைக்கப்பட உள்ளது.

**(3) நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள பயிற்சிகள்**

| வரிசை எண் | | பயிற்சி விவரம் | எண்ணிக்கை | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| I | 1. | தேசிய அளவிலான பயிற்சி | 180 | 150 |
| | 2. | நீர்ப்பாசன விவசாய முனைப்புத் திட்டம்—பயிற்சி—செயல் விளக்கம் | — | 200 |
| II | | பயிற்சி நிறுவன மேம்பாடு | — | 20 |
| III | | புத்தக வெளியீடுகள் | — | 15 |
| IV | | தள ஆராய்ச்சி | | |
| | | (அ) ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட ஆராய்ச்சி பணிகள் | 2 | 10 |
| | | (ஆ) மத்திய நீர்வளக் குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவு | 2 | 10 |
| | | மொத்தம் | 184 | 405 |

[2003 ஏப்ரல் 7

**நீர் ஆய்வு நிறுவனம்**

**(1) நீர்வள ஆதாரங்கள் கண்டறிதல் ஆய்வு**

சென்னை, தரமணியில் உள்ள நீர் ஆய்வு நிறுவனம் தமிழகத்தின் நீர்வளத்தினைத் திட்டமிடும் பணிக்கு மையமாக அமையும் நிறுவனம் ஆகும். மேலும் இந்நிறுவனம் தமிழக அரசின் நீர்வள ஆதார அமைப்பின் தொழில்நுட்பச் செயலகமாகவும் விளங்குகிறது. நீர்வளத்தை விஞ்ஞான முறையிலே திட்டமிடவும், மதிப்பிடவும், மேலாண்மைக்கு வழிவகுக்கவும் இந்நிறுவனம் செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ஆறு வடிநிலங்கள் 17 ஆற்றுப்படுகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. காவிரி ஆற்று வடிநிலம் தவிர மற்ற ஆற்றுப்படுகைகளுக்குப் பரந்த அளவிலே நீர்வளத் திட்ட அறிக்கைகள் தயாரிக்கபபட்டுள்ளன. இவ்வறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, மாநில நீர்வளத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. இத்திட்ட அறிக்கையுடன் தமிழ்நாட்டில் உள்ள ஆறுகளின் இணை அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. இவ்வறிக்கைகளில் தமிழ்நாட்டில் ஓடும் அனைத்து ஆற்றுப் படுகைகளிலும் கிடைக்கக்கூடிய நில மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றைக் கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், குடிநீர், விவசாயம், தொழிற்சாலைகள், கால்நடைகள், மின் உற்பத்தி போன்ற உபயோகத்திற்கு 1999 ஆம் ஆண்டில் நீர்த்தேவை மற்றும் 2004, 2019, 2025, 2044, 2050 ஆகிய ஆண்டுகளில் தேவைப்படும் நீரின் அளவு ஆகியவை கணக்கிடப்பட்டுள்ளன. இவ்வாறு கணிக்கப்பட்ட கிடைக்கின்ற நீர் மற்றும் நீர்த்தேவை ஆகியவை ஒப்புநோக்கப்பட்டு, நீர்க் குறை ஆற்றுப்படுகைகள் அல்லது நீர் மிகு ஆற்றுப்படுகைகள் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு ஆற்றுப்படுகையிலும் உள்ள முக்கிய நகரங்களில் நீர் உரிமையாளர்களை அழைத்து கூட்டங்கள் நடத்தி, அவர்களின் கருத்துகளையும், நீர்த்தேவைகளையும் கருத்தில் கொண்டு, இத்திட்ட அறிக்கையில் தேவையான மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. மேலும், அரசு சாரா நிறுவனங்களும், அரசுத் துறை உள்ளூர் அதிகாரிகளும் இக்கூட்டங்களில் கலந்துகொண்டு கூறிய கருத்துகளும் இவ்வறிக்கைகளில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்ற 16 கூட்டங்கள் மொத்தத்தில் வெவ்வேறு ஆற்றுப்படுகைகளில் நடத்தப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 7]

பாலாறு, வைப்பாறு, கோதையாறு மற்றும் வைகை வடிநிலங்களுக்கான ஆய்வுப் பணிகள் நிறைவுற்றன. இந்த வடிநிலங்களுக்கான ஒருங்கிணைந்த வடிநில மாதிரி உருவாக்கப்பட்டுள்ளது.

**(2) சுற்றுச்சூழல் பிரிவு**

நீர்வள ஆதாரங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை அளிக்கவும், மத்திய மற்றும் மாநில அமைப்புகளுடன் இணைப்பாகச் செயல்படவும், சுற்றுச்சூழல், பாதிப்புகளைக் கணிக்கவும், நீர் ஆய்வு நிறுவனத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தகவல் சேமிக்கவும், நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் ஒரு சுற்றுச்சூழல் பிரிவு செயல்பட்டு வருகிறது.

**சுற்றுச்சூழல் சார்நிலைக் குழு**

சுற்றுச்சூழல் பிரிவானது சுற்றுச்சூழல் சார்நிலைக் குழுக் கூட்டம் நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது. இதுவரை 8 சுற்றுச்சூழல் சார்நிலைக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. தமிழக அரசின் பொதுப் பணித் துறைச் செயலாளர் இக்குழுவின் தலைவராவார்.

இந்த சார்நிலைக் குழுவின்மூலம் சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட பல்வேறு ஆய்வறிக்கைகளும் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வண்ணம் திட்டங்களும் அரசுக்குப் பரிந்துரைக்கப்படுகின்றன.

சுற்றுச்சூழல் பாதிக்காவண்ணம் கட்டுமானப் பணிகளுக்கான விதித் தொகுப்பானது இந்தக் குழுவின்மூலம் ஒப்பளிக்கப்பட்டு, பொதுப் பணித் துறையின் அனைத்துத் தலைமைப் பொறியாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் செயல் திட்டம்**

சுற்றுச்சூழல் பிரிவானது தகால் ஆலோசனை நிறுவனம் தயார் செய்து கொடுத்த பாலாறு, கோதையாறு மற்றும் வைப்பாறு ஆற்றுப்படுகைகளுக்கான நுண்ணிய ஆய்வு அறிக்கைகளில் சுற்றுச்சூழல் சம்பந்தமான நோக்கினைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தது. தற்பொழுது வைகை மற்றும் தாமிரபரணி ஆற்றுப்படுகைக்கான நுண்ணிய ஆய்வறிக்கைகளைத் தயார் பண்ணும் பணியில் ஈடுபட்டு வருகிறது.

வைகை மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளுக்கான நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை வாரியத்திற்குத் தேவையான சுற்றுச்சூழல் விவரக் குறிப்பினை அளித்து உதவி வருகிறது.

உலக வங்கியின் வருகையின்போது சுற்றுச்சூழல் பிரிவானது முக்கியப் பங்காற்றியுள்ளது.

**(3) நீர்வள ஆராய்ச்சி நிதி**

நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீர்வளப் பிரிவிற்குத் தேவையான நடைமுறை சீர்திருத்தங்களுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுத்துவதற்காக நீர்வள ஆராய்ச்சி நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓர் ஆராய்ச்சி ஆலோசனைக் குழு ஆராய்ச்சிக்கான தலைப்பை தேர்ந்தெடுப்பதற்காகவும், ஆராய்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கவும் அமைக்கப்பட்டுள்ளது.

நீர் மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த தலைப்புகளில் 30 ஆராய்சசிப் பணிகள், ரூ.309.34 இலட்சத்துக்கு மேற்கொள்ளப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம், விவசாயப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், ஐ.ஐ.டி போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இப்பணிகள் வழங்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 2003-2004 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு—ரூ.0.01 இலட்சம்.

**(4) மழை நீர் சேமிப்பு மற்றும் நிலத்தடி நீர் மாசுபடாமல் பாதுகாத்தலுக்கான வல்லுனர் குழு**

நீர்வளத்தினைப் பெருக்கவும், வருங்கால நீர்த் தேவைக்கான நீரைச் சேமிக்கவும் தக்க திட்டங்கள் மேற்கொள்ள ஏற்ற ஆலோசனைகள் வழங்க வல்லுனர் குழு ஒன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இக்குழுவிற்கு, நீர் ஆய்வு நிலையத்தின் இயக்குநர், உறுப்பினர் - செயலாளராக உள்ளார். இக்குழு இதுவரை இருபத்தியொரு முறைகள் கூடி, கலந்தாய்ந்து, தேவையான விவரங்களை வெவ்வேறு துறைகளிடமிருந்தும் சேகரித்து வருகின்றது. சென்னை நகரத்தின் குடிநீர் விநியோகத்திற்குத் தேவையான நீர்வளத்தைப் பெருக்குவதற்கான பல திட்டங்களை இக்குழு அரசுக்கு சமர்ப்பித்துள்ளது. இக்குழு வரைவு இறுதி அறிக்கை தயார் செய்த பின் சுற்றறிக்கைக்காக அனுப்பப்பட்டது.



**(5) நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவை**

தமிழ்நாட்டின் கிடைத்தற்கரிய நீர்வளத்தை அனைத்துத் துறைகளில் நீர் உபயோகத்தைக் கணக்கில் கொண்டு பகிர்ந்தளிக்க நீர்வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவை ஒன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 5 உப அமைப்புகள் விவசாயம், நிலத்தடி நீர், குடிநீர், சுற்றுச்சூழல் முதலிய பிரிவுகளில் அமைக்கப்பட்டு, தேவையான கருத்துரைகள் இவ்வாய்வு அவைக்கு வழங்க ஏற்படுத்தப்பட்டுள்ளன.

23-11-1998-ல் அவை கூடியபோது 'பாசன மேலாண்மையில் விவசாயிகளின் பங்கு, தமிழ்நாட்டில் பாசன அமைப்புகளின் செயல்பாடு' மற்றும் 'நில நீர் முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்துவதன் அவசியம்' போன்றவை விவாதிக்கப்பட்டன. இவை இரண்டில் 'தமிழ்நாட்டு விவசாயிகளின் பாசன அமைப்பு மேலாண்மைச் சட்டம்' சட்டமாக்கப்பட்டு. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று தமிழக அரசு அரசிதழில் வெளியிடப்பட்டது.

**(6) நீர் ஆய்வு நிறுவனத்தினை மேம்படுத்துதல்**

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் நீர் ஆய்வு மையத்திற்குத் தேவையான கணிப்பொறிகள் மற்றும் அதனைச் சார்ந்த சாதனங்கள் வாங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநிலத் தொலையுணர்வு நோக்க மையம்**

தமிழ்நாட்டில் பொதுப் பணித் துறையின்கீழ், நீராய்வு நிறுவனத்தில் 1972 ஆம் ஆண்டு முதல், தொலையுணர்வுப் பிரிவு நிழற்பட நிலவியல் ஆய்வகமும் இயங்கி வருகிறது. மைய அரசின் விண்வெளி ஆராய்ச்சித் துறையைச் சார்ந்த விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், அகமதாபாத்துடனும், தேசிய தொலையுணர்வு நிறுவனம், ஹைதராபாத்துடனும் இணைந்து பொன்னையாற்றுப் படுகையிலும், வைகை, தாமிரபரணி படுகைகளிலும் நில நீர் ஆராய்ச்சியை பொதுப் பணித் துறையின் தொலையுணர்வு மையம் வெற்றிகரமாக முடித்தது. 1980 முதல் 1983 வரை வறட்சி மாவட்டங்களான வேலூர்,

திருவண்ணாமலை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சிவகங்கை, திண்டுக்கல் மாவட்டங்களில் ராட்சதக் குடிநீர்க் கிணறுகள் அமைப்பதற்கான சிறந்த தகுதியான இடங்கள் இம்மையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு கிணறுகள் அமைக்கப்பட்டு இன்றும் உபயோகத்தில் உள்ளன. ஆற்றுப் படுகை வாரியாக, மாவட்ட வாரியாக, வட்ட வாரியாக, தொலையுணர்வு நேரடி மற்றும் கணினி உதவியுடன் நிலவியல், நில மாறுபாடு, பெரும் பாறைப் பிளவு வரைபடங்களும் அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு, களத்திலும் நில நீர்த் துறையால் சரிபார்க்கப்பட்டு பலநோக்கு வரைபடங்கள் துல்லியமாகத் தயாரிக்கப்பட்டன. ஆலோசனையாளர்களுக்காக பாலாறு, வைப்பாறு, கோதையாறு தஹறால் ஆகிய ஆற்றுப் படுகைகளுக்காக, உட் படுகைப் பிரிவு, நிலவியல், நில மாறுபாடு, நில உபயோகம், பெரும் பாறைப் பிளவு, கோடை மற்றும் மழைக் காலங்களுக்கான நீர் மட்டம், நீர்த்தன்மை குறித்து வரைபடங்களும் விவரங்களும் தயாரிக்கப்பட்டன. பணிகளின் சிறப்புத் தன்மையைக் கருதி, தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்து தமிழ்நாடு மாநிலத் தொலையுணர்வு நோக்க மையம் என அறிவித்தது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக அமைக்கப்பட்ட பாலாறு மற்றும் தாமிரபாணி ஆற்றுப் படுகைகளுக்கான வாரியப் பணிகளுக்காக, பல்வேறு நோக்கங்களுக்காக நிலவியல், நில மாறுபாடு, நில வகை, நீர் மட்டம், உட்படுகை எல்லை, மழை அளவு, பெரும் பாறைப் பிளவு, நீர்த்தன்மை, நில நீரியல் விவரங்கள் வரைபடங்கள் ஆகிய பணிகளை இந்நோக்க மையம் மேற்கொண்டுள்ளது. மேலும் பாலாறு மற்றும் தாமிரபாணி ஆற்றுப் படுகைகளுக்கு எண் எழுச்சி மாதிரி (DEM) தயாரிக்கப்பட்டது. அகரமாற்று உட்படுகைக்கு, 1980 ஆம் ஆண்டில் எந்தளவு வனம், ஏரிகள், பாசனப் பகுதிகள் இருந்தன. 2001ஆம் ஆண்டில் எந்தளவு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு குறைந்துள்ளன என்பதை செயற்கைக்கோள் வண்ணப் புகைப்படங்கள்மூலம் கண்டறிந்து துல்லியமாகக் கணக்கிடப்பட்டன. பாலாற்றின் தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் மாசு அடைந்த விவசாய நிலங்கள், நில நீர்த்தன்மை குறித்து விரிவாக ஆராயப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. மாநிலத் திட்டக் 'குழுவின் மாநில நில உபயோக வாரியத்தின் நிதியினைப் பெற்று, பொன்னையாற்றின் உப நதியான துரிஞ்சலாற்றுப் படுகையில் தொலை உணர்வின் மூலமாக சிறப்பான ஆராய்ச்சிகள் நில நீரைக் கணக்கிடவும், பொருத்தமான இடங்களைத் தேர்வு செய்யவும், மழை நீர்



சேகரிப்பிற்கு உகந்த இடங்களைத் தேர்வு செய்யவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டன. திருவண்ணாமலை மாவட்டத்தின் நில நீர் வறண்ட ஒன்றியமான செங்கத்தில், நில நீர் வளம் கொண்ட தனிப் பகுதிகள் கண்டறியப்பட்டன. தரிசு நிலங்கள் கிராம வாரியாகக் கண்டறியப்பட்டு அவைகளை நன்நிலங்களாக மாற்றுவதற்கு சிறப்பு வழிவகைகள் கண்டறியப்பட்டன.

உலக வங்கி. நிபுணர்கள் ஆய்வுக்காக, பாலாறு, தாமிரபரணி, வைகை, கோதையாறு, பொன்னையாறு, நம்பியாறு, குண்டாறு நதிப் படுகைகளுக்காக 1980 மற்றும் 1999 ஆகிய வருடங்களுக்கான நில உபயோக வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன.

**ஆற்று வடிநில வாரியத்தின் தொழில்நுட்பச் செயலகம்**

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆகிய வடிநிலப் பகுதிகளின் மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியங்களுக்கான தொழில்நுட்பச் செயலகம், நீர் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநரைத் தலைவராகக் கொண்டு 2002 ஆகஸ்ட் முதல் நீர் ஆய்வு நிறுவனத்தில் செயல்பட்டு வருகிறது.

**ஆற்று வடிநில மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியம்**

ஒவ்வொரு ஆற்று வடிநிலத்தின் நீர் மற்றும் நில வளங்களை, வடிநிலப் பயனீட்டாளர்களை ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த திட்டமிடுதல், கண்காணித்தல், மேலாண்மை மற்றும் மேம்பாடு செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு முதல் கட்டமாக பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்று வடிநிலங்களுக்கு, ஆற்று வடிநில மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த வாரியத்தின் தலைவர் ஆவார். வளர்ச்சி ஆணையர், நிதி, நீர்வளம், வேளாண்மை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி, தொழில்கள், வனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறைகளின் செயலர்கள், தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரம், அரசால் நியமிக்கப்பட்ட இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வடிநிலப் பகுதியிலுள்ள மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், நீர்ப் பயனீட்டாளர்கள் சங்கங்களின் மூன்று பிரதிநிதிகள், வடிநிலப் பகுதியைச் சார்ந்த ஒரு முக்கியப் பிரதிநிதி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் வாரிய உறுப்பினர்களாவர்.

அரசு ஒவ்வொரு ஆற்று வடிநில மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியத்துக்கும் வாரியத்தின் சார்பில் முடிவுகள் எடுப்பதற்காக. வடிநில மேலாண்மைக் குழு அமைத்துள்ளது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் இதன் தலைவராவார். வளர்ச்சி ஆணையர், நிதி, நீர்வளம், வேளாண்மை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி, தொழில், வனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறைகளின் செயலர்கள், தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரம் அவர்களால் நியமிக்கப்பட்ட இரண்டு பாராளுமன்ற மற்றும் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட வடிநில ஊராட்சித் தலைவர்கள், நீர்ப் பயனீட்டாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த மூன்று பிரதிநிதிகள், வடிநிலப் பகுதியைச் சேர்ந்த் ஒரு முக்கியப் பிரதிநிதி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதி ஒருவர் ஆகியோர், வடிநில மேலாண்மைக் குழுவின் உறுப்பினர்களாவர்.

ஆற்று வடிநில மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியத்திற்கும், வடிநில மேலாண்மைக் குழுவிற்கும் உதவுவதற்காக பல பிரிவுகளைச் சார்ந்த 13 வல்லுநர்களைக் கொண்ட தொழில்நுட்பச் செயலகம் ஒன்றை அரசு நிறுவியுள்ளது. நீர்வள ஆதார அமைப்பைச் சார்ந்த நீர் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் (தலைமைப் பொறியாளர்) இதன் தலைவர் ஆவார். இந்தத் தொழில்நுட்பச் செயலகம் ஆகஸ்ட் 2002 முதல் செயல்பட்டு வருகிறது.

தொழில்நுட்பச் செயலகம், ஆற்று வடிநிலப் பகுதிகளைச் சார்ந்த சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைக் கண்டறிந்து கணக்கிடுவதற்காக கீழ்க்கண்ட மூன்று கூட்டங்களை / கருத்தரங்குகளை நடத்தியுள்ளது:—

1. 6-8-2002 அன்று சென்னை, தரமணியில் நீர் ஆய்வு நிறுவனத்தில் பாலாறு வடிநிலப் பகுதியின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகவியல் பிரச்சினைகள் பற்றிய விவாதக் கூட்டம்.

2. 18-10-2002 அன்று சென்னையில் பாலாறு வடிநிலப் பகுதியில் அணுகுமுறை சுற்றுச்சூழல் மதிப்பிடுதல் பற்றிய கலந்துரையாடல் கருத்தரங்கம்.

3. 23-11-2002 அன்று திருநெல்வேலியில் தாமிரபரணி ஆற்று வடிநிலப் பகுதியின் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைப் பற்றிய பயனீட்டாளர்களுடன் விவாதக் கூட்டம்.



பாலாறு வடிநில மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியத்தின் இரண்டாவது கூட்டம் 9-11-2002 அன்று திருவண்ணாமலையில் வாரியத்தின் தலைவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வாரியத்தின் உறுப்பினர்கள் வடிநிலப் பகுதியின் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துரைத்தார்கள்.

தாமிரபரணி வடிநில மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியத்தின் இரண்டாவது கூட்டம் 24-11-2002 அன்று திருநெல்வேலியில் வாரியத்தின் தலைவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வாரியத்தின் உறுப்பினர்கள் வடிநிலப் பகுதியின் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துரைத்தார்கள்.

**தமிழ்நாடு கொதிகல ஆய்வகம்**

இந்தியக் கொதிகலன்கள் சட்டம், 1923 மாநில அரசுகளால் இணைப பொறுப்பின்கீழ் அமலாக்கப்பட வேண்டியிருப்பதையொட்டி, மேற்படி சட்டத்தினைத் தமிழகத்தில் செயல்படுத்தும் பொறுப்பினை தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் முக்கியமான பொறுப்பாக மேற்கொண்டு இயங்கி வருகின்றது. கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுவதையும், பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கும் மற்றும் பொதுச் சொத்துகளுக்கும் இழப்பு நேராவண்ணம், இந்தியக் கொதிகலன்கள் சட்டம், 1923-ன்படி பாதுகாப்பு விதி நெறிமுறைகளைச் செயல்படுத்தும் முக்கியப் பொறுப்பும் இக்கொதிகல ஆய்வகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவிலேயே உயர் அழுத்தக் கொதிகலன்கள் உள்ளிட்ட கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்களுக்குத் தேவையான உயர் அழுத்த உதிரி பாகங்கள் தயாரிப்பில் தமிழகம் முதல் நிலையில் இருந்து வருகின்றது. தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் கொதிகலன்கள், கொதிகலன்களின் உதிரி பாகங்கள் மற்றும் எக்னாமைசர்கள், இந்தியக் கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950-ல் வரையறுத்துள்ளபடி நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதால் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம், தனது சிறப்பான செயல் திறன்பாட்டினால் மிகவும் உறுதுணையாக இருந்து வந்துகொண்டிருக்கிறது. இதன் பணி சட்ட ரீதி மற்றும் தொழில்நுட்ப வகையினைச் சார்ந்ததாகும்.

[2003 ஏப்ரல் 7

தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் பொதுப் பணித் துறையின் ஓர் அங்கமாக இயங்கி வருகிறது.

இந்தியக் கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950-ன்கீழ் இந்தியாவிலேயே கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பில் தொடர்ந்து தமிழகம் முதல் நிலை வகித்து வருவதால், தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் தனது சிறப்பான செயல் திறனால், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மேலும் உத்வேகம் பெற உதவி, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது.

**கட்டட அமைப்பு**

பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு, 16 வட்டங்களுடனும் (சிவில் பணிகளுக்கு 13 வட்டங்களும், மின்சாரப் பணிகளுக்கு 3 வட்டங்களும்), 52 கோட்டங்களுடனும் (சிவில் பணிகளுக்கு 45 கோட்டங்களும், மின்சார பணிகளுக்கு 6 கோட்டங்களும், புது டில்லியில் உள்ள ஒரு கோட்டத்தையும் சேர்த்து) 01-04-1996 முதல் தனி அமைப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

2. மாநில அரசின் பல்வேறு அரசுத் துறைகளுக்கு, அவைகளின் தேவைக்கேற்ப கட்டடங்களை வடிவமைத்தல், திட்டமிடுதல், நிலம் கையகப்படுத்துதல் ஆகியவைகளுடன் கட்டுமானப் பணிகளைச் செய்து கொடுக்கும் பொறுப்பினை பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு மேற்கொண்டுள்ளது. தவிர ஸ்தூபிகள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றைக் கட்டும் பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொள்கின்றது.

3. மேலும், மாநில மற்றும் மத்திய அரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள், வாரியங்கள், தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம், பல்கலைக்கழகம், வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் போன்றவற்றுக்கான கட்டுமானப் பணிகளையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

4. அனைத்து அரசுத் துறைக் கட்டடங்கள், ஸ்தூபிகள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பராமரிக்கும் பணிகளையும் இவ்வமைப்பு செயற்படுத்தி வருகின்றது.

5. ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், சென்னை மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள ஆளுநர் மாளிகைகள், தலைமைச் செயலகம், அரசினர் தோட்டம், சட்டமன்ற



2003 ஏப்ரல் 7]

உறுப்பினர்களுக்கான விடுதிகள் மற்றும் குடியிருப்புகள், நீதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் மிக, மிக முக்கிய நபர்களுக்கான மாளிகைகள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணியினையும் இவ்வமைப்பு செய்து வருகின்றது.

6. இவை தவிர, பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளும், ஊழல் தடுப்புத் துறை மற்றும் நீதித் துறை ஆகியவற்றால் அனுப்பப்படும் சொத்து மதிப்பீட்டுப் பணிகளும் இவ்வமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், திரையரங்குகளுக்குத் தர உறுதிச் சான்றிதழ்களும், அரசு அலுவலகங்களுக்கு எடுக்கப்படும் தனியார் கட்டடங்களுக்கு வாடகை நிர்ணயச் சான்றிதழ்களும் இவ்வமைப்பினால் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வமைப்பு மிக முக்கியமானவர்கள் மற்றும் மிக, மிக முக்கியமானவர்கள் வருகையின் போது செய்யப்பட வேண்டிய சாலை ஓரத் தடுப்பு மேடை அமைப்பு, ஒளி மற்றும் ஒலியமைப்புகளையும் செய்து வருகின்றது.

7. சென்னை, தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையம், கண்காணிப்புப் பொறியாளர் பொறுப்பின்கீழ் செயற்பொறியாளர் தலைமையில், கீழ்வரும் பணிகளைப் பொது மக்களுக்கு அளித்து வருகிறது:—

1. பொதுப் பணித் துறை கட்டட மையம் மூலம் பொறியாளர் மற்றும் கட்டடத் தொழில்வினைஞர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.
2. பொதுப் பணித் துறை கட்டட மையம் கட்டடப் பணிகள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கும் பணிகளையும் மேற்கொள்கிறது. கட்டடக் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான விலை குறைந்த, தரம் வாய்ந்த கட்டுமானப் பொருட்கள், கருவிகள் தயார் செய்து சந்தைக்குக் கொண்டு வருவது மற்றும் கட்டுமானப் பணிகளில் உபயோகிப்பது ஆகிய பணிகளிலும் ஈடுபடுகிறது.
3. கட்டுமானப் பொருள்கள் தரப் பரிசோதனை செய்தல், அடிப்படை ஆய்வுப் பணி மற்றும் பயனீட்டு ஆய்வுப் பணிகளையும் நடத்துகிறது.

[2003 ஏப்ரல் 7

1. பழுதடைந்த கட்டடங்களைக் கூர்ந்து ஆய்வு செய்தல், தேவையான புனரமைப்புப் பணி சிபாரிசு செய்தல மற்றும் அவற்றைப் பணி நிலைமைக்குக் கொண்டுவரத் தேவையான யுக்திகளைக் கையாளுதல் போன்ற சேவைகளையும் அளிக்கிறது.

**8. கட்டடக் கலைப் பிரிவு**

தலைமைப் பொறியாளர் நிலையிலான தலைமைக் கட்டடக் கலைஞரின் தலைமையில், கட்டட வரைகலைப் பிரிவும் தனியாக இயங்கி வருகின்றது. இப்பிரிவு, பொதுப் பணித் துறையால் கட்டப்படும் அனைத்து அரசுக் கட்டடங்களுக்கும் தேவையான வரைபடங்களைத் தயாரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகின்றது. மேலும், அனைத்துப் புதிய கட்டடங்களுக்கும் தேவையான முகப்புத் தோற்றம் மற்றும் வெட்டுத் தோற்றங்களைக் கொண்ட மூல வரைபடங்களையும் மற்றும் விரிவான வரைபடங்களையும் தயாரிக்கின்றது. மிகப் பெரிய கட்டுமானப் பணிகளான, புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு மாவட்டப் பெருந்திட்ட வளாகங்கள் கட்டுவது, தலைமையிடக் கட்டடங்கள் அமைப்பது மற்றும் நினைவிடங்கள், மணிமண்டபங்கள், பூங்காக்கள் போன்றவற்றை அமைப்பதற்கான விரிவான திட்ட வரைபடங்களையும் தயாரிக்கின்றது. மேலும், தொகுப்பு அங்கீகாரம் மூலம் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளான ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்களுக்கான வகுப்பறைகள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான மாதிரி வரைபடங்களையும் தயாரிக்கின்றது.

9. துறை வாரியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகளின் விவரம் பின்வருமாறு:-

**மருத்துவத் துறை:-**

**அ. மருத்துவமனைகள்:-**

1. சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் ரூ.500 இலட்சம் செலவில் கை சீரமைப்பு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டடம் கட்டும் பணி முடியும் தறுவாயில் உள்ளது.



2003 ஏப்ரல் 7]

2. சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவுக்கான புதிய கட்டடப் பணிகள் ரூ.650 இலட்சம் மதிப்பீட்டில் விரைவில் துவங்கப்பட உள்ளன.

3. சென்னை, அரசு பல் மருத்துவமனையில் ரூ.80 இலட்சம் செலவில் முதுகலைப் பட்டப்படிப்பு கட்டடத்தின் தரைத் தளத்தின் மேல், கூடுதலாக ஒரு தளத்தினை அமைப்பதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

4. சென்னை, அரசு பொது மருத்துவமனையில் பழமையான, பழுதடைந்த கட்டடங்களை இடித்து விட்டு அவ்விடத்தில் இரண்டு புதிய அடுக்குமாடிக் கட்டடங்கள் மற்றும் நவீன சமையல் கூடம் ரூ.10,447 இலட்சம் செலவில் கட்ட அங்கீகரிக்கப்பட்டு, 2 அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

5. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், ஆசாரிப்பள்ளத்தில் உள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.2173 இலட்சம் செலவில் 500 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடங்கள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு, முதற்கட்டமாக ஹட்கோ நிதி உதவியுடன் ரூ.500 இலட்சம் மதிப்பில், 300 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைக்கான கட்டடப் பணிகள் துவங்கப் படவுள்ளன.

6. வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள புதிய மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.500 இலட்சம் செலவில், 300 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையும் புதிய மருத்துவக் கல்லூரிக் கட்டடமும் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஹட்கோ நிதி உதவியுடன் பணிகள் துவங்கப்பட உள்ளன.

7. சென்னை, கீழ்ப்பாக்கத்திலுள்ள அரசு மனநலக் காப்பகத்தில் புதிய நிர்வாக அலுவலகம் கட்டுவதற்கு ரூ.105 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

8. 2000-2001 ஆம் ஆண்டில் கரூர் மாவட்டம் வேலாயுதம் பாளையம் அரசு மருத்துவமனையில், ரூ.126 இலட்சம் செலவில் வார்டுகள், பிணவறை மற்றும் கதிர்வீச்சுப் பிரிவுக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

9. 2001-2002 ஆம் ஆண்டில் 6 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், 6 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும், ரூ.132 இலட்சம் செலவில் ஜெனரேட்டர்கள் வைக்க நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில், 7 இடங்களில் கட்டடப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 5 இடங்களில் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

10. 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் மத்திய அரசின் நிதி உதவியுடன் ரூ.1600 இலட்சம் செலவில் 40 இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட வார்டுகளும், கதிர்வீச்சுப், பிரிவுக் கட்டடங்களும் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அவற்றில் 35 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள இடங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஆய்வில் உள்ளன.

11. 2002-2003 ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.680 இலட்சம் செலவில் 17 இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட வார்டுகளும், கதிர்வீச்சுப் பிரிவுக் கட்டடங்களும் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில் 16 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள ஒரு இடத்திற்கான ஒப்பந்தப்புள்ளி ஆய்வில் உள்ளன.

**ஆ. மருத்துவக் கல்லூரிகள்:-**

1. தமிழ்நாட்டிலுள்ள 5 மருத்துவக் கல்லூரிகளில் வரும் கல்வி ஆண்டில் மருத்துவப் பட்டப்படிப்பு படிப்பதற்கு 315 மாணவர்களைக் கூடுதலாக சேர்த்து படிக்க வகை செய்யும் பொருட்டு, (இதில் 150 மாணவர்கள் வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள்) புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.1882 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில், முதல் கட்டமாக ரூ.1001 இலட்சத்தில் ஹட்கோ நிதி உதவியுடன் கட்டடப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.





2. தேனி மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு ரூ.1200 இலட்சம் மதிப்பில் அரசு ஒப்புதல் பெறப்பட்டு ஹட்கோ நிதி உதவியுடன் கட்டடப் பணிகள் துவங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

**இ. ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்**

1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் 652 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட ரூ.4968 இலட்சங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, அவற்றில் 632 கட்டடங்களின் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் தமிழ்நாடு முழுவதும் 200 சுகாதார துணை நிலையங்கள் கட்டுவதற்காக ரூ.900 இலட்சம் செலவில் அனுமதி வழங்கப்பட்டு, அவற்றில் 199 சுகாதார துணை நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மீதமுள்ள ஒரு இடத்தில் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**(அ) துணை சுகாதார நிலையக் கட்டடங்கள்**

(1) 2001-2002 ஆம் ஆண்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன், ரூ.600 இலட்சம் செலவில் 100 துணை சுகாதார நிலையங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(2) 2002-2003 ஆம் ஆண்டில், ரூ.1920 இலட்சம் செலவில், 298 இடங்களில் துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**உள் துறை:-**

**(அ) நீதித் துறை:-**

(1) மதுரையில், உயர் நீதிமன்றக் கிளை அமைக்கும் பணிக்காக ரூ.5249 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

(2) பதினோராம் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி விழுப்புரத்தில், நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் பணிக்காக ரூ.961.92 இலட்சங்களுக்கு நிதி ஒப்புதல் செய்யப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகளுக்கான முன்தகுதி ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

(3) ரூ.185 இலட்சம் செலவில், தமிழ்நாடு சட்ட மையத்திற்கான கட்டடம் கட்டுவதற்கும், ரூ.100 இலட்சம் செலவில், நூலகக் கட்டடம் கட்டவும், சென்னையில் ரூ.450 இலட்சம் செலவில், மல்லிகை வளாகத்தில் நீதிபதிகளுக்கான பயிற்சி மையம் கட்டுவதற்கும் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**(ஆ) தீயணைப்புத் துறை:-**

34 இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் கட்டும் பணிக்காக 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.458.70 இலட்சத்திற்கும், 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.141.30 இலட்சத்திற்கும், நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 3 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 31 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**(இ) சிறைத் துறை:-**

18 இடங்களில் அமைந்துள்ள மத்திய சிறைகள் மற்றும் உப சிறைகளில் மருத்துவ வசதிகள் மற்றும் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, 2001-2002 ஆம் ஆண்டில், ரூ.221.05 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, அவற்றில் 34 பணிகள் முடிக்கப்பட்டும், 14 பணிகள் முன்னேற்றத்திலும் உள்ளன.

**வருவாய்த் துறை:-**

(1) சேலம் மாவட்டம் ஆத்தூரில் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்காக ரூ.35.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

(2) பதினோராவது நிதிக் குழுவின் நிதி உதவியுடன் பெரம்பலூர், கரூர், நாமக்கல், தேனி, திருவள்ளூர், திருவாரூர் மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் ரூ. 721374 இலட்சம் செலவில், வருவாய் மற்றும் பிற துறைக் கட்டிடங்கள் 2001-2004 ஆண்டுகளில் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில், 2001-2002 மற்றும் 2002-2003 ஆகிய நிதி ஆண்டுகளில், ரூ.57733 இலட்சம் செலவில் 17 இடங்களில் வருவாய் மற்றும் வருவாய் சாராத கட்டடங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டதில், ரூ.385325 இலட்சம் செலவில், 153 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பொதுத் துறை:-**

புது தில்லியில், தமிழ்நாடு இல்லத்திற்குக் கூடுதல் விருந்தினர் மாளிகை மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் கட்ட ரூ.2207 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



**கல்வித் துறை:-**

1. நபார்டு வங்கி நிதி உதவியுடன், 9 மாவட்டங்களில் அமைந்துள்ள 96 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், கழிவறைகள் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் ஆகிய பணிகளுக்கு ரூ.1836 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2. நபார்டு வங்கி நிதி உதவியுடன் இரண்டாம் கட்டமாக 19 மாவட்டங்களில் அமைந்துள்ள 250 அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில், வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், கழிப்பறைகள் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் ஆகிய பணிகளுக்காக, ரூ.8063.69 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

**வேளாண்மைத் துறை:**

1 மதுரையில் ரூ.1260 இலட்சம் செலவில், நெல் வணிக வளாகம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

2 திண்டுக்கல் மாவட்டத்தில், ரூ.353 இலட்சம் செலவில் வேளாண் விளைபொருள் அங்காடி அமைக்கும் பணி, வைப்புத் தொகை பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

3 சேலம் மாவட்டத்தில் ரூ.72.60 இலட்சம் செலவில், உயிரியியல் பூச்சிக்கொல்லி ஆய்வுக்கூடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

4 விழுப்புரம் மாவட்டத்தில், ரூ.66 இலட்சம் செலவில், உயிரியியல் பூச்சிக்கொல்லி ஆய்வுக்கூடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை:**

சென்னை, கிண்டியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் ரூ.278.30 இலட்சம் செலவில் கட்ட, நிதி ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

[2003 ஏப்ரல் 7

**அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம்:**

சென்னையில் அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்காக, புதிய வளாகம் கட்டுவதற்கு ரூ.1000 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி அலுவலகங்கள்:**

தொகுதி ஒன்றுக்கு ரூ.4.50 இலட்சம் செலவில், 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்களது தொகுதிகளில் அலுவலகக் கட்டடங்கள் அமைக்கும் பணிக்காக, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில், 191 தொகுதிகளுக்கான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை:**

(1) 2001-2002 ஆம் ஆண்டில், ஹட்கோ மற்றும் மத்திய அரசு நிதி உதவியுடன், மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் துறைக்கு, 114 விடுதிகள் கட்டும் பணிகளுக்கு அரசு ஒப்புதல் வழங்கியதில், 21 பணிகள் முடிக்கப்பட்டு, உரிய துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, மீதமுள்ள இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(2) மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு 358 இடங்களில் விடுதிகள் கட்டும் பணிக்காக, ரூ.275.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியதில், 204 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 154 இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**10. 2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்கள்**

2003-2004 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட உள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1. ஸ்ரீவைகுண்டத்தில் கட்டடப் (பராமரிப்பு) பிரிவு அலுவலகம் ரூ.4.00 இலட்சம் மதிப்பில் கட்டுதல்.
2. தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் கட்டடப் (பராமரிப்பு) பிரிவு அலுவலகம் ரூ.4.00 இலட்சம் மதிப்பில் கட்டுதல்.



2003 ஏப்ரல் 7]

3. சென்னை, சேப்பாக்கத்தில், பொதுப் பணித் துறையின் பிரதானக் கட்டடத்தின் முதல் தளத்தில் மேற்கில் அமைந்துள்ள தொழில்நுட்பப் பிரிவு கட்டடத்தில் உள்ள கூடத்தை ரூ.15.00 இலட்சம் செலவில் புதுப்பித்தல்.
4. திருச்சியில் உள்ள சுற்றுலா மாளிகையில் கூடுதல் வசதிகள் (கழிவறைப் பகுதி மற்றும் மழை நீர் சேகரிப்பு) ரூ.5.00 இலட்சம் மதிப்பில் அமைத்தல்.

**11. மழை நீர் சேகரிப்பு அமைப்பு**

அரசு தமிழ்நாடு முழுவதும் மழை நீர் சேகரிப்பு செய்வதற்காகத் திட்டமிட்டு, தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 11-09-2002 அன்று நடத்திய ஆய்வுக் கூட்டத்தில், அரசுக்குச் சொந்தமான அனைத்துக் கட்டடங்களிலும் மழை நீர் சேகரிப்பு அமைப்பு அமைக்க வேண்டுமென்றும், அத்துடன் மாவட்ட ஆட்சியாளர்கள் மாநாட்டில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளுக்காக ரூ.25.00 கோடி ஒதுக்கப்படுமென்றும் அறிவித்துள்ளார்கள். பொதுவாக, மண்ணின் தன்மை மற்றும் நிலப்பரப்பின் அமைப்பு முதலியவற்றைப் பொறுத்து மழை நீர் சேகரிப்பு அமைப்பு முடிவு செய்யப்படும். திறந்தவெளியுடன்கூடிய நெருக்கமான கட்டடங்கள் உள்ள பெரிய வளாகங்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. முதல் நிலையாக, கசிவுத் தன்மை கொண்ட மண், மழை நீர் சேகரிப்பு அமைப்பிற்குப் பொருத்தமானதாகும்.

அடுத்ததாக, மிதமான கசிவுத் தன்மை கொண்ட பரப்புகளிலும் இவ்வமைப்பு மேற்கொள்ளலாம். பராமரிப்புப் பணியின் நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி, இதுவரையிலும் 1993 அரசுக் கட்டடங்களில் பொதுப் பணித் துறையால் மழை நீர் சேகரிப்பு அமைப்பு கட்டப்பட்டுள்ளது.

12. 2002-2003 ஆம் ஆண்டில் முன்னேற்றத்தில் உள்ள பெரும் பணிகள் மற்றும் 2003-2004 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பெரும் பணிகளின் விவரங்கள் முறையே இணைப்பு 1 மற்றும் இணைப்பு 2-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

# இணைப்பு 1

## 2002-2003 ஆம் ஆண்டில் முன்னேற்றத்தில் உள்ள பெரும் பணிகள் குறித்த விவரம்

| வரிசை எண் | பணியின் பெயர் | (மதிப்பு ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புது தில்லியில் தமிழ்நாடு விருந்தினர் மாளிகையில் கூடுதல் விருந்தினர் அறைகள், பணியாளர் குடியிருப்பு கட்டுதல் | 2207 |
| 2 | சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் தமிழ் வளர்ச்சித் துறைக்கு அலுவலகப் பிரிவு கட்டுதல் | 220 |
| 3 | மதுரை மாவட்டம், உலகநேரியில் உயர் நீதிமன்றக் கிளைக் கட்டடங்கள் கட்டுதல் | 5249 |
| 4 | சென்னை, அரசு பொது மருத்துவமனையில், புதிய கட்டடங்கள் கட்டுதல் | 10447 |
| 5 | சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கை சீரமைப்பு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சைத் துறைக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் | 500 |
| 6 | சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு கட்டுதல் | 650 |
| 7 | மதுரையில் நெல் விற்பனை மையம் கட்டுதல் | 1260 |
| 8 | சென்னை, அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் புதிய கட்டடம் கட்டுதல் | 1000 |
| 9 | 11-ஆவது நிதிக் குழுவின் நிதி உதவியின் பேரில் கட்டப்படும் அங்கீகரிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருவாய் சாராத் துறைக் கட்டடங்கள் | 7213 |
| 10 | 5 மருத்துவக் கல்லூரிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் | 1882 |
| 11 | சென்னை, கீழ்பாக்கத்தில் உள்ள அரசு மனநலக் காப்பகத்தில், புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 105 |
| 12 | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் வேளாண் விளைபொருள் பேரங்காடி கட்டுதல் | 353 |
| 13 | சென்னை, கிண்டியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகம் கட்டுதல் | 278 |
| | மொத்தம் | 31364 |



D V211,31'P03 P03.L0491

# இணைப்பு 2

## 2003-2004 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பெரும் பணிகள் குறித்த விவரம்

| வரிசை எண் | பணியின் பெயர் | (மதிப்பு ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேனி மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டுதல் | 1200 |
| 2 | கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளத்தில் அரசு மருத்துவமனை வளாகத்தில், மருத்துவக் கல்லூரிக்காகப் புதிய கட்டடம் கட்டுதல் | 2173 |
| 3 | வேலூர் மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி கட்டுதல் | 500 |
| 4 | விழுப்புரத்தில் நீதித் துறைக் கட்டடங்கள் கட்டுதல் | 962 |
| | மொத்தம் | 4835 |

தமிழ்நாடு ...வணக காப்பகம் 185898

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.

அரசு மைய அச்சகம், சென்னை-600 07